(தா-ம்) 6-க்குடையவனும், லக்கினாதிபதியுஞ் சேர்ந்து, சனியுடைய ஷட்வர்க்கத்தை அடைந்தால், அவனுடைய [illegible] புத்தியில் வாத ரோகத்தினாலும், ஜன்னிபாதஜ் ஜ்வரம் முதலானதுகளாற் பீடிக்கப்படுவான். 9

[illegible] ௰

(தா-ம்) லக்கினாதிபதியும் 6-க்குடையவனும் சந்திரனும், ராகு (அல்லது) கேது இவர்களுடன் சம்பந்தப்பட்டு இருந்தால், அவர் புத்திகளில் விஷபயம் [illegible] சுரம் இதுகளுடைய பீடைகளைக் கட்டாயமாய்ச் சந்தேகமின்றியில் அனுபவிப்பான். 10

கூஜஶேஷாம்ஶமஜயதி। தஸ்யஹக்ஷ விஜாநீயாத் வாயாம ஶஸ்த்ர விஶாவயோ:॥ ௰௧

(தா-ம்) இந்தப்பிரகாரம், மாதுர்-பிதிர்-சகோதரபாவாதிபதிகள்-எந்தெந்தப்பாவங்களில், இருக்கிறார்களோ? அந்தந்தப் பாவங்களுக்கு, எந்தக்கிரகங்களுடைய, ஷட்வர்க்கங்களை அடைந்திருக்கிறார்களோ? அந்தந்த ஷட்வர்க்கங்களுக்குச் சொன்னபலன்களை அனுசரித்து, அந்தப்பாவகங்களுக்குச் சொல்லவேண்டியது. லக்கினாதிபதியும், 6-க்குடையவனும், 8-க்குடையவனுங் கூடி, மாரக கிரகத்தினுடைய சேர்க்கை-நோக்கை-அடைந்து, செவ்வாய்-சனி-இவர்கள் அம்சங்களையடைந்த கிரகங்களுடைய திசாபுத்திகளில், அஸ்திரசஸ்திரங்களாலும், பைசாசத்தினாலும், பீடைகளுண்டாகும். 11

ஶுபஹயோகே நிவ்ருத்திஸ்யாத் யோகேஶ்வஸ்திஷுஹேது ஜீவாம்ஶஜீவவர்கேஷுமூலாம்ஶமூலவர்கத:॥ ௧௨

ரோகாதிர்வ்யாதிகஸ்யாஜ்ஞா: கேஷாம்ஶக்திவஶாத்ஸதம் விஜ்ஞாயஸ்ய நவாம்ஶ ஜாயதே ரஜ்ஞாயிவேஸ்வாம் ஶுபதிஸ்யா கதா॥ ௧௩

(தா-ம்.) மேலே சொல்லிய, கஷ்டபலன்களானதுகள் சுபக்கிரகங்களுடைய பார்வை சேர்க்கை யிருக்கில்-ரோகபாதை நிவர்த்தியாகும். பாபசம்பந்தம் வீக்ஷணம் பெற்றிருந்தால் மரணம். மேலே சொன்ன யோகங்கள்-ஜீவராசி அம்சங்களையும், மூலராசி அம்சங்களையும், மூலாஷ்டவர்க்கங்களையும், அடைந்த கிரகங்களுடைய புத்திகளில், ரோகாதிகள்-எந்தபுத்தியினால், ஏற்படுகிறதோ? அந்தக் கிரகத்துடைய மூலவர்க்கம் ஜீவவர்க்கங்களைக் கொண்டு ரோகத்தினுடைய அனுகூலப்பிரதிகூலங்களைச் சொல்ல வேண்டியது. 12-13

லக்னேஶவஷ்டமேஶஜ யதாதஸ்தக்ஷதயோஜந்ம கத்ருஷ்டிபி: தஸ்யநுஶோவாஷ்டமேஶ வேஶமவாஹ்திம் நாவதேத்॥ ௧௪

(தா-ம்.) லக்கினாதிபதி யிருந்த நவாம்சாதிபதி, அஷ்டமாதிபதி யிருந்த நவாம்சாதி, இவ்விருவரும்-மேஷராசி ஷட்வர்க்கத்தை

யடைந்தால், நரியினாலும், ஆட்டினாலும், பயமுண்டாகும். ஷடிகிர கத்தோடு, ரோகாதி சம்பந்த சேர்க்கை யுண்டாகில், அந்தக்கிரக திசாபுத்திகளில் ஏற்படும். மேற்சொல்லிய கிரகங்கள், ரிஷபராசி ஷட்வர்க்கத்தை யடைந்தால், பசு-நாய்-இதுகளினாற் பயம் ஏற்படும். 14

யுக்மஷட்வர்கஸம்ப்ராப்தௌ கபிஜோ நாத்ர ஸம்ஶய: கு
ளீரஷட்வர்கஸம்ப்ராப்தௌ வேஸராச்சாஸ்ரிதவ்யதே॥ க௫

(தா-ம்.) மிதுனராசியினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால், குரங்கு மூலமாய் பயமுண்டாகும். கடகவிராசியினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால் கழுதை மூலமாய் பயமுண்டாகும். 15

ஸிம்ஹஷட்வர்ககே ரவேஸ்ஸிம்ஹவ்யாக்ராதிஜம்பயம் கந்யா
ஷட்வர்ககே ரவேர்ருக்ஷாதிக்ருதம்பயம்॥ க௬

(தா-ம்.) சிங்கராசியினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால், சிங்கம்-புலி-இதுகளுடைய பயமுண்டாகும். கன்னிராசியினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால், கரடி முதலானதுகளுடைய பயமுண்டாகும். 16

வணிக்ஷட்வர்ககே ஸ்யாதாம்தயோர் ஹஸ்திஜ ப்ரஜாகு பயதி
அலிஷட்வர்ககே ரவே: கீடஸர்ப்பப்ரஜம்பயம். க௭

(தா-ம்.) துலாராசியினுடைய ஷட்வர்க்கத்தை அடைந்தால், இவர்களுடைய புத்திகளில் யானையின் மூலமாய் பயமுண்டாகும், விருச்சிகராசியினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால், தேள் முதலான விஷஜெந்துக்கள் மூலமாயும், யானை மூலமாயும் பயமுண்டாகும். 17

மேஷசாபாங்கயோர்வர்கே பீதிரஶ்வக்ருதா ரவே: ம்ருகவ
ர்கேமேஷவர்கே ஸூகராதி க்ருதம்பயம். க௮

(தா-ம்.) மேஷ தனுவினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால், குதிரை மூலமாய். பயமுண்டாகும். மகரமேஷத்தினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால் பன்றி மூலமாய் பயமுண்டாகும். 18

[illegible]
[illegible] ௧௯

(தா-ம்.) கும்பராசியினுடைய ஷட்வர்க்கத்தை அடைந்தால், பசுவினாலும், புலிமூலமாயும், பயமுண்டாகும். மீனவிராசியினுடைய ஷட்வர்க்கத்தை யடைந்தால், முதலை மூலமாயும் ஜலத்தின் மூலமாயும் பயமுண்டாகும். 19

[illegible]
[illegible] ௨௦

(தா-ம்.) இந்தப்படிக்குச் சரீரம் முதலான எல்லாப் பாபங்களையும், நன்றாய் விசாரித்தும், எங்கெந்த ஷட்வர்க்கத்துக்கு சொல்லப்பட்டபலன்களை, அஷ்டமாதிபதி யிருந்த நவாம்சாதிபதி லக்கினாதிபதி யிருந்த நவாம்சாதிபதியைக் கொண்டும், ரோகாதிபதி சம்பந்த வீக்ஷணங்களைக் கொண்டும், மேற் சொல்லியவர்களுடைய திசாபுத்தி காலங்களையும், சோதிட நூல்களை ஆராய்ந்த வித்துவான்கள் சிங்க நோக்கத்துடன் சொல்லவேண்டியது. 20

[illegible]
[illegible]
[illegible] ௨௧

(தா-ம்.) லக்கினாதிபதியும், 8-க்குடையவனும், இராசியில் ரிஷபத்திலும், அம்சத்தில் ரிஷபத்திலும், திரேக்காணத்தில் ரிஷபத்திலும், இருக்கில், பசுமாடு-காளைமாடு-மூலமாய்ப்பீடை உண்டாய் மிருதி ஏற்படும். 21

[illegible]
[illegible] ௨௨

(தா-ம்.) லக்கினாஷ்டமாதி, ரிஷபராசி திரேக்காண நவாம்சத்தினும், மிதுனராசி திரேக்காண நவாம்சத்திலும், இருக்கில், வனத்தில் சஞ்சாரம் பண்ணப் பட்ட ஜந்துக்கள் மூலமாய்ப் பீடை ஏற்பட்டு மிருதியுண்டாகும், லக்கினாஷ்ட மாதிபதிகள், ரிஷபராசி

திரேக்காண நவாம்சத்திலும், கடகவிராசி திரேக்காண நவாம்சங்களிலுங்கலந்து இருக்கில், ஜலஜந்துக்கள் (அல்லது) முதலை மூலமாயும், ஜலமூலமாயும் மிருதி யுண்டாகும். 22

𑌵𑍃𑌷𑌸𑌿𑌂𑌹𑌾𑌂𑌶𑌗𑌤𑍌 𑌚𑍇𑌤𑍍 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 𑌵𑍃𑌷𑌕𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑌗𑌤𑍌 𑌚𑍇𑌨𑍍𑌨𑍌𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 𑌭𑌵𑍇𑌨𑍍𑌮𑍃𑌤𑌿𑌃॥ ௨௩

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி, ரிஷபசிங்கவிராசி-திரேக்காண நவாம்சத்திலிருக்கில், புலிகள் மூலமாய் மிருதியுண்டாகும். லக்கினாஷ்டமாதிபதி ரிஷப கன்னிராசி திரேக்காண நவாம்சத்திலிருக்கில், கப்பல்கள் (அல்லது) ஓடங்கள் மூலமாய் மிருதியுண்டாகும். 23

𑌵𑌣𑌿𑌗𑍍𑌵𑍃𑌷𑌾𑌂𑌶𑌗𑌤𑍌 𑌚𑍇𑌤𑍍 𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑍋 𑌭𑌵𑍇𑌨𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌵𑍃𑌷𑌚𑍍𑌚𑌿𑌕𑌵𑍃𑌷𑌾𑌂𑌶𑌗𑌤𑍌 𑌚𑍇𑌤𑍍𑌕𑍀𑌟𑌕𑍃𑌤𑌾 𑌮𑍃𑌤𑌿𑌃॥ ௨௪

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-துலாம்-ரிஷபராசி திரேக்காண நவாம்சங்களில் இருக்கில், துஷ்டர் மூலமாயும், (அல்லது) ஒருவர்க்கொருவர் சண்டைமூலமாயும், யுத்தங்கள் செய்யும் ஸ்தலங்களில் அடிபட்டாவது, மிருதியுண்டாகும். லக்கினாஷ்டமாதிபதி-ரிஷப விருச்சிகராசி திரேக்காண நவாம்சங்களில் இருக்கில், சில்விஷம் முதலான கிடஜந்துக்கள் மூலமாய் பீடை ஏற்பட்டு மிருதியுண்டாகும். 24

𑌵𑍃𑌷𑌚𑌾𑌪𑌾𑌂𑌶𑌗𑌤𑍌 𑌚𑍇𑌤𑍍 𑌶𑌿𑌕𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌾𑌤𑌭𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌵𑍃𑌷𑌨𑌕𑍍𑌰𑌾𑌂𑌶𑌗𑌤𑍌 𑌚𑍇𑌤𑍍𑌕𑍂𑌪𑍇 𑌪𑌤𑌨𑌤𑍋 𑌭𑌯𑌮𑍍॥ ௨௫

(தா-ம்.) லக்கினாதிபதி, அஷ்டமாதிபதி, ரிஷப தனுராசி திரேக்காண நவாம்சங்களில் இருக்கில், சுவரின்மேல் ஏறிக்கீழே விழுந்து மரணமடைவான். சுபர்பார்வை சம்பந்தம் இருக்கில் ஜீவிப்பன் ரிஷபமகர விராசி திரேக்காண நவாம்சங்களில் இருக்கில் கிணற்றில் விழுந்து இறப்பான். சுபன்பார்வை சம்பந்தம் இருக்கிற் பிழைப்பன். 25

வ்ருஷகுரமஹாம்ஸமளகள வெசஷ்வ்யாஷோம் ஸேவ்யடூவ வடுதஃ வ்ருஷீநாம்ஸமளகளவெசஷ் தயொஷூளஸ்ருயாச ஷயதி॥ உகு

(தா-ம்.) லக்கினுஷ்ட மாதிபதி, ரிஷபகும்பாப் சராசி திரேக் காண நவாம் சராசிகளில் இருக்கில், பாம்பு முதலானது களினுல் மிருதியுண்டாகும். இதற்கு வியாழதிரேக்காணம், சர்பதிரேக் காணங்களை லக்கினுஷ்ட மாதியடைந்திருக்க வேண்டியது. லக் கினுஷ்ட மாதிபதிகள், ரிஷப – மீனவிராசிதிரேக் காணநவாம் சங் களில் இருக்கில், இவ்விரண்டு பேர்களுடைய திசாபுத்திகளில் மிரு கங்கள் மூலமாய் பீடையுண்டாகி மிருதியடைவான். 26

ஸவம்நிஸ்சித்ய ஹிதாநு ஹ்ரூராதீநாம் த்ருதிம்வெசஷ் ஸரீர நாமெயாஷாயிவெந யாகெஸ்மெஜெத்ரு ஸ்மாதீஷ்வு ஸ தயொலி வாகெ ஷிவிஜ்ஞஷ்ஸா நொஷ்திம்வ்ருஷ்ஹா ராஷ்டிகாஃ॥ உஎ

(தா-ம்.) இந்தப்படி – கிரகங்களுடைய – இராசி - அம்ச. திரேக்காணுதி தீக்ஷணபுத்தியை சிங்கநோக்காகப் பார்வைபார்த்து, யூகாயூகத் துடன்-தீர்க்காலோசனை செய்து சொல்ல வேண்டியது டன், சகோதராதி பாவங்களுக்கும் சொல்லவேண்டியது. லக்கினுஷ் டமாதிபதி, சிங்கவிராசி-சிங்கநவாம்சம்-சிங்கதிரேக்காணம் இதுகளை அடைந்திருக்கில், சித்தப்பிரமை உண்டாகும். (அதாவது) பயித் திய மென்று சொல்லவும். இஃதின்றேல்-நாய் கடித்து, அதுமூல மாய் மிருதியடைவன். சுபசம்பந்த வீக்ஷண மிருந்தால், நாய்கடித் தும், ஜீவிப்பான். பயித்தியம் பிடித்தும், அனுகூலமாகும். 27

ஸிம்ஹகஷ்ாம்ஸமளகளவெசஷ் கூஷாயஜம்ஸ யம்॥ உஅ

(தா-ம்.) லக்கினுஷ்ட மாதிபதி-சிங்க-கன்னியாராசி. திரேக் காண நவாம்சங்களை யடைந்திருக்கில், ஆயுதத்தினுற் பயம். அதி னுல் மிருதி யுண்டாகும். 28

[illegible]

(தாத்பரியம்.) லக்கினாஷ்ட மாதிபதி-சிங்க துலாராசி திரேக்காண நவாம்சங்களை அடைந்திருக்கில், யானை-குதிரைகள் மூலமாய்ப் பீடை உண்டாகி மிருதியடைவன். லக்கினாஷ்டமாதிபதி சேர்ந்து சிங்கராசி திரேக்காண நவாம்சங்களை அடைந்திருக்கில், சர்ப்பம் முதலானது களினால் மிருதியடைவான். 29

[illegible]

(தா-ம்) லக்கினாஷ்ட மாதிபதிசேர்ந்து, தனுசு-சிங்கவிராசி திரேக்காணம் நவாம்சங்களில் இருக்கில், நாய்மூலமாய் பயமடைந்து மரணமடைவன். லக்கினாஷ்டமாதிபதிசிங்கராசி திரேக்காண நவாம்சங்களைப் பெற்றிருக்கில், கழுதை மூலமாய் மிருதியடைவன். 30

[illegible]

(தா-ம்.) லக்கினாஷ்ட மாதிபதி, சிங்கம்-கும்பராசி திரேக்காணநவாம்சங்களில்இருக்கில், முள்ளுப் பன்றிமூலமாய்—மரணமுண்டாம். லக்கினாஷ்ட மாதிபதி, மீனசிங்க விராசிதிரேக்காண நவாம்சங்களில் இருக்கில், பக்ஷிகள் மூலமாயும், சர்ப்பங்கள் மூலமாயும், மிருதிஅடைவன். 31

[illegible]

(தா-ம்.) லக்னாதிபதி -அஷ்டமாதிபதி -சிம்மம், மேஷராசி திரேக்காணங் களிலிருக்கில், நரிமூலமாய் மரணமுண்டாகும். லக்கினஷ்ட மாதிபதி, ரிஷபராசி திரேக்காணங்களிலிருக்கில், நரிமூல

மாய் மரணமுண்டாகும். லக்கினாஷ்டமாதிபதி, ரிஷபராசி திரேக்காண நவாம்சங்களிலிருக்கில், நாய்கடித்து அதன்மூலமாய்ப் பீடை கண்டு கஷ்டமடைந்து மரணமுண்டாகும். 32

[illegible] ௩௩

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-சிங்க மிதுனராசி திரேக்காண நவாம்சங்களில் இருக்கில், பூனையினாற் பயமுண்டாகி மரணம் ஏற்படும். 33

[illegible] ௩௪

(தா-ம்.) இந்தப்படியே சகோதரம்-மாதுரு பிதிராதி பாவங்களுக்கு மாரகமாகிய மரணமுண்டாகுங்காரணங்களை யூகித்து லக்கினாஷ்டமாதிபதி-தனுசு விராசி-தனுசு அம்சத்தை யடைந்திருக்கில், இவ்விருவர்களுடைய திசாபுத்திகளில் பெலா பெலன்களை யூகித்துக் கொண்டு மரண மார்க்கத்தைச் சொல்ல வேண்டியது. 34

[illegible] ௩௫

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-தனுசு விராசியிலிருந்து-மகரதுவாதெசாம்சத்தை அடையில், நாற்கால் மிருகங்களினாலாவது சத்துருமூலமாயாவது மரணம் உண்டாகும். லக்கினாஷ்டமாதிபதி-தனுசு விராசியிலிருந்து, கும்பதுவாதெசாம்சத்தை யடையில், முள்ளம் பன்றி மூலமாய் மரணம் அடைவான். 35

[illegible] ௩௬

(தா-ம்.) லக்கிஞஷ்டமாதிபதி தனுசு விராசியிலிருந்து, மீனதுவாதெசாம்சத்தி லிருக்கில், முதலை முதலாகிய ஜலஜந்துக்களினுல், மரணம்-உண்டாகும். லக்கிஞஷ்ட மாதிபதி-தனுசு விராசியிலிருந்து மேஷாம்சத்தை யடையில், கரடி முதலான மயிர்கள் அதிகமான மிருகங்களினுல் மரணம் உண்டாகும். 36

வ்ருஷபாம்ஶகதே சைவ ஶகடாத் பதநாத்பயம்
மிதுநாம்ஶகதே மத்யே கபிவ்ருக்ஷக்ருதம் பயம்॥ ௩௭

(தா-ம்.) லக்கிஞஷ்ட மாதிபதி, தனுசு விராசியிலிருந்து, ரிஷப துவாதெசாம் சத்தை யடையில், வண்டியிலிருந்து, கீழே விழுந்து மரணமடைவான், லக்கிஞஷ்ட மாதிபதி, தனுசுவிராசியிலிருந்து, மிதுனதுவாதெசாம்சம் அடைந்திருக்கில், குரங்கு (அல்லது) விருக்ஷமூலமாய் மரணம் உண்டாகும். 37

கர்க்யாம்ஶ ஸமாயாதே மூஷிகாதிக்ருதம் பயம்
ஸிம்ஹாம்ஶ ஸமாயாதே ஸர்ப்பே ஸ்ரீகராபிதி:॥ ௩௮

(தா-ம்.) லக்கிஞஷ்ட மாதிபதி-தனுசுவிராசியிலிருந்து, கர்க்கடக துவாதெசாம் சத்தையடையில், எலி முதலான விஷஜந்துக்களினுல் மரணம். தனுசுவிராசியிலிருந்து, சிங்க துவாதெசாம் சத்தையடையில், நல்லபாம்பினுல் மரணம், உண்டாகும். 38

கந்யாம்ஶ ஸமாரூடே க்ருஷிகர்மாதிஷு ஜந்துபி:
துலாம்ஶ ஸமாயாதே வாணிஜ்ய கலஹாத்ருதி:॥ ௩௯

(தா-ம்.) லக்கிஞஷ்ட மாதிபதி-தனுசுவிராசியிலிருந்து, கன்னிராசிதுவாதெசாம்சத்தி லிருக்கில், இரண்டு உழவும், மூன்று உழவும், உழுத வயல்களிற் சஞ்சரிக்கும், ஜந்துக்கள் மூலமாய் மரணம் உண்டாகும். லக்கிஞஷ்டமாதிபதி தனுசுவிராசியிலிருந்து, துலாதுவாதெசாம்சத்தை அடைந்திருக்கில், வியாபார மூலமாய் கலகங்கள் ஏற்பட்டு அதின் மூலமாய் மரணம். 39

கீடாம்ஶ ஸமாயாதே விஷப்ரதம் க்ருதமேவ ஸர்வம்
ஸ்த்ராதிஸாவுநாம் ஸமக்ரமம் க்ஷீணேஷிபி:॥ ௪௰

(தா-ம்.) லக்கிநாஷ்ட மாதிபதி - தனுசுராசியி லிருந்து, விருச்சிக துவாதசாம்சத்தி லிருக்கில், தேள் கொட்டுவதாலாவது மூலமாய் மரணம். இப்படி, மாதுரு பிதுரு சகோதராளுக்கும் யூகித்துச் சொல்லவும். 40

மேஷத்ரிகோணபாவாநாம் ஸாமாந்யம் ப்ரகடீக்ருதம்
கோணேஷ்வந்யேஷு ஸர்வேஷு தத்ப்ரயோஜ்யம் து யுக்திதஃ ॥ ௪௧

(தா-ம்.) மேஷத்திரிகோணத்துக்குச் சாமான்ய பலன்கள் சொல்லப்பட்டது. மற்றத்திரிகோணங்களுக்கும் இந்தப் பலன்களைக் கொண்டு யூகித்துப்பலன் சொல்லவேண்டியது. 41

உதாஹரணஸித்த்யர்த்தம் காரணம் கிஞ்சிதுச்யதே
ஸிம்ஹநாதோ ...ஸ்ய ... ஸிம்ஹத்வாதஶாம்ஶகே
... தஶாயாம் மரணம் ... நாஸ்தி ஸம்ஶயஃ ॥ ௪௨

(தா-ம்.) இதுவரையிற் சொல்லப்பட்ட மாரணத்துக்கு, காரணங்கள் கொஞ்சம் கொஞ்சஞ் சொல்லப்பட்டது. லக்கினாஷ்டமாதிபதி, சிங்க ராசியிலிருந்து, சிங்கதுவாதசாம்சத்தை அடையில், இவர்களுடைய திசாபுத்திகளில் முன்னாம் பன்றியினாலும், மரணம் அடைபடக்கூடும் என்று வித்துவான்கள், உதாரணஞ் சொல்லியிருக்கிறார்கள். 42

கும்பாம்ஶம் மகரே ரந்த்ரேஶே த்வஷ்டாந்நாந்மரணம் வதேத் ॥ ௪௩

(தா-ம்.) லக்கினாஷ்ட மாதிபதி, மகர ராசியிலிருந்து, கும்ப துவாதசாம்சத்தை யடைந்திருக்கில், துஷ்டனுடைய அன்னத்தைச் சாப்பிட்டு மரணமடைவான். 43

மீநாம்ஶம் மகரே ரந்த்ரேஶே விஷமத்ஸ்யாதிபக்ஷணாத்
நக்ராதிமாம்ஸபக்ஷணாத் ஸத்ருவா ம்ருதிஃ ॥ ௪௪

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி - மகராராசியிலிருந்து மீனதுவாதசாம்சத்திலிருக்கில், விஷமீன்களைச் சாப்பிட்டு மரணமடைவன்,

லக்கிஞஷ்டமாதிபதி-மகரராசியிலிருந்து மேஷதுவாதசாம்சத்தை அடையில், இராஜ சத்துருமூலமாய் மரணமடைவன். 44

[illegible] ௪௫

(தா-ம்) லக்கிஞஷ்டமாதிபதி-மகரராசியிலிருந்து, ரிஷபதுவாதசாம்சத்திலிருக்கில், கள்ளர்களினுல் பீடைமரணம். லக்கிஞஷ்டமாதிபதி மகரராசியிலிருந்து, மிதுனதுவாதசாம்சத்தை யடைந்திருக்கில், மல்லகசெட்டிகளுடைய யுத்தத்திஞற் பயமுண்டாகி மரணம். 45

[illegible] ௪௬

(தா-ம்.) இந்தப்படி 12 ராசிகளுக்கும், லக்கிஞதிபதி - அஷ்டமாதிபதியைக்கொண்டு ஒவ்வொரு அம்சங்களுக்கும், இன்ன இன்ன மூலமாய் பயம்உண்டாய் மரணத்தையடைவனென்று சொல்லப்பட்டது. 46

[illegible] ௪௭

(தா-ம்.) வேதங்களினுலும், ஸ்மிருதிகளினுலும், இதிகாசபுராணுதிகளினுலும், இந்தச் சோதிட சாஸ்திரம், வேதங்களுக்கு ஆறு அங்கங்களுக்குள், நேத்திராங்கமாக இருப்பதினுலும், அநேக ஜன்மங்களிற் பண்ணப்பட்ட, புண்ணிய பாவங்களைத் தெறிவிக்கிற சக்தியுண்டானதினுலும், என்க. அஃதெவ்வாறெனில், இருட்டில் இருக்கப்பட்ட பதார்த்தங்களை, தீப மூலமாய் - எப்படித் தெரிந்துகொள்ளுகிறமோ? அதுபோல், மனுஷனுடைய பூர்வ புண்ணிய பாபங்களை ஜோதிஷமூலமாய்த் தெரிந்துக்கொள்வதற்கு, இந்தசாஸ்திரம் ஏற்பட்டது. அதுகள் தெரியப்படுத்தும், விதங்களை நியாயங்கள் சொல்லுகிறுர். இராசிகளுடைய சுபாவகுணங்களாலும், கிரகங்

களுடைய சுபாவ குணங்களாலும் கிரக ராசிகளுடைய பெலமும், தோஷமும், குணமுந்தெரிந்துகொண்டு, லக்கினாஷ்டமாதிபதிகளுடைய ராசியின் இருப்புகளும், ஷட்வர்க்கங்களுடைய இருப்புகளும், தெரிந்துகொண்டும், மாரககிரகங்கள், இன்னதென்றும், பாபிகள் இன்னதென்றும், பார்த்து, ஒருவனுக்கு சுபாசுப கர்மங்களையும், அதற்குப் பரிகாரங்களையும், வேதவேதாங்க சாஸ்திரங்களைக்கொண்டு, நிவர்த்தியாகும், நிவர்த்தியாகாதென்றும், காலத்துக்குத்தக்கபடி, அனுசரித்து தேசகாலவர்த்தமானங்களைக்கொண்டும், எவன் சிங்கநோக்காகப் பார்த்துச் சொல்லுகிறானோ? அவன் தான் மன்னுயிர்க்குத்தாய் என்று சொல்லவேண்டியதுடன், இந்த சாஸ்திரத்துக்கு அதிகாரியாவான். 47

த்ரேக்காணேஷு த்ரேக்காணவஸதி ஸஹஜாதயோர்ணம் ஸ்ராவம் ஜட
த்ரிம்ஸகஸாத்ருமானே ஷாடவாவிம்ஸதிகாரணம்॥ ௪௮

(தா-ம்) திரேக்காணம் 36 விதம். இதில் 22:வது திரேக்காணம், மிருத்திய திரேக்காணமென்று சொல்லப்படும். அந்தத்திரேக்காணதிபதி யெந்த இடத்தில் இருக்கிறார்களோ? இந்த இடம் சத்துரு நீசக்ஷேத்திரங்களாயும், அந்த திரேக்காணதிபதிக்குச் சுபன் பார்வை சம்மந்தம் இல்லாவிடில், அவன் தெசாபுத்திகளில் மரணம் நிச்சயம். (22-வது திரேக்காணதிபதியை நிமிஷத்திற்றெறிந்துகொள்ளும் விதம்.) ஒரு ராசியை மூன்று கூறு செய்வது திரேக்காணம் என்று பெயர்.

முதலாவது திரேக்காணத்தில், ஜெனித்த ஜாதகங்களுக்கு 22-வது திரேக்காணதிபதி எட்டுக்குடையவன்.

2-வது திரேக்காணத்தில், ஜெனித்தவர்களுக்கு 22-வது திரேக்காணதிபதி 12-வது வீட்டுக்குடையவன்.

3-வது திரேக்காணத்தில், ஜெனித்தவர்களுக்கு 22-வது திரேக்காணதிபதி நாலவது வீட்டுக்குடையவனென்றும், அறிந்து, மாதுரு பிதுரு சகோதராளுக்கு பலன் சொல்லவேண்டியது. 48

தத்தீஸஸ்ஸ்துவ்யய: வாவீதளஸ்யாதாம் த்ருதிராணைளத்தவ்யா
ஸிம்ஹஸம்யிஜைநதக காமெணரணம்வத்ஜைக:॥ ௪௯

(தா-ம்.) 22-ம் திரேக்காணாதிபதியுடன் சேர்ந்த பாபிகளோ, பார்த்தபாபிகளுக்குள் எவன் மாரகம் செய்கிறதற்கு, அதிகாரியாக ஏற்படுகிருனோ? அவனுடைய திசாபுத்தி சித்திரங்களில் மாரகஞ் செய்வான். இவைகள் குருஉபதேசத்தினல் தெரிந்துகொள்ளவேண்டியது. 49

ஏவம் கஷ்டாதிகம் ஸர்வம் ஜ்ஞாத்வா ஜாதேநத: ஸஹ
ஸம்பந்த த்ருஷ்ட்யாதி ஸத்பாவே தந்நிவர்த்ததே ॥ ௫௰

(தா-ம்.) இந்தப்படி மாதுரு பிதுரு சகோதரபாவங்களுக்கு கஷ்டபாவங்களைச் சொல்லுங்காலத்தில், சுபக்கிரகங்களுடைய பார்வை, சேர்க்கை, ஏற்படில் கஷ்டபலன்கள் உண்டாய் உடனே நிவர்த்தியாகும். 50

ஶுபஸ்ய வா(அ)ஶுபஸ்யாபி தாரதம்யம் விசார்ய ச
ஸ்ய ததாபாயா ப்ரபவேசேநதிநிர்ணய: உபதேசஸூத்ர
ப்ரதீபிகாயாம் நியமேந ஸப்தமோ த்யாய ஸம்பூர்ண: ॥ ௫௧

(தா-ம்) சுபபலன்களைச்சொல்லுங்காலங்களில், கிரகங்களுடைய பலாபலங்களை நன்ருயாராய்ந்து, இஷ்டகஷ்ட பலன்களை கால தேசவர்த்தமானங்களை அனுசரித்து சுபாசுபபலன்களைச் சொல்ல வேண்டியது. 51

ஏழாவது சுலோகம் முற்றுப்பெற்றன.

௮

எட்டாவது அத்தியாயம்.

கிரகஜாதிபேத நிர்ணயம்.

அத க்ரஹஜாதிபேதநிர்ணய:.

அத வக்ஷ்யே விஶேஷேண ஸஞ்ஜாத்யாதி பேதக: ।
பாலாநாமவபோதாய ஸாரஸங்க்ரஹரூபத: ॥ ௧

(தா-ம்.) இதன்மேல் நவக்கோட்களின் பலங்களை, ஜாதிபேதங்களை அனுசரித்து பாலர்களுக்குத் தெரியும்படி, சாஸ்திரங்களுடைய

சாரங்களை யெடுத்துத்திரட்டி சுலபமாகத்தெரியும்படி சொல்லுகிறார். 1

[illegible]
[illegible] ௨

(தா-ம்.) குரு-சுக்கிரன்-இவ்விருவரும், பிராமணஜாதி.
சூரியன்-செவ்வாய்-இவ்விருவரும், க்ஷத்திரியஜாதி.
சந்திரன்-புதன்-இவ்விருவரும், வைசியஜாதி.
சனி-சூத்திரஜாதி, இராகு அந்நியஜாதி.
கேது-அந்நியஜாதிக்குள், சங்கரஜாதிகள். 2

[illegible]
[illegible] ௩

(தா-ம்.) கடகம்-விருச்சிகம்-மீனம்-இந்த மூன்று ராசிகளும், பிராமணஜாதி. மேஷம்-சிங்கம்-தனுசு. இந்த மூன்று ராசிகளும், க்ஷத்திரியஜாதி, ரிஷபம்-கன்னி-மகரம், இந்த மூன்று ராசிகளும், வைசியஜாதி, மிதுனம்-துலாம்-கும்பம்-இந்த மூன்று ராசிகளும், சூத்திரஜாதி, கிரகங்களுடைய ஜாதிகளையும், ராசிகளுடைய ஜாதிகளையும், யூகித்துப் பார்வை, சம்மந்தங்களைப் பார்த்து, மனுஷர்களுக்கு யோகபாவங்களுடைய ஜாதி பேதங்களைப் பார்த்து கல்பிக்கவேண்டியது. 3

[illegible]
[illegible]
[illegible] ௪

(தா-ம்.) கிரகங்களுடைய காரகத்துவஞ் சொல்லுகிறார். பிதுருகாரன்-சூரியன், மாதுருகாரகன்-சந்திரன், பிராதாகாரகன்-புதன், ஸ்திரீகாரகன்-சுக்கிரன், புத்திரகாரகன்-குரு, மித்திரகாரகன்-அங்காரகன், சத்துருகாரகன்-சனி. 4

[illegible]
[illegible] ௫

[illegible] ௬

(தா-ம்.) சனி-செவ்வாய்-பிதுருபக்ஷம், புதன்-குரு-சுக்கிரன்-மாதுருபக்ஷம், சூரியன்-சந்திரன்-இராஜா, புதன்-யுவராஜா, குரு-சுக்கிரன்-இவ்விருவர்கள் மந்திரிகள், சனி-வேலைக்காரன், சேவகன், இராகுகேதுக்கள்-இம்சாகாரன். 5-6

[illegible] ௭

[illegible] ௮

(தா-ம்.) யாதொரு பாவாதியும், யாதொருபாவத்திலிருக்கப்பட்ட கிரகம்-அந்தப் பாவத்தைப்பார்க்கப்பட்ட கிரகம்-அந்தப் பாவத்திற் சேர்ந்திருக்கப்பட்ட கிரகம்-அந்தப்பாவத்து ராசிக்குடையவன், எந்தவர்க்கங்களை அடைந்தார்களோ? எந்தக் கிரகங்களினாற் பார்க்கப் பட்டார்களோ? அந்தந்தக் கிரகங்களுடைய பலன்களைக் கொடுப்பார்கள். பலத்தைக் கொடுக்கப்பட்ட கிரகம்-எதுவோ? அந்தக்கிரகத்துக்கு, 10-வது வீட்டில் எந்தக்காரக கிரகம் இருக்கிறதோ? அந்தக் காரக கிரகத்தினுடைய பலன்களும், 4வது வீட்டில், எந்தககிரகம் இருக்கிறதோ? அந்தக் கிரத்தினுடைய பலன்களும் 2-வது வீடு. 12-வது வீடுகளில் எந்தக்காரகம் இருக்கிறதோ? அந்த கிரகத்தினுடைய பலன்களையுங் கொடுப்பார்கள். 7-8

[illegible] ௯

(தா-ம்.) கிரகங்களுடையஜாதி சீலங்களினாலேயும், பூர்வ பேதத்தையுந் தெரிந்துகொண்டு, இன்னயோகத்துக்கு சொல்லவேண்டியது. 9

[illegible] ௰

(தா-ம்.) ஒரு ஜாதகனுக்குப் பலம் சொல்வதாக இருந்தால், ஜாதி குலத்தை அனுசரித்துப் கலன்களைத்திசாபுத்தி-காலங்களில் அவனவன் ஜாதிகுலங்களுக்குத்தக்க பலன்களைச் சொல்லவேண்டியது. 10

யஸ்மாலெபாயஸ்ய ஷட்வர்கஸம்ஸ்த: தத்ஜாத்ய
நுரூபாணி ஜநாநாம் யதாஸ்ய ஸ்யாத் வெடுஸ்ய வொ
ஸம் திஸாயாம் தஸ்யவாகெவதி|| கக

(தா-ம்.) யாரொருவன் பாவத்துக் குடையவன் எந்தக்கிரகத்தினுடைய ஷட்வர்க்கங்களை அடைந்திருக்கிறானோ? அந்தந்தஜாதி குலத்துக்குத் தக்கபடி, அந்தந்தக்கிரகங்களுக்குச் சொன்ன திரவிய லாபங்களை அவன் திசைகளின் கொடுப்பன். 11

வாகெஸொஹா ஸுராம்ஸெஷூலாஸம்வி வித்தெயஸ
ஸுவாவி த்ரவமூலாஸ்யம் ஸாந்ராவமூக:|| கஉ

(தா-ம்.) திசாநாதனானவன் சூரியாம் சத்தை அடைந்திருக்கில், இராஜமூலமாய் தனப்பிராப்தியுண்டாகும். (அல்லது) பிதுருவர்க்க மூலமாய்த் தனலாப முண்டாகும். சந்திரன் அம்சத்தைத்திசாநாதன் அடைந்தால் மாதுருதனம் அடைவான். 12

கஜாம்ஸெ வித்ரவமூலநாயகாதவா லபம் விதா:
ஸாம்ஸெ ஸ்ரத்ரவமூல ராஜவா த்ரவலாபம்|| கங

(தா-ம்.) திசாநாதன்-செவ்வாய்-வர்க்காம்சங்களை யடைந்தால், பிதுருதனமாவது, சேனாதிபதியினுடைய தனமாவது, அடைவன். திசாநாதன்-புதனுடைய வர்க்காம்சங்களையடையில், சகோதர மூலமான தனலாபம். (அல்லது) இராஜபுத்திர மூலமாயாவது தனமடைவன். 13

ஸாவம்ஸா நித்ரவமூலவந்தாஸ ஸவிவத:லபம்
ஸாக்ராதாவாரதிராஸ்யாம் ஷ்ரீஸ்யஸாவிஷ்ய:லபம் கச

(தா-ம்.) திசாநாதன்-குருவர்க்காம்சத்தை அடைந்தால், மித்துருனுடைய தனம். (அல்லது) புத்திரனுடைய தனம்- (அல்லது)

மந்திரியினுடைய தனம் அடைவன். திசாநாதன் சுக்கிரன் வர்க்காம்சத்தை அடையில், ஆசாரியனுடைய தனம்-மித்திரனுடைய தனம்-ஸ்திரீயினுடைய தனம். மந்திரியினுடைய தனம், இதுகளை யடைவன். 14

ஶநேஶ்ஶாவர்காம்ஶகே ஸத்ருஸேவ்யாத் ஸௌக்யஸ்ய
ஸ்தா தாஸாத் ஸர்பஸஹிதே ஜாதிப்ரஷ்டாத் ம்லேச்சாத் யவநாதபி॥
கரு

(தா-ம்.) திசாநாதன்-சனிவர்க்காம்சங்களை அடைந்திருக்கில், சத்துரு மூலமான தனலாபம். (அல்லது) தாசன் மூலமாய்த் தனலாபம். ஏற்படும். திசாநாதன் இராகுவுடன் சம்பந்தப்பட்ட சனி வர்க்கங்களை யடைந்திருக்கில், துலுக்கன், ஜாதிவிட்டு வேறே ஜாதியிற்போனவனுடையவன் மூலமாய்த் தனலாபமுண்டாகும். 15

விதுவாஹோர் பௌமாப்யாம் பௌமாம்ஶே யதா வேஶ்யா
தாஸ்யாம் கோஜாரஸம்பர்காத் சோராத் நீசாத் தநாகமம்॥ கசு

(தா-ம்.) திசாநாதன்-செவ்வாயுடன் இராகுவுடன் சம்பந்தப்பட்டு, செவ்வாயினுடைய வர்க்காம்சங்களை அடைந்திருக்கில், புருஷன் இறந்துபோன கைம்பெண்டாட்டியினுடைய தனமும், (அல்லது) திருடனுடைய தனமும், (அல்லது) வெளியிற் சொல்லக் கூடாத நீசஜாதியினுடைய தனமும், அடைவன். 16

ஸாஹஸாத் ஸாஹஸாரோபகாஹாத் ஸஹாக்ஷ்யத꞉ ஸாக்ஷ்யா
ஸாஹஸ்யே ஸௌமே ஊர்த்வ தநம் லபேத்॥ கஎ

(தா-ம்.) திசாநாதன்-செவ்வாய்-சனி-ராகு-ராசிச் சக்கரத்திற் சேர்ந்து, சனி-செவ்வாய் இவ்விருவர்களுடைய வர்க்காம்சங்களை அடைந்தால், சாக்ஷிக்கிருத்திரியத்திலும், கலகங்களையுண்டாக்கிப் பொய்ச்சாக்ஷி சொல்லி (அதன் மூலமாய்) பிறருக்கு வஞ்சனை செய்தும். திருடியும், தனஞ் சேர்ப்பன். 17

ரவிராஹுவர்கேதே ஸ்யாத்வித்யாஸம்பாதக꞉ ஸாகே
ஸௌம்ய வித்வேஷணவிதாஸதி ஸநாதேயா꞉॥ கஅ

(தா-ம்.) திசாநாதன்-சூரிய சந்திரனுடன் இராகு ராசிசக்கரத்தில், ஒன்றாய்ச் சேர்ந்திருக்கில், சூரிய சந்திரர்களுடைய வர்க்காம்சங்களை அடையில், ஒருவன்-நம்பிக்கையுடன் அடைக்கலமாய் வைத்த சொத்துக்களை, பிறகு கேட்க, என்னிடத்தில் நீ கொடுக்கவே யில்லையென்று சொல்லி விடுவன். அப்பேர்ப்பட்ட சொத்துக்களை அடைவன். திசாநாதன்-சனி-செவ்வாய்-இவ்விருவர்களுடைய வர்க்காம்சங்களை அடைந்திருக்கில், தகப்பனுடைய தமயன் தம்பிகளுடைய சொத்துக்களை அடைகுவன். 18

[illegible] ௧௮

(தா-ம்.) திசாந்தர-திசாநாதன்-புத-குரு-சுக்கிரன்-ராசிச்சக்கரத்தில்சேர்ந்து, புத-குரு-சுக்கிராளுடைய வர்க்காம்சங்களை அடைந்திருக்கினும், ஷடி வர்க்கங்கள், தாது ராசிகளுடைய வர்க்கங்களையடைந்தால், பூமிமூலமான தனமும், மூலராசிகளுடையவர்க்கங்களை அடைந்தால், மூலரூபமான தனமும், ஜீவராசிகளுடைய வர்க்காம்சங்களை அடைந்தால், ஜீவரூபமானநாற்கால், கன்றுகாலிகளும், தாய்மூலமான தனங்களோ? (அல்லது) தாய்கூடப்பிறந்த மாமனுடைய தனங்களோ? இந்தத் தனங்களை அடைவன். 19

[illegible] ௨௰

(தா-ம்.) திசாநாதன்-குருவர்க்காம்சங்களை அடையில், பிராமணமூலமாய் உத்தம தனங்களை அடைவன், இந்தப்படி ஷட்வர்க்கங்களுடைய பலாபலன்களை யூகித்து, அல்பமான தனலாபமென்றும், மத்திமமான தனலாபமென்றும், அதிகமான தனலாபமென்றும், ஷட்வர்க்கங்களுடைய பெலாபெலங்களையும், நட்பாக்ஷியுச்சம் பகைநீசங்களை ஜாதிகுலத்துக்கு தக்கபடி, அவரவர்களுடைய தாரதம்மியத்துக்கு யூகித்து, திசாபுத்திகிரகங்கள், எந்தக் கிரகவர்க்கங்களை அடைந்தார்களோ? அந்தந்த வர்க்கங்களுக்குத் தகுந்தபடி

அந்தந்த திசாபுத்திகளில் தனலாபங்கள் அடையுங்காலஞ் சொல்ல வேண்டியது.

20

தசாவிபாகே த்வந்தரஸ்ய ஸௌம்யஸ்ய ஷட்வர்க்ககதே வைஶ்ய
ஜநாத்தனாப்தி: பலம் வதந்தி கேசித் நவாம்ஶகைரேவ
பலம் வதந்தி॥

௨௧

(தா-ம்.) திசாந்தரதிசாநாதன்-புதனுடைய ஷட்வர்க்காம்சங்களை அடையில், வைசியகுலத்தார் மூலமாய்த் தனலாபம் ஏற்படும். சில மகாருஷிகள் நவாம்சங்களைக்கொண்டே பலன்களைச் சொல்லவேண்டுமென்றுஞ்சொல்லியிருக்கிறார்கள்.

21

தாயேஶே மந்தே ஶூத்ர வர்க்கஸ்ய ஜாதே தஸ்யாத்ருத்யாந்தநேஶாப்தி
ஶ்ருத்யே தஸ்யாப்தி: ஸ்யாத் ராஹோ: பாபவர்க்கே சண்டாளாத்
ஸேவயாப்தி:॥

௨௨

(தா-ம்,) திசாநாதன்-சனியாக இருந்து, சனிவர்க்காம்சங்களை அடையில், சூத்திரனிடத்திற் சேவகம்பண்ணி, அவன் மூலமாய் தனலாபம் அடைவன். திசாநாதன் இராகுவாக, இருந்து, பாபவர்க்காம்சங்களை அடையில், அவனுடைய திசாந்தர திசையில், சண்டாளன் முதலான அதமஜாதிகளிடம் சேவைசெய்து, அது மூலமாய் தனலாபங்களை அடைகுவன்.

22

க்ரஹாணாம் ஶுபாஶுபபலாநாம் ஸம்பூர்ண பலம்
பூர்ணவீர்யை: மத்யவீர்யைர்மத்யம் அல்பவீர்யைரல்பம்
ஹீநைரஶுபம் இதி ஜாதகதீபிகாயாம் ஜாதிபேதாத்யாயோ
நாம அஷ்டம: பரிச்சேத:॥

௨௩

(தா-ம்.) கிரகங்களுடைய சுபாசுப பலன்களைச் சொல்லும், விஷயத்தில் பூரணபெலம் ஏற்பட்ட கிரகங்களுக்குப் பூரண சுப பலமும், மத்திய பெலங்கள் ஏற்பட்டகிரகங்களுக்குப் பாதிசுபமும், அல்பபலம் ஏற்பட்ட கிரகங்களுக்கு, அல்பசுபமும், பலமில்லாத கிரகங்களுக்குப் பூர்ண அசுபமும் ஏற்படுமென்று சொல்லவேண்டியது. இந்தப் பலன்களை யூகித்துப் புத்திமான்கள்தான் சொல்லுகிறதற்கு அதிகாரி.

எட்டாவது அத்தியாயம்.

கிரக ஜாதிபேத நிர்ணயம்.

முற்றிற்று.

௯

ஒன்பதாவது அத்தியாயம்.

கீடராசி அம்சபலன் நிர்ணயம்.

அத கீடராச்யம்சபலநிர்ணய:



தத்வஸாரம் ஸமுத்ருத்ய ஜ்யோதி சாஸ்த்ர பயோநிதே:
ஸாரணாம் கீடராச்யம்ச ஸம்பவம் வக்ஷ்யே விபாகத: || க

(தாத்பரியம்.) சோதிட நூல்களுடைய சாரங்களைக் கடைந்து வெண்ணெய்யைப்போல திரட்டியெடுத்து, கிரகங்களுடைய கீட ராசி அம்சங்களுடைய பலன்களைச் சொல்லுகிறார். 1

கர்க்கடோ வ்ருச்சிகச்சைவ கீடராசிருதாஹ்ருத: தயோ
ஷட்வர்க்கஜம் சைவ விஜ்ஞேயா கீடஸம்ஜ்ஞகா: உ

(தா-ம்) கடகம்-விருச்சிகம்-இந்த இரண்டு ராசிகளும், கீடம் என்கிற சம்ஞை, (அதாவது) புழுராசி, இந்த இரண்டு ராசிகளுடைய வர்க்கங்களுக்கும், ஷட்வர்க்க பலன்களைச் சொல்லுகிறார். 2

லக்நாதிபோ ரந்த்ரநாதச்ச கர்க்கடராசௌ யதி கர்க்க
டாம்சே விதௌ ஸர்ப்பதோ தயவிபாகே ஸர்ப்பபயம்
ஸர்ப்பதஷ்டம் ஸம்பவேத் || ௩

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி கடகவிராசியில், ஷட்வர்க்காம்சங்களை அடைந்திருக்கில், இவ்விருவர்களுடைய திசாபுத்தி காலங்களில், சர்ப்பபயங்கள்மூலமாய் விஷபயமுண்டாய் மரணம் ஏற்படும். குருவினுடைய பார்வை, சேர்க்கை உண்டானல், மணி மந்திர ஔஷதங்களினல் தீரும் அனுகூலம். 3

ஸிம்ஹாம்சகே கர்க்கடேசே ரணம் வநஜந்துஜம் கந்யாம்
சகே கர்க்கடேசே விஷசேஷ்டிக்ருதம் பயம் || ௪

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி கடகராசியிலிருந்து, சிங்க கடகாம்சவர்க்கங்களை அடைந்திருக்கில், காடுகளில் இருக்கப்பட்ட விஷ

ஜெந்துக்களினால் மரணம் ஏற்படும். லக்கினஷ்டமாதிபதி கடகராசி யிலிருந்து கடகாம்சம், கன்னிராசி இதுகளுடைய ஷட்வர்க்காம்சங் களை அடைந்திருக்கில், எலி முதலான விஷஜெந்துக்களினால், மர ணம் உண்டாகும். 4

கர்க்கடே தாரமாம்ஶே ஸர்பைஶ்ச மரணம் ஸ்ம்ருதம்
கர்க்கடே வ்ருஶ்சிகாம்ஶே து தஸ்ய வ்ருஶ்சிகதோ ம்ருதி:॥ ௫

(தா-ம்.) லக்கினஷ்டமாதிபதி கடகவிராசியிலிருந்து, துலா விராசியினுடைய ஷட்வர்க்காம்சங்களை அடைந்திருக்கில், அந்த கிரக திசாபுத்தி காலங்களில், கிரிப்பிள்ளையின் மூலமாய், மரணம் ஏற்படும், லக்கினஷ்டமாதிபதி, கடகவிராசியிலிருந்து, கடக விருச்சிக ஷட்வர்க்காம்சங்களை அடைந்திருக்கில், தேள் மூலமாய் மரணம். 5

கர்க்கடே தன்வம்ஶே ஸ்யாத் வல்மீகஸர்பதோ ம்ருதி:
கர்க்கடே மகராம்ஶே ஸ்யாத் ஜலஸர்பவிஷாத் ம்ருதி:॥ ௬

(தா-ம்.) லக்கினஷ்டமாதிபதிகள்-கடகவிராசியிலிருந்து, தனு சுராசியினுடைய வர்க்காம்சங்களை யடையில், கறையான் புற்றில் வாசஞ் செய்யும் பாம்பினால் மரணம். லக்கினஷ்டமாதிபதி - கடக விராசியிலிருந்து, மகரராசி வர்க்காம்சங்களை அடைந்திருக்கில், நீர்ப் பாம்பினால் மரணம். 6

கர்க்கடே கும்பாம்ஶே ஸ்யாத் ப்ராஹ்மணஸ்ய ஶாபதோ ம்ருதி:
கர்க்கடே மீனாம்ஶே ஸ்யாத் குக்ஷிஸர்பவிஷாத் ம்ருதி:॥ ௭

(தா-ம்.) லக்கினஷ்டமாதிபதி, கடகவிராசியிலிருந்து கும் பாம்ச ஷட்வர்க்கங்களை அடையில், பெரியோர்களுடைய சாபத் தினால் மரணம். லக்கினஷ்டமாதிபதி கடகவிராசியிலிருந்து மீன விராசி வர்க்காம்சங்களை அடையில், குகசர்ப்பமாகிய-கண்குத்திப் பாம்பு மூலமாய் மரணம். 7

ஸிம்ஹே மேஷாம்ஶே ஸ்யாத் ஸர்பாத் வ்ருஷாம்ஶே
ஸிம்ஹே ஸ்யாத் ஸ்த்ரீஹேதுநா விஷாத்॥ ௮

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-கடகவிராசியிலிருந்து, மேஷ ராசி வர்க்காம்சங்களை அடையில் மலைப்பாம்பு மூலமாய் மரணம். லக்கினாஷ்டமாதிபதி-கடகவிராசியிலிருந்து, ரிஷபராசி வர்க்காம் சங்களை அடையில், மிருகங்களுடைய கொம்புகளாற் குத்தப்பட்டு அதன் மூலமாய் மரணம். 8

[illegible]
[illegible] ௯

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-கடகவிராசியிலிருந்து, ரிஷப விருச்சிகராசிகளுடைய வர்க்காம்சங்களை அடையில், செந்தேள் மூலமாயும், தேன்-ஈ. மூலமாயும்-மரணம். லக்கினாஷ்டமாதிபதி, கடகவிராசியிலிருந்து, மிதுனவிராசி ஷட்வர்க்காம்சங்களை அடையில், பக்ஷி மூலத்தினாலாவது, விஷமூலத்தினாலாவது, மரணம் ஏற்படும். 9

[illegible]
[illegible] ௧௦

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-கடகவிராசியிலிருந்து மிதுனட்ச வர்க்கங்களை அடையில், முன் சொன்னபடியினாலாவது, (அல்லது) நரி மூலமாயாவது-ஈ மூலமாயாவது-மரணம். இந்த அம்சங்களில் நவாம்சம்போல் - துவாதெசாம்சங்களைக்கொண்டு பலன் சொல்லக் கூடும். 10

[illegible]
[illegible]
[illegible] ௧௧

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-இரண்டு கிரகங்களும், சேர்ந்து, விருச்சிக ராசியில் இருந்தும், விருச்சிக ராசியினுடைய வர்க்காம் சங்களை அடையில், அந்தக் கிரக திசாபுத்திகளில், விஷஜெந்துக் களினால் மரணம் ஏற்படும். 11

[illegible]
[illegible] ௧௨

(தா-ம்.) லக்கிநாஷ்டமாதிபதி-விருச்சிகராசியிலிருந்து, தனுசு ராசி வர்க்காம்சத்தை அடையில், நாகசர்ப்பமூலமாய் மரணம்-ஏற்படும். லக்கிநாஷ்டமாதிபதி-விருச்சிகராசியிலிருந்து, மகரராசி வர்க்காம்சங்களை அடையில், மந்திரத்துக்கும், மருந்துக்கும் கட்டுப் படாத விஷஜெந்துக்கள் (அல்லது.) 5-வது ஜாதி பாம்பு மூலமாய் மரணம் ஏற்படும். 12

கும்பாம்ஶகே வ்ருஶ்சிகே தால்பவிஷ ஜந்து க்ருதாம்ருதி:
மீநாம்ஶகே வ்ருஶ்சிகே து ஜம்புகாதி க்ருதம் பயம்|| கங

(தா-ம்.) லக்கிநாஷ்டமாதிபதி-விருச்சிகத்திலிருந்து, கும்பவி ராசி வர்க்காம்சத்தை அடைந்து இருக்கில், சில்விஷ ஜெந்துக்களினால் மரணம். லக்கிநாஷ்டமாதிபதி விருச்சிகத்தில் இருந்து மீனவி ராசி வர்க்காம்சத்தை அடையில், நரி முதலான ஜெந்துக்களினால் மரணம். 13

மேஷாம்ஶகே வ்ருஶ்சிகே து வ்ருஶ்சிகாத் ம்ருத்யுரீரித:
வ்ருஷாம்ஶே வ்ருஶ்சிகே து மஹாஸர்ப க்ருதம் பயம்|| கச

(தா-ம்.) லக்கிநாஷ்டமாதிபதி-விருச்சிகத்தில் இருந்து, மேஷாம்ச வர்க்கத்தை அடையில், செந்தேளினால் மரணம். லக்கிநாஷ்டமாதிபதி-விருச்சிகத்திலிருந்து, ரிஷப ராசி வர்க்காம்சத்தை அடையில், பெரிய சர்ப்பங்களினால் மரணம். 14

யுக்மாம்ஶே வ்ருஶ்சிகே த்வல்பவிஷ ஜந்துபி: க-
ர்க்யாம்ஶே வ்ருஶ்சிகே து ஸவிஷைர் ஜலஜந்துபி: கரு

(தா-ம.) லக்கிநாஷ்டமாதிபதி-விருச்சிக ராசியிலிருந்து, மிது னாம்சத்தை அடையில், அல்பவிஷ ஜெந்துக்களினால், மரணம். லக்கி நாஷ்டமாதிபதி-விருச்சிகத்திலிருந்து கடகாம்ச வர்க்கங்களை அடை யில், விஷத்தோடு கூடிய ஜல ஜெந்துக்களினால் மரணம். 15

ஸிம்ஹாம்ஶே வ்ருஶ்சிகே து வ்யாக்ர க்ருதம் பயம் கந்யா-
ம்ஶே வ்ருஶ்சிகே விஷகந்யாஸமாம்ருதி:|| கசு

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-விருச்சிகத்தில் இருந்து சிங்க ராசி வர்க்காம்சத்தை அடையில், நீர்ப்பாம்பினால் மரணம். லக்கினாஷ்டமாதிபதி-விருச்சிகத்திலிருந்து, கன்னியா ராசி வர்க்காம்சத்தைஅடையில், விஷகன்னிகை மூலமாய் மரணம். விஷகன்னிகை யென்பது-கலியாணப்பந்தல் பிரிக்கிறதுக்குள் விதவையாவாள். 16

𑌤𑍁𑌲𑌾𑌂𑌶𑍇 𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑍇𑌤𑌤𑍍𑌰𑌚𑍇𑌤𑍍 𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂𑌵𑌿𑌷𑌭𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍
𑌮𑌰𑌣𑌂𑌤𑍁𑌵𑌿𑌷𑌰𑌾𑌶𑍍𑌯𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌂 𑌕𑌾𑌲𑌕𑍋𑌦𑌿𑌤𑌂॥ ௧௭

(தா-ம்.) லக்கினாஷ்டமாதிபதி-விருச்சிகத்திலிருந்து, துலாராசி வர்க்காம்சத்தை அடையில், வியாபார மூலத்தினால், விஷத்தைச் சாப்பிட்டு மரணமடைவான். இந்தப்படி விஷராசியினுடைய ராசி அம்சங்களை, லக்கினாஷ்டமாதிபதி அடையில், விஷமூலமாக மரணம் ஏற்படுமென்று அறியவேண்டியது. 17

𑌇𑌤𑍍𑌯𑍁𑌡𑍁𑌦𑌶𑌾𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌂𑌕𑍀𑌟𑌰𑌾𑌶𑍍𑌯𑌂 𑌶𑌭𑍇𑌦𑍋𑌨𑌾𑌮
𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃॥ ௧௮

(தா-ம்) கீடராசி அம்சபேதங்களை இந்த உடுதசாபிரதீபிகை யென்கிற கிரந்தத்தில் 9-வது அத்தியாயத்திற் சொல்லப்பட்டது 18

ஒன்பதாவது அத்தியாயம்.

கீடராசி அம்சபலன் நிர்ணயம்

முற்றிற்று.

உ

பத்தாவது அத்தியாயம்.

பக்ஷிராசி அம்சபேத நிர்ணயம்.

𑌅𑌥 𑌪𑌕𑍍𑌷𑌿𑌰𑌾𑌶𑍍𑌯𑌂𑌶𑌭𑍇𑌦𑌃

𑌅𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌕𑍍𑌷𑌿𑌰𑌾 𑌶𑍍𑌯𑌂𑌶𑌭𑍇𑌦𑌤𑌃 𑌫𑌲𑌂𑌸𑌾
𑌰𑌂𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌵𑌾𑌰𑌿𑌧𑍇𑌰𑌹𑌂॥ ௧

(தாத்பரியம்.) சோதிட நூல்களை ஆராய்ந்து, அதுகளுடைய சாராம்சங்களையெடுத்து, பக்ஷிராசிகளுடைய அம்சபேதங்களை இந்த அத்தியாயத்திற் சோதிட நூல் தெரிந்த வித்துவான்கள் சொல்லுகிறார்கள். 1

ஸிம்ஹமீநௌ ராசீ பூர்வமாஸ்ருத்ய ஸம்ஜ்ஞிதௌ பக்ஷிஸம்ஜ்ஞகௌ யத்பாவநாதயோ ஸிம்ஹமீநேஷு பக்ஷித்ரேக்காணே விஹகாம்ஸ ஸ்தாநம் தத்ஸம்பந்திவம்ஶம் ஸாதகாநாம் பாகேநராணாம் விவஸ வ்யக்ஷம்॥ ௨

(தா-ம்.) சிங்கவிராசி-மீனவிராசி-இந்த இரண்டு ராசிகளும், பக்ஷிராசியென்று சம்ஞை. ஒரு பாவாதிபதி சிங்க ராசி-மீனவி ராசிகளில் இருக்கினும், பக்ஷி திரேக்காணத்தை அடையினும், பக்ஷி ராசியினுடைய அம்சங்களை அடையினும், அந்த அம்ச திரேக் காணத்துக்குத் தக்கபடி, மானிடர்களுக்குப் பலன்களை யூகித்துத் திசாந்தர திசைகளிற் சொல்லவேண்டியது. 2

ஸூர்யாதிகேடஸ்ய யத்ராம்ஶஸ்ய யத் பக்ஷிஸம்ஜ்ஞம் வ்யவஸ்தித தத்ஸ்தா: தத்பக்ஷிமூலாத்பலமேவ தஸ்ய ஸாதகாநாம் பலதம்ஶுபம்॥ ௩

(தா-ம்.) சூரியாதிநவக்கிரகங்கள், பக்ஷிராசிகளில், எந்த ராசிகளில் அம்சம் பெற்றிருக்கிறதுகளோ? அந்தப் பக்ஷிராசிகளுடைய மூலமாய்ப் பலன்களை அனுசரித்துக் கொடுக்கும். 3

லக்நாதிபோ பக்ஷிகேஹ பக்ஷித்ரேக்காணேபி வா ஸம்ஸ்தித தத்கஹாதயோ: பக்ஷிமூலாத் பீதி ஸாதகாநாம் பயகாரகோ பவேத்॥ ௪

(தா-ம்.) லக்கினாதிபதி-பக்ஷிராசியிலிருக்க, பக்ஷிதிரேக் காணத்திலிருக்க, அந்தந்தக் கிரக திசாபுத்திகளில், மானிடர்களுக்குப் பக்ஷிமூலமாய்ப் பயம் ஏற்படும். 4

ஶுபாநாம் பாபகேடஸ்ய தஶாஸு ஶீக்ரதஸ்ய॥ ௫

(தா-ம்.) பாபக்கிரகங்களுடைய, திசைகளில், சுபக்கிரகங்களுடைய புத்திகள் ஏற்படில், சீக்கிரத்திற் பலன்களைக் கொடுக்கும்.

ராஜ்ய நாசோ மநஸ்தாபஸ் ஸ்வஸ்வாவஸ்தா ஸுவேரோகஸம்பவ: ஸுகே
ஸோபேந பக்ஷிராசாம்சகே ॥ ௬

(தா-ம்.) லக்கினுஷ்டமாதிபதி-பக்ஷிராசி அம்சங்களை அடையின் - அவர்களுடைய திசாபுத்தி காலங்களில், இராச்சியங்களுக்கு நாசம், மனஸ்தாபம்-ரோகாதிகள்-ஏற்படும். 6

ஜாதஸ்ய பக்ஷிமூலாத் மரணம் பவேத் । பாபஸ்ய
ஸ்வஸ்யாம்ஸக: தஸ்யாம் தேவ ராஜ்யஸம்பதா ॥ ௭

(தா-ம்.) லக்கினுஷ்டமாதிபதி-பக்ஷிராசி அம்சங்களில் இருக்கில், பக்ஷிமூலமாய் மரணம் ஏற்படும். அந்தத் திசைகளில், பாபக்கிரகங்களுடைய புத்தி ஏற்படில், இராச்சியசம்பத்து உண்டாகும். 7

பாகத்ரயஸ்ய ஸுபா: புத்ரலாப: யசோலாப: பூர்ணதர்ம
தேசே ஸுபாநாம் ஸௌம்யபுக்த்யந்தரேஷு புத்ரலாபஸ்ய ॥ ௮

(தா-ம்.) சுபக்கிரகங்களுடைய திசையில், சுபக்கிரகங்களுடைய புத்தி அந்தரங்களில், புத்திர லாபம்—கீர்த்தி லாபம்—பூரணமான தருமலாபம்-இதுகள் ஏற்படும். 8

ஸுபக்ரஹஸ்ய தசாயாம் பாபானாம் புக்தௌ யவநாசார்ய: பா
பபேடஸ்ய புக்தி புத்ரஸ்ய நாசநம் ॥ ௯

(தா-ம்.) சுபக்கிரகங்களுடைய திசையில், பாபக்கிரகங்களுடைய புக்திகளில் புத்திரநாசம் ஏற்படுமென்று யவனாசாரியர் சொல்லுகிறார். 9

யவநாசார்யோ ராஜகோபோ தநநாசஸ் ஸம்பவ: ஸுப
பாபஸ்ய புக்திகாயாம் பக்ஷிராஸ்யம்சபேதா நாமகவ:
பரிவேஷ: ॥ ௰

(தா-ம்) யவனாசாரியார்-சொல்லுகிறார். சுபக்கிரக திசையில்-பாபக்கிரக புத்தியில், தனநாசம் - இராஜகோபம் - இவைகள் சம்பவிக்குமென்று சொல்லுகிறார். இந்த அத்தியாயத்தில், பக்ஷிகளுடைய ராசி அம்சபேதங்களையெடுத்துச் சொன்னார். 10

பத்தாவது அத்தியாயம்.

பக்ஷி-ராசி அம்சபேத நிர்ணயம்,

முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம்.

திசாபுத்திபேத திருஷ்டிபோக மரணஹேது நிர்ணயம்.

दशाभुक्तिभेददृष्टिभोगमार्ग
मरणहेतुनिर्णयः ।

अथ दशापुत्रबलाद्दशाभुक्तिर्हेतुः । मरणं दृ-
ष्टिभोगाभ्यां नानाधारणाविधिकं ॥ க

(தாத்பரியம்.) திசாபுத்திகளுடைய பேதத்தினாலே, பார்வை போகங்களினாலே மரண ஹேது நிச்சயமாய்ச் சொல்லுகிறார். இதன் பிறகு திசாந்தரபுத்திகளுடைய பேதங்களைச் சொல்லப்போகிறார். மரணம்-பார்வை-போகம்-இவைபோன்ற மானிட ஜென்மங்களுக்கு அநேகமாய் நடக்கும் நடப்புகளை எடுத்துக்கூறுவார். 1

अष्टमाधिपदशायां मृत्युदायिनी त्रिषडाया-
धिपदशायां कष्टदायिनी ॥ உ

(தா-ம்) எட்டுக்குடையவன் திசையில், மானிடர்களுக்கு-மிருத்தியு பலனைக்கொடுக்கும். 3—6—11-க்குடையவர்கள்-திசைகளில் மரணத்துக்குச் சமானமான துக்கங்களையும், அதிக கஷ்டங்களையுங் கொடுக்கும். 2

राहुकेत्वोर्दशाकष्टदा अंशस्थाधिपस्य वा ।
रन्ध्रव्ययाधिपदशा देहविनाशिनी ॥ ௩

(தா-ம்) இராகு-கேதுக்களுடைய திசைகளும், மாந்தியிருந்த அம்சாதிபன் திசையிலும், கஷ்ட பலன்களைக் கொடுப்பன். 8—12-க்குடையவன் திசைகளில் மரணத்தைக் கொடுப்பன். அல்லது-சரீரத்தில் பெலமான ரோகங்களை ஏற்படுத்திப் பலஹீனத்தைப் பண்ணுவன். 3

व्ययेशदशाकष्टावमध्ये त्रिकोण वस्था । शनिदेव
शत्रुगृहावस्थस्य ॥ ௪

[illegible] ௫

(தா-ம்.) எட்டுக்குடையவன் திசையிலும், 22-வது திரேக்காணாதிபன் திசையிலும், இந்தக் கிரகங்களுடைய அந்தர திசையிலும், மாரகாதிபர்கள் திசையிலும், இவர்களுடைய புத்தியிலும், கஷ்டபலனைக் கொடுப்பார்கள். முன்சொல்லியவர்கள் (கேவலம்) பாபக்கிரகங்களாக இருந்தால், அவர்களுடைய திசாபுத்திகளில் மாரணத்தைப் பண்ணுவான், என்றார்கள். 4-5

[illegible] ௬

(தா-ம்.) எட்டுக்குடையவன் திசையில், லக்கினாதிபனுடைய புத்தி அந்தரத்தில், (அல்லது) அஷ்டமாதிபன் திசையில்) 6-க்குடையவன் புத்தியில், மரணம் ஏற்படும். 6

[illegible] ௭

(தா-ம்.) யாதொரு பாவாதிபதி-12—6—11—3-க்குடையவர்கள் சம்பந்தம், பார்வையுண்டாகில், இவர்களுடைய திசாபுத்திகளில், மிருத்திய பிரதமான பலனைக்கொடுப்பன். 7

[illegible] ௮

(தா-ம்.) 6—8—12-க்குடையவர்கள் திசாபுத்திகளில் மரணத்தைக்கொடுப்பன். இராகுகேதுக்களுடைய திசையிலும், 6—8—12-க்குடையவர்களுடைய புத்திகளிலும், மரணத்தைக் கொடுப்பன். 8

[illegible] ௯

(தா-ம்.) மாரகாதிபதி - திசையில், மாரகாதிபதி - புத்தியில், உடன்பிறந்தவர்களுக்கு மரணம் உண்டாகும். (அல்லது) உடன் பிறந்தார்களுக்குச் சமானமானவர்களுக்கு மரணமுண்டாகும். 9

தஶாயாம் மாரகஸ்யேஶஸ்ய ரந்த்ரேஶஸ்ய ம்ருதிர்பவேத்। விபரீதே ஸ்யாந்மாரகேஶே தஶாயாம் மாரகஸ்யேஶஸ்ய ச॥ ௰

(தா-ம்.) மாரகாதிபதி-திசையில், பிதுருஸ்தானாதிபதி புத்தியிலும், பிதுருஸ்தானாதிபதி திசையில், மாரகாதிபதி புத்தியிலும், மரணம் ஏற்படும். 10

ஸர்பாராஹுகேத்வோர்ஷஷ்டாஷ்டமவ்யயஸ்திதௌ: ஸம்பந்தஸ்யத்ருஷ்டியோகே மரணம் தத்ர ஸம்ஶய:॥ ௧௧

(தா-ம்.) இராகு-கேதுக்கள்-6-8-12-வது வீடுகளில் இருந்தாலும், அவர்களுடன் சம்பந்தப்பட்டாலும், அவர்களுடைய பார்வைகள் ஏற்பட்டாலும், இராகு கேதுக்களுடைய திசையிலும், 6-8-12-க்குடையவர்கள் புத்திகளிலும், மரணத்தை-யுண்டெண்ணுவன். இதை மிகவும் யூகித்துச் சொல்லவேண்டியது. 11

த்ரிஷடாயாதிபா: பாபா: ததா தேஷாம் ம்ருதிர்பவேத்। தத்ஸம்பந்தேந தஶாயாம் வ்யாதிக்ஷேத்ரேஶமாயாம் ம்ருதி:॥ ௧௨

(தா-ம்.) 3-6-11-க்குடையவர்கள் பாபிகளாக இருந்து, அவர்களுடைய திசாபுத்திகளில் மரணம். 12

ஏவம் நிஶ்சித்ய பாவாநாம் யோகாநாம் ஜாதகஸ்ய ச। யந்த்ரேஷு தஶாவிபாகே மரணம் ஸ்வநிர்ணய:॥ ௧௩

(தா-ம்.) பூர்வத்தில் சொன்ன பிரகாரம், கிரக திசைகளையும், பாவங்களையும் நிச்சயித்து, பந்துவர்க்கங்களுக்கும், துக்கங்களையும், மரணங்களையும், காராக்கிரக பந்தனங்களையும், தன நஷ்டங்களையும் யூகித்துச் சொல்லவேண்டியது. 13

ஸ்வஸ்திகே த்ரிகோணே கேந்த்ரே க்ரஹா: ஶுபதாயகா:। ஸகாரஹர்ஷதஶாயாம் க்ஷேத்ரேஶ்வர்யம் க்ஷேமம்। ஏதத்

[illegible]

(தா-ம்.) 1-4-7-10-5-9-2-11, இந்த ஸ்தானங்களுக்கு-உடையவர்கள், கேந்திர திரிகோணம் தனலாப ஸ்தானங்களில், நட்பாட்சி யுச்ச ராசிகளில் இருக்கில், உத்தமமான சுபபலன்களைச் சம்பூரணமாகத் தனம்-தானியம்-களத்திர-புத்திர-பவுத்திர-கிரக க்ஷேத்திரங்களை மென்மேலும் அபிவிருத்தியடையும்படி கொடுப்பார்கள். இந்த நக்ஷத்திர திசை, பிரகாசமாகச்சொல்லும் கிரந்தத்தில், திசைகளுடையவும், புத்திகளுடையவும், பேதங்களைத்தெரிந்து, மரணகாலங்களையும், யோகாதிசய காலங்களையுங் குறிப்பிட்டு இந்த 11-வது அத்தியாயத்திற் சொல்லப்பட்டது. 14

பதினோராவது அத்தியாயம்.
திசாபுத்திபேத திருஷ்டிபோக மரணஹேது நிர்ணயம்.
முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

மாசதிசாபலன் நிர்ணயம்.

[illegible]

[illegible]

விசேஷ: ஸ்வாய்ஜன்மநக்ஷத்ராதாரப்யாதித்யாக்ராந்தநக்ஷத்ரபர்யந்தம் கணயித்வா ஸப்தகுணம் தசஹ்ருதம் ஏகசேஷம் ரவிதசா த்விசேஷம் புததசா த்ரிசேஷம் ராஹுதசா சதுச்சேஷம் குருதசா பஞ்சசேஷம் கேதுதசா ஷட்சேஷம் சந்த்ரதசா ஸப்தசேஷம் சனிதசா அஷ்டசேஷம் சுக்ரதசா நவசேஷம் குஜதசா ॥க-அ

(தாத்பரியம்.) இதன்மேல் மாசதிசாபலன்களைச் சொல்லப்போகிறார், ஜென்ம நட்சத்திரம் முதல், சூரியன் பிரவேச நட்சத்திரம் வரையில், எண்ணி; எண்ணின தொகையை ஏழினாற்பெருக்கிப், பத்தினால் வகுத்து; வந்தசேஷம்,

ஒன்றுமீந்தால்	—சூரியதிசை	நாள்—1—நாழிகை—30
இரண்டுமீந்தால்	—புதன்திசை	நாள்—4—நாழிகை—15
மூன்றுமீந்தால்	—இராகுதிசை	நாள்—4—நாழிகை—30
நான்குமீந்தால்	—குருதிசை	நாள்—4—நாழிகை— 0
ஐந்துமீந்தால்	—கேதுதிசை	நாள்—1—நாழிகை—45
ஆறுமீந்தால்	—சந்திரதிசை	நாள்—2—நாழிகை—30
ஏழுமீந்தால்	—சனிதிசை	நாள்—4—நாழிகை—45
எட்டுமீந்தால்	—சுக்கிரதிசை	நாள்—5—நாழிகை— 0
ஒன்பதுமீந்தால்	—செவ்வாய்திசை	நாள்—1—நாழிகை—45

திசாநாதன் போறப்புத்திகள் அந்தரம் இதுகளும் பிரித்துச் சொல்லவேண்டியது.

(1-முதல் 8-வரை)

ஏவம் ஸூக்ஷ்மதசா ப்ராணதசா தயா। உக்தா ஜ்யோதிர்விதி: ஸூக்ஷ்மா ஜ்ஞேயா வுத்தமை:॥ க

(தா-ம்.) இந்தப்பிரகாரம் சூக்ஷ்மதிசா பிராண திசைகளும், சோதிட நூல் அறிந்த புத்திமான்கள் சொல்லுவார்கள். 9

ரவிஸங்க்ரமகாலேது யத்ர லக்னம் தஸ்மின் ராசௌ ஸம்ஸ்திதே ஸதி மாஸதசா விசிந்த்யதே॥ கம

(தா-ம்.) சூரியன் மாசப்பிரவேச காலம்-எத்தனை நாழிகைக்கு ஏற்படுகிறதோ? அந்த நாழிகைக்கு, என்ன லக்கினம் உதய

மாகிறதோ? அந்தலக்கினம் ஜென்ம லக்கினமாக - ஏற்படுத்திக் கொண்டு, அந்தக் காலத்தில், தாத்காலிக பஞ்சாங்கம் வைத்துக் கொண்டு, ஜெனன ஜாதகம்போல், திசாபுத்தி பலன்கள் சொல்ல வேண்டியது. 10

ஶிரோரோகஜ்வரஸந்தாப: பித்தரோகோ ந்ருபாத்பயம்
ஷஷ்டாஷ்டவ்யயகே ஸூர்யே மாஸாதீஶே ஸஶத்ருணா॥ கக

(தா-ம்.) இதன்மேல் மாசதிசையினுடைய திசாபலன் சொல்லுகிறார். திசாநாதனான-சூரியன்-6-8-12-வது வீடுகளிற் பாபி-சத்துரு கிரகங்களுடன் கூடியிருக்கில், சிரசில் ரோகம். ஜ்வரம்-தாபம்-பித்த ரோகம்-இராஜபயம்-இதுகள் உண்டாகும். 11

ஸ்வோச்சமித்ரக்ஷேத்ரஸ்தே ஸ்வக்ஷேத்ரே நவபஞ்சகே
ரோகநாஶகரோ பானு: ஶுபத்ருஷ்டோ தனப்ரத:॥ க௨

(தா-ம்.) திசாநாதனாகிய சூரியன் நட்பாக்ஷி உச்சஸ்தானங்களிலும், தனலாப கேந்திர திரிகோணங்களிலும், சுபனுடைய பார்வை சேர்க்கையுடனிருக்கில், ரோகநாசமும், சகலசம்பத்துகளும் உண்டாகும். 12

ஶீதகௌ ஶுபஸ்தானே ராஜாஶ்ரயஸுகம் பவேத்
ஸ்த்ரீமூலாத் வஸ்த்ரலாபஶ்ச ஸுபோஜ்யம் ஶுக்லபக்ஷகே॥ க௩

(தா-ம்.) சுபஸ்தானங்களில் சந்திரனிருக்க, அந்த சந்திர திசை வரில், இராஜாக்கள் மூலமாய் லாபம். சுகம் உண்டாகும். பெண்கள் மூலமாய் வஸ்திர லாபம். உத்தமமான சாப்பாடு கிடைக்கும். இது, சுக்கிலபக்ஷத்துச் சந்திரன் பலன். 13

வஸ்த்ராபரணலாப: ஸ்யாத் ஸோதராத் பத்ரிகாகம:
மாத்ருவர்காத் தனப்ராப்தி: ஶுக்லே சந்த்ரதஶாபலம்॥ க௪

(தா-ம்.) சுக்கிலபக்ஷத்துச் சந்திர திசையில், வஸ்திரங்கள் ஆபரணங்கள் இதுகள் வரத்துண்டாகும். சகோதரனிடத்தில் இருந்து; சமாசாரப் பத்திரிகைகள்வரும். மாதுருவர்க்கத்திலிருந்து, தனலாபம் ஏற்படும்.

[illegible] கரு

(தா-ம்.) கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன்-அஷ்ட ஸ்தானங்களில், பாபிகளுடன் சம்பந்தம் பார்வை உண்டாயிருந்து, பகைநீச வீடு களில் இருக்கில், சீதசுரம்-உண்டாகும், மாதுருவர்க்கத்தில் பீடை உண்டாகும். அஜீரண ரோகத்தினால், சரீரத்தில் பீடைகள் சம்ப விக்கும், நீர்ப்பாம்பினாற் பயம் உண்டாகும். (அல்லது) ஜலத்தினாற் பயம் உண்டாகும், சாதுர்த்திக சுரம் உண்டாகும். 15-16

[illegible] கஎ

(தா-ம்.) திசாநாதனை செவ்வாய் அஷ்டஸ்தானங்களில், பாப சம்பந்த வீக்ஷணத்துடனும், பகைநீச க்ஷேத்திரங்களிலிருக்கில், இராஜகோபம், சுரபீடை, சரீரத்திற் சொறிசிரங்கு, நெருப்பினாற் பீடை, அஸ்திரசஸ்திரம் முதலிய ஆயுதங்களினாலும், பித்தரோகத் தினாலும் பீடை உண்டாகும். 17

[illegible] கஅ—உ௰

(தா-ம்.) திசாநாதனை செவ்வாய் நட்பாக்ஷி உச்சராசிகளிலும், தனலாப கேந்திர திரிகோணங்களிலும், சுபக்கிரகங்களுடைய பார் வையும், சுபக்கிரகங்களுடன் சம்பந்தம்—சுப ஷட்வர்க்காம்சங்களி லும், அடைந்திருக்கில், இராஜாக்கள் மூலமாய் தனம் வரவும், சரீர சவுக்கியமும், சகோதரவர்க்க மூலதனப் பிராப்தியும், புத்திரனால் வாகனச் சேர்க்கையும், இராஜபந்துமூலமாய்த் தனலாபமும், சதுஷ்

ராதங்கள் முதலிய கன்றுகாலி நாற்கால் ஜெந்துக்கள் லாபமும், தன விருத்தியும், செம்பு வெண்கலம் சிவப்பு வஸ்திரம் இதுகளுடைய லாபங்களும், செவ்வாய் திசையில் ஏற்படும். (18-முதல் 20-வரை)

பந்துவாகெஷுஸௌக்யம் பந்துவமபூாகஸ்யநாமஷு:
ராஜவித்தம்வணிஜ்யாத்தம் பராணபம்நாதிஷி: ஸம்யுவமபூாஷுநவூா
பஷிஃ ஷிவிஜெவநதாவிவா ஸஹயொமெ க்ஷணாஸ்யாஜு
ஸஹஷாஹஷூ நீஷிண:॥ உக-உஉ

(தா-ம்.) புந்தியின்திசாபலன்:— புதன் தனலாப கேந்திர திரிகோண உச்சமித்திர சுபக்ஷேத்திரங்களிலிருக்கில், விசேஷ சௌக்கியம் - புத்திரர்களுடைய மூலமாய் தன வரவு-இராஜாக்களுடைய தனம், வியாபாரமூலமான தனம், புராணம் வாசித்து அதன் மூலமாய்த் தனவரவு, பூமியிலிருந்து புதையல் அகப்படுதல், எழுத்து மூலமாய் தன சம்பந்தம் உண்டாம். திசாநாதனாகிய புதன், சுபக்கிரகங்களுடைய சம்பந்த வீக்ஷணங்கள் கிரகத்தில் நித்தியகல்யாண மங்களோச்சவாதிகள் நடந்துவரும். 21-22

பாபெக்ஷணாக பாவயொமாக பாவராஸிஷுதெ
ஸவி:திரிஷொஷாக ஹவரொமஸ்ய ஸஹிவாதொஹாஸயம்
ஷுகஸஜொவாஉமஷூஹிஷூஷிவமெயுவாஷய: பாத்ருவ
மெயுஷரொமாவ்ரு: கம்ரொமாயவாஸவெக॥ உக-உச

(தா-ம்.) திசாநாதனாகிய புதன்-6-8-12-ல் பாப ராசி பாபவர்க்கங்களிலும், பகைநீச க்ஷேத்திரங்களிலும், பாபவீக்ஷண சம்பந்தம் பெற்றிருந்தாலும், திரிதோஷம் ஜன்னிபாதசுரம், இருதயரோகம்) சூலரோகம், குன்மரோகம், முதலானதுகள் உண்டாகும். (அல்லது, மந்திரிவர்க்கத்திலாவது, புத்திரவர்க்கத்திலாவது, முன்சொல்லப்பட்ட ரோகாதிகள் உண்டாகும். (அல்லது) ஜாதகனுக்கு கண்டத்தில் ரோகம் உண்டாகும். 23-24

உஸாவிபாகெ ஜீவஸ்யஸஹி வாஹாஸ்ய ஷூஸஹெவெ:
யஜ்ஞாகபராண பூரவணாக வெஉபாமாயமஉ: வளரொஷி

[illegible] ௨௫-௨௬

(தா-ம்.) திசாநாதனான குரு; தனலாப கேந்திர திரிகோணங்களிலும், உச்சமித்திர சுபக்ஷேத்திரங்களிலும், சுபராசி-சுபக்கிரக சம்பந்த வீக்ஷணங்களிலும், இருக்கில், மந்திரி ராச்சியம் பண்ணல், சபைகளில் புராணப் பிரசங்கஞ்செய்தல், தான்கற்ற வேதங்களைப் பிறருக்குச் சொல்லி வைத்தல், புரோகிதம் செய்தல், இதுகள் மூலமாய்த் தனலாபம் உண்டாகும். 25-26

[illegible] ௨௭-[illegible]

(தா-ம்.) திசாநாதனாகிய குரு, பாபராசியிலும், பாபவர்க்கங்களிலும், 6—8—12 மிடங்களிலும், பகை நீசராசிகளிலும், பாபசம்பந்தம் பாபவீக்ஷணங்களிலும் இருந்தால், புத்திரனுக்கு மரணம் ஏற்படும். (அல்லது) சிநேகிதனுக்காவது மரணம் ஏற்படும் (அல்லது) நாற்கால் ஜீவனால் பயம் உண்டாகும். கிராமக் கூட்டங்கூடத்தாலும் போயிருக்க அதில் ஒரு கலகமுண்டாகும். சிலேட்டும ரோகபீடை இவைகளுண்டாம்.

திசாநாதனான சுக்கிரன், சுபராசி-சுபக்கிரக சம்பந்த வீக்ஷணத்துடன் தனலாப கேந்திர திரிகோண உச்சச் சுபக்ஷேத்திர ராசிகளிலும், சுபவர்க்காம்சங்களிலும், அடைந்திருக்கில், இராச்சிய லாபம், தனலாபம், ஸ்திரீமூலமாய்ப் பூமிலாபம், விசேஷகந்த புஷ்ப வாசனாதி வஸ்துக்களையும், ஸ்திரீ ஜனாதி காமபோகாதிகளாகிய சம்பத்துக்களையும் அனுபவிப்பன். சிநேகிதன் மூலமாய் வஸ்திரபூஷணம், தனலாபம் முதலான சம்பத்துக்கள் உண்டாகும். 27-30

[illegible] ௩௧-௩௩

(தா-ம்.) திசாநாதனுகிய சுக்கிரன், சத்ருநீச க்ஷேத்திரத்திலும், சட்டாட்டமவிரய ஸ்தானங்களிலும், பாபவர்க்கம், பாபக்ஷேத்திரம் பாபசம்பந்த வீக்ஷணங்களிலும், அஸ்தங்கத்திலும் இருக்கில், ஸ்திரீ ஜனங்களிடத்தில், வியவகாரமும், கலகமும், சிலேட்டுமாதி மேகாதி ரோகமும், வெள்ளிப்பாத்திர நாசமும், இராஜ மூலமாய் பிராணஹானியும், தனநாசமும், சாதுர்த்திக சுர பீடையும், மூத்திரக்கிருச்சிராதி ரோகமும், பீனிச ரோகமும், நேத்திரரோகமும், சுக்கிர தோஷத்தினுல் ஏற்படும். 31-33

[illegible] ௩௪-௩௭

(தா-ம்.) திசாநாதனுகிய சனி, நீசசத்துருமூட க்ஷேத்திரங்களிலும், சட்டாட்டமவிரய ஸ்தானங்களிலும், பாப சம்பந்த வீக்ஷணங்களோடுங்கூடியிருக்கில், சனி துஷ்டபலனைக் கொடுப்பன். (அதாவது) சோரபயம், ரோகபயம், ஜன்னிபாதசுரம், சூத்திரன்-வேலைக்காரன், இவர்கள்மூலமாய்க்கலகம், வாயுவு உபத்திரவத்தால் முழங்காலில், வலியுண்டாகி நொண்டியாகும்படி கண்டிப்பாய் ஏற்படுத்தும், ஈனமான தொழில்களில் தானே பிரவேசிப்பன். கசப்புக்கடை வைப்பன், காராக்கிரக பந்தனங்களேற்படும்.

திசாநாதனாகிய சனி, உச்சமித்திர சுபக்ஷேத்திரங்களிலும், தனலாப கேந்திர திரிகோணங்களிலும், சுபசம்பந்தம் சுபவீக்ஷணம் ஏற்படில், தாசிதாசர் முதலான வேலைக்காரர்கள் விருத்தியும், எருமை மாடு முதலானதுகள் விருத்தியும், சூத்திரர்கள் நீசர்கள் மூலமாய்த் தனலாபமும், விசேஷமாக உண்டாகும். 34-37

விவாகெஒ௦ஷிகெயஸ்யஜெழு வ௦ஶாஊஜ௦ஹய௦। ஶஸ-ஷி
காஊயொரொமாஃ விஷ-ஷிவிஷஜ௦ஹய௦॥ கஷஸாராஷிக௦வா
ஷிஊஷ-ராஹஃஷௐ௦ஸ்யு-த௦। ஶஹயொஶக்ஷணாஷ்யாஹ
ஶஹ்ராஶிஷி கொரவி॥யாந்ய க்ரியாஊநவ்யாஷிஃ க்ஷெ
வாஷணிஜ்ய தொஷிவா। கயகெ தாஊஶவா கெஸொடக௦
வாஸமய௦ர॥ மஹ்யஷ்ணாஷயிரொமஃ கஷஷொநீவ
ஜாதிஷிஃ। திக்ஷ௦ஶொஊழு ஷ்வா॥வ்யஷ்ஷெஷா வாயஷிஸ்யதிஃ
ஊவாஷஸெதஹஊண௦ஸந்யா ஹொவாவிரக்தா। ஶஹயொ
ஶக்ஷணாஷ்யாஹ ஷ்ஷஊரு யநாமஃ॥வாண்ய தீயஷ
ஷாநவாஸொ ஊவதாஊஶநாஷிக௦। வாராண ஶ்ரவண௦
வாஷிவெஊஶாஷ்ரு விவாஷிதாஃ ஸகஷிவஷாமஊ॥வாஷிவர
வஷ்ராஷஸ௦வஊஃ। வக்ஷண௦திஷவிஷஸ்ய ஊஊ்ரவ்யஸ்ய
ஷ்திஷஹஃ॥ஷவஊஊஶாஷ்ரகாஷஹாணா௦காஷவிதஷஊஃ
ஸர்யமாஷொ வ்யஊிஊா௦ தக்ஷகாஷெ விஶொஷதஃ॥ காஷஜாத்ய
நாஊஷநஷஊஷஹ்ய௦ப்யதஃ। ஷஷொஊஸஊஶாஷ்ரகா
ஜொதிஶாஷெ கஷிகவாஷஷெஃ॥ ௩௮-௪௧

(தா-ம்.) திசாநாதனை இராகு துஷ்ட ஸ்தானங்களிலும், நீச சத்துரு க்ஷேத்திரங்களிலும், பாப சம்பந்த பாப வீக்ஷணங்களிலும் அடைந்திருக்கில், துலுக்கன்-பறையன் முதலானவர்களால் பயமும் விஷபயமும் அம்மை முதலான ரோகபீடையும், அபஸ்மாராதி ரோகம் முதலானதுகளால் தேகபீடையும், அநேக கெட்ட பலன்களும் நடக்கும்.

திசாநாதனான இராகுவுக்கு; சுபஸ்தானம்-சுபக்ஷேத்திரம்-சுபசம்பந்தம்-சுபக்கிரகங்களின் பார்வைகளும், ஏற்படில், தானியவியா

பாரத்தினுல் தனலாபமும், பயிர்த்தொழில், பலவிதமான வியாபாரத் தொழில், இவைகளினுல் தனலாப முண்டாகும்.

திசாநாதனுன கேது, துஷ்ட ஸ்தானங்களிலும், துஷ்ட கிரகங்களுடைய சேர்க்கையும், பார்வையும் பெற்றிருக்கில், தேகத்திற் கொப்பளம்; பவுந்திர ரோகம், ஆண்குறி பெண்குறியில் ரோகம், கிரந்திரோகம், சூலைரோகம், பயித்தியரோகம், மூத்திரரோகம், நீச ஜாதிமூலமாய்க் கலகம். விஸ்மிருதி புத்திக்குச்சலனம் (அல்லது) சன்னியாசம். இந்தப் பலன்களுண்டாகும்.

திசாநாதனுன கேது, சுபராசி-சுபஸ்தானம்-சுப சம்பந்த வீக்ஷணங்கள் இருக்கில், பிரஷ்டன்-மித்திரன் இவர்கள் மூலமாய் தனலாபம். புண்ணிய தீர்த்த ஸ்நானம், தேவதைகளுடைய தரிசனம். புராணுதிசிரவணம், வேதசாஸ்திர விசாரணை, பெரியோர்களுடைய தரிசனம், பிறருடைய வஸ்திரம்—கட்டுதல், அன்னியருடைய அன்னங்களைச் சாப்பிட்டு ஜீவனம்செய்தல். எள்ளு முதலான பக்ஷணம், கோதானம்-எருமைக்கிடாய்தானம், அஜதானம், மிருத்தியுதானம், இது முதலான தானங்கள் வாங்குவன். இந்தப்பிரகாரம் திசைகளுக்குப் பலன் சொல்லவேணுமென்று சோதிட வித்துவான்கள் சொல்லுகிருர்கள். நன்ருக ஆலோசனைசெய்து கிரகங்களுடைய பெலங்களையும், ஷட்வர்க்கங்களுடைய பெலங்களை யூகித்தும் நட்பாக்ஷி உச்சம் பகைநீசங்களையும், பார்த்து யோசனைசெய்து, ஜாதி குல தேசங்களையும், ஜாதகனுடைய யோக்கியதைக்கும், யோகத்துக்கும், தக்கபடி, மாசதிசாபலன்களையும்சொல்லவேண்டியது, இந்தப்படியே வருஷதிசாபலன்களையும் சொல்லவேண்டியது, சூரிய திசைக்கு-18-நாள், சந்திர திசைக்கு-30-நாள், செவ்வாய் திசைக்கு—21-நாள், இராகு திசைக்கு-54-நாள், குருதிசைக்கு-48-நாள், சனி திசைக்கு-57-நாள், புதன் திசைக்கு-51-நாள், கேது திசைக்கு-21-நாள், சுக்கிர திசைக்கு-60-நாள், ஆக நாள்-360.

இன்னம் ஒருவிதம் [illegible] என்ற வாக்கியப்படி ஜெனனகாலத்தில், சூரியன் எந்த ராசி-பாகை-கலைகளில் இருந்தானே? ஒவ்வொரு வருஷத்திற்கும், அதே ராசி-பாகை கலைகளில், வருங்காலம், ஜன்ம லக்கினமாகவும், அந்தக் காலத்திற்

பஞ்சாங்கக் கிரகத்தை வருஷக் கிரகங்களாகவும், ஏற்படுத்திக் கொண்டு மாச திசைக்குச்சொன்ன பலன்கள் போலவும் சொல்ல வேண்டியது. (38-முதல் 46-வரை)

[illegible] சஎ

(தா-ம்.) திசாபுத்திகளுக்குப் பலன்கள் சொல்லும் விஷயத்தில், இந்தக்கிரந்தத்திற் சொன்ன பெலன்கள் பலன்கள் தவிர, அன்னிய கிரந்தங்களிலும் சொல்லி இருக்கப்பட்ட பலன்களையும், சேர்த்துக் கொள்ளவேண்டியது, இந்தப் பலன்கள் சொல்லுங்காலத்தில் தற்கால கோசரபலன்களையும், அனுசரித்துச் சொல்லவேண்டியது.

பிரசனகாலத்திலும், ஆர்த்தவகாலங்களிலும், விவாஹ பிரசனைகளிலும், மாசதிசை வருஷதிசை ப்ரசன்னகாலங்களில் உபயோகப்படுத்தலாம். 47

உபதேசாபிரதீபிகா கிரந்தத்தில்
மாசதிசை முற்றிற்று.

[illegible] சஅ

(தா-ம்.) சோதிட நூல்களை அனுசரித்துப் பலன் சொல்ல வேண்டியது. 48

[illegible] சகூ

(தா-ம்.) சோதிடம் சொல்லுகிறவனுடைய லக்ஷணம் தீக்ஷணமுள்ள புத்திமான்-தெய்வப்பிரசாதம் உள்ளவன்-சத்தியவான் பிறர்களைக்கண்டு அசூயைப்படாதவன். இப்படிக்கு இருக்கப்பட்டவன் யாரோ? அவன்தான் அதிகாரியாவன். 49


உபதேசாதிசாப்பிரதீபிகா
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.
ஸம்பூரணம்.

விஷய அட்டவணை.

உடுதசாபிரதீபிகை.

அத்தியாய அட்டவணை.





வாயுவும் அழகையுடைய ஆகாசமும் சந்திரனும் சூரியனும் ஆன்மாவும் ஆயினவராகியுமிருக்கின்ற பரமசிவனுடைய,— காதல் அழகு ஆய் - குமாரராகிய முருகக்கடவுளினது திருவுருவத்தைத் தியானி;—அங்கு அலை அதிரும் செந்திலாய் என்க - அவ்விடத்தே சமுத்திரம் ஒலிக்கின்ற திருச்செந்தூரையுடையவரோ என்று சொல்லு;—கன்றல் நெஞ்சே - வருந்தாதொழி என் மனமே. எ-று. என்மனமே இயமன் வருங்காலத்திலே வருந்தாதொழி முருகக்கடவுளினது திருவுருவத்தைத் தியானி திருச்செந்தூரையுடையவரே என்று சொல்லு எனக் கூட்டுக. சரீராந்தியத்திலே மனமானது எப்பொருளிலே சிந்தனை வைத்ததோ அப்பொருளே கைகூடும் என்பது சாஸ்திரசித்தம் ஆதலால், இப்படி உணர்த்தியருளினார். எக்காலத்திலும் இடைவிடாமல் வைத்த சிந்தனை எதுவோ அதுவே சரீராந்தியத்திலும் வருவது ஆகையால், முருகக்கடவுளைத் தியானித்தலை எக்காலத்திலும் இடைவிடாது செய்தாலொழியச் சரீராந்தியத்திலே செய்தல் கூடாது எனவும் அதனால் எப்பொழுதும் தியானிக்கவேண்டும் எனவும் அறிந்துகொள்க. (கூ0)

திருச்செந்தினிரோட்டயமகவந்தாதியுரை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.



உ

கணபதி துணை.

பழமலையந்தாதி.

காப்பு.

சீரதங்கோட்டுமுனிகேட்ட நூற்படிசெங்கரும்பா
லேரதங்கோட்டுவயல்சூழ்முதுகுன்றிறையவனைப்
பூரதங்கோட்டுமலையானைப்பாடப்புரந்தருளும்
பாரதங்கோட்டுநுதியாலெழுதியபண்ணவனே.

திருவருந்தங்கவருங்கல்விமாதுசிறப்புவருங்
கருவருந்தங்கநிலையாதென்றுள்ளங்கரைந்திறைஞ்சிற்
பொருவருந்தங்கமலைபோலுங்குன்றைப்புராதனனை
யிருவருந்தங்கடலையாலிறைஞ்சுமிறைவனையே. (௧)

இறைக்குவளையுமிளங்கிள்ளையுமழகென்பவர்சேர்
துறைக்குவளையுமெகிளமும்வாவிக்குத்தூயவிதழ்
நறைக்குவளையுமழகாமுதுகிரிநாதர்க்கின்றிப்
பிறைக்குவளையுமுடல்வந்தவாறென்கொல்பேசுகவே. (௨)

பேசுகவீரவருநாளென்றொல்லைப்பெருங்கடல்சே
ராசுகவீரபழமலைவாணவென்றன்பளைந்து
பூசுகவீரமதிவேணிநீற்றைப்புலவிர்பிறர்
காசுகவீரவனையுகவீர்மெய்க்கதிதருமே. (௩)

கதியிலைவேலைமடவார்க்கியற்றக்கருதுளமே
பொதியிலைவேலையுண்டுற்றோன்றொழும்பழம்பூதரத்தை
நுதியிலைவேலைமகிழ்வீரன்றந்தையைநோக்கிலைநீ
யொதியிலைவேலைவளர்ப்பாய்தருவையொடித்தெறிந்தே. (௪)

ஒடியமருங்குலைக்கொங்கைகள்வாட்டுறுமோடரிக்கட்
டோடியமருங்குலைக்காந்தளங்கைம்மகள்சோரமதன்
கடியமருங்குலைத்தீப்போன்மதியங்கனன்றெழுத
லடியமருங்குலைச்செய்ம்முதுகுன்றர்க்கறைகுவமே. (௫)

மேருக்குவடுநிகர்தோட்பழமலைமேவுதிருத்
தேருக்குவடுவசமாடுமாடத்தெருவினிற்போய்
நீருக்குவடுவிழியெழின்மாய்ந்தெதிர்நின்றுநம
ரூருக்குவடுவிளைத்தனளேயின்றொழிவறவே. (௬)

ஒழியாக்கவலையொழிவதென்றோசொல்லுழல்புலத்தின்
வழியாக்கவலையிடைப்படுமானின்மயங்கிநின்று
பழியாக்கவலைமனமேபணிந்துபரவிலைவேல்
விழியாக்கவலைமகளிறைதாழ்பழவெற்பினையே. (௭)

வெற்றிக்குமாரனையீன்றபழமலைவேந்தனின்னு
முற்றிக்குமாரனைநோக்குங்கொலோவென்பர்முலைவம்புச்
சொற்றிக்குமாரனைவார்மடவாரவன்றோண்முலையோ
டொற்றிக்குமாரனையோன்முனஞ்சேரவுழலுவரோ. (௮)

உழவரைச்சந்தவிளவாளைபாய்வயலோங்குகுன்றைக்
கிழவரைச்சந்ததமுநினைவாய்நற்கிளைவளரும்
பழவரைச்சந்தநறுந்தழைவாங்கிப்பரவினடு
ளெழவரைச்சந்தமயிலியல்பூசவுமெண்ணினளே. (௯)

எண்ணிவருந்தினநொந்தோம்பழமலையெய்திலர்கா
னண்ணிவருந்தினமின்றேயினிக்கதிர்நற்புரவி
மண்ணிவருந்தினமாவாலெழுந்துகள்வந்துடலின்
கண்ணிவருந்தினவான்மதிறேய்க்குங்கடிநகரோ. (௧௰)

கடிக்கஞ்சமனையுவந்துலகாக்குறுங்காரணனோர்
முடிக்கஞ்சமனைதொறும்பலியேற்றமுதுகிரியான்
மிடிக்கஞ்சமனைவருந்தொழவாழ்வம்விரவுறுமெங்
குடிக்கஞ்சமனைவெருவுதலேயின்றுகொல்வனென்றே. (கக)

கொல்லைக்குறவளைவாயனையார்கரிக்கோட்டைவிளை
நெல்லைக்குறவரையாதுகொள்காளத்திநேயனைவான்
றில்லைக்குறவனைநம்முதுகுன்றனைச்சேர்வலென்று
ரெல்லைக்குறவனைமாத்திரைக்கேநலமீகுவரோ. (கஉ)

ஈகையிலங்கைதவமுளமெங்ஙனமெய்துவமென்
றோகையிலங்கைவடிவேலொடுவருந்தோன்றறந்தை
வாகையிலங்கையாசிறவூன்றியவள்ளன்மழு
மாகையிலங்கைம்முகமுதுகுன்றன்மலர்ப்பதமே. (கங)

பதம்பரவைக்குவருந்துபிராற்குப் பசுமயின்மேற்
கதம்பரவைக்குவரச்சுற்றுகட்செவிக்கங்கணற்குச்
சிதம்பரவைக்குமுதுகுன்றவாணற்குச்செல்வமெல்லா
மதம்பரவைக்குநிகர்கரித்தோறலைமாலைகளே. (கச)

மாலைக்கலுழநெய்யோனெனத்தாங்கவயங்குமரு
ணூலைக்கலுழவொழியெனுமேற்றிவர்நோன்மையளும்
பாலைக்கலுழவொருமகற்கீந்தபழமலையான்
மூலைக்கலுழநடம்புரிவானெம்முதற்றெய்வமே. (கரு)

தெய்வசிகாமணியேமணிகூடலிற்சென்றுவிற்ற
மெய்வசிகாமணிகண்டாபழமலைவித்தகமீ
னெய்வசிகாமணிமாவெனுங்கண்ணியைநெஞ்சகத்து
வைவசிகாமணிறேவாதெனையின்பவாழ்வளித்தே. (கசா)

வாழுமரிக்குமட நெஞ்சமேமென்மலர்ப்பசுழி
தாழுமரிக்குமதற்காய்ந்ததந்தையுந் தாயுமொரு
வேழுமரிக்குமிகவுறவாம்பழவெற்பினயல்
சூழுமரிக்குயியல்பையெஞ்ஞான்றுந் துணிந்திலையே. (௧௭)

தந்துமியும்பரியம்பும்பழமலைசூழ்ந்துளாயீர்
நந்துமியும்பரியாவியைவேண்டியுண்ணும்புலவீர்
சிந்துமியும்பரிவாலுதவார்த்துதிசெய்விர்மல
முந்துமியும்பரிபாகமுண்டோசொல்லுமுங்களுக்கே. (௧௮)

கேட்டுப்புவனங்கொளவுமெண்ணுமெய்க்கிராதனின்முன்
னூட்டுப்புவனம்பயின்மான்றசையுண்டநாதனராய்ப்
பூட்டுப்புவனங்கொளுமெய்ப்பழமலைப்புண்ணியன்றாள்
வேட்டுப்புவனம்பதினான்குநல்கினும்வேண்டிலமே. (௧௯)

வேண்டவடுக்கநிலைவதன்றண்மலர்வேட்கைமணி
பூண்டவடுக்கணருநுதலார்மயல்போக்குவது
நீண்டவடுக்கனயமாதிளமுலைநேர்ந்துதவ
மாண்டவடுக்கணிகர்தோட்பழமலைமன்னவனே. (௨௦)

மன்னவமாதவனும்பழமலைவாணமணி
யன்னவமாதவனன்மலைக்காற்கலைசந்தமதிகண்
டென்னவமாதவனல்லின்வந்தாளென்றிரங்கிமதன்
றின்னவமாதவம்நாமேயென்செல்வத்திருந்திழையே. (௨௧)

திருந்தியவேதம்புகல்பரிசேயறஞ்செய்துடலம்
வருந்தியவேதம்பொருளெனவாழ்பழமாமலையான்
பொருந்தியவேதந்தருநஞ்சுணனெனிற்பூமலர்கா
மருந்தியவேதம்பயமனையாட்கணிமங்கலமே. (௨௨)

மங்கலமாவிமலைசேர்பழமலைவாணமணிச்
செங்கலமாவிமலர்க்கைக்குருகொடுசெல்கவெமர்க்
கிங்கலமாவிவளைநீயணைந்ததினியுனெதிர்
தங்கலமாவிதரிற்கொடுசேறுமெந்தன்மனைக்கே. (௨௩)

தண்டங்கமண்டலங்கொண்டுபழமலைச்சங்கரதாட்
புண்டங்கமண்டலங்கண்டுசென்றாலுமெய்ப்போதமுறார்
பண்டங்கமண்டலங்காரமின்னாக்கினன்பாட்டியலைக்
கொண்டங்கமண்டலம்பாழாக்கியவனைக்கூறலரோ. (௨௪)

கூற்றைக்கொடியங்கடப்பானருளெனக்கூய்ப்பரவி
யேற்றைக்கொடியங்கரஞ்சேர்பழமலையீசனணி
நீற்றைக்கொடியங்குளமேவெறுத்திநிறைபெருந்
மூற்றைக்கொடியங்கினமோடருந்துமுடம்பினையே. (௨௫)

உடற்குவலையந்தகன்கைக்கயிறென்றுணர்ந்துளமே
கடற்குவலயம்புகழ்சீர்முதுகிரிக்கண்ணுதற்கு
மடற்குவலயம்புரைகளத்தாற்குநம்மன்றமர்ந்த
நடற்குவலயம்பணியாமவற்கன்புநண்ணுகவே. (௨௬)

நட்டுவனாயறிகிலன்றண்ணுமைநந்திநின்று
கொட்டுவனாயிரைதேர்கயமுதுகுன்றுடையாய்
தட்டுவனாயகலாதநான்முகன்றாளமுயர்
முட்டுவனாவனைவான்பரவுநின்கூத்தினுக்கே. (௨௭)

கூத்துகந்தம்பலமேவுறுமோர்முதுகுன்றனைநம்
பாத்துகந்தம்பலமாரினுமெள்ளினும்பண்பனைத்தாள்
சாத்துகந்தம்பலமாமறையாற்புகழ்தாணுவைநா
மேத்துகந்தம்பலமார்பொதுமாதனையெள்ளினமே. (௨௮)

எள்ளாதவனையெலும்பாபழமலையென்றிருந்த
கள்ளாதவனைமகவரிந்தாக்கெனக்கட்டுரைத்து
விள்ளாதவனைமகிழ்பரமாவழல்வெண்மதியைத்
தள்ளாதவனைமுடிசூடெம்மாறுதருக்குதற்கே. (௨௯)

தருவினிலையினிமன்னவற்கில்லையித்தண்புனத்தின்
மருவினிலையினிமைக்கூற்றெனக்கந்திவானநிக
ருருவினிலையினியல்வேற்குகனையுதவியகோன்
கருவினிலையினிகந்தோன்பழமலைக்காரிகையே. (௩௰)

காரிகையார்க்குவரும்பொதுவோவல்லகாண்விசும்பிற்
பூரிகையார்க்குமுதுகுன்றநாயகன்பொங்குமருள்
வாரிகையார்க்குமருந்தனையான்மலைமன்னனரு
ஞரிகையார்க்குமெழுவுறழ்தோட்கணநுதலே. (௩௧)

நுதலரிக்கும்பருவங்குறையென்றவனோக்கடையா
முதலரிக்கும்பருமேத்துந்தமிழ்முருகுபெரு
குதலரிக்கும்பருகற்கருங்காமுதுகுன்றரிலார்
சிதலரிக்கும்பருமாமரம்போற்றுயர்தின்பவரே. (௩௨)

தின்னக்கனியைவிழைகூனிளமந்திதீங்கனியீ
தென்னக்கனியையிரவியிற்பாய்பொழிலீண்டுகுன்றை
நன்னக்கவினையமதிவேணியனித்தநாம்பயந்த
சின்னக்கனியைவலத்தில்வைத்தால்வருந்தீங்கென்னையே. ()

நீங்குதிரைக்கடனேர்நரர்காடியர்செய்மலத்திற்
காங்குதிரைக்கடநாய்க்கிரையென்றிந்தவாகமய
னீங்குதிரைக்கடநன்முதுகுன்றர்க்கநம்பனுக்கு
வாங்குதிரைக்கடனீயவல்லார்க்குவணங்குமினே. (௩௪)

வணங்கக்கரமுமொழியப்பழமலைமன்னுருவா
யிணங்கக்கரமுமிருப்பவைத்தேபுணரோந்திழையார்
பிணங்கக்கரமுருமலியும்போலவர்பின்றொடர்வி
ரணங்கக்கரமுதலைபோலுமைப்பற்றுமந்தகனே. (௯௫)

அந்தரங்கங்கைதவறியாமல்முதருள்சம்
பந்தரங்கங்கைவலிபோன்மின்றாக்கினர்பாடியுனைச்
செந்தரங்கங்கைரவமொண்கமலந்திரைத்துவருஞ்
சுந்தரங்கங்கைவிரும்புமுத்தாறுடைத்தொன்மலையே. (௯௬)

மலங்கலையங்கலைகற்றேன்றனக்கருள்வாழ்வளிப்போன்
கலங்கலையங்கலைநல்லோர்பரவுங்கழலடியான்
விலங்கலையங்கலைவேலோன்பிதாமுதுவெற்பிடத்திற்
பொலங்கலையங்கலையான்மூடுமீனைப்புதைத்தவனே. (௯௭)

புதைத்துக்கரக்கும்பொருளாளர்வெஞ்சொற்பொருமறலி
கதைத்துக்கரக்குங்குமமுலைபாகன்மெய்க்கண்டடியார்
பதைத்துக்கரக்குஞ்சிறிதாவுருக்கும்பழமலையான்
வதைத்துக்கரக்குஞ்சரமீர்ந்தவன்றரும்வாழ்விலோ. (௯௮)

இலங்குமரியுமருள்கோன்முதுவெற்பிடத்துரற்கால்
விலங்குமரியுமுழலலெல்லாமுன்னிவெய்துயிராக்
கலங்குமரியுமிருந்துயர்கூருங்கலுழ்ந்திடுந்தாய்க்
குலங்குமரியுமொருவனும்போகுங்கொடுஞ்சுரத்தே. (௯௯)

கொடுவரியானையடர்ந்துறுமாறெனக்கொண்டுயர்நா
ணெடுவரியாரையுறவடிப்போமென்றெருங்குவந்தே
யடுவரியானைநிகர்நமன்றூதரடிமுடிமன்
னடுவரியானைமுதுகுன்றெருட்டேசுகரர்தமையே. (௱)

நரகாவலர்மடவார்க்குள் ளுருகிக்கைந்நாவிருப்ப
வரகாவலர்புனைந்துன் றனையேத்திலராய்ந்தறிவர்
உரகாவலரெனவுய்ந்தாரினமுளமுற்றகுன்றைப்
புரகாவலரிலருட்கோயிலாகும்புராந்தகனே. (௬௧)

புரந்தரனஞ்சுபழமலைவாணன்புலவர்தொழுந்
துரந்தரனஞ்சுதலைநாககங்கணன்றொண்டருமா
னிரந்தரநஞ்சுதொழுதேத்துதார்க்குநேயமொடு
வரந்தரநஞ்சுகளத்துவைத்தானென்பர்மாதவரே. (௬௨)

மாதனைக்கொன்றுவரம்மேனிவைத்தவமாசுணத்தை
யீதனைக்கொன்றுசிறுநாமெனன்றூர்க்குமெழிலுடையாய்
நீதனைக்கொன்றுநலஞ்செயல்வேண்டுநினையிகழும்
வாதனைக்கொன்றுமுதுகுன்றமாநகர்மாசொழித்தே. (௬௩)

மாசியதிகந்துறந்தார்மகிழ்குன்றைமாநகரோ
காசியதிகங்கொலோவென்பிராயினக்காசியெனப்
பேசியதிகந்தகன்றிருந்தான்பரன்பேரடலை
பூசியதிகம்பரனீங்கிலானிப்புரியினையே. (௬௪)

புரிசடையாளபழமலைவாணபொருப்பெடுத்த
கரிசடையாளதிகந்தீர்த்தருளக்கடுவயின்ற
பரிசடையாளமுடையாயொழித்தனள்பட்டினையத்
துரிசடையாளதமுக்காமெனுநின்றுகிலினுக்கே. (௬௫)

துகிலங்குருகுந்துறந்தாளுயிருந்துறக்கநின்று
ளகிலங்குருகுமணிமுடியாயெனுமத்தவனை
முகிலங்குருகுமடியாய்பரந்தமுதுகிரியாஞ்
சகிலங்குருகுலமேத்திறைவாமைத்தடங்கண்ணியே. (௬௬)

நடுக்கமலத்தினெடுங்குதல்போலநின்றாளிலுரு
மொடுக்கமலத்தினிகழ்வால்வளையினமூர்ந்திடச்சேன்
மடுக்கமலத்திலுசன்வயல்சூழ்குன்றைமாநகரோ
யடுக்கமலத்திபுனையலங்காரவருளுகவே. (௪௭)

அருவரைவில்லையுமிழ்மணிநாசமுமத்திகளு
முருவரைவில்லையெனப்பூண்பவரையவ்வும்பர்தொழும்
பொருவரைவில்லையுறமுதுகுன்றரைப்போந்துமரு
ளொருவரைவில்லைவரிலொற்றிவையெனவுற்றனமே. (௪௮)

உற்கைக்குமாறுபடுமணிநாகமொளித்துலவி
விற்கைக்குமாறுசுமந்தவசிர்முதுவெற்பினின்பா
னிற்கைக்குமாறுவழுவாநடக்கைக்குநேரிழையார்
சொற்கைக்குமாறுந்தமியேனுக்கென்றுதுணைசெய்வையே. ()

செய்க்குத்தனங்கமலமலர்சிர்தருஞ்செய்யதிரு
மெய்க்குத்தனங்கடரவடுவாங்கிதொல்வெற்பிடத்திற்
கைக்குத்தனங்கவொழியினுந்தாடனைக்காய்வதிலேன்
வைக்குத்தனங்களழித்திறையாதிந்தவையகமே. (௫௦)

வைத்துமதிக்குமருங்கிற்கைத்தாயெனமந்தரமத்
துய்த்துமதிக்குமனையின்மையான்மறையோதிமுன்
னெய்த்துமதிக்குமுடிமிசைக்கங்கையையேற்றினையோ
மெய்த்துமதிக்குமனுகவொண்ணாமுதுவெற்பினனே. (௫௧)

வெற்புக்குமையவடிவேலெறிந்தசெவ்வேண்மதவேள்
பொற்புக்குமையவனோடரன்வாழ்முதுபூதரத்தி
னிற்புக்குமையவளொத்திருந்தாள்குறைவின்றிவளர்
கற்புக்குமையவள்போலுறுங்காதற்கருங்கண்ணியே. (௫௨)

கருந்தடங்கட்குமுதவாய்மயிலெங்கள்கண்களுக்கு
விருந்தடங்கட்குநலமெனப்போந்தவிண்மீன்பொரியு
மருந்தடங்கட்குவளையோடையாகுகவம்புயங்கள்
பெருந்தடங்கட்குமுகமோகுங்குன்றைப்பெருந்தகையே. (ருங)

பெருமுதலைவளையான்போற்றுங்குன்றைப்பெருந்தகையை
யிருமுதலைவளைமூப்படைந்தாண்டவற்கின்மகவைக்
கருமுதலைவளைவாயிற்றந்தானைமுன்கண்டழுது
பொருமுதலைவளைநீத்தனண்மேவினள்பூங்கொடியே. (ருச)

பூங்குமிழும்படிமுள்ளும்பொருந்திப்புளிஞர்பொருள்
வாங்குமிழும்படிமோதுமெனல்கொடுமால்விழுங்கி
யாங்குமிழும்படிவந்தவெம்பாலையடைந்தவள்கால்
வேங்குமிழும்படினென்னும்பழமலைவித்தகனே. (ருரு)

வித்துருமத்தைநிகர்வானுயிர்செய்வினையருத்துங்
கத்துருமத்தையிடுதயிர்போலக்கலங்குமதன்
சத்துருமத்தைவனைமுதுகுன்றிறைதாள்கொடுவா
னத்துருமத்தையிலவாகவெள்ளுவர்நற்றவரே. (ருசு)

நற்றவராகமறையவராகவிந்நானிலத்தி
லற்றவராகமனமுடையார்க்கன்றியச்சமற
வுற்றவராகமறியாதொளித்தநின்னெண்பதங்கள்
பற்றவராகமலாலயன்போற்றும்பழமலையே. (ருஎ)

பழங்கவிகடமகமந்திக்கீபொழிற்பண்ணைமறை
முழங்கவிகடவுளர்க்கீயுங்குன்றைமுதல்வனைவே
ளழுங்கவிகடவிழிதிறந்தானையடிபரவார்
கிழங்கவிகடமறவரிற்றோன்றிக்கெடுவர்களே. (ருஅ)

கெடுத்துப்பணியுமுடையும்வெள்ளாமற்கிழத்திமுலை
வடுத்துப்பணியுமுரம்வேட்டுநின்றனள்வல்லியத [லாங்
ருடுத்துப்பணியுமராக்கசைத்தோய்தொண்டருள்ளமெல்
கொடுத்துப்பணியுமலர்த்தாட்டிருமுதுகுன்றத்தனே. (௫௯)

குன்றுகளுங்களையொவ்வாவெனுமுலைக்குன்றதிர்க்குஞ்
சென்றுகளுங்களையுண்வண்டுமோவில்செழுங்கொன்றைமா
கன்றுகளுங்களைநன்மதிவேணிக்கடவுடனை [ன்
யென்றுகளுங்களையெம்மானைக்குன்றையிறைவனையே. (௬0)

இறவாதவாநந்தவெள்ளத்தழுத்தியெனையருளாற்
றுறவாதவாநந்தவாள்வதென்றோமெய்த்துறவர்தொழு
மறவாதவாநந்தனஞ்சூழ்முதுகுன்றடைந்தவர்த
முறவாதவாநந்தகோபாலனென்றற்குடையவனே. (௬௧)

உடையமடங்கலுதைத்தபொற்பாதவொளிசெய்மழுப்
படையமடங்கன்முகற்காய்ந்தவீரபழமலையாய்
கடையமடங்கல்லொடுபகலுந்தொழக்கற்றிலமெம்
விடையமடங்கல்வருவதெஞ்ஞான்றுவிளம்புகவே. (௬௨)

விளங்கவலம்புரிமால்போற்றுநன்முதுவெற்பகஞ்சேர்ந்
துளங்கவலம்புரியாய்மாய்பிறிதொருடம்படையாய்
துளங்கவலம்புரிமென்குழன்மாதர்க்குச்சூழ்ந்துநின்று
களங்கவலம்புரியிவ்வெற்பையேநிலைகைவருமே. (௬௩)

வருந்ாதவரைவளைத்திட்டவபவவன்பிணிக்கு
மருந்தாதவரைமருவும்பழமலைவாணவுனைப்
பொருந்தாதவரையுயிர்செகுத்துண்ணம்புலிமழுங்கத்
திருந்தாதவரைவரக்கூவுறுததென்சேவல்களே. (௬௪)

சேவாலங்காட்டுபோழுதகஞ்சாயச்செலுத்திவரி
மாவாலங்காட்டுமுதுகிரிவாணவவ்வானமுய்ய
வேவாலங்காட்டுமிடற்றுயநின்சீர்த்திவிரித்துரையா
காவாலங்காட்டுவிலங்காயினேனிந்தஞாலத்தே. (சுரு)

நிலங்கடந்தானைமகிழ்வானைத்தன்னடிநின்றொடுங்கும்
புலங்கடந்தானைமுதுகுன்றவாணனைப்போற்றிலர்தந்
நலங்கடந்தானைமுழுதுமிழந்தநகரினிற்போ
யிலங்கடந்தானைதுணிசீரையாக்கொண்டிரப்பர்களே. (சுசு)

இரப்பாரிலாரையிலரொளின்வைவரிரந்திடிற்றுங்
கரப்பாரிலாரைமுகநோக்குமூர்மழுக்கைக்குன்றையா
யுரப்பாரிலாரையுறவாகக்கொள்வர்தம்முள்ளனபோய்
நிரப்பாரிலாரையவிப்பார்தம்மக்களைநீத்திருந்தே. (சுஎ)

இருப்புவலியையகன்றுபொன்வல்லியையெண்ணுதலாம்
விருப்புவலியைமுலையாரணங்கினர்விண்ணுறுதல்
பொருப்புவலியையிடத்தில்வைத்தாய்மலர்ப்பூங்கணைசேர்
சுருப்புவலியையொழித்தாய்பழமலைக்கண்ணுதலே. (சுஅ)

கண்டந்தரிக்கும்விடத்தார்பழமலைக்கண்ணுதலார்
பண்டந்தரிக்குமருங்கனித்தார்தம்பழவடியா
ரெண்டந்தரிக்குமரிதாகும்பாதரிருங்கருமா
வெண்டந்தரிக்குமதற்காய்ந்தவரொனுமெல்லியலே. (சுகூ)

மெல்லவணங்குநினைவாலெதிர்ந்திடவேனெடுங்க
ணல்லவணங்குவளையுடையோடுநடந்திலைநீ
கொல்லவணங்குமதிசுமந்தேநின்றகொள்கையென்றோ
வெல்லவணங்குமலையாய்முதுகிரிவேதியனே. (எo)

வேதியவாவிதனக்காவியாகியவித்தகபெண்
பாதியவாவிமலர்த்தேன்பெருகும்பழமலைவாழ்
சோதியவாவிவருவிடைப்பாகநின்றொண்டருறு
நீதியவாவியவரையென்றேசென்றுநேர்குவனே. (எக)

நேருமடியர்தமக்குறவாமவர்கேசமறச்
சோருமடியர்தமையணுகாதவர்தும்பியினாற்
சாருமடியர்மணிநிறவண்ணன்றரையிடந்து
தேருமடியர்முதுகுன்றவாணுதற்றீக்கண்ணரே. (எஉ)

கண்டரவந்தனைநேர்ந்தாங்கருகக்களிற்றினைமுன்
கொண்டரவந்தனைவானோர்செயுமுதுகுன்றனொடு
வண்டரவந்தனைநேர்வாளைக்கோலம்மதனனெய்யும்
புண்டரவந்தனைசேர்தியென்றேதுமின்போயின்களே. (எங)

போதுமின்மாலைவகைவகையாகவம்பொற்றொடியீ
ரோதுமின்மாலைதரின்வம்மினில்லையென்றோட்டினனேன்
மாதுமின்மாலைவருமுனஞ்சாமென்றவண்கைமலர்
மோதுமின்மாலைமகிழ்குன்றைவாணர்தம்முன்னடைந்தே. ()

முன்னஞ்சிலம்புசிலையாக்கியகன்முதுகிரியாய்
பொன்னஞ்சிலம்புசிலம்புதலோடையிற்பூஞ்சிறக
ரன்னஞ்சிலம்புடையிளமானையனங்கனெய்து
தன்னஞ்சிலம்புகுவளையல்லாதுதணந்தனனே. (எரு)

தணந்தவளக்கரிமேனியளாங்கொல்வெண்சங்கினங்கண்
மணந்தவளக்கரினின்றழுமோவலவாவுயிர்க
ளுணந்தவளக்கரிதாமுதுகுன்றரனேங்கமா
கணந்தவளக்கரியானேத்திறையன்றிக்காப்பிலையே. (எசு)

காப்புக்கரியுந்திருமகணாயகன்காப்பவற்றின்
பூப்புக்கரியுந்தலையுடையானும்பொருந்தவைத்தான்
மாப்புக்கரியுங்குயிலும்பயில்பொழில்வண்டில்லையான்
மூப்புக்கரியும்புலியுங்கொன்றீர்ந்தமுதுகுன்றனே. (௭௭)

முதுமறையந்தமுறுபொருளேநன்முழுப்பணிக்கு
விதுமறையந்தமுடியாய்புராணம்விளங்கிரண்டோன்
பதுமறையந்தமுதுகுன்றவாணநின்பாதம்வணங்
குதுமறையந்தகனைமார்பிலெம்மைக்குறுகிடினே. (௭௮)

குறுகுமுனிவனையன்றுண்டவிம்முதுகுன்றனுக்கு
மறுகுமுனிவனைசெய்தாலுய்வாரெவர்வந்தருளென்
றறுகுமுனிவனைபோதுமிடார்நமனூர்முனிவு
முறுகுமுனிவனையெய்தாரறிவறுமூடரினே. (௭௯)

மூடாநமாதிமிரையடைந்தாயலென்முன்னனுகன்
மீடாநமாதிபெருமானுதைக்கினுமெய்ப்புகழைப்
பாடாநமாதியெழுத்தைந்துமோதிப்பழமலைவாழ்
வீடாநமாதியடியாரடியருண்மேவினமே. (௮0)

மேவத்தகரையிவர்மகவீன்றதொல்வெற்பரச
சேவத்தகரைவொடுபூசித்துன்னைவிண்செல்வமுறும்
பூவத்தகரைநகுவேமெமக்குநின்பொங்கருளா
லோவத்தகரைவகைப்பாசமுந்தம்முரங்குலைந்தே. (௮௧)

குலையாநிலமும்விசும்புந்தொழுமுதுகுன்றமதிக்
கலையாநிலமும்மடியழல்காயவக்காய்கனலின்
மலையாநிலமுமுடன்கூடவேமெனைவாங்குகழைச்
சிலையாநிலமுமெமதில்லமாய்நின்றுசீறுவனே. (௮௨)

சிறிரையாகமதியுணும்பாம்பணிசெல்வமறை
மாறிரையாகமலிமுதுகுன்றமருவுதற்குச்
சேறிரையாகயிலாசவிலாசசுதேவவென்மின்
றேறிரையாகிலையென்றுவாழன்மின்றொண்டர்களே. (அங)

தொண்டரைக்கூடல்விழையார்பொழின்மலர்த்தூளுதிர்த்த
விண்டரைக்கூடலறவுறல்போலுந்தொல்வெற்புறுமைக் [ல்
கண்டரைக்கூடலுடையாரைப்போற்றிலர்கற்றறியா
மிண்டரைக்கூடல்வழியேநடத்துபுவீழ்த்துவரே. (அச)

வீழிவலஞ்சுழிதில்லைசிராப்பளிவேதவனஞ்
காழிவலஞ்சுழியன்மேவுகுன்றைக்கடவுள்விடி
ளுழிவலஞ்சுழிவெள்வளையாணையன்னகல்விப்
பாழிவலஞ்சுழியுந்தியுள்வாங்குவர்பாவையரே. (அரு)

பாவலருக்குமலிபொருளீந்துகொள்பாட்டினர்க்கு
மேவலருக்குமழுவார்க்குநன்முதுவெற்பினுக்குக்
காவலருக்குமயலாகிநின்றுகலங்குகின்ற
யாவலருக்குவிளைநிலமாயினையாயிழையே. (அசு)

ஆயக்கலையகலுஞ்சீர்முதுகுன்றரசமுனஞ்
சாயக்கலையனிமிர்த்தசெம்மேனியதப்பலில்லா
னேயக்கலையபுழுக்கூடெனுமுடனேயமெல்லா
மாயக்கலையமலமாயைகன்மங்கள்வந்தருளே. (அஎ)

வந்திக்கநாவினினையேவழுத்தமலர்விழியான்
முந்திக்கனுவிதொலைத்தோய்நினதுமுதுவெற்பையே
சிந்திக்கநாவிமதநாறுமாதரைச்சேருமின்ப
நந்திக்கனுவிளொழிவாமென்றுன்னுறநல்குதியே. (அஅ)

நல்குரவேநல்லுரைதான்முதுகுன்றர்காட்டுனக்குச்
சொல்குரவேநல்குரவுறுவேலதொடைகள்பல
மல்குரவேனவிதண்விட்டகம்புக்கமானையிந்த
வொல்குரவேனல்லிடைக்கொடுபோகலென்றேருதிலையே. ( )

ஓதித்திருக்குமொழிவதல்லாமலுன்னுண்மைநிலை
சாதித்திருக்குமியல்புதந்தாயிலைதன்மையெல்லாம்
போதித்திருக்குமொழிகுன்றைவாணபொருப்புதவுஞ்
சோதித்திருக்குமரிபாகசுந்தரன்றூதுவனே. (௧௦)

தூதுகண்டாலுமதியணிவேணியர்துன்னிவந்தென்
காதுகண்டாலுமுடன்மூக்கின்பெய்தநல்காரொனவெம்
மாதுகண்டாலுமுவக்கப்படுமொழிவந்தனள்கார்ப்
போதுகண்டாலுமயில்வாழ்பொழிற்பழம்பூதரனே. (௧௧)

பூதரநன்றுசிலைக்கென்றுகொள்ளும்புராந்தகனார்
சீதரனன்றுபொழிலெனுங்குன்றைத்திருநகரார்
காதரனன்றும்விழிபெறுமாறுடைக்கண்ணுதலார்
மாதரனன்றுவருமதிக்கோய்தலைமாற்றிலரோ. (௧௨)

மாற்குச்சிவந்தமலர்த்தாண்முதுகிரிவாணன்மறை
நூற்குச்சிவந்தவிராப்பொருளொன்பவர்நோக்குறான்வேள்
கோற்குச்சிவந்தவிறலாளனின்னுங்குறுகிலனிம்
மேற்குச்சிவந்ததறியேனிவட்குவிளைவதுவே. (௧௩)

விளையவளையுமணிசெல்வயன்முதுவெற்பிறைவ
னளையவளையுமுறவுடையானவ்வணங்கிலை
வளையவளையுமுடையுந்துறந்துவருந்துமிவ்
விளையவளையுமொருபடைசாரவிருத்திலனே. (௧௪)

இருத்தவிருப்பதிடத்திலல்லாமலிருப்பலென
நிருத்தவிருப்பமுதுகுன்றவாணனைநீவலியுஞ்
செருத்தவிருப்பவுததியையாருணச்சிந்தைசெய்வார்
திருத்தவிருப்பவலையாவர்மெல்லுவர்தேமொழியே. (௯௫)

தேவியுமானும்விளையாடிடமுடைச்செங்கணுத
லாவியுமானும்வருஞ்சீர்முதுகுன்றணிவிழவைக்
காவியுமானும்விழியாய்கண்டெய்தெனக்கண்மருங்கி
னேவியுமானும்மகட்கிடர்நீர்செய்திரோழையயே. (௯௬)

ஏடலையாறுகிழித்தெதிரோறவிண்ணேறுபுகழ்க்
கூடலையாறுபுலியூர்மகிழ்முதுகுன்றர்பெற்ற
வேடலையாறுமுயிர்த்தெடுத்தேந்துமென்கைகொடுத்
தாடலையாறுவருகவென்பார்நல்லுமைதனையே. (௯௭)

உமையிடப்பாகனலங்கூர்முதுகுன்றுடையனராச்
சுமையிடப்பாகவரிதேடியுறத்தூமலர்க
டமையிடப்பாகமருவுவரோலவர்தங்களைப்பா
ரமையிடப்பாகனணுகானுதைநினைந்தஞ்சுவனே. (௯௮)

அஞ்சுவணத்தைவரன்முறையோதவரக்கெறிந்த
பஞ்சுவணத்தைமருவுமென்ருளுமைபாகமொடு
செஞ்சுவணத்தையனையநின்கோலமென்சிந்தையுற
விஞ்சுவணத்தைமகிழ்குன்றைவாணவிரும்புவனே. (௯௯)

விருத்தாசலாசங்கராமலைமாதுவிழிகளிக்கு
நிருத்தாசலசந்திரன்போலுடம்பிடைநின்றவர்தங்
கருத்தாசலசம்பவமிலர்க்காண்டறங்காட்டியசொற்
றிருத்தாசலசந்தமியேன்றலைக்குன்றிருவடியே. (௧00)

பழமலையந்தாதி முற்றிற்று.

உ

பழமலைநாதர்

பிக்ஷாடன நவமணிமாலை.

---:o:---

நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலிகொண்
டங்குற்று மென்றுகில் போக்கினள் வெற்றனை யாகியந்தோ
விங்குற் றனையென வெம்பெரு மானிவ் விருநிலத்திற்
றங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே. ()

குன்றா முதுகுன் றுடையா னிலாதவெண் கோவணத்தான்
றன்றா மரைக்கை விரன்மூன்று காட்டித் தனங்குறித்து
நன்றாக வித்தனை பிச்சையுண் டோசொன் னறுநுதலா
யென்றா னிரண்டத் தனையுள கோடியென் றிட்டனளே. (௨)

இப்பாத் திரந்தலை கீழாப் பிடித்தனை யென்னைமுனந்
தப்பாப் பலிகொண் டறிந்திலை யோவெனத் தாழ்குழலாள்
செப்பார் பணைமுலை யாய்நிலத் தேபலி சிந்தியிட்டா
யெப்பாத் திரத்திலு மிட்டறி யாய்கொண்முன் னென்றனனோ.

வேட்டன மாதுகை தாழ்த்திட மாமுது வெற்பர்பலி
யோட்டினை நீதொட லாமோ வெனவுமை யுந்தொடலாம்
வீட்டினில் யானென வேயவர் தாமிது வேண்டுவைகோல்
யாட்டினின் பாலென மூலமு மாமென்ப தென்றனனோ. (௪)

மாண்ட வெலும்பணி கோலமொ டேபலி வாங்கிடுதற்
கீண்டு வருமுது குன்றுடை யீருமை யான்மிடற்றி
னீண்ட வுகிருறத் தாதனை வேனென்று நீர்தலையைத்
தீண்ட வுமது பலிப்பாத் திரமென் சிரிக்கின்றதே. (௫)

வானோர் தொழுநின் பலிப்பாத் திரத்தை வனைந்தவன்
தானோ வெனச்சக் கரந்தான் சுழற்றத் தகுங்குயத்தி
யானோர் குயவன்மெய் யென்றே முதுகுன் றிறையியம்ப
நானோ வொருசிற் றிடைச்சியென் றாளந் நறுநுதலே. (௬)

பங்கய மன்ன விழியார் முதுகுன்றர் பாத்திரத்தி
லங்கையி லைய மொடுவண்டு வீழநல் கையவெனை
வெங்கையில் வந்த தெமதாக வேவழக் கென்றுசெட்டி
மங்கையர் தங்கட் கிருங்கூட லிலிட வைத்தனரே. (௭)

நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் கேடியுங்க
ளூருக்குட் பிச்சையென் றற்றேமுண் டாயி னுமாமினவ
வாருக்குத் தக்க முலையா ரதற்குளர் மற்றொருவர்
யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரே. (௮)

முழங்குந் துடியொடு பிச்சையென் றேமுது குன்றர்வரச்
சழங்கு முலைமுதி யாளென் பலியெனத் தம்மனையில்
வழங்கு மனமென் றனர்புறம் போந்து வளர்முலையாள்
விழுங்குமனம்பகற்போதுகொள்வாயென்று வேண்டினளே.

சிறப்புப்பாயிரம்.


பிச்சா டனநவ ரத்தின மாலையைப் பீடுபெறத்
தைச்சான் றுறைமங் கலமுறை சிவ தயாபரனும்
பொய்ச்சார் பதனை யொழிக்குஞ் செழும்புலி யூர்ப்புனித
னற்சார்பு சார்ந்த சிவப்பிர காச நவமணியே.

முற்றுப்பெற்றது.

விருத்தகிரி

பெரியநாயகியம்மை

நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம்.



முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முக்கணண் டகைகின தெழில்கூர், முகம்புலர் தலைக்கண் டெல்வளைந் தடியின் முனைப்பிறைக் கோடுகொண் டுழுது, விழுமணி யரவ நுழைசடா டவியின் விண்ணதித் தண்புனல் விடுப்ப, விரைவொடு குளிர்ந்து முகமலர் தலைஞன் மென்கொடி யெனநினை யுணர்ந்தேன், செழுமணி நீல மழைமுகி றவழுஞ் சிலம்பெனும் புற்றினின் றார்த்து, திரைபொரு கடற்போர்ப் பெரும்படம் விரித்துத் தினமணி யெனப்படுஞ் செங்கேழ், கெழுமணி யுமிழ்ந்து பேரிருடுரந்து கிடக்குமெய்ம் முடக்குமா கணமாய்க், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (க)

விழைவொடு நினக்கு மாதுலன் மாமி வெற்புவேண் டுருதுதன் மருகன், மேலெலா மெலும்புந் தோலுமாய்க் கிடத்தல் வெறுத்திடா திளமைநா டாது, பழமலை தனக்குச் சாதியொப் பெனவே பார்த்துனைக் கொடுத்தனன் றந்தைப், பனிமலை யென்றே தன்மனை யாட்டி பயந்திடப் பெருமக ளென்றே, கழைவளை முன்ன ருன்றுபு நடந்து கடிதுபள் ளங்களின் வீழ்ந்து, கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க் கடையுற வலைந்துருத் திரைந்து, கிழவுரு விருத்த நதியெனப் பட்டுக் கீர்த்திமூ வுலகினும் போர்ப்பக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (உ)

காமமென் கின்ற கதுவுவெவ் கியுங் கடுஞ்சின மெனப்படும் புலியுங்,களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக் கறையடிக் களிநல்யா னையுமே, தாமிகு மெனது மனமெனும் வனத்திற் றனிவரல் வெருவினை யாயிற்,றழலினின் றுடிப் புலிசரி யுரியோர்த் தடுத்துவாண் டுணையொடும் வருவா, யீமவெள் ளெலும்பங் கிடப்படு மெனத்தா னெலும்பணி கடவுண்மா நதியா, யிருந்துநல் லன்னங் கொண்டுமெய் வெருப்ப வினைதபு கங்கையை யிகழ்ந்து, கீழ்மைசொல் கின்ற தொண்டுமின் றுயிற் கிடைக்குமோ விதன்குண மென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (ரு)

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான சொரூபியென் றருமறை யனைத்துஞ்,சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந்தேன் சுரந்தநின் றிருமுலைச் செழும்பால், வட்டிலிற் கொக்கைப் பிள்ளைமுன் னுண்டு வண்புகழ் ஞானசம் பந்த, வள்ளலென் றிடப்பேர் பெற்றரன் மொழிபோன் மையறீர் செய்யுள்செய் தமையா, லெட்டிநற் றிகிரி பறித்தெறிந் தாற்காலியானையை யுருட்டிவாய் குதிரை, யெறிந்துசங் கதிர்த்துக் கொடுமர முறித்திட் டெதிர்ந்திடார் தலைவிடுத் தோடிக், கிட்டினர்ப் புரட்டி முருகவேள் பூதக் கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து, கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (சு)

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா முருசுழி மேடுக ணிரவி, யொழிவிலா வாய்மை மெழுக்கினாற் பூசி யுயர்தரு மனமெனப் படுமோர், பள்ளிமென் றவிசி விருத்திநின் பதியைப் பழுதில்யா னெனப்படு மெல்லைப், பழமல மா

யைத் தவிடுமி போக்கிப் பாகஞ்செய் தென்றருத் திடுவாய், துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர் குழல்வெண் ணெய்க்குட முருட்டித், துணைமுலைக் குவட்டின் மஞ்சணமேற் படப்போய்த் தோய்ந்துநின் முடிளங் கயற்கட், கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக் கேடில்சீர்க் கண்ணனு டுதல்போற், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (ரு)

நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு நல்கிய தந்தையுந் தாயு, நம்பனு நீயு மல்லிர்நும் மூர்க்கே நவின்றவம் முறையுளீர் நீவிர், பாடியா ரணஞ்சொ லீண்டுமாய் வனதாம் பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப், பழமலை தனது பெயர்வலக் காதிற் பகர்ந்தருள் செயப்பெறுஞ் செயலா, லோடியோர் காக மேறுபு கவிழ்த்த வொருசிறு கரகநீர் தானு, மொருவனோர் செவியால் விடுத்தவப் புனலு முமையொரு பாகர்கட் டோன்றிக், கேடிலா னந்த வுருவமா மெனையொக் கின்றன வோவென வதிர்த்துக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (சா)

தன்னொரு மகன்வா கனத்தினை வெறுத்தோர் தனயன்வாகனத்தினை விரும்புந், தண்மணிப் பணியு மதனையுள் வெருவித் தான்வள ராமதி யமும்வாழ், மின்னவிர் சடையான் றனைநினை யன்றி மேவுவா னவாநெஞ் சுன்னல், விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து வெறுமணி கொள்ளுமா றன்றே,மன்னவர் மனிதர் சந்திரன் பரிதி மகபதி மலரயன் மறலி, வானவர் வசுக்கள் சித்தர்கிம் புருடர் மாதவர் விஞ்சையரசுரர், கின்னர ருரகர் மூழ்குபே ரரவங் கேட்டொரு மு

ராரியாய் சருட்டக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரி யமர் பெரியநா யகியே. (எ)

படைத்திடுந் தொழிலோன் மறைச்சடங் கியற்றப் பாவி யென் மனத்தினும் வலிய, பன்மணி குயின்ற செம்பொனம் பியினின் பதமலர் வைத்தக லாம, விடத்தினி லுனைவைத் தரு ளுநதன் முன்றே வியற்பகை மனைவியை யிரந்தா, னிளம்பி றை சூடு மிறையவன் பின்ன ரெங்ஙனம் போயிரந் திடுவா ன், கொடுத்தெனி விடுபொன் புலவனுக் காரூர்க் குளத்தினிற் பழமலை யன்று, கொடுத்தது நானே கொடுத்தன னென்னிற் குளித்தகல் பவர்குளத் தெல்லாங், கிடைத்திட லொருகன் டருமெனக் கிதுசெய் கின்றதற் புதங்கொலோ வென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (அ)

பண்டுகின் கொழுநன் றந்தையுந் தாயம் பயந்ததன் னொரு மருந் தன்ன, பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும் பாதகி மொன்றுளங் கொண்டு, தொண்டர்தம் மனையிற் செ ல்வனென் றெழுகின் சுதனழப் பொருதுகின் முலைப்பால், சு ரந்தமு தூட்டு மன்னனீ யாவாய் தொழுதபோய்ப் பிரித்தி லை யென்றோ, வண்டார்தங் கங்கை யன்னமங் கதன்கரு டலை தன்னைவந் தடையா, வாடியிங் கிதன்க ணமர்வுறப் பெறலா லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து, கெண்டையொண் வா ளையுடனெழக் குதிப்பக் கிளைவளைக் கமுகின்மேற் றவழக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (க)

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம் புலியினைச் சிறப்புலி யொடுகோட், புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப் புலியனி மலையின் மாணைப், பரிவுறத் தொழுது மருவிய வதனுற் பயமறச் சாதிக டனது, பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து பசுவெலா மருவுறப் பெறுமே, சுரிகுழற் சயற்கட் பிறைநுதற் கனிவாய்த் துடியிடைக் குவிமுலைத் தளிர்க்கைத், துணைவிமுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ் சுடர்மணிக் கட்செவிப் பணியான், கிரிமகட் கடுத்த கறைமிடற் றிறைவன் கிளக்குமேற் புகழெனத் தோன்றிக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௩௦)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பெரியநாயகியம்மைகலித்துறை.



இறைவற்குத் தக்க விறுமாப் பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாமிறு மாப்பனெனக்
குறைவற்ற நெற்கொண் டுலகேற் றுனைப்பலி கொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை வாழும் பெரியம்மையே (௧)

பத்தர்க்கு நெஞ்ச மலர்மீ திருத்திப் பயந்துகொடுஞ்
சித்தர்க் ககலுமின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல்
வைத்தற்குமெண்ணி மதியுடையேனென்பன்வார்சடையான்
பித்தர்க்குத் தங்குண நூலினுஞ் செம்மை பெரியம்மையே()

இழைபொறுத் தாற்பொறை தானென்ப ரானல் லிசைப்பு லவர், மழைபொறுத் தார்புனன் முக்காற் பொறுக்கும் வழக்கதுண்டே, யுழைபொறுத் தார்நல் லியற்பகை யார்மனைக் குற்றவொரு, பிழைபொறுத் தாய்நன்று காண்குன்றை வாழும் பெரியம்மையே. (ரு)

கையன்று தாமரை கண்ணன் றிளமென் சயலெனவே, பொய்யன்றுகங்கையைநீயொன் றுசாதிப்பர்போர்விடையார், மெய்யென்றுநீகொண்டிரோலறலாயினென்மென்கையிடைப், பெய்யென்றுபின்னை யறிவாய்தென் குன்றைப்பெரியம்மையே.

பொன்வாங்கு செஞ்சடைப் பாம்புகள் சுற்றும் புதுமதியி னன்வாங்கு கோடு கிழிக்கு நகுவெண் டலைபடுங்கன் முன்வாங்கு மெந்தைநின் பாதாம் புயத்தின் முடிவணங்கிற் பின்வாங்கி நில்லன்ன மேகுன்றை வாழும் பெரியம்மையே.

கடிநறு மென்றரு மீதிருப் பானெனக் கங்கையென்பான் முடிநடு வேறி யிருந்தனள் வேனின் முதிர்விலத னடியடை வானெனச் சங்கரன் பாங்க ரமர்ந்தனை நீ பிடிநடை யேகுயி லேகுன்றை வாழும் பெரியம்மையே. (கு)

நின்போ லிலரரு ளாளரொன் றேசொல நின்கொழுந னென்போ னொருவன் மகன்பூங் கழுத்தினை யீர்வலென்றே யன்போர் சிறிது மிலனாகப் போக வதற்கிசைந்து பின்போய்விடாதுகண்டாய்குன்றைவாழும்பெரியம்மையே.

செச்சை மலர்புரை வாரேறு மேனி திறந்துகொண்டு கச்சை யரவொன் றசைத்துக் கபாலங் கரத்தெடுத்துப் பச்சை மயிலனை யார்மனை தோறும் படர்ந்திரக்கும் பிச்சை யொழிகென் றொருவார்த்தை சொல்லெம் பெரியம்[மையே.

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற்கில்லை
யோதிற் பிறரென வச்ச முறும லுயிர்களெல்லா
நீதிப் புதல்வர்க ளாயின வாதலி னீகொள்கற்புப்
பேதிப்பதன்றுகண்டாய்குன்றைவாழும்பெரியம்மையே (௯)

நின்னைய நாயக னென்றிருப் பாய்நினை நீத்தகன்று, தன்
னைரில் பூவணத் தேயன்று போய்ச்செய்த தன்மையெலாஞ்,
சொன்னே னலேனினி நின்றே டொளிப்பதென் சொல்லுவ
ன்யான்; பின்னே தெனக்குத் தருவாய்தென் குன்றைப் பெ
ரியம்மையே. (௧௦)

நற்றவத் துன்னைப் பெறுமலைக் கென்னமுன் னல்கியுனைப்
பற்றுறக் கொண்ட தெலும்பே யணியும் பழமலைதான்
சற்றெனக் கையந் தராதுசொன் னும்மலைச் சாதியுள்ளே
பெற்றவர்க்கென்னமுலைவிலைகுன்றைப்பெரியம்மையே. (௧௧)

கற்று ரறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த
சொற்று னொருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுலகி
னற்றுண் மகற்பெறு கென்றுசி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையனா யன்குன்றை வாழும் பெரியம்மையே. ()

கரிய மிடறுடைப் பெம்மான் கரத்துழைக் கன்றொடுமோ
ரரிய முடியம் புலியோடு மேவினை யாடுகின்றாய்
தெரிய வரிய பதினு லுலகுமென் சிற்றிலென்பாய்
பெரியவ ளென்ப துனக்கேது குன்றைப் பெரியம்மையே. ()

தண்ணு ரிதழி புனைவான் விழிபிணை தம்மனைகள்
பண்ணு வழிக்குமென் றேநின் றிருமுக பங்கயத்திற்
கண்ணு யினருனக் கவ்வலை மாதுங் கலைமகளும்
பெண்ணாரமுதனையாய்குன்றைவாழும்பெரியம்மையே. (௧௪)

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்தக்கென் றன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப் பாண்மெல் விரனுதியாற்
றெள்ளித் துளியள வாயினுந் தொட்டுத் தெறித்திலையுன் [யே
பிள்ளைக்குங் கிள்ளைக்கும் பால்கொடுத் தாலென் பெரியம்மை

ஆறுத் துயர்கொண் டடியேன் சலிப்ப வதுசெவியி
லேறும லேயிருந் தாலென்செய் வேனெங்க ளீசற்கொரு
கூறுகி யண்ட முதலா யிளமை குலவுதவப்
பேறுகி வாழ்பவ ளேகுன்றை வாழும்பெரியம்மையே.(௧௬)

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் றருமிரு நாழிநெல்லால், வினைமாட்சி கொண்டுயி ரெல்லா மளித்தருண் மேன்மையினான், மனைமாட்சி யெய்து முனக்கே பெருங்கற்பு மாட்சியன்றிப், பினைமாட்சி யார்க்குண் டுலகீன்ற குன்றைப் பெரியம்மையே. (௧௭)

நெடிய விலங்க லொருசிலை யாக்கிய நின்பதிமேற் [து
கொடிய வநங்கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்த்
வொடிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுநடைப்
பிடியு ளடங்கிய தென்னிது குன்றைப்பெரியம்மையே.(௧௮)

பண்டகு வீணை யொடுபாட வந்தவப் பாமடந்தை
கண்டமு மாறு மதிநிரை போலக் கவின்கனியும்
வெண்டலை மாலை கிடந்தொளிர் தோளிக்கு வீங்குமுலைப்
பெண்டகை மாமணி நீகுன்றை வாழும் பெரியம்மையே. ()

முற்றிற்று.

நன்னெறி.

:O:

காப்பு.

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவு நயந்து. (௧)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க - வீசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (௨)

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க - தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து. (௩)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (௪)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலு
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். (௫)

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே - யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கல்லால்
கண்ணிரண்டு மொன்றையே காண். (௬)

கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும். (௭)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. (௮)

மெலியோர் வலிய விரவலரா யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற் - பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறைப் புள்ளரசைப் பார்த்து. (௯)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகி
னிறையிருளை நீக்குமே நின்று. (௧௦)

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு. (௧௧)

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை - திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. (கஉ)

பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர் - சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர். (கங)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்த - லிலையா
விரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. (கச)

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு - நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (கரு)

தம்மையுந் தங்க டலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். (கசா)

எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீ தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ - பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. (கஎ)

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே - பொன்செ
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (௧௮)

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார் - வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (௧௯)

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (௨௦)

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்து
மெழுத்தறிவார்க் காணி னிலையா - மெழுத்தறிவா
ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. (௨௧)

ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க - நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு. (௨௨)

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்ற
றிகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப - நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகா
லெறும்பூரக் கற்குழியு மே. (௨௩)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. (௨௪)

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே - வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். (௨௫)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றே விளம்பு. (௨௬)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வ - ரம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. (௨௭)

முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர் - நனிவிளைவிற்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. (௨௮)

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோ
ரடுக்கு மொருகோடி யாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். (௨௯)

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்மு
னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. (௧௦)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. (௧௧)

பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். (௧௨)

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரோ - தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். (௧௩)

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. (௧௪)

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கண்
மற்றையர்தா மென்று மதியாரோ - வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (௧௫)

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ - ரெக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். (௩௬)

பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும் - தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து. (௩௭)

நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லார் செயுங்கேண்மை யாகாதே - நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம். (௩௮)

கற்றறியார் செய்யுங் கடிநட்புந் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே - பொற்றொடீ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம். (௩௯)

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். (௪0)

நன்னெறி முற்றிற்று.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடி வாழ்க.

உ

பிரசித்தபத்திரம்.

—————:O:—————

சிவப்பிரகாசசுவாமிகள், வேலையசுவாமிகள், கருணைப் பிரகாசசுவாமிகள் என்னும் மூவராலும் அருளிச்செய்யப் பட்ட (௪௩) பிரபந்தங்களுக்குள், திருவெங்கையலங்காரம், க்ஷேத்திரவெண்பா, சிவநாமமகிமை, யேசுமத நிராகரணம், பழமலைநாதர் கொச்சகக்கலிப்பா, அதிசயப்பத்து, வேலைய சுவாமிகள் கைத்தலமாலை, மயிலத்து இரட்டைமணிமாலை, பாரிசாதலீலை, குகைநமச்சிவாயலீலை, வீரசிங்காதனபுராணம் என்னும் பதினொன்றும் அகப்படவேயில்லை: மற்றைப் பிரபந்தங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன: இவற்றுள், திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, சிவப்பிரகாசவிகாசம், சதமணிமாலை, தருக்கபரிபாஷை, மயிலத்துலா, இஷ்டலிங்க அகவல் என்னும் ஏழு பிரபந்தங்களுக்குமாத்திரம் இன்னும் இரண்டுமூன்று பிரதிகள் வேண்டியிருக்கின்றன: ஆகலின், இப்பிரபந்தங்களில் ஏதேனும் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் அனுப்புவார்களாயின் மிகவும் பேருபகாரமாகும். இது விஷயத்தில் புகழ்புண்ணியங்களையேயன்றிப் பொருளைவிரும்பினும் இயன்றவளவு உபகரிக்கலாம். இங்ஙனம்,

சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை தம்புசெட்டியார்வீதியில் மேலண்டைவாடை 130-வது நெம்பர் வீடு

☞ கா - ஞானசுந்தரஐயர்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௪௩	௧௧	புடைவா	புடையவா
௭௭	௪௫	கோல்	கொல்

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மையபாளையம்

ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

பழமலையந்தாதி.

இஃது,

ஷை ஆதீனத்துச் சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

திருத்தமாசப் புதுக்கப்பட்ட உரையோடு,

தண்டையார்பேடு

க. வ. திருவேங்கடநாயுடுவால்

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ ஆனி௴.

கணபதிதுணை.

பழமலையந்தாதியுரை.

காப்பு.

சீரதங்கோட்டுமுனிகேட்டநூற்படிசெங்கரும்பா
லேரதங்கோட்டுவயல்சூழ்முதுகுன்றிறையவனைப்
பூரதங்கோட்டுமலையானைப்பாடப்புரந்தருளும்
பாரதங்கோட்டுநுதியாலெழுதியபண்ணவனே.

(இதன்பொருள்.) பாரதம் கோட்டு நுதியால் எழுதிய பண்ண
வன் - (ஐந்தாம்வேதமென்னும்) பாரதகதையைத் (தனது) கொம்பு
நுனியாகிய எழுத்தாணிக்கூரினால் (மேருமலையென்னும் ஏட்டில் சிலா
சாதனமாக) எழுதிவைத்த விநாயகக்கடவுள்,— செங்கரும்பால் ஏர்
ஓட்டு வயல் சூழ் முதுகுன்று இறையவனை - (பள்ளர்கள்) சிவந்த கரு
ம்பாகிய தாற்றுக்கோலினால் உழும்பகட்டை (அடித்து) நடத்துகின்
ற கழனிகள் புடைவளைந்த பழமலையென்னும் தலத்தில்வாழும் தலை
வரும்—பூ ரதம் கோட்டும் மலையானை-பூமியாகிய இரதத்தையும்வில்
லாகவளைத்த மேருமலையையும் உடையவருமாகிய சிவபெருமானை—
சீர் அதங்கோட்டுமுனி கேட்ட நூற்படி பாட-(உலகத்திலே) சீர்த்தி
பெற்ற அதங்கோட்டு மகாமுனிவரால் கேட்கப்பட்டு விளங்கும் தொ
ல்காப்பிய இலக்கணப்படியே (யான் தமிழினாலே) துதித்தற்கு,—
புரந்தருளும்-இடையூறு வாராமற் காத்தருளுவர். என்றவாறு. அத
பகுதிப்பொருள் விகுதி. அங்கு அசை.

திருவருந்தங்கவருங்கல்விமாதுசிறப்புவருங்
கருவருந்தங்கநிலையாதென்றுள்ளங்கரைந்திறைஞ்சிற்
பொருவருந்தங்கமலைபோலுங்குன்றைப்புராதனனை
யிருவருந்தங்கடலையாலிறைஞ்சுமிறைவனையே.

(இ-ள்.) பொருவரும் தங்கமலை போலும் குன்றை புராதனனை- ஒப்பில்லாத மேருமலையைப்போலும் (உயர்ச்சிபெற்ற) பழமலைநாதரும்—இருவரும் தங்கள் தலையால் இறைஞ்சும் இறைவனை - பிரம விட்டுணுக்களாகிய இருவரும் தங்களுடைய சிரங்களால் வணங்கும் முதல்வருமாகிய சிவபெருமானை,—கரு வருந்து அங்கம் நிலையாது என்று உள்ளம் கரைந்து இறைஞ்சில் - கருப்பாசயத்திலே துன்பத்தையடைந்துபிறக்கும் இச்சரீரம் நிலையல்லவென்றறிந்து, மனமுருகி வணங்கினால்,—திரு தங்க வரும் - ஸ்ரீதேவி தங்கும்படி வந்து சேர்வள்;—கல்வி மாது தங்க வரும் - கலைமகளும் தங்கும்படி வந்து சேர்வள்;—சிறப்பு தங்க வரும் - முத்தியும் நிலைபெற வந்து சித்திக்கும். எ-று. தங்க என்பது இடைநிலைத்தீபகமாக வினையிடங்களினும் கூட்டப்பட்டது. பழமலைநாதரை வணங்கில், இம்மையிலே கல்வி செல்வங்களேயன்றி தேகாந்தியத்திலே முத்தியுஞ் சித்திக்குமென்பது கருத்து. (க)

இறைக்குவளையுமிளங்கிள்ளையுமழகென்பவர்சேர்
துறைக்குவளையுமெகினமுட்வாவிக்குத்தூயவிசழ்
நறைக்குவளையுமழகாமுதுகிரிநாதர்க்கின்றிப்
பிறைக்குவளையுமுடல்வந்தவாறென்சொல்பேசுகவே.

(இ-ள்.) இறைக்கு வளையும் இளம் கிள்ளையும் அழகு என்பவர் சேர் - கைகளுக்கு வளையலும் இளமையாகிய கிளிப்பிள்ளையும் அழ

சாரும் என்று சொல்லப்பட்ட மகளிர்கள் சேர்ந்து விளையாடா நின்ற—துறைக்கு வளையும் எகினமும் - மணிமூத்தநதித் துறைகளுக்குச் சங்குகளும் அன்னங்களும்—வாவிக்கு தூய இதழ் நறை குவளையும் அழகு ஆம் - தடாகங்களுக்குத் தூய்மையாகிய மடலையுடைய தேன்பொருந்திய செங்கழுநீரும் அழகாக அமைந்திருக்கின்ற—முதுகிரிநாதர்க்கு வளையும் உடல் இன்றி - பழமலைநாதராகிய இவ்விருத்தருக்குக் கூனியவுடலம் இல்லாமல்,—பிறைக்கு வந்த ஆறு என் பேசுக-(இந்த) இளம்பிறைக்கு (கூனியவுடலம்)வந்தகாரணம் யாது? சொல்வீராக. எ-று. [இது பழமலைநாதர் பவனிவரக்கண்டு மால்கொண்டுநின்ற மகளிர் ஒருவரையொருவர் வினவியது.] இறை கைவிரலின் இற்று. அது கையை யுணர்த்தலின் ஆகுபெயர். என்பவர் என்பதில் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதி தொக்கது. சொல் அசைநிலை. (உ)

பேசகவீரவருநாளென்றொல்லைப்பெருங்கடல்சே
ராசுகவீரபழமலைவாணவென்றன்பளைந்து
பூசுகவீரமதிவேணிநீற்றைப்புலவிர்பிறர்
காசுகவீரவனையுகவீர்மெய்க்கதிதருமே.

(இ-ள்.) புலவிர் - புலவர்களே,—ஈர வருநாள் என்று - (இயமன் வாளினால்) அரிய வருங்காலம் (இதுவே) என்று கருதி,—பெருங்கடல் சேர் ஆசுக - பெரிய பாற்கடலினிடத்தே தங்கிய பாணத்தையுடையவரே,—வீர - வீரரே,—பழமலை வாண - முதுகுன்றத்தில் வாழ்பவரே,—என்று ஒல்லை பேசுக - என்று விரையத் துதிப்பீராக.—ஈர மதி வேணி நீற்றை அன்பு அளைந்து பூசுக - குளிர்ச்சியையுடைய சந்திரனைத்தரித்த சடைமுடியையுடையவரது விபூதியை அன்போடு கலந்து தரிப்பீராக.—பிறர் காசு உகவீர் அவனை உக

வீர்மெய் கதி தரும் - பிறர்பொருளை விரும்பாது அக்கடவுளை விரும்புவீராகில் (அக்கடவுள் உங்களுக்கு) உண்மையாகிய மோட்சத்தைத் தந்தருளுவர். எ-று. இயமன் வருங்காலம் இதுவெனத்துணியப்படாமையின் ஈரவருநாளென்று ஒல்லைப்பேசுக என்றார். உகவீர் என்னும் வினைமுற்றுக்களுள் முன்னையது எச்சப்பொருள்பயந்து எதிர்மறையினும் பின்னையது உடன்பாட்டினும்வந்தன. (௯)

கதியிலைவேலைமடவார்க்கியற்றக்கருதுளமே
பொதியிலைவேலையுண்டுற்றோன்றொழும்பழம்பூதரத்தை
நதியிலைவேலைமகிழ்வீரன்றந்தையைநோக்கிலைநீ
யொதியிலைவேலைவளர்ப்பாய்தருவையொடித்தெறிந்தே.

(இ-ள்.) நதியில் ஐ வேலை மகிழ் வீரன் தந்தையை - நதியிலே நுண்மைவாய்ந்த வேலாயுதத்தை விரும்பிக் கரத்திலேதரித்த வீரத்தையுடைய முருகக்கடவுளது பிதாவும்—வேலை உண்டு பொதியிலை உற்றோன் தொழும் பழம்பூதரத்தை நோக்கிலை - சமுத்திரநீரை உழுந்தளவாக்கியுறிஞ்சிப் பொதியமலையை யடைந்து வீற்றிருக்கின்ற அகத்தியமகாமுனிவர் வணங்கும் பழமலைநாதருமாகிய சிவபெருமானைத் தரிசித்தலையுஞ்செய்யாது—மடவார்க்கு வேலை இயற்ற கருது உளமே - மாதர்களுக்கு ஏவற்பணிகளை (இடைவிடாது) புரியச் சிந்தித்தொழுகும் என்மனமே,— நீ தருவை ஒடித்து எறிந்து ஒதி இலை வேலை வளர்ப்பாய் - நீ (பயன்படும்) கற்பகத்தருவை முறித்தெறிந்துவிட்டு (பயன்படாத) ஒதியமரத்தையும் இலைகளையுடைய வேலமரத்தையும் வைத்து வளர்ப்பாய் போலும்:—கதியிலை - (நீ இங்ஙனம் உழலுதலால் நினக்கு யாதொரு) கதியும் இல்லை. எ-று. நோக்கிலை முற்றெச்சம். உதி ஒதியென

மருவிற்று. வேனிற்காலத்திலே ஒருவரும் வெய்பிற்கொதுங்காவண்ணம் ஒதி இலைகளையுதிர்த்து வெறுமையாய் நிற்றலானும், வேல் இலைகளையுடைத்தாயிருப்பினும் கீழே இடமின்றி முட்களையுதிர்த்து நிற்றலானும், பயனின்மை நோக்கி, ஒதியிலைவேலை வளர்ப்பாயென்றார்.()

ஒடியமருங்குலைக்கொங்கைகள்வாட்டுறுமோடரிக்கட்
டொடியமருங்குலைக்காந்தளங்கைம்மகள்சோரமதன்
கடியமருங்குலைத்தீப்போன்மதியங்கனன்றெழுத
லடியமருங்குலைச்செய்ம்முதுகுன்றர்க்கறைகுவமே.

(இ-ள்.) ஒடிய மருங்குலை வாட்டுறும் கொங்கைகள் ஓடு அரிக்கண் - ஒடியும்படி இடையை வருத்துகின்ற (பருத்த) தனங்களையும் பரவிய செவ்வரிகளையுடைய கண்களையும் — தொடி அமரும் குலை காந்தள் அம் கை மகள் சோர - வளையல்பொருந்திய கொத்தாகிய காந்தள்மலர்போலும் அழகிய கைகளையுமுடைய என்மகள் சோர்வடையும்படி,—மதன் கடிய மருங்கு உலை தீப்போல் மதியம் கனன்று எழுதல் - மன்மதன் (பாணங்களையேவி ஓர்பக்கத்திலேநின்று) வருத்த மற்றொருபக்கத்தில் கொல்லுலைத்தீப்போல் சந்திரன் சுவாலையைவீசிக்கொண்டு எழுதலை,—அடியம் அரும் குலை செய் முதுகுன்றர்க்கு அறைகுவம் - அடியேங்கள் அரிய கரைகளையுடைய வயல்சூழ்ந்த பழமலைநாதருக்குச் சொல்லுவேம், எ-று. [நற்றாய்பாங்கியரோடுரைத்தல்.] (ரு)

மேருக்குவடுசிகர்தோட்பழமலைமேவுதிருத்
தேருக்குவடுவசமாடமாடத்தெருவினிற்போய்
நீருக்குவடுவிழியெழின்மாய்ந்தெதிர்நின்றுநம
னூருக்குவடுவிளைத்தனளேயின்றெருழிவறவே.

(இ-ள்.) மேருக்குவடு நிகர் தோள் பழமலை மேவு திரு தேருக்கு - மேருமலையை ஒத்த புயங்களையுடைய பழமலைநாதர் எழுந்தருளிவாராநின்ற அழகிய இரதத்தைத் தரிசித்தற்கு,—உவள் துவசம் ஆடும் மாடம் தெருவினில் போய்-இந்தப்பெண் சிறுகொடிகள் அசையாநின்ற மாளிகைசெறிந்த வீதியின்வழியே சென்று,—வடு விழி நீர் உக்கு எழில் மாய்ந்து எதிர் நின்று - மாவடுவின் பிளப்பையொத்த கண்களினின்றும் நீரைச்சொரிந்து அழகழிந்து (விரகத்தோடு அத்தேரின்)முன்னேநின்று,— நமது ஊருக்கு ஒழிவற இன்று வடு விளைத்தனள் - (வசையற்ற) நம்முடைய நகரத்திலுள்ள மடந்தையர்க்கு (எக்காலத்திலும்) நீங்காவண்ணம் இற்றைப்பொழுது வசையை உண்டாக்கினள். எ-று. [தேர்வரவுகண்ட மகளிர் திகைப்புணர்த்தியது] ஊர் அதிலுள்ளாரையுணர்த்தலின் ஆகுபெயர். (கஅ)

ஒழியாக்கவலையொழிவதென்றோசொல்லுழல்புலத்தின்
வழியாக்கவலையிடைப்படுமானின்மயங்கிநின்று
பழியாக்கவலைமனமேபணிந்துபரவிலைவேல்
விழியாக்கவலைமகளிறைதாழ்பழவெற்பினையே.

(இ-ள்.) மனமே - நெஞ்சே,—வேல் விழி ஆக்கம் அலைமகள் இறை தாழ் பழவெற்பினை பணிந்து பரவிலை-வேல்போலும் கண்களையும் செல்வத்தையுமுடைய இலக்குமிக்கு நாயகராகிய விஷ்ணுமூர்த்திவணங்கும் பழமலைநாதனை வணங்கித் துதித்தாயில்லை;— வலையிடை படும் மானின் மயங்கி நின்று - வலையினிடத்தே அகப்பட்ட மான்போல மயக்கமுற்றுநின்று,—உழல் புலத்தின் வழி யாக்க பழி ஆக்க வல்லை - சுழன்றுதிரியும் ஐம்புலவழியிலே என்னைக் கட்டவும் எனக்குப் பழியை உண்டாக்கவுமே வல்லாய்:—ஒழியாக் கவலை ஒழி

வது என்றே சொல் - (நீ இங்ஙனமிருக்கில் யாம் எக்காலத்தும்) நீங்காத விதனத்தை நீங்குவது என்றோ சொல்வாயாக. எ-று. (எ)

வெற்றிக்குமாரனையீன்றபழமலைவேந்தனின்னு
முற்றிக்குமாரனைநோக்குங்கொலோவென்பர்மூலைவம்புச்
சொற்றிக்குமாரனைவார்மடவாரவன்றோண்முலையோ
டொற்றிக்குமாரனையோன்முனஞ்சேரவுழலுவரே.

(இ-ள்.) மடவார் - பெண்கள்,—வெற்றி குமாரனை ஈன்ற பழமலை வேந்தன் இன்னும் முற்று இக்குமாரனை நோக்குமோ என்பர் - சயம்பொருந்திய முருகக்கடவுளைப் புதல்வனாகப் பெற்ற பழமலைநாதர் இன்னும் ஒருமுறை முதிர்ந்த கருப்புவில்லையுடைய மன்மதனை எரியும்படி பார்த்தருளுவரோ! என்று சொல்லுவர்;—மூலை வம்புச்சொல் திக்கும் ஆர ஊைவார் - அந்தரங்கத்திலே இரகசியமாகப்பேசிய புதிய களவொழுக்கவார்த்தைகள் எட்டுத்திக்கிலும் பரவலால் (அவைகேட்டு) வாடுவர்;—அவன் தோள் முலையோடு ஒற்றிக்குமார் அனையோன் முனம் சேர உழலுவர் - அப்பழமலைநாதருடைய புயங்களைத் தமது முலைகளுடன் அணைத்துக்கொள்ளும்படி அவர்முன்னே செல்லுதற்கு உழன்று திரிவர். எ-று. [இது வீதிமடவார் விரகங்கூறியது.] கொல் அசை. ஆர என்பது வினையெச்சத்திரிபு. மார் ஈறு "மார்வினையொடு முடிமே" என்னும் விதிப்படி உழல்வார் என்பதனோடு முடிந்தது. இது ஏனை முற்றுக்கள்போல ஒரோவிடங்களில் எச்சப்பொருள் பயப்பினும் முற்றெனக்கொள்ளுதலே ஆன்றோர்வழக்கு. (அ)

உழவரைச்சந்த விளவாளையாய்வயலோங்குகுன்றைக்
கிழவரைச்சந்தமுனிவாய்நற்கிளைவளரும்

பழவனைச்சந்தநறுந்தழைவாங்கிப்பரவினடூ
ளெழவனைச்சந்தமயிலியல்பூசவுமெண்ணினளே.

(இ-ள்.) அந்த மயில் இயல்-அந்த மயில்போலுஞ் சாயலையுடையவர்,—நல் கிளை வளரும் பழவனை நறும் சந்தம் தழை வாங்கி பரவினள்-நல்ல மூங்கில்கள் வளராநின்ற பழமலையினின்றும் நீ கொய்துவந்த வாசனைபொருந்திய சந்தனத்தழையை (என்கையினின்றும் தன்கையிலே) ஏற்று வணங்கித் துதித்தாள்;—தூள் எழ அனைச்சு பூசவும் எண்ணினள்-அதனைத் துகளெழும்படி அரைத்து மேனியிலே பூசிக்கொள்ளவும் நினைத்தாள்; (ஆகையால்),—உழவனை சந்தம் இள வாளை பாய் வயல் ஓங்கு குன்றை கிழவனை சந்ததமும் நினைவாய்-பள்ளர்களை அழகிய இளமையாகிய வாளைகள் பாய்ந்து திரியப்பட்ட கழனிகள் சூழ்ந்த பழமலைநாதனை எப்போதும் நினைப்பாயாக. எ-று. நினைக்கில் நின்கருத்து எளிதில் முடியும் என்பது எஞ்சிநின்றது. [தலைவி கையுறையேற்றமை பாங்கி தலைவற்குரைத்தல்.]

எண்ணிவருந்தினநொந்தோம்பழமலையெய்திலர்கா
ணண்ணிவருந்தினமின்றேயினிக்கதிர்நற்புரவி
மண்ணிவருந்தினமாவாலெழுந்துகள்வந்துடலின்
கண்ணிவருந்தினவான்மதிறேய்க்குங்கடிநகரே.

(இ-ள்.) பழமலை எய்து இலர் எண்ணி வருந்தினம் - (பெண்ணே,) பழமலையினிடத்தே பொருந்திய வீட்டையுடையவராகிய நம்மிறைவர் (என்று வருவரோ! என மனதிலே,) நினைத்து வருத்தப்பட்டோம்;—நொந்தோம் - விரகநோய்கொண்டு மெலிந்தோம்;—மண் இவர் உந்தின மாவால் எழும் துகள் வந்து உடலின்கண் இவரும் தினவால் - (இப்பொழுது) பூமியின்கண்ணே அத்தலைவரால் செ

லுத்தப்பட்ட குதிரைக்குளம்பால் எழுகின்ற தூளிகள் (ஆகாயத்தில்) வந்து சரீரத்தினிடத்திலே படிதலாலுண்டாகிய தினவினால்,—கதிர் நல் புரவி கடி நகர் மதில் தேய்க்கும்-சூரியனுடைய நல்ல குதிரையானது காவலையுடைய நமது நகரத்தினது (வானளாவிய) மதிற்புறத்திலே உரோஞ்சிக்கொள்கின்றது; (ஆகையால்),—கான் நண்ணி வரும் தினம் இன்றே இனி - காட்டுவழியே பொருந்திவருகின்ற தினம் இத்தினமே: இனிக் கவலற்க. எ - று. [பாங்கி தலைமகன் வரவு தலைவிக்குணர்த்தல்.] கவலற்க என்பது சொல்லெச்சம். (௰)

கடிக்கஞ்சமனையுவந்துலகாக்குறுங்காரணனோர்
முடிக்கஞ்சமனைதொறும்பலியேற்றமுதுகிரியான்
மிடிக்கஞ்சமனைவருந்தொழவாழ்வம்விரவுறுமெங்
குடிக்கஞ்சமனைவெருவுதலேயின்றுகொல்வனென்றே.

(இ-ள்.) கடி கஞ்சம் மன் ஐ உலகு உவந்து ஆக்குறும் காரணன் - வாசனைபொருந்திய தாமரைப்பூவில் நிலைபெற்ற கடவுளாகியும் உலகங்களை மகிழ்ந்துபடைக்கும் தலைவனாகியுமிருக்கின்ற பிரமதேவனுடைய—ஓர் முடி கஞ்சம் மனைதொறும் பலி ஏற்ற முதுகிரியான் - ஓர்தலையாகிய வெண்கலப்பாத்திரத்திலே (தாருகாவனத்து முனிபத்தினிகளுடைய) வீடுகடோறுஞ்சென்று பிச்சையேற்ற பழமலைநாதரானவர் — விரவுறும் எம் குடிக்கு கொல்வன் என்று அம் சமனை வெருவுதலே இன்று - கலந்து அடிமைகொண்ட எமது குலத்துள்ளார்க்கும், கொல்லவருவானென்று அழகிய இயமனுக்கு (எப்போதும்) அஞ்சுதலே இல்லை;—மிடிக்கு அஞ்சம்- தரித்திரத்துக்கும் பயப்படோம்;—அனைவரும் தொழ வாழ்வம் - எவ்வுலகத்தவரும் வணங்கவும் வாழ்வோம். எ-று. கஞ்சம் பாத்திரத்தை யுணர்

த்தலின் ஆகுபெயர். மிடிக்கும் தொழவும் குடிக்கும் என்னும் உம்மைகள் விகாரத்தாற்றொக்கன. குடி அதிலுள்ளாரையுணர்த்தலின் ஆகுபெயர். சமனை வேற்றுமைமயக்கம். (௧௧)

கொல்லைக்குறவரைவாயனையார்கரிக்கோட்டைவிளை
செல்லைக்குறவரையாதுகொள்காளத்திநேயராவான்
றில்லைக்குறவரைநம்முதுகுன்றரைச்சேர்வலென்றூ
ரெல்லைக்குறவரைமாத்திரைக்கேநலமீகுவரே.

(இ-ள்.) குறவரை வாய் அனையார் - வேடர்களைத் (தமது கணவராக) வாய்ந்த அவ்வேடமங்கையர், — கரி கோட்டை கொல்லை விளை நெல்லை குற-யானைக்கொம்புகளைப் புனங்களிலேவிளையாநின்ற மலைநெல்முதலிய தானியங்களைக் குற்றுதற்கு — வரையாது கொள் காளத்தி நேயரா - நீக்கமின்றிக் கைக்கொண்டு செல்லும் காளத்திமலையினிடத்தே விருப்பமுடையவரும்—வான் தில்லைக்கு உறவரா - மேலாகிய சிதம்பரதலத்தில் உறவாயிருப்பவருமாகிய— நம் முதுகுன்றரை சேர்வல் என்று ஊர் எல்லைக்கு உற - நமது பழமலைநாதரைச் சென்று தரிசிப்பேனென்று அத்தலத்தினெல்லையிலே(ஒருவன்) உற்றால்,—அரைமாத்திரைக்கே நலம் ஈகுவர்-அவனுக்கு அரைநொடியளவிற்குள்ளே நன்மையைக் கொடுத்தருளுவர். எ-று. குற இடைக்குறை. தில்லைக்கு எல்லைக்கு மாத்திரைக்கு என்பன வேற்றுமைமயக்கம். உற வினையெச்சத்திரிபு. (௧௨)

ஈகையிலங்கைதவமுளமெங்ஙனமெய்தவமென்
றோகையிலங்கவடிவேலொடுவருந்தோன்றறந்தை
வாகையிலங்கையரசிறலூன்றியவள்ளன்மழு
மாகையிலங்கைம்முகமுதுகுன்றன்மலர்ப்பதமே.

(இ-ள்.) ஈகை இலம் கைதவம் உளம் - (ஒருவருக்கும் ஒரு பொருளைக்) கொடுத்தறியேம் வஞ்சனையையுடையேம் (இப்படிப்பட்ட யாம்),—மென் தோகையில் அங்கை வடிவேலொடு வரும் தோன்றல் தந்தை - மிருதுவான தூவியையுடைய மயிலிலேறிக் குடங்கையேந்திய வடித்த வேலாயுதத்தோடு எழுந்தருளிவரும் முருகக்கடவுளுடைய பிதாவும்—வாகை இலங்கை அரசு இற ஊன்றிய வள்ளல் - (திக்குவிசயம்பண்ணி) வெற்றிமாலையை யணிந்த இராவணன் (கைலைமலையை யெடுத்தகாலத்து முதுகுதண்டு) இற்றுவிழ (காலினது பெருவிரலால்) இருத்திய தியாகியும்—மழு மா இலங்கு கை ஐம்முகம் முதுகுன்றன் - பரசும் மானும் பிரகாசிக்கும் கரங்களையும் ஐந்து வதனத்தையுமுடைய பழமலைநாதருமாகிய சிவபெருமானுடைய—மலர்ப்பதம் எங்ஙனம் எய்துவம் - தாமரை மலர்போலுந் திருவடிகளை எப்படியடையக்கடவேம். எ-று. பின்னர் சாமகீதத்திற்கிரங்கி அவ்விராவணனுக்கு வேண்டியவரங்களைத் தருதலின் வள்ளலென்றார். மா. என்பது னகரச்சாரியை பெறாதுநின்றது. (கஉ)

பதம்பரவைக்குவருந்துபிராற்குப்பசுமயின்மேற்
கதம்பரவைக்குவரச்சுற்றுகட்செவிக்கங்கணற்குச்
சிதம்பரவைக்குமுதுகுன்றவாணற்குச்செல்வமெல்லா
மதம்பரவைக்குநிகர்கரித்தோறலைமாலைகளே.

(இ-ள்.) பரவைக்கு பதம் வருந்து பிராற்கு - பரவைநாச்சியார் பொருட்டுத் (தூதுநடந்து) திருவடிகள் வருந்திய கர்த்தரும்—கதம்பர் பசுமயின்மேல் அவைக்கு வர சுற்று கட்செவி கங்கணற்கு - கடப்பமாலையையணிந்த முருகக்கடவுள் பசிய மயிலின்மேலேறிக் கொண்டு தமது சபைக்குவர (அம்மயிலைக்கண்டு நடுங்கிக் கைகளிலே) சுற்றிக்கொள்ளும் சர்ப்பகங்கணத்தை யுடையவரும்—சிதம்பர

ஐக்கு-சிதம்பரத்தில் வீற்றிருக்கும் தலைவருமாகிய—முதுகுன்ற வாணற்கு செல்வம் எல்லாம் - பழமலை நாதருக்குரிய ஐசுவரியங்களை யெல்லாம் (உற்றுப் பார்க்கில்),—மதம் பரவைக்கு நிகர் கரித்தோல் தலை மாலைகளே - மதசலமானது கடனீர்ப்பெருக்கத்துக்கு நிகராகிய யானையினது தோலும் சிரமாலிகைகளுமேயன்றி வேறில்லை. எ-று. மகளே இச்செல்வமுடையாரைக்கண்டோ இச்சித்தாய் என்பது எஞ்சிநின்றது. [நற்றாயிரங்கல்.] (கசு)

மாலைக்கலுழனொய்யோனெனத்தாங்கவயங்குமரு
ணூலைக்கலுழவொழியெனுமேற்றிவர்நோன்மையனாழ்
பாலைக்கலுழவொருமகற்கீந்தபழமலையான்
மூலைக்கலுழநடம்புரிவானெம்முதற்றெய்வமே.

(இ-ள்.) மாலை நொய்யோனென கலுழன் தாங்க-மாயவனைக் கனமில்லாதவனென்று உலகத்தார்சொல்லும்படி கருடன் சுமக்க—அருள் வயங்கும் நூலை கல் உழவு ஒழி எனும் ஏற்று இவர் நோன்மையன்-சிவபெருமான்திருவருள் விளங்குதற்கு ஏதுவாகிய சிவாகமத்தைக் கற்றுக்கொள் பிறவித்துன்பங்களை நீக்கிக்கொள் என்று (தன் சீடருக்குபதேசிக்கும்) இடபவாகனத்திலேறும் கனம் பொருந்தினவரும்—கலுழ ஒருமகற்கு ஆழ் பாலை ஈந்த பழமலையான்-(குழவியாய்) அழுதல்கண்டு உபமன்னியமகாமுனிவருக்கு ஆழம்பொருந்திய பாற்கடலை அழைத்துக்கொடுத்த பழமலைநாதருமாகிய—எம் முதற்றெய்வம்-எமது முதற்கடவுளானவர்,—மூலைக்கு அல் உழ நடம் புரிவான்-(ஆன்மாக்களுடைய) அகத்திலே (குடிகொண் டிருக்கும்)மலவிருளை (அருளொளியால்) பிளக்கவேநடனம்புரிகின்றார். எ-று. பால் ஆகுபெயர். மூலை உள்ளிடத்தை யுணர்த்திற்று. மூலைக்கு வேற்றுமை மயக்கம். உலகிருளை உருவத் தொளியாலும் அகவிருளை அருளொளியாலும் நீக்குகின்றன னென்பது நூற்றுணிபாகலின், மூலைக்கலுழ

நடம்புரிவான் - என்பதற்கு (திருமேனிப்பிரகாசத்தால்) திகாந்தங்களிலே புறத்திருள்போய்விழ நடம்புரிவான் எனப் பொருள்கொள்ளினு மமையும். (கரு)

தெய்வசிகாமணியேமணிகூடலிற்சென்றுவிற்ற
மெய்வசிகாமணிகண்டாபழமலைவித்தகமீ
னெய்வசிகாமணிமாவெனுங்கண்ணியைநெஞ்சகத்து
வைவசிகாமணிநோவாதெனையின்பவாழ்வளித்தே.

(இ-ள்.) தெய்வசிகாமணியே - தெய்வங்களுக்கெல்லாம் சிரோரத்தினமானவரே,—கூடலில் சென்று மணி விற்ற மெய் வசிகா-மதுரைவீதியிலேபோய் அரதனங்களைவிற்ற உண்மையான வைசியரே,—மணிகண்டா-நீலகண்டரே,—பழமலை வித்தக - முதுகிரியில் வாழும் ஞான சொருபரே,—மீன் நெய் வசி கா மணி மா எனும் கண்ணியை நெஞ்சகத்து வை - சேல் நெய்தடவியவாள் சோலையிடத்துள்ள அழகிய மாவடு என்று விதந்து சொல்லப்படும் கண்களையுடைய தலைவியை (உமது)திருவுளத்தில் வைத்துக் கொள்ளும்;—வசி-(உமதூரிலே நீக்கமின்றி இவளுடனே) வாசமாயிரும்;—மண்ணில் நோவாது இன்பவாழ்வு அளித்து எனை கா - இம்மண்ணுலகில் விதனப்படாமல் சுகவாழ்வைத்தந்து என்னையும் இரட்சியும். எ-று. [உடன்போக்கில் பாங்கி தலைமகளைக் கையடை கொடுத்துத் தலைவனுக் கோம்படை சாற்றல்.] வைசிகன் என்பது வசிகன் என மருவியது. (கசா)

வாழமரிக்குமடநெஞ்சமேமென்மலர்ப்பகழி
தாழமரிக்குமதற்காய்ந்ததந்தையுந்தாயுமொரு
வேழமரிக்குமிகவுறவாம்பழவெற்பினயல்
சூழமரிக்குமியல்பையெஞ்ஞான்றுந்துணிந்திலையே.

(இ-ள்.) வாழ மரிக்கும் மடம் நெஞ்சமே-(இப்பூமியிலே)வாழ்ந் திருக்கும்படி சிந்திக்கும் பேதைமனமே,— மென் மலர் பகழி அமர் தாழ் இக்கு மதன் காய்ந்த தந்தையும் தாயும் - மெல்லிய புட்பபா ணங்களையும் போர்த்தொழில் தங்கிய கருப்புவில்லையுமுடைய மன் மதனை யெரித்த பிதாவாகிய பழமலைநாதரும் மாதாவாகிய பெரிய நாயகியாரும்,—ஒரு வேழம் அரிக்கு மிக உறவாம் பழவெற்பின் அயல் சூழ - ஒப்பற்ற யானைகள் சிங்கங்களுக்கு மிகவும் உறவாகக் கலந்துவாழும் முதுகிரியின் அயலிடத்திலே (பஞ்சாக்கரோபதேசம் செய்யும் பொருட்டு) எழுந்தருளிவர;—மரிக்கும் இயல்பை என்று ன் றும் துணிந்திலை-இறக்கும் இயற்கையை எக்காலத்திலும் நீ துணிந் தாயில்லை. எ - று. இனியேனுந் துணிவாயென்பது எஞ்சி நின்றது. ஸ்மரிக்கும் என்னும்வடமொழி மரிக்குமென நின்றது. வாழமரிக்கு என்பதனை இக்கு வாழ அமர் எனமாற்றி, இப்பூமியினிடத்தே வாழ விரும்பும் பேதைமனமே எனப் பொருள்கொள்வதுமுண்டு. இப்பெ ருட்கண்ணே வாழ என்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொ கது. இத்தலத்திலே, தேகாந்தியத்திலே, அம்பிகை மடிமிசைக் கிடத்திக்கொள்ள; வலதுசெவியிலே பழமலைநாதர் பஞ்சாக்கரோப தேசஞ்செய்து, ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்கின்றனரென்பது சித்தாந்தமாகலின் தந்தையும் தாயும் அயல்சூழ மரிக்குமியல்பைத் துணிந்தாயில்லை என்றார். (கஎ)

துந்துமியும்பரியம்பும்பழமலைசூழ்ந்துறையீர்
நுந்துமியும்பரியாவியைவேண்டியுண்ணேம்புலவீர்
சிந்துமியும்பரிவாலுதவார்த்துதிசெய்வீர்மல
முந்துமியும்பரியாகமுண்டோசொல்லுமுங்களுக்கே,

(இ-ள்.) துமியும் பரிநும் ஆவியை வேண்டி உள் நோம் புலவீர்-தும்மினும் நீங்குகின்ற உங்களுடைய ஆன்மாவை (உடலோடு)வாழவேண்டி உள்ளம்வருந்தித் திரிகின்ற புலவீர்காள்,—சிந்து உமியும் பரிவால் உதவார் துதிசெய்வீர்-சிந்திப்போகிற உமிகளையும் அன்போடுகொடுக்காத உலுத்தர்களைத் தோத்திரஞ்செய்கின்றீர்;— உம்பர் துந்துமி இயம்பும் பழமலை சூழ்ந்து உரையீர் - தேவர்கள் தேவதுந்துபியைமுழக்கும் முதுகுன்றத்தை வலம்வந்து புகழ்ந்துரைக்கமாட்டீர்: (இங்ஙனமிருக்கில்),— உங்களுக்கு மலமும் துமியும் பரிபாகம் உண்டோ சொல்லும் - நுமக்கு மலமும் மாயாகன்மங்களும் கெடாநின்ற பரிபாககாலம் உண்டாகுமோ? சொல்லுவீராக. எ-று. தும்மினும் என்பது துமியுமென நின்றது. செய்வீர் காலமயக்கம். மலமுமென்ற உம்மையால், மாயாகன்மங்களும் வருவிக்கப்பட்டன.

கேட்டுப்புவனங்கொளவுமெண்ணேமெய்க்கிராதனின்முன்
னூட்டுப்புவனம்பயின்மான்றசையுண்டநாதனராப்
பூட்டுப்புவனங்கொளுமெய்ப்பழமலைப்புண்ணியன்றாள்
வேட்டுப்புவனம்பதினான்குநல்கினும்வேண்டிலமே.

(இ-ள்.) முன்னாள் மெய் கிராதனின் வனம் பயில் மான் துப்பு தசை உண்ட நாதன் - முற்காலத்திலே உண்மையன்புவாய்ந்த திண்ணனாரால், காட்டிற்றிரியும் மானினது சுவையாராயப்பட்ட இறைச்சியையுண்டருளிய நாயகரும்—அரா பூண் துப்பு வனம் கொளும் மெய் பழமலை புண்ணியன் தாள் வேட்டு-நாகாபரணங்களையும் பவளம்போலும் நிறத்தையும் கொண்டுவிளங்கும் திருமேனியையுடைய பழமலையில் வீற்றிருக்கும் தரும சொரூபருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளை (யாம்) விரும்பியிருத்தலால்,—உப்பு வனம் கே

ட்டு கொளவும் எண்ணேம்-உப்பிட்டநீரை பிறர்பாற்கேட்டு உட்கொள்ளவும் சிந்தியேம்;—புவனம் பதினான்கும் நல்கினும் வேண்டிலம் - (அதுவன்றியும் ஒருவர் வலியவந்து) பதினான்கு உலகங்களையும் ஆளும்படி கொடுப்பினும் விரும்பேம். எ-று. எனவே வீடுபேற்றை விரும்பியிருத்தலால் இம்மைமறுமையின்பங்களை விழையேம் என்பதாம். உப்பிட்ட நீர் - புற்கையுணவு. வேட்டு வினையெச்சத்திரிபு. (கக)

வேண்டவடுக்கநினைவதுன்றாண்மலர்வேட்கைமணி
பூண்டவடுக்கணறுநுதலார்மயல்போக்குவது
நீண்டவடுக்கனயமாதிளமுலைநேர்ந்துதவ
மாண்டவடுக்கணிகர்தோட்பழமலைமன்னவனே.

(இ-ள்.) நீண்ட அடுக்கல் நயம் மாது இளமுலை நேர்ந்து உதவ-நெடிய இமயமீன்ற இன்பம்பொருந்திய உமாதேவியினுடைய முற்றாமுலைகள் (காஞ்சியிலே) அணைந்துகொடுக்க—மாண்ட வடுக்கள் நிகர் தோள் பழமலை மன்னவனே - மாட்சிமைப்பட்ட அம்முலைத்தழும்புகளோடு (வளைத்தழும்புகளும்)ஒளிர்கின்ற தோள்களையுடைய பழமலைநாதரே,—வேண்ட அடுக்க நினைவது உன் மலர் தாள் வேட்கை - விரும்பி அடையநினைவது உம்முடைய தாமரைமலர்போலும் திருவடியினிடத்து அன்பேயாம்;—போக்குவது மணி பூண்ட வடு கண் நறு நுதலார் மயல்-நீக்குவது கருமணிகொண்ட மாம்பிஞ்சின் பிளப்பைநிகர்த்த கண்களையும் நல்ல நெற்றியையுமுடைய மங்கையரது மயக்கமேயாம். எ-று. வேண்ட என்பது வினையெச்சத்திரிபு. வடுக்கள் நிகர் தோள் என்பதற்கு தழும்புகள் ஒன்றுக்கொன்று உவமையாகத்தோன்றும் புயங்களெனக் கொள்வதும்வழக்கம்.

மன்னவமாதவனும்பழமலைவாணமணி
யன்னவமாதவனன்மலைக்காற்கசைந்தும்மதிகண்

டென்னவமாதவனல்லின்வந்தானென்றிரங்கிமதன்
தின்னவமாதவகோமேயென்செல்வத்திருந்திழையே.

(இ-ள்.) மன்னவ - (எவ்வுலகிற்கும்) இறைவரே,—மாதவன் காடும் பழமலை வாண-மாயவன் தேடித்திரியும் முதுகிரியில் வாழ்பவரே,—மணி அன்னவ-மாணிக்கம்போல்பவரே,—என் செல்வம் திருந்திழை - என்னுடைய செல்வம்போலும் திருந்திய ஆபரணத்தையுடையபெண்,—மாதவன் நல் மலை காற்கு அசைந்து-பெருமைதங்கிய தவத்தையுடைய அகத்தியமகாமுனிவர்தங்கும் நல்ல பொதியமலையினின்றும் வருகின்ற தென்றலுக்கு வருந்தி,—அம் மதி கண்டு என் நவம் ஆதவன் அல்லின் வந்தான் என்று இரங்கி-அழகிய சந்திரனைப்பார்த்து இஃதென்னபுதுமை! (பகற்காலத்துதிக்கும்) சூரியன் இரவிலேவந்துவிட்டான் என்று (மயங்கியுரைத்து) அழுது,—மதன் தின்ன தவ நோமே அம்மா-மன்மதன் உயிரைக்கவர்ந்துண்ண மிகவும் நோகலாமா? ஆச்சரியம். எ-று. [நற்றாயிரங்கல்.] அமா இடைக்குறை. (உக)

திருந்தியவேதம்புகல்பரிசேயறஞ்செய்துடலம்
வருந்தியவேதம்பொருளெனவாழ்பழமாமலையான்
பொருந்தியவேதந்தருநஞ்சுணனெனிற்பூமலர்கா
மருந்தியவேதம்புயமனையாட்கணிமங்கலமே.

(இ-ள்.) பூ மலர் காமர் உந்திய - செந்தாமரைமலர்போலும் விரிந்த அழகிய நாபியையுடைய மாயவனே?—திருந்திய வேதம் புகல் பரிசே அறம் செய்து உடலம் வருந்தியவே - திருத்தமாகிய வேதங்களுரைக்கும் விதிப்படியே சிவபுண்ணியங்களைச்செய்து தேகம்வருந்திய ஆன்மாக்களே—தம் பொருள் என வாழ் மா பழமலை

யான் - தம்முடைய செல்வமென்று கைக்கொண்டு வாழும் பெருமைதங்கிய பழமலைநாதரானவர்,—பொருந்திய ஏதம் தரும் நஞ்சு உண்ணான் எனில் - நிலைபெற்ற துக்கத்தைவிளைத்த ஆலகாலவிடத்தை உண்ணாது விடுவாராகில்,—அம்புயம் மனையாட்கு அணி மங்கலம் ஏது-தாமரையாசனத்தையுடைய நின்மனையாட்டிக்கு நீதரித்த மங்கலநாண் எப்படிநிலைபெறும். எ-று. வருந்திய வினையாலணையும்பெயர். ஏகாரம் ஏனை ஆன்மாக்களைப்பிரித்துநிற்றலின் பிரிநிலை. தரும் காலமயக்கம். (உஉ)

மங்கலமாவிமலைசேர்பழமலைவாண மணிச்
செங்கலமாவிமலர்க்கைக்குருகொடுசெல்கவெமர்க்
கிங்கலமாவிவளைநீயணைந்த திணியுனெதிர்
தங்கலமாவிதரிற்கொடுசேறுமெந்தன்மனைக்கே.

(இ-ள்.) மங்கலமா விமலை சேர் பழமலை வாண - நித்தியகலியாணமாக விருத்தாம்பிகைகூடி மகிழ்ந்திருக்கும் முதுகிரியில்வாழ்பவனே,—எமர்க்கு இங்கு அலமா இவளை நீ யணைந்தது (நன்று) - எம்முடைய சுற்றத்தாருக்கு இவ்விடத்திலே துன்பம் விளைய இத்தலைவியை நீ களவிற்புணர்ந்து கைவிட்டது நன்றாயிருந்தது;—ஆவி மலர் கை குருகொடு மணி செம் கலம் செல்க - தடாகத்திற்பூத்த தாமரைமலர்போன்ற கையிலணிந்த வளையலோடும், இரத்தினங்கள் பதித்த சிவந்த பொன்னுபரணங்கள் நீங்கினும் நீங்குக;—இனி உன் எதிர் தங்கலம் - இனி உன்முன்னே நிற்கமாட்டோம்:—ஆவி தரில் எம் தன் மனைக்கு கொடு சேறும் - இவளுயிரைமாத்திரம் நீ கொடுத்துவிட்டால் எமது தன்மைபொருந்திய வீட்டிற்குக் கொண்டுசெல்லுதும். எ-று. [பிரிந்துநீட்டித்த தலைவன்வந்துழிப் பாங்கி இற்பழி

கூறி வரைவுகடாதல்.] நன்று என்பது சொல்லெச்சம். மங்கலமாக ஆலமாக என்பவற்றுள் ஈறு குறைந்தன. (உரு)

தண்டங்கமண்டலங்கொண்டுபழமலைச்சங்கரதாட்
புண்டங்கமண்டலங்கண்டுசென்றாலுமெய்ப்போதமுறார்
பண்டங்கமண்டலங்காரமின்னாக்கினன்பாட்டியலைக்
கொண்டங்கமண்டலம்பாழாக்கியவுனைக்கூறலரே.

(இ-ள்.) பழமலை சங்கர - முதுகிரியில்வாழும் சங்கரரே,— பண்டு அங்கம் மண்டு அலங்காரம் மின் ஆக்கினன் பாட்டு இயலை கொண்டு - முற்காலத்திலே எலும்பை நெருங்கிய அழகையுடைய பெண்ணாக்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருரைத்த அருட்பாவிலிலக்கணத்தைக் கொண்டு,— அங்கு அமண் தலம் பாழாக்கிய உனை கூறலர் - மதுரையில் சமணரிருந்த இடங்களையெல்லாம் பாழ்படச் செய்தருளிய தேவரீரைத் தோத்திரஞ் செய்யாதவர்கள்,— தண்டம் கமண்டலம் கொண்டு - (சந்நியாசிகளாய்) தண்டத்தையும் கமண்டலத்தையுங் கைக்கொண்டு,— தாள் புண் தங்க மண்டலம் கண்டு சென்றாலும் மெய் போதம் உறார் - கால்களிலே புண்படும்படி இப்பூமியிலே (பலதலங்களைத்) தெரிசித்துத் திரிந்துவந்தாலும் உண்மையாகிய ஞானத்தையடையமாட்டார்கள். எ-று. தலயாத்திரையினும் அருட்பாக்களையோதுதலே ஞானத்திற்கு முக்கிய ஏதுவென்பது கருத்து.

கூற்றைக்கொடியங்கடப்பானருளெனக்கூய்ப்பரவி
யேற்றைக்கொடியங்கரஞ்சேர்பழமலையீசனணி
நீற்றைக்கொடியங்குளமேவெறுத்திறைபெருகு
மூற்றைக்கொடியக்கினமேடருங்குடம்பினையே.

(இ-ள்.) தியங்கு உளமே - உண்மையுணராது உழலுமனமே,— கொடியம் கூற்றை கடப்பான் அருள் என கூய் பரவி - கொடியே மாகிய யாம் இயமனை வெல்லும்பொருட்டுக் கிருபைசெய்யென்று முறையிட்டுக்கூவித் தோத்திரஞ்செய்து,— ஏற்றை கொடி அம் கரம் சேர் பழமலை ஈசன் அணி நீற்றை கொள் - இடபக்கொடியானது அழகிய கரத்திற்றங்கிய முதுகிரிநாதரணிந்த விபூதியைப் பொருளாகக் கைக்கொள்;—நிறை பெருகும் ஊற்றை - (மலங்கள்) நிறைந்து (நவத்துவாரங்களினும்) ஒழுகும் ஊற்றையுடைய—அங்கு கொடி இனமோடு அருந்தும் உடம்பினை வெறுத்தி - சுடலையிலே காக்கை தனது சுற்றத்தோடும் தின்னப்பட்ட இத்தேகாபிமானத்தை வெறுத்துவிடுவாயாக. எ-று. ஏற்றுக்கொடி ஐகாரச்சாரியை பெற்று நின்றது. நிறைந்து என்னும் எச்சம் நிறை என நின்றது. ஊற்றை உடம்பு என இயையும். (உ௫)

உடற்குவலையந்தகன் கைக்கயிறென் றுணர்ந்துளமே
கடற்குவலையம்புகழ்சீர்முதுகிரிக்கண்ணுதற்கு
மடற்குவலையம்புரைகளத்தாற்கு நம்மன்றமர்ந்த
நடற்குவலையம்பணியாமவற்கன்புநண்ணுகவே.

(இ-ள்.) உளமே-மனமே? உடற்கு வலை அந்தகன் கை கயிறு என்று உணர்ந்து-உயிராகிய பறவையைப் பிடித்தற்கு வலையாவது இயமனது கையிலுள்ள பாசக்கயிறென்பதை அறிந்து,—கடல் குவலையம் புகழ் சீர் முதுகிரி கண்ணுதற்கு-கடலாற்சூழப்பட்ட பூமியிலுள்ளவர் புகழாநின்ற சீர்த்திபெற்ற பழமலையில்வீற்றிருக்கும் நெற்றிக்கண்ணையுடையவரும்—மடல் குவலையம் புரை களத்தாற்கு-(விடத்தால்)இதழையுடைய கருங்குவளைபோலும் கண்டத்தையுடை

யவரும்—நம் மன்று அமர்ந்த நடற்கு - நம்முடைய கனகசபையி லே நிலைபெற்ற நடனத்தையுடையவரும்—பணி ஆம் வலயம் அவ ற்கு - பாம்புகளாகிய கைக்கடகங்களையுடையவருமாகிய சிவபெரு மானுக்கு—அன்பு நண்ணுக- அன்பைச் செய்வாயாக. எ-று. உடல் ஆகுபெயர். இது ஏகதேசவுருவகம். (உசு)

நட்டுவனாரையறிகிலன்றண்ணுமைநந்திநின்று
கொட்டுவனாரையிரைதேர்கயமுதுகுன்றுடையாய்
தட்டுவனாயகலாதநான்முகன்றாளமுயர்
குட்டுவனாவனைவான்பரவுநின்கூத்தினுக்கே.

(இ-ள்.) நாரை இரை தேர் கயம் முதுகுன்று உடையாய் - நா ரைகள் இரைகளைத் தேடித்திரிகின்ற தடாகஞ்சூழ்ந்த பழமலையை யுடையவரே,—உயர் குட்டுவன் ஆரை வனைவான் பரவும் நின் கூத்தினு க்கு-உயர்ந்த சேரனும் ஆத்திமாலையைத்தரித்த சோழனும் வணங்கா நின்ற தேவரீருடைய நடனத்திற்கு,—நந்தி நின்று தண்ணுமை கொ ட்டுவன்-நந்திதேவர் (பின்னே) நின்று மத்தளமுழக்குவர்;—நாளை அகலாத நான்முகன் தாளம் தட்டுவன் - அன்பைநீங்காத பிரமதே வர் தாளத்தையடிப்பார்;—நட்டுவனாரை அறிகிலன்-ஆட்டிவைப்பார் ஒருவரையும் (யான்) அறிகிலேன். எ-று. நட்டுவனார் என்பதில் ஆர் விகுதி உயர்த்தற்கண் வந்தது. சிந்தித்துணருங்கால், சிவபெருமான் திருவருட்டிருமேனிகொண்டு ஆன்மாக்களையியக்க ஐந்தொழினடகம் நடிப்பவரேயன்றித், தம்மையியக்கும் வேறொரு தலைவரையுடைய ரல்லர் என்பது கருத்து. (உஎ)

கூத்துகந்தம்பலமேவுறுமோர்முதுகுன்றனைநம்
பாத்துகந்தம்பலமாரினுமெள்ளினும்பண்பனைத்தாள்

சாத்துகந்தம்பலமாமறையாற்புகழ்தாணுவைநா
மேத்துகந்தம்பலமார்பொதுமாதரையெள்ளினமே.

(இ-ள்.) நாம்-யாம்,—தம்பலம் ஆர் பொது மாதரை எள்ளினம்-(பலரும் மென்றுமிழாநின்ற) தம்பலச்சாற்றைப் புசிக்கும் வரைவின்மகளிரது சிற்றின்பத்தை இகழ்ந்துவிட்டேம்;—கூத்து உகந்து அம்பலம் மேவுறும் ஓர் முதுகுன்றனை - நடனத்தைவிரும்பிக் கனகசபையிலே வீற்றிருக்கும் ஒப்பற்ற பழமலைநாதரும்—நம் பா அம்பலம் ஆரினும் அகந்து எள்ளினும் தாள் சாத்து பண்பனை - நமது பாமாலையிலுள்ள அழகிய பிரயோசனத்தை (வித்துவசபையோர்) அங்கீகரிப்பினும் (பொறாமையால்) கசந்து இகழ்ந்துரைப்பினும்,—(உண்மைநோக்கித்) தமது திருவடியிற் றரித்துக்கொள்ளும் குணமுடையவரும்—பல கந்தம் மாமறையால் புகழ் தாணுவை ஏத்துகம்-பல சாகைகளையுடைய பெரிய வேதங்களினால் துதிக்கப்பட்ட தாணுவுமாகிய சிவபெருமானை இனி ஏத்தக்கடவோம். எ-று. தாள்சாத்தலாவது தாள்களிலேவிழுமாறு தோள்களிற்றரித்தல், ஸ்கந்தம் என்னும் வடமொழி கந்தமெனநின்றது. (உஅ)

எள்ளாதவனையெலும்பாபழமலையென்றிருந்த
கள்ளாதவனைமகவரிந்தாக்கெனக்கட்டுரைத்து
விள்ளாதவனைமகிழ்பரமாவழல்வெண்மதியைத்
தள்ளாதவனைமுடிசூடெம்மாதுதருக்குதற்கே.

(இ-ள்.) எள்ளாத வனை எலும்பா - இகழப்படாத அலங்கரிக்கப்பட்ட எலும்புமாலையையணிந்தவரே,—பழமலை என்று இருந்த கள்ளா - (அவயவங்களைமறைத்து) முதுகிரிவடிவாயிருக்கும் திருடரே,—தவனை மகவு அரிந்து ஆக்கு என கட்டுரைத்து அவனை விள்

ளாது மகிழ் பரமா - தவமிகுந்த திருத்தொண்டராயவரிடத்தே புதல்வனையரிந்து கறிசமைத்திடுகவென்று கட்டளைபுரிந்து (அதில் மாறுபடாமைநோக்கி) அவரை நீக்காது மகிழ்ந்து அடிமைகொண்ட மேலானவரே,— எம் மாறு தருக்குதற்கு - எங்களுடையபெண் களித்து வாழும்பொருட்டு,— முடி அழல் வெண்மதியை தள்ளு ஆதவனை சூடு—திருமுடியில் (அணியப்பட்டுச்) தழலைப்பரப்பிநிற்கும் வெள்ளிய சந்திரனை நீக்குவீராக; சூரியனைத் தரிப்பீராக. எ-று. [இது சந்திரோபாலம்பனம்.] எள்ளாத எனும்பாஎன இயையும். தவனை வேற்றுமைமயக்கம். (௨௧)

தருவினிலையினிமன்னவற்கிலையித்தண்புனத்தின்
மருவினிலையினிமைக்கூற்றெனக்கந்திவானநிக
ருருவினிலையினியல்வேற்குகனையுதவியகோன்
கருவினிலையினிகந்தோன்பழமலைக்காரிகையே.

(இ-ள்.) அந்தி வானம் நிகர் உருவினில் ஐயின் இயல் வேல் குகனை உதவிய கோன்-மாலைக்காலத்திலேதோன்றும் செவ்வானம் போன்ற சிவந்ததிருவுருவத்தோடு, அழகின் இயற்கையைப்படைத்த வேலாயுதத்தையுமுடைய முருகக்கடவுளைப்பெற்ற இறைவரும் — கருவின் நிலையின் இகந்தோன்-(ஏனைத் தெய்வங்கள்போலக்) கருப்பாசயத்திற்றங்கிப் பிறத்தலாகிய நிலையினின்றும் நீங்கினவருமாகிய சிவபெருமானுடைய—பழமலை காரிகையே - முதுகிரியில்வசிக்கும் பெண்ணே,—மன்னவற்கு இனி தருவின் இலை இல்லை - இறைவருக்கு இனி (பறிக்கும்படி நமது புனத்தைச்சூழ்ந்த) மரங்களினிடத்தே தழைகளும் இல்லை;—இத் தண் புனத்தின் மருவின் இனிமைக்கூற்று எனக்கு இலை-அவர் இக்குளிர்ந்த தினைப்புனத்தின்கண்ணே வந்தால்

(அவர்க்குச்சொல்லவேண்டிய) இனிய வசனங்களுள் என்னிடத்தே ஒன்றுமில்லை. எ-று. [இறைவிக்கவன்குறை இகுளைசாற்றல்.] நெடு நாளாய் நமக்குக் கையுறையாகப் பறித்துவந்தமையால் தருக்களிற் றழையற்றன. அதனை ஏலாது சதுர்வித உபாயங்களாலும் மறுத்த லால் என்னிடத்து இனியமொழிகளற்றன. இனிவரின் இயம்பற்பா லதை நீ இசைப்பாயாக எனப் பாங்கி தலைவிகுறிப்பறிந்தது. எனக் கு வேற்றுமைமயக்கம். (௩௰)

காரிகையார்க்குவரும்பொதுவோவல்லகாண்விசும்பிற்
பூரிகையார்க்குமுதுகுன்றநாயகன்பொங்குமருள்
வாரிகையார்க்குமருந்தனையான்மலைமன்னனரு
ளாரிகையார்க்குமெழுவுறழ்தோட்கணறுநுதலே.

(இ-ள்.) நறுநுதலே-நல்ல நெற்றியையுடையபெண்ணே,— விசும்பில் பூரிகை ஆர்க்கும் முதுகுன்றம் நாயகன் - ஆகாயத்திலே (தேவர்களாற்) பூரிகைமுதலிய வாத்தியங்கள் முழங்கப்படுகின்ற பழமலைநாதரும்—பொங்கும் அருள் வாரி - பெருகாநின்ற கிருபா சமுத்திரரும்—கையார்க்கு மருந்து அனையான் - வெறுக்காத அன் பர்களுக்கு அமுதம்போன்றினிப்பவருமாகிய சிவபெருமானுடைய— மலைமன்னன் அருள் நாரி கை ஆர்க்கும் எழு உறழ் தோட்கள்-பரு வதராஜன்பெற்ற உமாதேவியார் (தமக்கே உரியனவாகக்) கைக ளாற் கட்டியணைக்கும் எழுத்தம்பகிர்த்த தோள்களானவை,— காரிகையார்க்கு வரும் பொதுவோ அல்ல காண் - ஏனை மடந்தை யர்க்கு (நினைத்தபடியணைய) வரும் பொதுவாந் தன்மையனவோ? அல்ல: காண்பாயாக. எ-று. [நற்றாய் தலைவியை முனிந்துரைத்தல்.] மருந்தனையான் தோட்களென இயையும். (௩௰௧)

நுதலரிக்கும்பருவங்குறையென்றவனேக்கடையா
முதலரிக்கும்பருமேத்துந்தமிழர்முருகுபெரு
குதலரிக்கும்பருகற்கருங்காமுதுகுன்றரிலார்
சிதலரிக்கும்பருமாமரம்போற்றுயர்தின்பவரே.

(இ-ள்.) நுதல் அரிக்கும் பருவம் குறை என்று அவன் நோக்கு அடையா முதலர் - (மூவரிலொருவராகச்) சொல்லப்படும் திருமாலுக்கும் பக்குவங்குறைவென்று அவருடைய ஊனக்கண்களுக்குத் தெரிசனமாகாமலிருந்த முதற்கடவுளானவரும்—இக் கும்பரும் ஏத்தும் தமிழர்-இந்த அகத்தியமகாமுனிவரும் துதிக்கும் தமிழில்விருப்பமுடையவரும்—பெருகுதல் முருகு அரிக்கும் பருகற்கு அரும் கா முதுகுன்றர் இலார்-(பூக்களினிடத்தே)பெருகுதலாகிய தேனை வண்டினங்களுக்கும் புசித்தற்கருமையாகும்படி உயர்ந்த சோலைகள் சூழ்ந்த மழமலைநாதருமாகிய சிவபெருமானுடைய அருளைப்பெறாதவர்கள்,—சிதல் அரிக்கும் பரு மாமரம் போல் துயர் தின்பவர்-கறையானல் அரிக்கப்படும் பருத்த மாமரம்போல, துக்கங்களாலே தின்னப்பட்டவர்களாவார்கள். எ-று. அருள் என்பது சொல்லெச்சம்.()

தின்னக்கனியைவிழைகூனிளமந்திதீங்கனியீ
தென்னக்கனியையிரவியிற்பாய்பொழிலீண்டுகுன்றை
நன்னக்கனியைமதிவேணியனிந்நராம்பயந்த
சின்னக்கனியைவலத்தில்வைத்தால்வருந்திங்கென்னையே.

(இ-ள்.) தின்ன கனியை விழை கூன் இள மந்தி தீம் கனி ஈது என்ன - புசித்தற்குப் பழத்தைவிரும்பிய கூனிய இளம்பருவத்தையுடைய பெண்குரங்கானது மதுரம்பொருந்திய கனி இதுவென்று கருதி,—கன்னி ஐ இரவியில் பாய் பொழில் ஈண்டு குன்றை நல் நக்கன் - குன்றுதலில்லாத அழகையுடைய சூரியனிடத்தே பாய்கின்ற

சோலைகள்நெருங்கிய முதுகுன்றத்தில் வீற்றிருக்கும் நல்ல திருவாளியானவரும்—மதி இயை வேணியன்-சந்திரன் றங்கிய சடையையுடையவருமாகியசிவபெருமான்,—நாம் பயந்த இந்த சின்ன கன்னியை வலத்தில் வைத்தால் வரும் தீங்கு என்னை- நாம்பெற்ற இச்சிறு கன்னியை வலதுபுறத்தில் வைத்துக்கொண்டால், (அதனால் அவருக்கு) வரும் குற்றம் யாது? நீ கூறுவாயாக. எ-று. [இது நற்றாய் செவிலியைவினாதல்.]கன்னி என்பன இடைக்குறைந்துநின்றன. (௩௩)

தீங்குதிரைக்கடனேர்நரர்காள்துயர்செய்மலத்திற்
காங்குதிரைக்கடநாய்க்கிரையென்றிந்தவாகமய
னீங்குதிரைக்கடனன்முதுகுன்றர்க்கந்நிம்பனுக்கு
வாங்குதிரைக்கடனீயவல்லார்க்குவணங்குமினே.

(இ-ள்.) திரை கடல் நேர் தீங்கு நரர்காள்- அலைகடல்போலச் சம்பாதித்த தீமைகளையுடைய மனிதர்களே,—துயர் செய் மலத்திற்கு ஆம் குதிர்-துக்கத்தை விளைவிக்கும் மும்மலத்திற்கிடமான கூடு,—ஐ கடம் - சிலேத்துமங்களை நிரப்பிவைத்த குடம்,—நாய்க்கு இரை என்று-(உயிர்நீங்கியவழி) நாய்க்கு உணவாகும் பிணம் என்றறிந்து,—இந்த ஆகம் மயல் நீங்குதிர் - இத்தேகாபிமானத்தை விடுவீராக;—ஐ கடம் நல் முதுகுன்றர்க்கு - அழகிய காடுகள்சூழ்ந்த நல்ல பழமலைநாதரும்;—அந்நிம்பனுக்கு வாம் குதிரைக்கடன் ஈய வல்லார்க்கு வணங்கு மின் - அந்த வேப்பமாலையைத்தரித்த பாண்டியனுக்கு, தாவப்பட்டகுதிரைக்கடனை (மாணிக்கவாசகசுவாமிகளினிமித்தம்) கொடுக்கவல்லவருமாகிய சிவபெருமானுக்கு. (இனி) வணக்கஞ்செய்வீராக.

வணங்கக்கரமுமொழியப்பழமலைமன்னுருவா
மிணங்கக்கரமுமிருப்பவைத்தேபுணரேந்திழையார்

பிணங்கக்கரமுஞமலியும்போலவர்பின்றொடர்வீ
ரணங்கக்கரமுதலைபோலுமைபற்றுமந்தகனே.

(இ-ள்.) (உலகீர்) பழமலை வணங்க கரமும் - பழமலைநாதனைத் தொழுதற்குக் கைகளும்,—மொழிய மன் உருவாய் இணங்கு அக்கரமும்-செபிக்க அக்கடவுளுடைய நிலைபெற்ற திருவுருவாகிக் கலந்து நிற்கும் பஞ்சாக்கரமும்,—இருப்ப வைத்து-இருக்க, (அவற்றாற்பெறப்படும் பிரயோசனங்களையடையாது) வைத்து,—புணர் ஏந்திழையார் பிணங்க கரமும் ஞமலியும்போல் அவர்பின் தொடர்வீர்-புணர்கின்ற மாதர்கள் பிணங்கிக்கொண்டுசெல்ல (அதனை நீக்குதற்குக்) கழுதையையும் நாயையும்போல நாணமற்று அவர்பின் தொடர்ந்து உழல்வீர்;—அணங்க கர முதலை போல் உமை பற்றும் அந்தகன் -(இச்செய்கையால் நீவிர்) வருந்தும்படி ஆண் முதலையைப்போல உங்களை விடாது பிடித்துக்கொண்டு செல்வன் இயமன். எ-று. கராமுதலை என்பது குறுகிற்று. அணங்கக்கரமுதலைபோல் என்பதனை முதலை அக்கு அர அணங்குபோல் எனமாற்றி, விடாது பிடித்தற்கு முதலையையும், வருத்துதற்கு அரவையும், தப்பாது கொல்லுதற்கு வனத்திற்றனித்துவழிமாய்க்கும் தெய்வகன்னியையும் உவமை கூறினர் எனக்கொள்ளினும் அமையும். அக்குஅர மணியையுடைய பாம்பு.

அந்தரங்கங்கைதவரறியாமலமுதருள்சம்
பந்தரங்கங்கைவலிபோன்மின்றுக்கினர்பாடியுனைச்
செந்தரங்கங்கைரவமொண்கமலந்திரைத்துவருஞ்
சுந்தரங்கங்கைவிரும்புமுத்தாறுடைத்தொன்மலையே.

(இ-ள்.) செம் தரங்கம் கைரவம் ஒண் கமலம் திரைத்து வரும் சுந்தரம்-செவ்விய அலைகள் அல்லிகளையும் அழகிய தாமரைகளையும் (பிடுங்கி) அலைத்துக்கொண்டுவருகிற அழகைப்பார்த்து—

கங்கை விரும்பும் மூத்தாறுடை தொன்மலையே-கங்காநதியும் (இப்படிப்பட்ட அழகு நமக்குண்டாகவேண்டுமென்று) இச்சிக்கப்படுகின்ற மணிமுத்தநதியையுடைய பழமலைநாதரே,—சம்பந்தர் உனை பாடி கைவலிபோல் அங்கம் மின்னாக்கினர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவரீரைத் துதித்துத் (தமது) கைவலிகாட்டுவார்போல எலும்பைப்பெண்ணாக்கினர்;—அமுது கைதவர் அறியாமல் அந்தரங்கம் அருள் - (இப்படிப்பட்ட சிறப்பையளிக்கும்) ஞானப்பாலை வஞ்சகரறியாதபடி இரகசியமாக (அடியேனுக்கும்) தந்தருளும். எ-று. (௩௬)

மலங்கலையங்கலைகற்றேன்றனக்கருள்வாழ்வளிப்போன்
கலங்கலையங்கலைநல்லோர்பரவுங்கழலடியான்
விலங்கலையங்கலைவேலோன்பிதாமுதுவெற்பிடத்திற்
பொலங்கலையங்கலையான்மூடுமீனைப்புதைத்தவளே.

(இ-ள்.) அம் கலை கற்றேன் தனக்கு அருள் வாழ்வு அளிப்போன்-(தமது) அழகிய நூல்களைக் கற்ற எனக்கு அருளாகிய பெரியவாழ்வைத் தருபவரும்—ஐயம் கலங்கல் கலை நல்லோர் பரவும் கழல் அடியான் - சந்தேக விபரீதங்களை ஒழித்த ஞானிகள் துதிக்கும் வீரக்கழலையணிந்த திருவடியையுடையவரும்,—விலங்கலை அலை வேலோன் பிதா முதுவெற்பு இடத்தில்-கிரவுஞ்சமலையைப்பிளந்த வேற்படையையுடைய முருகக்கடவுளது பிதாவுமாகிய சிவபெருமானது பழமலையினிடத்தே,—மீனை புதைத்தவளே மலங்கலை பொலம் கலையம் கலையால் மூடு - (மறைக்கத்தகாத) மீன்போலுங் கண்களை மறைத்தவளே, மயங்காதே; தனங்களாகிய பொற்குடங்களை முன்றானையால் மறைப்பாயாக. எ - று. [நாணிக்கண்புதைத்தல்] அங்கு அசை. (௩௭)

புதைத்துக்கரக்கும்பொருளாளர்வெஞ்சொற்பொருமறலி
கதைத்துக்கரக்குங்குமமுலைபாகன்மெய்க்கண்டடியார்
பதைத்துக்கரக்குஞ்சிறிதாவுருகும்பழமலையான்
வதைத்துக்கரக்குஞ்சரமீர்ந்தவன்றரும்வாழ்விலரே.

(இ-ள்.) பொருள் புதைத்து கரக்கும் ஆளர்-தமது பொருளை (மண்ணிற்) புதைத்துவைத்து (இரப்போர்க்கு) ஒளித்துவைக்கும் உலோபிகள்,—வெஞ்சொல் பொரும் மறலி கதை துக்கர்-கடுஞ்சொற்களோடு மோதுகின்ற இயமனது கதையினாலாகிய துக்கத்தையுடையராவர்; (அன்றியும்),—அக் குங்கும முலை பாகன் - அக்குங்குமக் குழம்பணிந்த தனங்களையுடைய உமாதேவியாரதுபாகரும்,—அடியார் மெய் கண்டு பதைத்து அரக்கும் சிறிதா உக்கு உருகும் பழமலையான் - அடியவர்கள், தமது திருமேனியைத் தரிசித்து உடல்நடுங்கி (நெருப்பிலிட்ட) அரக்கும் சிறிதாகும்படி நெகிழ்ந்துருகுதற்கேதுவாகிய பழமலையையுடையவரும்—கர குஞ்சரம் வதைத்து ஈர்ந்தவன் - துதிக்கையையுடைய யானையைக்கொன்று உரித்தவருமாகிய சிவபெருமானால்,—தரும் வாழ்வு இலர்-கொடுக்கப்படும் பேரின்பவாழ்வும் இலராவர் எ-று. சிறிதாக என்பது கடைக்குறையாயிற்று. ()

இலங்குமரியுமருள்கோன்முதுவெற்பிடத்துரற்கால்
விலங்குமரியுமுழலவெல்லாமுன்னிவெய்துயிராக்
கலங்குமரியுமிருந்துயர்கூருங்கலுழ்ந்திடுந்தாய்க்
குலங்குமரியுமொருவனும்போகுங்கொடுஞ்சுரத்தே.

(இ-ள்.) தாய்க்குலம் - ஐவகைத் தாய்மார்கூட்டங்களும்,—இலங்கும் அரியும் மருள் கோன் முதுவெற்பு இடத்து-விளங்காநின்ற விட்டுணுவும் தேடி மயங்காநின்ற இறைவனது பழமலையினிடத்தி

லே—குமரியும் ஒருவனும் போகும் கொடும் சுரத்து - புதல்வியும் நாயகனும் (களவிலே உடன்) செல்லும் கொடிய காட்டுவழியிலே— உரல் கால் விலங்கும் அரியும் உழலல் எல்லாம் உன்னி-உரல்போலும் கால்களையுடைய யானைகளும் சிங்கங்களும் திரிதல் முதலியவற்றைச் சிந்தித்து,—வெய்து உயிரா கலங்கும் - வெப்பமாகப்பெருமூச்செறிந்து கலக்கமடையும்;—மரியும் இரும் துயர் கூரும் -இறத்தற்கேதுவாகிய பெரிய துக்கத்தை அதிகரிக்கும்;—கலுழ்ந்திடும்-கண்ணீர்விட்டழும். எ-று. [உடன்போக்கில் நற்றாய் முதலியதாய்மாரிரங்கல்.]()

கொடுவரியானையடர்ந்துறுமாறெனக்கொண்டுயர்தூ
ணொடுவரியாவையுறவடிப்போமென்றொருங்குவந்தே
யடுவரியானைநிகர்நமன்றூதரடிநடுமுடிமன்
னடுவரியானைமுதுகுன்றுடேசுநரர்தமையே.

(இ-ள்.) அடி நடு முடி அரியானை முதுகுன்றுடு ஏசும் நரர் தமை - ஆதிமத்தியாந்த ரகிதராகிய சிவபெருமானை அவர்வீற்றிருக்கும் பழமலையென்னும் தலத்தோடு இகழ்ந்து பேசும் பாவிகளை,— யானை நிகர் நமன் தூதர் - (கருநிறத்தாலுங் கடுங்கோபத்தாலும்) யானையையொத்த யமதூதர்கள்,— கொடுவரி ஆனை அடர்ந்து உறுமாறு என கொண்டு - புலியானது பசுவை நெருங்கிவந்து பிடித்துக்கொண்டு செல்லுந் தன்மைபோல (யாமும்) கொண்டுபோய்— உயர் தூணொடு வரியாவையுற அடிப்போம் என்று ஒருங்கு வந்து அடுவர்-உயர்ந்த கம்பங்களிலே பிணித்து வைந்நுபோகும்படி (தண்டத்தால்) புடைப்போமென்று கருதிச் சேர்ந்துவந்து கொல்வார்கள். எ-று. மன் அசை. (சுO)

நரகாவலர்மடவார்க்குள்ளுருகிக்கைந்நாவிருப்ப
வரகாவலர்புனைந்துன்றனையேத்திலராய்ந்தறிவா
லுரகாவலனெனவுய்ந்தாரினமுளமுற்றகுன்றைப்
புரகாவலரிலருட்கோயிலாகும்புராந்தகனே.

(இ-ள்.) ஆய்ந்த அறிவால் உரகா அலர் என உய்ந்தார் இனம் உளம் உற்ற குன்றை புர - (ஞானநூல்களை) ஆராய்ந்த நல்லறிவினால், நாகாபரணு, (சிவபோதத்தையடக்கிப்) பிரகாசிப்பாயாக. என்றுவேண்டிப் பிறவியினின்றும் நீங்கிய மெய்ஞ்ஞானிகளின்மனத்தில் வீற்றிருக்கின்ற பழமலைநாதரே,— காவலர் இல் அருள் கோயில் ஆகும் புராந்தகனே - சிவகருணையுடையவரது வீட்டை அருண்மயமான ஆலயமாகக்கொண்டு விளங்குகின்ற புராரியே,—மடவார்க்கு உள் உருகி - பேதையர்களுடைய சிற்றின்பத்தின்பொருட்டு மனமுருகி,—கை நா இருப்ப கா அலர் புனைந்து உன்றனை அர ஏத்திலர் - கைகளும் நாக்களும் இருக்கவும் சோலையிலுள்ள மலர்களைச்சூடி தேவரீரை அரனே என்று துதியாதவர்கள்,—நரகு ஆவலர்- நிரயத்தின்கண்ணே ஆசையையுடையராவர்கள். எ-று. ஆய்ந்த என்னும்பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. கா வலர் இல் என்பதற்கு-காத்தலையுடைய வல்லகோலார் இல்லம் எனப் பொருள்கொள்வதும் வழக்கம். வல்லகோலார் என்பது அண்ணாமலைரெட்டியாரை உள்ளிட்டார்க்குத் தொன்றுதொட்டபெயர். இவர் தமதூராகிய துறைமங்கலத்திற்கும் பழமலைக்கும் நெடுந்தூரமிருக்கவும் நியதி பூண்டு வருந்திச்சென்று தரிசித்து வருங்காலத்தில், பழமலைநாதர் திருவுளமிரங்கி யாம் திருவெங்கையிற் றிருவுருக்கொண்டு விளங்குகின்றோம் என்றருளிச்செய்ய; அண்ணாமலைரெட்டியார் அவ்வாறே பரிசோதித்துச் சிவலிங்கமிருத்தல்கண்டு அரிய சிற்பங்களமைய ஆலயமமைத்து வழிபட்டுய்ந்தனர் என்பது சரித்திரம். (௬௧)

புரந்தரனஞ்சுபழமலைவாணன் புலவர்தொழுந்
துரந்தரனஞ்சுதலைநாககங்கணன்றொண்டுறுமா
னிரந்தரநஞ்சுதொழுதேத்துதாதர்க்குநேயமொடு
வரந்தரநஞ்சுகளத்துவைத்தானென்பர்மாதவரே.

(இ-ள்.) மாதவர் - பெரியதவத்தையுடையோர்,— புரந்தரன் அஞ்சு பழமலைவாணன் - இந்திரன் பயந்துவழிபடும் முதுகுன்றத்தில் வாழ்பவரும்—புலவர் தொழும் துரந்தரன் - தேவர்களெல்லாம் வணங்கும் சுத்தவீரரும்—அஞ்சு தலை நாக கங்கணன் - அஞ்சுதலைகளையுடைய சர்ப்பகங்கணத்தையுடையவருமாகிய சிவபெருமான்,— தொண்டு உறும் மால்-தமக்குத் தொண்டுபூண்டொழுகும் விஷ்ணுமூர்த்தியும்—நிரந்தரம் நஞ்சு தொழுது ஏத்து தாதர்க்கு நேயமொடு வரம் தர-(தம்மை) எப்பொழுதும் மனமுருகி வணங்கித்துதிக்கும் தாசர்களுக்கு அன்போடு வரங்களைத்தந்து (ஓர்கடவுளாக) விளங்க,—நஞ்சு களத்து வைத்தான் என்பர்-விஷத்தைக் கண்டத்திலே அடக்கிவைத்தருளினர் என்றுசொல்லுவர். எ-று. (௬௨)

மாதரைக்கொன்றுவரம்மேனிவைத்தவமாசுணத்தை
யீதரைக்கொன்றுசிறுநாணென்றார்க்குமெழிலுடையாய்
நீதரைக்கொன்றுநலஞ்செயல்வேண்டுநினையிகழும்
வாதரைக்கொன்றுமுதுகுன்றமாநகர்மாசொழித்தே.

(இ-ள்.) மாதரை கொன் துவர் அம் மேனி வைத்தவ-(கங்கை உமை என்னும்) தேவிமார்களைப் பெருமைதங்கிய பவளம்போலும் அழகிய திருமேனியில் வைத்தவரே,—ஈது அரைக்கு ஒன்று சிறு நாண் என்று மாசுணத்தை ஆர்க்கும் எழில் உடையாய் - இது நம

இடைக்குப்பொருந்திய சிறிய அரைஞாணுகுமென்று ஆதிசேஷனைக் கட்டுகின்ற அழகுடையவரே,—நினை இகழும் வாதரை கொன்று முதுகுன்றம் மாநகர் மாசு ஒழித்து - தேவரீரை இகழ்ந்துரைக்கும் வாதிகளைக்கொன்று பழமலையாகிய பெரியதலத்திற்கு (அவர்களாலுண்டாகிய) பழிகளையும் நிவர்த்தித்து,—தமைக்கு ஒன்று நலம் செயல் வேண்டும்-இவ்வுலகத்திற்குச் (சிவபுண்ணியம் வளர்தற்கேதுவாகிய) ஓர் நன்னெறியை நீர் செய்துவைப்பீராக. எ-று. (௬௩)

மாசிய திகந்துறந்தார்மகிழ்குன்றைமாநகரோ
காசியதிகங்கொலோவென்பிராயினக்காசியெனப்
பேசியதிகந்தகன்றிருந்தான்பரன்பேரடலை
பூசியதிகம்பரனீங்கிலானிப்புரியினையே.

(இ-ள்.) அதிகம் துறந்தார் மாசி மகிழ் மா குன்றைநகர் அதிகமோ-(உலகீர்,) மிகுதியும் பற்றறத்துறந்தோர்களும் (திருவிழாக்காட்சியின்பொருட்டு) மாசிமாதவரவை விரும்பிநிற்கும் திருமுதுகுன்றமென்னுந்தலம் உயர்ந்ததோ?—காசி அதிகமோ என்பிர் ஆயின் - காசியென்னுந்தலம் உயர்ந்ததோ? என்று கேட்பீராயின்,—பரன் அக்காசி என பேசியது இகந்து அகன்று இருந்தான் - சிவபெருமான் அக்காசியென்று நீர்சொல்லிய தலத்தைத் (திவோதானனென்னும் அரசன்பொருட்டு) விட்டுப்பிரிந்து (நெடுங்கால மந்தரகிரியில்) வீற்றிருந்தனர்;—பேர் அடலை பூசிய திகம்பரன் இப்புரியினை நீங்கிலான் - பெரிய சுடலைப்பொடிபூசிய திகம்பரராகிய சிவபெருமான் இவ்விருத்தகாசியைக் கணப்பொழுதும் பிரிந்ததில்லை: ஆகலின், இதுவே உயர்ந்தது. எ-று. கொல் அசை. திவோதானன், அருந்தவமியற்றிப் பிரமதேவரால் காசியையாளும் அரசுரிமை பெறுங்காலத்து

அத்தலத்திலே தேவர்வாசமில்லாதிருக்க வரமேற்று, அதனை ஆண்டு கொண்டிருக்க; அப்பொழுது சிவபெருமான், அவ்வரம் பொய்க்காவண்ணம், மந்தரமலையையடைந்து அதன் வேண்டுகோளின்படி நெடுங்காலம்வீற்றிருந்து, பின்னர் திவோதானனைமுத்தியிற்சேர்த்துக் காசியை யடைந்தருளினர். இச்சரித்திரவிரிவைக் காசிகாண்டத்திற் காண்க. (௬௪)

புரிசடையாளபழமலைவாணபொருப்பெடுத்த
கரிசடையாளதிகந்தீர்த்தருளக்கடுவயின்ற
பரிசடையாளமுடையாயொழித்தனள்பட்டினையத்
துரிசடையாளதழுக்காமெனுநின்றுகிலினுக்கே.

(இ-ள்.) புரி சடை ஆள - கட்டிய சடைமுடியையுடையவரே,—பழமலை வாண - பழமலையில்வாழ்பவரே,—பொருப்பு எடுத்த கரி சடை ஆள் அதிகம் தீர்த்து அருள-கோவர்த்தனகிரியைக்(குடையாக) ஏந்திய கரியினுடையசமூகம்போலும் (காந்திபெற்ற) விஷ்ணுவினது பரத்துவவுயர்ச்சியை நீக்கும்பொருட்டு—கடு அயின்ற பரிசு அடையாளம் உடையாய் - விஷத்தையுண்ட தன்மையைக் (கண்டத்தில்) அடையாளமாக உடையவரே,—அத் துரிசு அடையாள் நின் துகிலினுக்கு அது அழுக்கு ஆம் எனு பட்டினை ஒழித்தனள் - அக்குற்றத்தையடையாத என்மகள் உம்முடைய புலித்தோலாகிய சித்திரவஸ்திரத்தைநோக்குங்காற் றன்னுடையவஸ்திரம் அழுக்காக இருக்கின்றதென்று மயங்கி உயர்ந்தபட்டினையொழித்தனள். எ-று. [நற்றாயிரங்கல்.] உம்முடைய திகம்பரத்தை விரும்பித் தானும் திகம்பரியாயினள் எனினும் அமையும். துகிலினுக்கு வேற்றுமைமயக்கம். (௬௫)

துகிலங்குருகுந்துறந்தாளுயிருந்துறக்கநின்றா
ளகிலங்குருகுமணிமுடியாயெனுமத்தவளை
முகிலங்குருகுமடியாய்பரந்தமுதுகிரியாஞ்
சகிலங்குருகுலமேத்திறைவாமைத்தடங்கண்ணியே.

(இ-ள்.) அகிலம் குருகும் அணி முடியாய் எனும் அத்த-உலகிலுள்ளோர், (இளம்பிறை முதலியவற்றோடு குரண்டாசுரனென்னும்) கொக்கிறகையுந்தரித்த சென்னியையுடையவரேயென்று துதிக்கும் பிதாவே,—வளை முகில் உருகும் அடியாய் - சங்கையேந்திய விஷ்ணுவானவர் சிந்தித்துருகும் திருவடியையுடையவரே,—பரந்த முதுகிரி ஆம் சகிலம் குருகுலம் ஏத்து இறைவா-(தேவரீர்) விரிந்தபழமலைவடிவமாக இருக்கும் சரிதத்தை (அறிந்து) குருவம்சத்தாரெல்லாம் (வந்து) துதிக்கும் தலைவரே,—மை தடம் கண்ணி-மைதீட்டிய விசாலம்பொருந்திய கண்களையுடைய என்மகள்,—துகில் அம் குருகும் துறந்தாள் - (உடுத்த) புடைவையையும் அழகிய (கையிலணிந்த) வளையல்களையும் இழந்துவிட்டாள்;—உயிரும் துறக்க நின்றாள்-(இனி தனது) உயிரையும் இழக்கநிற்கின்றாள்: ஆகலின் விரைந்து அருள் புரிவீராக. எ-று. [நற்றாயிரங்கல்] துகிலும் என்னும் உம்மைதொக்கது. குருகு இறகை யுணர்த்தலின் ஆகுபெயர். கொக்குருவாகிய ஓரசுரன் அண்டங்களனைத்தையும் பொரிபோலக் கொறித்துக்கொறித்து உமிழ்ந்துவர; சிவபெருமான் அவ்வுருவத்தையழித்து இறகை அடையாளமாகத் திருமுடியிற் றரித்தருளினார் என்பது புராணசித்தாந்தம். அங்கு அசை. (௪௭)

தடக்கமலத்திணெடுங்குதல்போலநின்றாளிலுறு
மொடுக்கமலத்தினிகழ்வால்வளையினமூர்ந்திடச்சேன்

மடுக்கமலத்திலுகள்வயல்சூழ்குன்றைமாநகரோ
யடுக்கமலத்திபுனையலங்காரவருளுகவே.

(இ-ள்.) அலத்தின் நிகழ்வால் வளையினம் ஊர்ந்திட - கலப்பைப்படையின் செல்லுகையாலுண்டாகிய வழியிலே சங்குக்கூட்டங்கள் தவழ்ந்துசெல்ல,—சேல் மடு கமலத்தில் உகள் வயல் சூழ் மா குன்றை நகரோய்-கெண்டைமீன்கள் ஓடைகளிலுள்ள தாமரைகளிலே பாய்கின்ற வயல்கள்சூழ்ந்த முதுகிரியென்னும் தலத்தையுடையவரே,—அடுக்கு அமல் அத்தி புனை அலங்கார - ஒன்றன்மேலொன்றுகக் கட்டப்பட்டு நெருங்கிய எலும்புமாலையையணிந்த அழகையுடையவரே,—தடுக்க மலத்தின் ஒடுங்குதல் போல - (கேவலத்திலே) தடைசெய்ய ஆணவமலத்தில் நான் செயலற்றுக்கிடந்ததுபோல,—நின் தாளில் உறும் ஒடுக்கம் அருளுக - (சுத்தத்திலேயும்) தேவரீருடைய திருவடிகளில் (என்போதமற்று) இருக்கும் ஐக்கியத்தையும் தந்தருள்வீராக. எ-று. (௬௭)

அருவரைவில்லையுமிழ்மணிநாகமுமத்திகளு
முருவளைவில்லையெனப்பூண்பவளையவ்வும்பர்தொழும்
பொருவரைவில்லையுறுமுதுகுன்றரைப்போந்துமரு
ளொருவரைவில்லைவரிலொற்றிவையெனவுற்றனமே.

(இ-ள்.) அருவரை - அருபமானவரும்—வில்லை உமிழ் மணி நாகமும் அத்திகளும் உரு வளைவு இல்லை என பூண்பவரை - காந்தியைக் கக்காநின்ற அரதனங்களையுடைய பாம்புகளையும் எலும்புமாலைகளையும் திருமேனியிலே நீக்கமில்லையென்று சொல்லும்படி தரிப்பவரும்—அவ்வும்பர் தொழும் வரை பொரு வில்லை உறும் முதுகுன்றரை போந்து - அத்தேவர்களும் வணங்காநின்ற மேருமலையாகிய

போர்செய்யும் வில்லையுடைய பழமலைநாதருமாகிய சிவபெருமானைச் சேர்ந்து,—ஐவர் இல் உமருள் ஒருவரை வில் ஒற்றிவை என உற்றனம் - ஐம்புலமென்னும் அரட்டருலாவும் வீடாகிய எம்முடையவுடம்பை உமதன்பர்கூட்டத்துள் ஒருவருக்கு விற்றுவிடும். (அல்லது) அவரிடத்திலே ஒற்றிவையும் என்று விண்ணப்பஞ்செய்து அடைக்கலமாயினேம். எ-று. ஒருவரை வேற்றுமைமயக்கம். (௬௰)

உற்கைக்குமாறுபடுமணிநாகமொளித்துலவி
விற்கைக்குமாறுசுமந்தவசீர்முதுவெற்பினின்யா
னிற்கைக்குமாறுவழுவாநடக்கைக்குநேரிழையார்
சொற்கைக்குமாறுந்தமியேனுக்கென்றுதுணைசெய்வையே.

(இ-ள்.) நாகம் ஒளித்து உற்கைக்கு மாறு படும் மணி உலவி விற்கைக்கு மாறுசுமந்தவ-அரவாபரணங்களை ஒளித்துவைத்துவிட்டு, நெருப்பையுடையகொள்ளிக்கு வேறுபட்டுப்பிரகாசிக்கும் இரத்தினங்களை (மதுரைவீதியிலே) திரிந்து விற்கும்பொருட்டு மாறுவேடங்கொண்டு சுமந்துவந்தவரே,— சீர் முதுவெற்பில் நின்பால் நிற்கைக்கும் ஆறு வழுவா நடக்கைக்கும் - சீர்த்திபெற்ற விருத்தாசலத்தினிடத்தே (எப்பொழுதும்) உம்முடையசந்நிதியில் நிற்றலுக்கும் ஒழுக்கம் வழுவாது நடத்தலுக்குமேயன்றி,—நேர் இழையார் சொல் கைக்கும் ஆறும் தமியேனுக்கு என்று துணை செய்வை ஏ-நேர்ந்த ஆபரணத்தைத்தரித்த மடந்தையர்சொல்லும் (இனியவசனங்களெல்லாம்) கசக்குந்தன்மையையும் அடியேனுக்கு எப்போது அனுக்கிரகிப்பையோ? அறியேன், எ - று. வழுவாது என்பது கடைக்குறையாயிற்று. (௬௧)

செய்க்குத்தனங்கமலமலர்சீர்தருஞ்செய்யதிரு
மெய்க்குத்தனங்கடரவடிவாங்கிதொல்வெற்பிடத்திற்
கைக்குத்தனங்கவொழியினுந்தாடனைக்காய்வதிலேன்
வைக்குத்தனங்களழித்திறையாதிந்தவையகமே.

(இ-ள்.) இந்த வையகம் வைக்கு தனங்கள் அழித்து இறையாது - இவ்வுலகிலுள்ளோர் (ஈட்டுங்கால் விளையும்) இகழ்ச்சிக்கு அஞ்சித் திரவியங்களை வீணேயழித்துச் செலவிடார். அதுபோல,—செய்ய திரு மெய்க்கு தனங்கள் தர வடி வாங்கி - சிவந்ததிருமேனிக்கு (உமாதேவியினுடைய) தனங்கள்கொடுக்கத் தழும்பைஏற்றுத் தரித்தவராகிய சிவபெருமானது,— செய்க்கு தன் அம் கமலமலர் சீர் தரும் தொல்வெற்பு இடத்தில் - கழனிக்கு அதனிடத்திற் றோன்றிய அழகிய தாமரைப்பூக்கள் அலங்காரத்தைச் செய்கின்ற பழமலையினிடத்தே,—கை குத்தல் நங்க ஒழியினும் தாள்தனை காய்வது இலேன் - (பிறர்) கையாற்குத்துதலோடு நசுதலையுஞ்செய்ய (எனது தேகம்) நழுவவரினும், அக்கடவுளுடைய திருவடிகளை வெறுத்தல்செய்யேன். எ-று. வடிவாங்கி வினைக்குறிப்புப்பெயர். ஒழியினும் என்னும் உம்மை ஒழியாமையைவிளக்கிற்று. வை முதனிலைத்தொழிற்பெயர். வைதலாவது பெருமுயற்சியைநோக்கிப் பேராசையுடையவனெனப் பிறராற்கூறப்படுதல். பொருள் முன்னர் இவ்விகழ்ச்சிபயப்பினும், பின்னர்ப் புகழ்ச்சிபயத்தல்நோக்கி உலகினர் அதனைவெறுக்கார்; அதுபோல, திருவடிகளும் முன்னர்ச் சோதனையால் இடையூற்றைவிளைப்பினும், பின்னர்ப் பேரின்பம் பயத்தல்நோக்கி யான் அவற்றை வெறுத்தல்செய்யேன். என்பது கருத்து. (ருo)

வைத்துமதிக்குமருங்கிற்கைத்தாயெனமந்தரமத்
துய்த்துமதிக்குமனையின்மையான்மறையோதிமமுன்

னெய்த்துமதிக்குமுடிமிசைக்கங்கையையேற்றினையோ
மெய்த்துமதிக்குமணுகவொண்ணுமுதுவெற்பினனே.

(இ-ள்.) மெய்த்து மதிக்கும் அணுக ஒண்ணு முது வெற்பின னே - உண்மையறிவிற்கும் கிட்டுதற்கரிய பழமலைநாதரே,— முன் மறை ஓதிமம் எய்த்து மதிக்கும் முடிமிசை - முற்காலத்திலே பிரம தேவராகிய அன்னம் (தேடி) இளைத்து (அளவிடப்படாது எனத்) து ணிந்த உமது திருமுடியினிடத்தே,— மந்தரம் மத்து உய்த்து மதிக்கு ம் அனை மதிக்கு மருங்கில் இன்மையால் - மந்தரமலையாகிய மத்தை நாட்டிக்கடையப்பட்ட பாற்கடலாகியதாய் இளம்பிறைக்குப் பக் கத்திலே இல்லாமையால்,— கங்கையை கைத்தாயென வைத்து ஏற் றினையோ - கங்காதேவியை வளர்க்குந்தாயென்று சொல்லும்படி (அவ்விளம்பிறைக்கருகே) ஏற்றிவைத்தீரோ? உரைப்பீராக. எ-று. வைத்து ஏற்றினையோ என்பது விகுதிபிரித்து மாற்றிப்பொருளுரை க்கப்பட்டது. மெய்த்து மெய்ம்மையது. (௫௧)

வெற்புக்குமையவடிவேலெறிந்தசெவ்வேண்மதவேள்
பொற்புக்குமையவனோடரன்வாழ்முதுபூதரத்தி
னிற்புக்குமையவளொத்திருந்தாள்குறைவின்றிவளர்
கற்புக்குமையவள்போலுநுங்காதற்கருங்கண்ணியே.

(இ-ள்.) வெற்பு குமைய வடிவேல் எறிந்த செவ்வேள் - கிரவு ஞ்சமலை தூளாக அழியும்படி வடித்த வேலாயுதத்தைப் பிரயோகித்த செவ்வேளென்னும் திருநாமத்தையுடையவரும்—மதவேள் பொற்பு உக்கும் ஐயவனோடு - மன்மதனுடைய அழகைக்கெடுக்கும் அழகை யுடையவருமாகிய முருகக்கடவுளோடு— அரன் வாழ் முதுபூதரத்தி ன்-சிவபெருமான் வாழ்கின்ற பழமலையினிடத்திலே,— குறைவு இ

னறிவளர் கற்புக்கு உமையவள் போலும் நம் காதல் கரும் கண்ணி- குறைவில்லாது ஓங்கிவளரும் கற்பினுக்குப் பார்வதியை நிகர்க்கும் உம்முடைய ஆசையைவிளைக்கும் கரியகண்களையுடையவள்,—இல் புக்கு உமை அவள் ஒத்து இருந்தாள் - இல்லொழுக்கத்திற் பிரவேசித்து உமர்கு அவள் இசைந்திருந்தாள். எ-று. [பாங்கி தலைவியினது நன்மனைவாழ்க்கைத் தன்மையுரைத்தல்.] உமை வேற்றுமைமயக்கம்.

கருந்தடங்கட் குமுதவாய் மயிலெங்கள்கண்களுக்கு
விருந்தடங்கட் குலமெனப்போந்தவிண்மீன்பொரியு
மருந்தடங்கட் குவளையோடையாகுக வம்புயங்கள்
பெருந்தடங்கட்குமுகமாகுங்குன்றைப்பெருந்தகையே.

(இ-ள்.) அம்புயங்கள் பெரும் தடங்கட்கு முகமாகும் குன்றை பெருந்தகையே - செந்தாமரைமலர்கள் பெரியவாவிகளுக்கு வதனம் போலத்தோன்றும் பழமலைநாதரே,—கரும் தடம் கண் குமுதம் வாய் மயில் எங்கள் கண்களுக்கு விருந்தள் - கரிய விசாலமானவிழிகளையும் செவ்வாம்பலையொத்த வாயையும்வாய்ந்த மயில்போலும் சாயலையுடையவளும் எங்களுடைய நேத்திரங்களுக்கு விருந்தாய், அதிசயம் விளைப்பவளுமாகிய தலைவியானவள்— தங்கட்கு ஈலம் என போந்த விண் மீன் பொரியும் அரும் தடம் - தங்கள்குலத்திற்கு வழுவல்லவென்று தலைவரோடு சென்ற (வெப்பத்தால்) ஆகாயத்திலுள்ள உடுக்குலங்களும் பொரிந்து உதிருகின்ற அரிய (பாலைநிலத்து) வழியானது,— கள் குவளை ஓடை ஆகுக - தேனைப்பொழியும் நீலோற்பலமலர்ந்த மடுவைப்போலக் (குளிர்ச்சி) ஆகக்கடவது. எ-று. [உடன்போக்கில் நற்றாய் சுரந்தணிவித்தல்.] போந்ததடம் என இயையும். (௯௩)

பெருமுதலைவளையான்போற்றுங்குன்றைப்பெருந்தகையை
யிருமுதலைவளைமூப்படைந்தாண்டவற்கின்மகவைக்

கருமுதலைவளைவாயிற்றந்தானைமுன்கண்டழுது
பொருமுதலைவளைநீத்தனண்மேவினள்பூங்கொடியே.

(இ-ள்.) பூங்கொடி - மலர்க்கொடிபோலும் என்னுடைய பெண்ணானவள்,— பெரு முதலை - (யாவர்க்கும்) பெரிய முதற்கடவுளும் - வளையான் போற்றும் குன்றை பெரும் தகையை-சங்கையுடைய திருமாலானவர் வணங்கும் முதுகுன்றத்திலேவாழும் பெரிய தயாநிதியும்—இருமு தலை வளை மூப்பு அடைந்து ஆண்டவற்கு - இருமல் மேலிட்டுத் தலையும்வளைகின்ற விருத்தபருவத்தையடைந்து ஆளப்பட்டவராகிய சுந்தரமூர்த்திநாயனார்பொருட்டு—இல் மகவை கரு முதலை வளை வாயில் தந்தானை முன் கண்டு அழுது-(அவிநாசியிலே ஓர்வேதியனது) இறந்துபோன புதல்வனைக் கரிய முதலையினது குகைபோலும் வாயினின்றும் அழைத்துக்கொடுத்தவருமாகிய சிவபெருமானை எதிரேகண்டு விரகத்தாலழுது,— பொருமுதலை மேவினள் வளை நீத்தனள் - தேம்புதலையுமடைந்தாள்; வளையலையும் துறந்தாள்: (யான் யாது செய்வேன்.) எ-று. [நற்றாயிரங்கல்.] (கூச)

பூங்குமிழும்படிமுள்ளும்பொருந்திப்புளினர்பொருள்
வாங்குமிழும்படிமோதுமெனல்கொடுமால்விழுங்கி
யாங்குமிழும்படிவந்தவெம்பாலையடைந்தவள்கால்
வேங்குமிழும்படினென்னும்பழமலைவித்தகனே.

(இ-ள்.) பழமலை வித்தகனே - பழமலையில்வீற்றிருக்கும் ஞானசொரூபரே,— பூ குமிழும் படி முள்ளும் பொருந்தி - பூவையுடைய குமிழஞ்செடியும் படிந்தமுட்களுஞ் சேர்ந்து—புளினர் பொருள் வாங்கும் இழும்படி மோதும் எனல் கொடு - வேடர்களால் பொருள் ட

றிக்கப்படும் (அன்றியும்) வழுக்கிவிழும்படி (அவரால்) மோதவும்படும் என்பதை மனதிலேசித்தித்து—மால் விழுங்கி ஆங்கு உமிழும் படி வந்த வெம்பாலை அடைந்தவள் - விஷ்ணுவானவர் விழுங்கி அப்பொழுதே உமிழ்ந்துவிட்ட பூமியோடுவந்த கொடிய பாலைநிலத்தில் சென்றவளாகிய நம்புதல்வியினது,—கால் வேம் குமிழும் படின் என்னும் - கால்கள் வெந்துபோம்; (அத்துடனே) கொப்புளமும் பொருந்தில் யாதாய் முடியும். எ-று. [நற்றாய் தலைவிமென்மைத் தன்மைக்கிரங்கல்.] வாங்கும் மோதும் என்பவற்றில் செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தும் படுவிகுதிகள் தொக்கன. இழுக்கும் என்பது இழும் என நின்றது. உமிழும் காலமயக்கம். திருமாலும் இப்பாலையினது கொடுமைநோக்கியே உமிழ்ந்தனனென்பது கருத்து. (௫௫)

வித்துருமத்தைநிகர்வானுயிர்செய்வினையருத்துங்
கத்துருமத்தையிடுதயிர்போலக்கலக்குமதன்
சத்துருமத்தைவனைமுதுகுன்றிறைதாள்கொடுவா
னத்துருமத்னதயிலவாகவெள்ளுவர்நற்றவரோ.

(இ-ள்.) நற்றவர் - நல்லதவத்தையுடைய மெய்ஞ்ஞானிகள்,—வித்துருமத்தை நிகர்வான் - பவளம்போலும் திருமேனியையுடையவரும்—உயிர் செய் வினை அருத்தும் கத்துரு - ஆன்மாக்களிட்டிய வினைப்பயன்களை நுகர்விக்கும் கர்த்துருத்துவமுடையவரும்—மத்தை இடு தயிர் போல கலக்கும் மதன் சத்துரு-மத்தையிட்டுக்கடைந்த தயிரைப்போல (உலகங்களையெல்லாம்) கலங்கச்செய்கின்ற மன்மதனுடைய பகைவரும்—மத்தை வனை முதுகுன்று இறை தாள் கொடு - ஊமத்தம்பூவைச்சூடிய பழமலைநாதருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் (பொருளாகக்) கொண்டு,—வானம் துரும

த்தை இல ஆக என்றுவர் -விண்ணுலகத்திலுள்ள கற்பகச்சோலைவா ழ்வையும் நிலையல்லனவென்று இகழ்ந்துதள்ளுவார்கள். எ-று.(ருசு)

நற்றவராகமறையவராகவிந்நானிலத்தி
லற்றவராகமனமுடையார்க்கன்றியச்சமற
வுற்றவராகமறியாதொளித்தநின்றொண்பதங்கள்
பற்றவராகமலாலயன்போற்றும்பழமலையே.

(இ-ள்.) கமலாலயன் போற்றும் பழமலையே - தாமரையாசனத்தையுடைய பிரமதேவர்வணங்கும் பழமலைநாதரே,—அச்சம் அற உற்றவர் ஆகம் அறியாது ஒளித்த நின் ஒண் பதங்கள் - பயமில்லாமற் (பாவங்களை) இயற்றும் மூடர்களுடைய சரீரத்திலிருந்தும் (அவர்களுக்குத்) தோன்றாமல் ஒளித்திருந்த உம்முடைய ஒள்ளிய பாதங்களானவை,— இந் நால் நிலத்தில் அராகம் அற்ற மனம் உடையார்க்கு அன்றி - இந்த நால்வகைப்பட்ட நிலங்களையுடைய உலகத்திலே மூவித ஏடணைகளையும் ஒழித்த மனத்தையுடைய ஞானிகளுக்கேயல்லாமல்,—நல் தவர் ஆக மறையவர் ஆக பற்ற வரா-(அவற்றை ஒழிக்காதவர்கள்) நல்லதவத்தையுடையவராயிருப்பினும் வேதியர்குலத்தையுடையவராயிருப்பினும் கிட்டுதற்கரியனவாம். எ-று. நால்வகைநிலம்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். மூவிதவேடணை புத்திரேடணை, தாரேடணை, அருத்தேடணை. (ருஎ)

பழங்கவிகடமகமர்திக்கிபொழிற்பண்டைமறை
முழங்கவிகடவுளர்க்கியுந்துன்றைமுதல்வனைவே
ளழங்கவிகடவிழித்திறந்தானையடிபரவார்
கிழங்கவிகடமரவிற்றேன்றிக்கெடுவர்களே.

(இ-ள்.) கவிகள் பழம் தம் மக மந்திக்கு ஈ பொழில் - ஆண் குரங்குகள் கனிகளைப்பறித்துத் தம்முடைய குட்டிகளுக்கும் பெண் குரங்குகளுக்கும் கொடுக்கும் சோலைகளிலே—பண்டை மறை முழங்க அவி கடவுளர்க்கு ஈயும் குன்றை முதல்வனை - பழமையாகிய வேதமந்திரங்கள் முழங்கும்படி அவிப்பாகத்தைத் தேவர்களுக்குக் கொடுக்கும் திருமுதுகுன்றத்தில் வீற்றிருக்கும் முதற்கடவுளும்—வேள் அழுங்க விகடம் விழி திறந்தானை அடி பரவார் - மன்மதனழியும்படி மாறுபட்ட நெற்றிக்கண்ணைத்திறந்தவருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளை வழிபடாதபாவிகள்,—கடம் கிழங்கு அவி மறவர் இல் தோன்றி கெடுவர்கள் - காட்டிலே கிழங்குமுதலிய பொருள்களை அவித்துத்தின்றுழலும் வேடர்குடியிற்பிறந்து (மேலுமேலும் பாவங்களைப் புரிந்து) அழிவார்கள். எ-று. முழங்க என்னும் வினையெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது. மாறுபடுதலாவது ஏனை நேத்திரங்கள்போலாது மேனோக்கிநிற்றல். ஐ ஆறும்வேற்றுமைப் பொருள்பட நின்றது. (௫அ)

கெடுத்துப்பணியுமுடையும்வெள்காமற்கிழத்திமுலை
வடுத்துப்பணியுமுரம்வேட்டுநின்றனள்வல்லியத
ளுடுத்துப்பணியுமரைக்கசைத்தோய்தொண்டருள்ளமெல்லாங்
கொடுத்துப்பணியுமலர்த்தாட்டிருமுதுகுன்றத்தனே.

(இ-ள்.) அரைக்கு அதள் உடுத்து பணியும் அசைத்தோய் - இடைக்குப் புலித்தோலை ஆடையாகத் தரித்து (அதன்மேற்கச்சாக) நாகத்தையுங் கட்டியவரே,—தொண்டர் உள்ளம் எல்லாம் கொடுத்து பணியும் மலர் தாள் திருமுதுகுன்றத்தனே - அடியார்கள் சிந்தையெல்லாம் ஒப்புவித்து வணங்குகின்ற தாமரைமலர்போலுந் திரு

வடிகளையுடைய பழமலைநாதரே,—வல்லி - கொடிபோலும் எனது பெண்ணானவள்,—பணியும் உடையும் கெடுத்து - ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் போக்கிவிட்டு,—கிழத்தி முலை வடு அணியும் துப்பு உரம் வேட்டு வெள்காமல் நின்றனள்-உமாதேவியினது முலைத்தழும் பையணிந்திருக்கும் (உம்முடைய) பவளம்போலும் மார்பையிச்சித்து நாணமின்றி நின்றாள். எ-று. [நற்றாயிரங்கல்.] (ருக)

குன்றுகளுங்களையொவ்வாவெனுமுலைக்குன்றதிர்க்குஞ்
சென்றுகளுங்களையுண்வண்டுமோவில்செழுங்கொன்றைமான்
கன்றுகளுங்களை நன்மதிவேணிக்கடவுடனை
யென்றுகளுங்களையெம்மானைக்குன்றையிறைவனையே.

(இ-ள்.) குன்றுகள்-மலைகளே,—முலை குன்று (இத்தலைவியினுடைய) தனங்களாகியமலைகள்,—களும் களை உண் வண்டும் ஓவு இல் செழும் கொன்றை-தேனும் அத்தேனையருந்தும்வண்டும் நீக்கமில்லாத செழித்த கொன்றைமாலையையும்—மான் கன்று உகளும் கலை நல் மதி வேணி கடவுள்தனை - மான்கன்றானது துள்ளிப்பாய்கின்ற கலைகளையுடைய நல்ல இளம்பிறையையுந்தரித்த சடைமுடியையுடைய கடவுளும்—என் துகளும் களை எம்மானை குன்றை இறைவனை சென்று - என்னுடைய குற்றத்தையும் நிவர்த்திக்கும் எமது தலைவருமாகிய பழமலைநாதரை அணைந்து,—உங்களை ஒவ்வா எனும் அதிர்க்கும் - உம்மை (தமக்கு) நிகரற்றனவென்று சொல்லுகின்றன; அன்றியும், ஆரவாரிக்கின்றன. எ-று. [பாங்கி தலைவியினது தனப்பூரிப்பைக்கண்டு குன்றொடு வியந்துகூறல்.] களும் களை இடைக்குறைந்தன. களை ஒள ஒற்றுமை. (கூ0)

இறவாதவாநந்தவெள்ளத்தழுந்தியெனையருளாற்
றுறவாதவாநந்தவாள்வதென்றோமெய்த்துறவர்தொழு

மறவாதவாநந்தனஞ்சூழ்முதுகுன்றடைந்தவர்த
முறவாதவாநந்தகோபாலனென்றற்குடையவனே.

(இ-ள்.) மெய் துறவர் தொழும் அறவா-உண்மையாகிய துறவிகள் வணங்கும் தருமசொருபியே,—தவா நந்தனம் சூழ் முதுகுன்று அடைந்தவர்தம் உறவா-அழிவில்லாத நந்தனவனங்கள் சூழப்பெற்ற திருமுதுகுன்றத்தையடைந்தவர்களுக்கு உறவாயிருப்பவரே,—நந்தகோபாலன் தவா என்றற்கு உடையவனே - நந்தகோபாலராகிய விஷ்ணுவானவர் கணவரேயென்று துதித்தற்கு (அவரை மனைவியாக) உடையவரே,—எனை துறவாது அருளால் இறவாத ஆநந்த வெள்ளத்து அழுத்தி - அடியேனை (அபக்குவியென்று) தள்ளாது கிருபையினால், அழிவில்லாத ஆனந்தவெள்ளத்தின்கண்ணே மூழ்குவித்து,—அவா நந்த ஆள்வது என்றோ-ஆசைகெடும்படி ஆளுநாள் எந்நாளோ? அறியேன். எ-று. (கூக)

உடையமடங்கலுதைத்தபொற்பாதவொளிசெய்மழுப்
படையமடங்கன்முகர்காய்ந்தவீரபழமலையாய்
கடையமடங்கல்லொடுபகலுந்தொழக்கற்றிலமெம்
விடையமடங்கல்வருவதென்ஞான்றுவிளம்புகவே.

(இ-ள்.) மடங்கல் உடைய உதைத்த பொன் பாத-இயமனது மார்பு) பிளக்க உதைத்தருளிய அழகிய திருவடிகளையுடையவரே,—ஒளி செய் மழு படைய-காந்தியைப்பரப்பும் மழுவாயுதத்தையுடையவரே,—மடங்கல் முகன் காய்ந்த வீர—விஷ்ணுவாகிய நரசிங்கத்தையழித்த வீரபத்திரரே,— பழமலையாய் - திருமுதுகுன்றத்தையுடையவரே,—கடையம் மடங்கு அல்லொடு பகலும் தொழ கற்றிலம் - கடையேமாகியயாம் மாறிமாறி வருகின்ற இரவும்பகலும்

(உம்மை) வணங்கக் கற்றேமில்லை;—எம் விடையம் அடங்கல் வருவது எஞ்ஞான்று விளம்புக - (இப்படிப்பட்ட) எம்முடைய விடயங்களைந்தும் அடங்குதலோடு மனோலயம் வருவது எந்நாள் கட்டளையிடுவீராக. எ-று. (௬௨)

விளங்கவலம்புரிமால்போற்றுநன் முதுவெற்பகஞ்சேர்ந்
துளங்கவலம்புரியாய்மாய்பிறிதொருடம்படையாய்
துளங்கவலம்புரிமென்குழன்மாதர்க்குச்சூழ்ந்துநின்று
களங்கவலம்புரியிவ்வெற்பையேநிலைகைவருமே.

(இ-ள்.) துளங்க வலம்புரி மென் குழல் மாதர்க்கு - ஒளிவிடும்படி வலம்புரிவடிவாகச் செய்யப்பட்ட தலைக்கோலத்தையணிந்த மெல்லிய கூந்தலையுடைய மடந்தையர்பொருட்டு—சூழ்ந்து நின்று களங்க அலம் புரி உள் - கவிந்துநின்று குற்றம்பொருந்திய துன்பத்திற்கேதுவாகிய செயல்களைச் செய்கின்ற என் மனமே,—விளங்க வலம்புரி மால் போற்றும் நல் முதுவெற்பு அகம் சேர்ந்து - விளங்கும்படி வலம்புரிச்சங்கையேந்தும் திருமாலானவர் வழிபடுகின்ற நல்ல பழமலையினிடத்தே அடைந்து,— இவ் வெற்பையே அங்கம் வலம் புரியாய் - இம்மலையையே அங்கப் பிரதக்ஷிணம் செய்வாயாக; (செய்யில்,)—மாய் பிறிது ஒரு உடம்பு அடையாய்-அழியுந் தன்மையதாகிய வேறொருசரீரத்தை அடையமாட்டாய்;—நிலை கைவரும் - (அன்றியும்,) முத்தியாகிய நிலைபேறும் கைகூடும். எ-று. இரண்டாமடியின் முதலிலிருக்கும் உள் என்பது நான்காமடியிலுள்ள புரி என்பதனோடு கூட்டப்பட்டது. உள் அம்முச்சாரியை பெறுதுநின்றது. (௬௩)

வருந்தாதவளைவளைத்திட்டவபவவன்பிணிக்கு
மருந்தாதவளைமருவும்பழமலைவாணவுனைப்

பொருந்ாதவரையுயிர்செகுத்துண்ணம்புலிமழுங்கத்
திருந்தாதவரவரக்கூவுறுதென்சேவல்களே.

(இ-ள்.) வருந்தாத வரை வளைத்திட்டவ - யாதொரு வருத்தமுமடையாத மேருமலையை வில்லாகவளைத்தவரே,—பவம் வன் பிணிக்கு மருந்தா - பிறவியாகிய வலிய நோயைத் தணித்தற்கு ஔடதமானவரே,—தவரை மருவும் பழமலை வாண - தவஞ்செய்வாரைப்பொருந்திய முதுகிரியின்கண் வாழ்பவரே,—உனை பொருந்ாதவரை உயிர் செகுத்து உண் அம்புலி மழுங்க - தேவரீரைக் கூடியணையாதபெண்களை உயிரைக்கொன்றருந்தும் சந்திரனொளிகெடும்படி,—சேவல்கள் திருந்து ஆதவரை வர கூவுறுதது என் - (விடியற்காலமாகியும்) ஆண்கோழிகள் அழகுமிகுந்த சூரியனை வரும்படி அழையாதிருப்பதென்னையோ?. எ-று. [இரவுநீட்டிப்புத் தலைவி வருந்தியியம்பல்.] (கூச)

சேவாலங்காட்டுபொழுதகஞ்சாயச்செலுத்திவரி
மாவாலங்காட்டுமுதுகிரிவாணவவ்வானமுய்ய
வேவாலங்காட்டுமிடற்றுய்நின்சீர்த்திவிரித்துரையா
நாவாலங்காட்டுவிலங்காயினேனிந்நானிலத்தே.

(இ-ள்.) சே ஆலம் காட்டு பொழுது அகம் சாய-(ஆயர்) எருதுகளைத் தண்ணீர்குடிப்பிக்கும் வேளையிலே அவற்றின்மனம் சோர்வடையும்படி—அங்கு வரிமா வால் செலுத்தி ஆட்டும் முதுகிரி வாண - அவ்விடத்திலே புலியானது வாலைநீட்டியசைக்கின்ற பழமலையில் வாழ்பவரே,—அவ் வானம் உய்யவே ஆலம் காட்டும் மிடற்றுய் - அத்தேவர்கள் பிழைக்கும்பொருட்டே விடத்தையுண்டு (அடையாளமாகக்)காட்டும் கண்டத்தையுடையவரே,—இந்த நால் நிலத்தே நின் சீர்த்தி விரித்து உரையா நாவால் - இந்த நால்வகைப்பட்

ட நிலங்களைவாய்ந்த உலகத்திலே தேவரீருடைய பெருங்கீர்த்தியை (யாவருமறிய) விரித்துரையாத நாவைப்படைத்திருத்தலால்,—அம் காட்டு விலங்கு ஆயினேன்-அழகிய காட்டிற்றிரியும் மிருகமென்று (பெரியோரிகழும்படி)ஆயினேன். எ-று. வானம் ஆகுபெயர்.(சுரு)

நிலங்கடந்தானைமகிழ்வானைத்தன்னடிநின்றொடுங்கும்
புலங்கடந்தானைமுதுகுன்றவாணனைப்போற்றிலர்தந்
நலங்கடந்தானைமுழுதுமிழந்தநகரினிற்போ
யிலங்கடந்தானைதுணிசீரையாக்கொண்டிரப்பர்களே.

(இ-ள்.) நிலம் கடந்தானை மகிழ்வானை - உலகையளந்த முகுந்தனை மகிழ்ந்துகாத்தவரும்—தன் அடி நின்று ஒடுங்கும் புலங்கள் தந்தானை - (அடியேனுக்குத்) தம்முடைய திருவடிகளிலே நிலைபெற்றொடுங்கும் ஐம்புலவுணர்ச்சியை அளித்தவருமாகிய—முதுகுன்ற வாணனை போற்றிலர் - பழமலைநாதனை வணங்காதவர்கள்,—தம் நலங்கள் தம் தானை முழுதும் இழந்து அந்நகரினில் போய் - தமது செல்வங்களையும் தமதுசேனைகளையும் முற்றும்பறிகொடுத்து அத்தலத்தினிற்சென்று,—தந்தால் நை துணி சீரையா கொண்டு இலங்கள் இரப்பர்கள் - நூலிழைற் றைக்கப்படும் கந்தைத்துணிகளை ஆடைகளாக உடுத்துக்கொண்டு வீடுகடோறும் (கூழ்முதலியவுணவை) இரந்துதிரிவர்கள், எ-று. (சுசு)

இரப்பாரிலாரையிலரெனின்வைவரிரந்திடற்றுங்
கரப்பாரிலாரைமுகநோக்குறார்மழுக்கைக்குன்றையா
யுரப்பாரிலாரையுறவாகக்கொள்வர்தம்முள்ளனபோய்
நிரப்பாரிலாரையவிப்பார்தம்மக்களைநீத்திருந்தே.

(இ-ள்.) மழு கை குன்றையாய்- மழுவையேந்திய கரத்தையுடைய பழமலைநாதரே,— இலாரை இரப்பார் இலர் எனின் வைவர்

இரந்திடில் தாம் கரப்பார் இலாரை முகம் நோக்குறார்-இல்லறமுடை யாரைச்சேர்ந்து யாசிப்பார். யாங்களும் இல்லாதவர்களேயென்று அவர்சொன்னால் இகழ்வர். (தங்களிடத்திலொருவர்வந்து) யாசிக்கில் தாம் மறைவார். வறியர்முகத்தைப்பாரார். இன்னணமாகியபாவிகள்,—தம் உள்ளன போய் - தமக்குள்ளனவாகிய செல்வங்களையிழந்து,— நிரப்பு ஆரில் தம் மக்களை நீத்து இருந்து ஆனா அவிப்பார் - வறுமை மேலுமேலுமுதிர்ந்தால் தங்களுடையமக்களையுமிழந்து, (தனித்திருந்து) ஆனாக்கினையை அவித்துண்பார்கள்;—உரம்பாரில் ஆனா உறவு ஆக கொள்வர் - வலிய இவ்வுலகத்திலே (இவர்கள்) எவர்களை உறவாகக் கைக்கொள்வார்கள். எ-று. இல்லானா என்பன இடைக்குறைந்தன. இலாரைமுகம் என்பது விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது. (கஎ)

இருப்புவலியையகன்றுபொன்வல்லியையென்னுதலாம்
விருப்புவலியைமுலையாரணங்கினர்விண்ணுறுதல்
பொருப்புவலியையிடத்தில்வைத்தாய்மலர்ப்பூங்கணைசேர்
கருப்புவலியையொழித்தாய்பழமலைக்கண்ணுதலே.

(இ-ள்.) பொருப்பு வலியை இடத்தில் வைத்தாய்- மலைமகளை இடதுபாகத்தில் வைத்தருளினவரே,—மலர் பூ கணை சேர் கருப்பு வலியை ஒழித்தாய் - (மன்மதனுடைய) மலர்க்கணைநெருங்கிய கரும்புவில்லினது வன்மையைக் கெடுத்தவரே,— பழமலை கண்ணுதலே - முதுகிரியில்வீற்றிருக்கும் நெற்றிக்கண்ணையுடையவரே,— விருப்பு வல் இயை முலையார் அணங்கினர் விண் உறுதல் - ஆசையை விளைக்கும் சூதாடுகருவியைநிகர்த்த தனங்களையுடைய இவ்வுலகமடந்தையரது (இன்பத்தைவெறுத்து) தெய்வமகளிரது (இன்பத்தைவிரும்பி) விண்ணுலகத்தை யடைதல்,—இருப்பு வலியை அகன்

து பொன் வல்லியை எண்ணுதல் ஆம் - இருப்புவிலங்கை வெறுத்து பொன்விலங்கை விரும்புதல்போலும். எ-று. வல்லி என்பன இடைக்குறைந்தன. மலர்ப்பூ இருபெயரொட்டு. யாவருக்கும் வீடு பேற்றினன்றி இம்மைமறுமைகளிலே இன்பமில்லையென்பது கருத்து. (௬அ)

கண்டந்தரிக்கும்விடத்தார்பழமலைக்கண்ணுதலார்
பண்டந்தரிக்குமருங்களித்தார்தம்பழவடியா
ரெண்டந்தரிக்குமரிதாகும்பாதரிருங்கருமா
வெண்டந்தரிக்குமதற்காய்ந்தவரெனுமெல்லியலே.

(இ-ள்.) மெல் இயல் - மிருதுவான இயற்கையையுடையதலைவியானவள்,—கண்டம் தரிக்கும் விடத்தார் - கழுத்திலேதரித்த விஷத்தையுடையவர்,—பழமலை கண்ணுதலார் - பழமலையில்வாழும் நெற்றிக்கண்ணினர்,—பண்டு அந்தரிக்கு மருங்கு அளித்தார் - முற்காலத்திலே உமாதேவிக்கு இடப்பாகத்தைத்தந்தவர்,— தம் பழ வடியார் எண் தந்து அரிக்கும் அரிது ஆகும் பாதர் - தமது பழமையான அடியவர்களுடைய கருத்தைமுடித்து விஷ்ணுமூர்த்திக்கும் அறிதற்கரிதாக விளங்கும் திருவடிகளையுடையவர்,—இரு கருமா வெண் தந்தர்-பெரிய பன்றியினது வெளுத்த கொம்பையணிந்தவர்,—இக்கு மதன் காய்ந்தவர் எனும்- கருப்புவில்லையுடைய மன்மதனை யெரித்தவர், என்று சிவநாமங்களையே சிந்தித்திருக்கின்றனள். எ-று. [தோழி, தலைவிவருந்திய தன்மையுரைத்தல்.](௬௯)

மெல்லவணக்குநின்னைவாலெதிர்ந்திடவேனெடுங்க
ணல்லவணக்குவளையுடையோடுநடந்திலைநீ
கொல்லவணங்குமதிசுமந்தேகின்றகொள்கையென்னோ
வெல்லவணங்குமலையாய்முதுகிரிவேதியனே.

(இ-ள்.) வெல்ல வணங்கும் மலையாய் - முப்புரத்தைவெல்லு தற்கு வில்லாகவளைந்துநிற்கும் மேருமலையையுடையவரே,—முது கிரி வேதியனே - பழமலையில்வாழும் அந்தணரே,—வேல் நெடு ம் கண் நல்ல அணங்கு - வேலைநிகர்த்த நெடியகண்களையுடைய நல்ல தெய்வப்பெண்போலும் என்மகள்,—வணங்கும் நினைவால் மெல்ல எதிர்ந்திட - (உம்மை) வணங்கும் சிந்தனையோடு மெல்ல முன்னேவர;—நீ வளை உடையோடு நடந்திலை - தேவரீர் (அவளு டைய)வளையல்களும் வஸ்திரமுமாகிய இவற்றோடுசென்றீரில்லை:— கொல்ல அணங்கும் மதி சுமந்தே நின்ற கொள்கை என்னே - கொ ல்லும்படிவருத்துகின்ற இளஞ்சந்திரனையும் தாங்கிக்கொண்டே நி ற்கின்ற தன்மையாதோ? அறியேன்: எ-று. [நற்றாயிரங்கல்.] (எ0)

வேதியவாவிதனக்காவியாகியவித்தகபெண்
பாதியவாவிமலர்த்தேன்பெருகும்பழமலைவாழ்
சோதியவாவிவருவிடைப்பாகநின்றொண்டருறு
நீதியவாவியவரையென்றேசென்றுநேர்குவனே

(இ-ள்.) வேதிய - அந்தணரே,—ஆவிதனக்கு ஆவி ஆகிய வித்தக - உயிர்க்குயிராகி விளங்குகின்ற ஞானசொரூபரே,—பெ ண் பாதிய - அம்பிகையை அர்த்தபாகத்தில் உள்ளவரே,—வாவி மலர் தேன் பெருகும் பழமலை வாழ் சோதிய - தடாகங்களிலே பூக்களிலுள்ளதேன் பெருகிநிற்கும் திருமுதுகுன்றத்தில் வாழ்கின் ற சோதிசொரூபரே,—வாவி வரு விடை பாக - தாவிச்செல்லும் இ டபத்தை நடாத்துபவரே,—நின் தொண்டர் உறும் நீதி அவாவி அ வரை என்று சென்று நேர்குவனே-உம்முடைய அடியவர்கள் கைக் கொண்ட ஒழுக்கங்களையவாவி அவரை எக்காலமடைந்து உய்ந்து வாழ்வேனோ? எ-று. (எக)

நேருமடியர்தமக்குறவாயவர்நேசமறச்
சோருமடியர்தமையணுகாதவர்தும்பியினாற்
சாருமடியர்மணிநிறவண்ணன்றரையிடந்து
தேருமடியர்முதுகுன்றவாணுதற்றீக்கண்ணரே.

(இ-ள்.) தும்பியினால் சாரும் மடியர் - யானையினாற்கிடைத்த வஸ்திரத்தையுடையவரும் - நிறம் மணி வண்ணன் தரை இடந்து தேரும் அடியர் - காந்திபெற்ற நீலமணிபோலும் நிறத்தையுடைய திருமாலானவர் பூமியைப்பிளந்து தேடாநின்ற திருவடிகளையுடையவரும்—முதுகுன்றம் வாள் நுதல் தீ கண்ணர் - திருமுதுகுன்றத்திலேவீற்றிருக்கும் காந்திபெற்ற நெற்றியிலே அக்கினிக்கண்ணையுடையவருமாகிய சிவபெருமான்,—நேரும் அடியர் தமக்கு உறவு ஆயவர்-அன்போடடைந்த அடியவர்களுக்குஉறவாகியிருப்பவர்;—நேசம் அற சோரும் மடியர்தமை அணுகாதவர் - அன்புநீங்கச் சோர்ந்துதிரியும் சோம்பலையுடையவர்களைச் சேராதவர். எ-று. (எஉ)

கண்டீரவந்தனைநேர்ந்தாங்கருகக்களிற்றினைமுன்
கொண்டீரவந்தனைவானோர்செயுமுதுகுன்றனொடு
வண்டீரவந்தனைநேர்வாளைக்கோலம்மதனனெய்யும்
புண்டீரவந்தனைசேர்தியென்றோதுமின்போமின்களே.

(இ-ள்.) வண்டீர் - வண்டுகளே,—முன் கண்டீரவந்தனை நேர்ந்து ஆங்கு அருக களிற்றினை கொண்டு ஈர - முற்காலத்திலே சிங்கத்தை யெதிர்ந்தாற்போல அழிவையடையும்படி யானையைக் கையிற்பிடித்து அதனது தோலையுரிக்க—வானோர் வந்தனை செயும் முதுகுன்றனொடு - தேவர்கள் (உய்ந்தோம் உய்ந்தோமென்று) வணங்கும் பழமலைநாதரோடு,—அம்மதனன் எய்யும் கோல் புண் தீர வந்தனை - அந்த மன்மதனானவன் பிரயோகிக்கும் பாணங்களால்

நேரிட்ட புண்கள் நீங்கும்படி (தேவரீர்)வந்து—அவம்தனை நேர்வாளை சேர்தி என்று ஓதுமின் - சுகத்தையிழந்துகிடக்கும் எங்களுடைய தலைவியைக் கூடுவீராகவென்று சொல்லுங்கள்;—போமின்கள்-விடைபெற்று விரையச்செல்லுங்கள். எ-று. [வண்டுவிடுதூது.] வந்தனை முற்றெச்சம். வண்டீர் முதுகுன்றனொடு ஓதுமின் போமின் என இயையும். (எ௩)

போதுமின்மாலைவகைவகையாகவம்பொற்றொடியீ
ரோதுமின்மாலைதரின்வம்மினில்லையென்றோட்டினரேல்
மாதுமின்மாலைவருமுனஞ்சாமென்றுவண்கைமலர்
மோதுமின்மாலைமகிழ்குன்றைவாணர்தம்முன்னடைந்தே.

(இ-ஸ்.) அம் பொன் தொடியீர் - அழகிய பொன்னாலாகிய வளையலையணிந்த பாங்கிகளே,—வகை வகை ஆக மாலை போதுமின் - வகுப்புவகுப்பாக ஒழுங்குபடச் செல்லுவீராக;—மாலை மகிழ் குன்றைவாணர்தம் முன் அடைந்து ஓதுமின் - விஷ்ணுவை மகிழ்ந்தடிமைகொண்ட பழமலைநாதருக் கெதிரேசென்று (யான் விரகத்தாற்படும்பாட்டைச்) சொல்லுவீராக;—மாலை தரின் வம்மின் - அவர் கொன்றைமாலையைத்தந்தால் வாங்கிவருவீராக;—இல்லை என்று ஓட்டினரேல் - கொடுப்பதில்லையென்று (உங்களைத்) துரத்துவாராயின்,—மின் மாது மாலை வரும் முனம் சாம் என்று வண் மலர் கை மோதுமின் - மின்னற்கொடிபோலும் தலைவியானவள் மாலைக்காலம் வருதற்குமுன்னமே சாவாளென்றுசொல்லி வளப்பம் பொருந்திய மலர்போலுங்கைகளால் (முகத்திலே) அறைந்துகொள்ளுவீராக. எ-று. கைமோதல் கைகளை ஒன்றோடொன்று தாக்கல் எனினும் அமையும். [தலைவி மாலைவிருப்புரைத்து விடுத்தல்.] (எச)

முன்னஞ்சிலம்புசிலையாக்கியநன்முதுகிரியாய்
பொன்னஞ்சிலம்புசிலம்புதலோடையிற்பூஞ்சிறக
ரன்னஞ்சிலம்புநடையிளமானையனங்கனெய்து
தன்னஞ்சிலம்புகுவளையல்லாதுதணந்தனனே.

(இ-ள்.) முன்னம் சிலம்பு சிலை ஆக்கிய நல் முதுகிரியாய்-முற்காலத்திலே மேருமலையை வில்லாகவளைத்த நல்ல பழமலைநாதரே,—பொன்னம் சிலம்பு ஓடையில் பூம் சிறகர் அன்னம் சிலம்புதல் சிலம்பும் நடை இள மானை - பொற்சிலம்புகள் மடுக்களிலுள்ள பொலிவுபெற்ற இறகுகள்வாய்ந்த அன்னங்களொலித்தலைப்போல ஒலிக்கும்படி நடக்கின்ற இளமைதங்கிய மான்போலும் எனதுபெண்மேல்,—அனங்கன் தன் அம்பு அஞ்சில் குவளை அல்லாது எய்து தணந்தனன் - மன்மதனானவன் தன்னுடைய பாணம் ஐந்தனுள் நீலோற்பலமொழிந்த ஏனை நான்குபாணங்களையும் எய்து இழந்துவறியனாயினன். எ-று. [நற்றாயிரங்கல்.] எனவே, நீலோற்பலமென்னும் பாணத்தையேவிக் கொல்லுதலொன்றுதவிர ஏனைத்துக்கங்களெல்லாம் விளைத்தனனென்பது கருத்து. பஞ்சபாணங்களின் செயல்களை, "நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ - வனைத்துணவு நீக்கு மசோகு - வனத்திலுறு - முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங் - கொல்லுமத னம்பின் குணம்." என்னும் வெண்பாவானறிக. மானை வேற்றுமைமயக்கம். (எ௫)

தணந்தவளக்கரிமேனியளாங்கொல்வெண்சங்கினங்கண்
மணந்தவளக்கரினின்றழுமோவலவாவுயிர்க
ளுணந்தவளக்கரிதாமுதுகுன்றரனேங்கமா
கணந்தவளக்கரியானேத்திறையன்றிக்காப்பிலையே.

(இ-ள்.) வலவா-தேர்ப்பாகனே,—தணந்தவள் அக்கரி மேனியள் ஆம் கொல் - என்னைப்பிரிந்த தலைவியானவள், (காமத்தாற்கருகி) அந்த கரிபோலும் மேனியையுடையளாவளோ!—வெண் சங்கு இனங்கள் மணந்த அளக்கரின் நின்று அழுமோ-வெண்மையாகிய சங்குக்கூட்டங்கள் கலந்த சமுத்திரம்போலக் (கண்ணீரைச்சொரிந்து) நின்று அழுவளோ!—உயிர்கள் உள் நந்த அளக்க அரிது ஆம் முதுகுன்று அரன் - ஆன்மாக்களுடைய மனங்களால் மிகவும் அளவிடுதற்கு அரியதாகிய பழமலைநாதரும்—ஓங்கு அமரகணம் தவளம் கரியான் எத்து இறை அன்றி காப்பு இலை - உயர்ந்த தேவகணங்களும் (அவர்க்குத்தலைவனாகிய) வெள்ளையானையையுடைய இந்திரனும் புகழும் தலைவருமாகிய சிவபெருமானையன்றி வேறே காப்பவரொருவருமில்லை. எ-று. [பாசறைமுற்றி மீண்டதலைமகன் பாகனோடு பரிந்தியம்பியது.] அளக்க என்னும் வினையெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. (எசு)

காப்புக்கரியுந்திருமகணாயகன்காப்பவற்றின்
பூப்புக்கரியுந்தலையுடையானும்பொருந்தவைத்தான்
மாப்புக்கரியுங்குயிலும்பயில்பொழில்வண்டில்லையான்
மூப்புக்கரியும்புலியுங்கொன்றீர்ந்தமுதுகுன்றனே.

(இ-ள்.) மா புக்கு அரியும் குயிலும் பயில் பொழில் வண் தில்லையான் - மாமரங்களிலே குடிபுகுந்து கிளிகளும் குயில்களும் சத்திக்கின்ற சோலைகள்சூழ்ந்த வளப்பம்பொருந்திய சிதம்பரத்தையுடையவரும்—மூப்பு கரியும் புலியும் கொன்று ஈர்ந்த முதுகுன்றனே- முதிர்ந்த யானையையும் புலியையும்வதைத்துத் தோலையுரித்துத்தரித்த பழமலைநாதருமாகிய சிவபெருமானே,—காப்புக்கு அரியும் திருமகள் நாயகன் காப்பவற்றின் பூப்புக்கு அரியும் தலை

உடையானும் பொருந்த வைத்தான் - காத்தற்றொழிலுக்கு விஷ்ணு மூர்த்தியையும், இலக்குமிகணவராகிய அவ்விஷ்ணுவால் காக்கப் படும் சராசரங்களினுடைய படைத்தற் றொழிலுக்கு (வைரவக்கட வுளால்) கிள்ளப்பட்ட நடுத்தலைக்குறையையுடைய பிரமதேவனை யும், (கர்த்தர்களாகப்) பொருந்தும்படி வைத்தருளினார். எ-று. (௭௭)

முதுமறையந்தமுறுபொருளேநன் முழுப்பணிக்கு
விதுமறையந்தமுடியாய்புராணம்விளங்கிரண்டொன்
பதுமறையந்தமுதுகுன்றவாணநின்பாதம்வணங்
குதுமறையந்தகனைமார்பிலெம்மைக்குறுகிடினே.

(இ-ள்.) முது மறை அந்தம் உறு பொருளே - பழமையாகிய வேதமுடிவிலே பொருந்திய உண்மைப்பொருளே,— நல் முழு பணிக்கு விது மறை அந்தம் முடியாய் - நல்ல முழுப்பாம்பாகிய வாசுகிக்குப்பயந்து இளம்பிறைமறைகின்ற அழகிய திருமுடியை யுடையவரே,—விளங்கு இரண்டு ஒன்பது புராணமும் அறை அந்த முதுகுன்றவாண - பிரகாசிக்கின்ற பதினெண்புராணங்களும் துதி க்கின்ற அந்த பழமலையில்வாழ்பவரே,—நின் பாதம் வணங்குதும்- தேவரீருடைய திருவடிகளைத் தொழுவோம்;—எம்மை குறுகிடின் அந்தகனை மார்பில் அறை - எம்மைப்பிடிக்கவந்தால் இயமனை மார் பின்கண்ணே மோதுவீராக. எ-று. (௭௮)

குறுகுமுனிவனையன்றுண்டவிம்முதுகுன்றனுக்கு
மறுகுமுனிவனைசெய்தாலுய்வாரெவர்வந்தருளென்
றறுகுமுனிவனைபோதுமிடார்நமனார்முனிவு
முறுகுமுனிவனையெய்தாரறிவறுமூடரினே.

(இ-ள்.) குறுகும் முனிவனை அன்று ஆண்ட இம்முதுகுன்ற னுக்கு - குறுகிய அகத்தியமகாமுனிவனை முற்காலத்திலே அடிமை கொண்டருளிய இந்த பழமலைநாதருக்கு—வந்து அருள் என்று உனி அறுகும் வனை போதும் இடார் - தேவரீரெழுந்தருளிவந்து அனுக்கிரகிக்கவேண்டுமென்று தியானித்து அறுகையும் தொடுத்த பூக்களையும் சாத்தாதவர்களும்—நமனார் முனிவு முறுகுமுன் இவனை எய்தார் அறிவு அறும் மூடரின் - இயமனார் வருத்துதற்குக் கோபமுதிருதற்கு முன்னமே இப்பழமலைநாதனை அடைக்கலமாக அடையாதவருமாகிய அறிவில்லாத மூடர்களைப்போல—மறுகும் முனிவு அனை செய்தால் உய்வார் எவர்-(பெண்கள்)மயங்குதற்கேதுவாகிய கோபத்தை மாதாவே செய்வாளாயில் உலகத்திலே உய்வார்யாவர். எ-று. [நற்றாய்முனிவுகண்டு தலைவிவருந்தல்.] உனி இடைக்குறை. முதுகுன்றனுக்கு இடார் என இயையும். (எக)

மூடாநமாதிமிரையடைந்தாயலென்முன்னணுகன்
மீடாநமாதிபெருமானுதைக்கினுமெய்ப்புகழைப்
பாடாநமாதியெழுத்தைந்துமோதிப்பழமலைவாழ்
வீடாநமாதியடியாரடியருண்மேவினமே.

(இ-ள்.) மூடா நமா - மூடனாகிய இயமனே,—பழமலை வாழ் வீடு ஆம் நம் ஆதி - (யாம்,) முதுகுன்றத்தைத் தாம்வீற்றிருக்கும் வீடாகக்கொண்டிருக்கும் நமது ஆதிப்பொருளாகிய சிவபெருமானுடைய—மெய் புகழை பாடா - உண்மையாகிய கீர்த்திகளைப்பாடி,—நம ஆதி ஐந்து எழுத்தும் ஓதி - நகரமுதலாகிய பஞ்சாக்கரங்களையும் உச்சரித்து,—அடியார் அடியருள் மேவினம் - (அக்கடவுளுடைய) அடியவர்களுடைய அடியவர்கூட்டத்துள்ளே தங்கியிருக்கின்றோம்; ஆகையால்,—திமிரா அடைந்து ஆயல் - அகங்கார

ங்கொண்டு (என்னுடையகுணங்களை) ஆராய்ந்துபாராதே;—என் முன் அணுகல் - எனக்குமுன்னும் வாராதே;—மீள்-மீண்டுவிடு; (மீளாதெதிர்ப்பையேல்,)—இனும் பெருமான் உதைக்கு தானம் ஆதி- இன்னுமொருமுறை சிவபெருமானுதைக்கு இடமாவாய். எ-று. இன்னும் என்பது குறைந்து நின்றது. (அ0)

மேவத்தகரையிவர்மகவீன்றதொல்வெற்பரசு
சேவத்தகரவொடுபூசித்துன்னைவிண்செல்வமுறும்
பூவத்தகரைநகுவேமெமக்குநின்பொங்கருளா
லோவத்தகரைவகைப்பாசமுந்தம்முரங்குலைந்தே.

(இ-ள்.) தகரை மேவ இவர் மகவு ஈன்ற தொல்வெற்பு அரச- (நாரதர்புரிந்த யாகத்திற்றோன்றி உலகத்தையழிக்கத்தொடங்கிய) ஆட்டுக்கடாவை (வாகனமாக) விரும்பியேறிய முருகக்கடவுளைப் பெற்ற பழமலைநாதரே,—சே அத்த - இடபவாகனத்தையுடைய பிதாவே,—எமக்கு நின் பொங்கு அருளால் ஐவகை பாசமும் தம் உரம் குலைந்து ஓவ தகர் - எங்களுக்குத் தேவரீருடைய மிக்கதிருவருளால், ஐவகைப்பட்ட பாசங்களும் தம்முடைய வன்மைகுறைந்து நீங்கும்படி சேதிப்பீராக; சேதிக்கில்,—உன்னை கரவொடு பூசித்து விண் செல்வம் உறும் பூவத்தகரை நகுவேம் - உம்மை உருக்கத்தோடு வழிபட்டு விண்ணுலகபதவியை விரும்பியடையும் உலகவியாபாரிகளைப் பழித்துச்சிரிப்பேம். எ-று. மேவ வினையெச்சத்திரிபு. ஐவகைப்பாசம்-ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. (அக)

குலையாநிலமும்விசும்புந்தொழுமுதுகுன்றமதிக்
கலையாநிலமும்மடியழல்காயவக்காய்கனலின்

இருத்தவிருப்பதிடத்திலல்லாமலிருப்பலென
திருத்தவிருப்பமுதுகுன்றவாணனைநீவலியுஞ்
செருத்தவிருப்பவுததியையாருணச்சிந்தைசெய்வர்
திருத்தவிருப்பவலையாவர்மெல்லுவர்தேமொழியே.

(இ-ள்.) தேன் மொழியே - தேன்போலும் மொழியையுடைய எனது மகளே,—இருத்த இருப்பது இடத்தில் அல்லாமல் இருப்பல் என-(தேவரீர்) இருத்திவைக்க நானிருந்துவாழ்வது இடப்பாகத்திலல்லாமல் (மற்றிருந்தானங்களில்) இருந்து வாழமாட்டேனென்று—திருத்தம் விருப்பம் முதுகுன்றவாணனை நீ வலியும் செருத்தவிர் - நடனத்தின்கண்ணே ஆசையையுடைய பழமலைநாதனை நீ வலிந்துவாதாடும் சண்டையைவிட்டுவிடு;—உப்ப உததியை உண யார் சிந்தை செய்வர் - உப்பையுடைய சமுத்திரநீரைக் குடிப்போமென்று யாவர் நினைப்பார்;—இருப்பு திருத்த அவலை யாவர் மெல்லுவர் - இரும்பினாலே திருத்தமாகச்செய்யப்பட்ட அவலை யாவர் மென்று தின்பார். எ-று. [நற்குயிரங்கல்.] முடியாதென்பது கருத்து. (௬௫)

தேவியுமானும்விளையாடிடமுடைச்செங்கணுத
லாவியுமானும்வருஞ்சீர்முதுகுன்றணிவிழவைக்
காவியுமானும்விழியாய்கண்டெய்தெனக்கண்மறுகி
னேவியுமானும்மகட்கிடர்நீர்செய்திரோவைழயரோ.

(இ-ள்.) ஏழையரே - பேதைமையுடைய தாய்மார்களே,—காவியும் மானும் விழியாய் - (பிறவற்றையேயன்றி) நீலோற்பலமல

ண்டருள்பவரோ, நல்லகடவுளே, என்று தோத்திரஞ்செய்வீராக;— தோல் திரை ஆகம் நிலை என்று வாழன்மின்-தோலானது திரைந்தழியும் இச்சரீரத்தை நிலையென்றுவாழ நினையாதொழிவீராக. எ-று. பாம்பணி வினைக்குறிப்புப்பெயர். பாம்பணி முதுகுன்றம் என இயையும். திரை ஆகுபெயர். (அங)

தொண்டரைக்கூடல்விழையார்பொழின்மலர்த்தூளுதிர்த்தல்
விண்டரைக்கூடலறவுறல்போலுந்தொல்வெற்புறுமைக்
கண்டரைக்கூடலுடையாரைப்போற்றிலர்கற்றறியா
மிண்டரைக்கூடல்வழியேநடத்துபுவீழ்த்துவரே.

(இ-ள்.) தொண்டரை கூடல் விழையார் - அடியவரைக்கூடி வாழ்தலை விரும்பாதவர்களும்—பொழில் மலர் தூள் உதிர்த்தல் விண் தரைக்கு ஊடல் அற உறல் போலும் தொல்வெற்பு உறும் மை கண்டரை - சோலைகள் மலர்களிலுள்ள மகரந்தங்களைச் சிந்துவது, தேவலோகமானது இப்பூவுலகத்திற்குண்டாகிய பிணக்கை நிவர்த்திக்க வருதலை நிகர்க்கின்ற பழமலையில்வீற்றிருக்கும் நீலகண்டத்தையுடையவரும்—கூடல் உடையாரை போற்றிலர் - நான்மாடக்கூடலை யுடையவருமாகிய சிவபெருமானை வணங்காதவர்களும்—கற்று அறியா மிண்டர் - (அக்கடவுளுடைய கீர்த்திகளை) ஆய்ந்தறியாத அகங்காரிகளுமாகிய கீழ்மக்கள்,—ஐ கூடு அல் வழியே நடத்துபு வீழ்த்துவர் - சிலேத்துமக்கூடாகிய இவ்வுடம்பைத் தீயவழியிலே செலுத்திப் பிறவிப்படுகுழியிலே தள்ளுவர். எ-று. விழையார் போற்றிலர் கற்றறியாமிண்டர் வீழ்த்துவர் என இயையும். பூந்துகள் பொன்மயமாயிருத்தலின் விண்ணுலகிற் குவமையாக்கினார். (அச)

வீழிவலஞ்சுழிதில்லைசிராப்பள்ளிவேதவனங்
காழிவலஞ்சுழியன்மேவுகுன்றைக்கடவுள்விழ.

சூழிவலஞ்சுழிவெள்வளையானணையன்னகல்விப்
பாழிவலஞ்சுழியுந்தியுள்வாங்குவர்பாவையரே.

(இ-ள்.) வீழி வலஞ்சுழி தில்லை சிராப்பள்ளி வேதவனம் காழி வலம் சுழியல் மேவு குன்றை கடவுள் விடின்-திருவீழிமிழலை திருவலஞ்சுழி சிதம்பரம் திரிசிரபுரம் வேதாரணியம் சீர்காழி திருவல்லம் திருச்சுழியல் என்னும் இத்தலங்களில் வீற்றிருக்கும் பழமலைநாதர் விட்டுப்பிரிந்தால்,—பாவையர் சுழி உந்தி-பிரிந்தமங்கையர், கூடற்சுழிகளை எழுதியெழுதி,—ஆழி வலம் சுழி வெள் வளையான் அணை அன்ன கல்வி பாழி வலம் உள் வாங்குவர்-சக்கரத்தையும் வலம்புரியாகிய வெள்ளிய சங்கையுமுடைய விஷ்ணுமூர்த்தியினது சயனமாகிய ஆதிசேஷனை நிகர்த்த கல்வியினது பெரியவன்மையையும் உள்ளே யிழந்து வருந்துவர். எ-று. [தலைவன் பிரிந்துழித் தலைவிமுதலோர் கூடற்சுழியிழைத்து வருந்தல்.] கல்வியிற்சிறந்த மகளிர்க்கும் கணவரைப்பிரிந்திருத்தல் கூடாதாகலின், குன்றைக்கடவுள் விடின் கல்விப்பாழிவலம் உள்வாங்குவரென்றார். வல்லம் என்னுந்தலம் வலமெனநின்றது. வலமும் என்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. (அரு)

பாவலருக்குமலிபொருளீந்துகொள்பாட்டினர்க்கு
மேவலருக்குமழுவார்க்குநன்முதுவெற்பினுக்குக்
காவலருக்குமயலாகிநின்றுகலங்குகின்ற
யாவலருக்குவிளைநிலமாயினையாயிழையே.

(இ-ள்.) ஆய் இழையே - ஆய்ந்த ஆபரணத்தைத் தரித்த என் மகளே,—பாவலருக்கு மலி பொருள் ஈந்து கொள் பாட்டினர்க்கு-சுந்தரமூர்த்திநாயனருக்கு மிகுந்ததிரவியங்களைக் கொடுத்து ஏற்றுக்கொண்ட திருப்பாட்டையுடையவரும்—மேவலர் உக்கும் மழு

வார்க்கு - சத்துருக்கள் அழிந்தொடுங்குதற்கு ஏதுவாகிய மழுப்படையையுடையவரும்—நல் முது வெற்பினுக்கு காவலருக்கு - நல்ல பழமலைக்குத் தலைவருமாகிய சிவபெருமானுக்கு—மயலாகி நின்று கலங்குகின்றாய் - மயக்கங்கொண்டு நின்று கவலைப்படுகின்றாய்;—ஆ அலருக்கு விளைநிலம் ஆயினை - ஆச்சரியம்! பழிச்சொல்லுகளுக்கு நீ ஒரு விளைநிலமுமாயினாய். எ-று. [நற்றாயிரங்கல்.] பாவலர் என்பதற்கு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலிய ஏனைப் பாவலர்களைக்கொள்ளினும் அமையும். (௮௧)

ஆயக்கலையகலுஞ்சீர்முதுகுன்றரசமுனஞ்
சாயக்கலையனிமிர்த்தசெம்மேனியதப்பலில்லா
னேயக்கலையபுழுக்கூடெனுமுடனேயமெல்லா
மாயக்கலையமலமாயைகன்மங்கள்வந்தருளே.

(இ-ள்.) ஆய கலை அகலும் சீர் முதுகுன்று அரச - ஆராய்ந்து பார்க்குங்கால் கலைஞானங்களுக்கும் அப்பாற்பட்டுவிளங்கும் புகழினையுடைய பழமலைநாதரே,— முனம் சாய கலையன் நிமிர்த்த செம்மேனிய - முன்னொருகாலத்தில் (திருப்பனந்தாளில் தாடகையின் பொருட்டுத்) தாழ்ந்து குங்குலியக்கலயநாயனால் நிமிர்க்கப்பட்ட செவ்விய திருமேனியையுடையவரே,—தப்பல் இல்லான் நேயம் கல் ஐய - தவறுதெறிந்த சாக்கியநாயனாரது அன்பாகிய கற்களையுடைய தலைவரே,—புழு கூடு எனும் உடல் நேயம் எல்லாம் மாய - புழுக்கள்மலிந்த கூடென்று சொல்லப்படும் இந்த தேகாபிமானமெல்லாம் கெடவும்,—மலம் மாயை கன்மங்கள் கலைய வந்து அருள் - ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மலங்களும் கலைந்து

டிய சொல் திருத்தா - பொய்யாகிய பிறவியை ஒழித்தவர்களாகிய சனகாதிகளுக்குக் (கைலைமலையிலே கல்லாலவிருக்ஷத்தினடியிலே) சகலதருமங்களையுமுணர்த்திய சொற்றிருத்தமுடையவரே,— தமியேன் தலைக்கு சலசம் உன் திருவடியே - அடியேனுடைய சிரசிலணிதற்குரிய தாமரைமலராவன தேவரீருடைய திருவடிகளேயாம். எ-று. சந்திரன் சலத்தினிடத்தே பிரதிபலித்துக் காணப்படினும், அதில் சம்பந்தமில்லாதிருத்தல்போல; ஞானிகளும் உடம்போடுகூடியிருப்பினும், அதிற்பற்றற்று உடையானிடத்தே பற்றுடையரா யொழுகல்பற்றி, சலசந்திரன்போ லுடம்பிலடைந்தவர் தங்கருத்தா என்றார். சொல்லாலுணர்த்திய அறங்களையெல்லாம் குறிப்பாற் றிருத்தினமைபற்றி சின்முத்திரையைச் சொற்றிருத்தமென்றார். அச்சின்முத்திரைக்குப் பொருளாவது மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர் அம்மலர்த்தாணிழலடங்கும் என்பது. திருவடியே என்னும் ஏகாரம் பிரிநிலை.

(௧00)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

பல தொடைகள் மல்கு உரம் இதண் விட்டு அகம் புக்க மானை-தினைப்புனத்தின்கணுள்ள பலகட்டுக்கள் பொருந்திய வலிய பரணைவிட்டு வீட்டையடைந்த மான்போலும் பெண்ணை,— அல்லிடை கொடு போகல்-இராக்காலத்திலே (தனித்துக்) கொண்டுசெல்லாதே;—இந்த ஒல்குரவு என்-இந்த இழிதொழில் (உனக்கு) யாதுக்கு?—என்று ஓதிலை - என்று சொன்னாயில்லை;—முதுகுன்றர் நாட்டு நல்லுரைதான் உனக்கு நல்குரவே செல் - பழமலைநாதரது நாட்டின்கண்ணே நல்லவசனமும் உனக்குத்தரித்திரமா? சொல்லுவாயாக. எ-று [நற்றாய் குரவொடுபுலம்பல்.] உரைதானும் என்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது.

(அ௯)

ஓதித்திருக்குமொழிவதல்லாமலுன்னுண்மைநிலை
சாதித்திருக்குமியல்புதந்தாயிலைதன்மையெல்லாம்
போதித்திருக்குமொழிகுன்றைவாணபொருப்புதவுஞ்
சோதித்திருக்குமரிபாகசுந்தரன்றூதுவனே.

(இ-ள்.) தன்மை எல்லாம் போதித்து இருக்கும் ஒழி குன்றைவாண - அருட்டிறங்களையெல்லாம் (ஆன்மாக்களுக்கு) உணர்த்தி (முற்றும் ஓதும் ஆற்றலின்மையால்) வேதங்களும் ஒடுங்கிநிற்கும் பழமலைநாதரோ,—பொருப்பு உதவும் சோதி திரு குமரி பாக - இமயமீன்ற பிரகாசம்பெற்ற அழகிய உமாதேவியினது ஓர்பாகத்தையுடையவரோ,—சுந்தரன் தூதுவனே - சுந்தரமூர்த்திநாயனருக்குத் தூதாகச்சென்றவரோ,—ஓதி திருக்கு மொழிவது அல்லாமல்-சில நூல்களைக்கற்று விபரீதப்பொருள்களைச் சொல்லுவதையேயன்றி,—உன் உண்மை நிலை சாதித்து இருக்கும் இயல்பு தந்தாய் இலை - உமது

உண்மையாகிய முத்திநிலையில் வழுவாதுபழகிச் (சமாதியோடுகூடி) இருக்கும் சுபாவத்தை (அடியேனுக்குத்) தந்தருளினிரில்லை. எ-று.

தூதுகண்டாலுமதியணிவேணியர்துன்னிவந்தென்
காதுகண்டாலுமுடன்மூக்கின்பெய்தநல்காரெனவெம்
மாதுகண்டாலுமுவக்கப்படுமொழிவந்தனள்கார்ப்
போதுகண்டாலுமயில்வாழ்பொழிற்பழம்பூதரனே.

(இ-ள்.) கார் போது கண்டு ஆலும் மயில் வாழ் பொழில் பழம்பூதரனே - கார்காலத்தைக்கண்டு ஒலித்து ஆடாநின்ற மயில்கள் வாழ்கின்ற சோலைகள்சூழ்ந்த முதுகிரிநாதரே,—கண்டாலும் உவக்கப்படும் மொழி எம் மாது-கற்கண்டினாலும் விரும்பப்படுகின்ற மதுரமொழியையுடைய எமது தலைவியானவள்,—மதி அணி வேணியர் தூது கண்டாலும் - சந்திரனைத்தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான் (ஏவியனுப்பிய) தூதுவரைக்கண்டாராயினும்—துன்னி வந்து என் காது கண் தாலும் உடல் மூக்கு இன்பு எய்த நல்கார் என-(என்னிடத்தே) நெருங்கிவந்து காதும் கண்ணும் நாவும் உடலும் மூக்குமாகிய ஐம்பொறிகளும் (கேட்டு கண்டு உண்டு உற்று உயிர்த்து அறிதலாகிய) ஐவகையின்பங்களையும் அனுபவிக்கும்படி அருளாரென்று வெறுத்து,—வந்தனள் - (இரவுக்குறியிடையீடுபட்டு விடியற்காலையில்) வீடுவந்துசேர்ந்தனள். எ-று. [இரவுக்குறி பிழைத்தமை இறைவற் கிருளையுரைத்தல்.] தாலும் என்னும் உம்மை ஏனையிடத்தும் கூட்டப்பட்டன. (கூக)

பூதரனன்றுசிலைக்கென்றுகொள்ளும்புராந்தகனார்
சீதரனன்றுபொழிலெனுங்குன்றைத்திருநகரார்

காதரனன்றும்விழிபெறுமாறுடைக்கண்ணுதலார்
மாதரனன்றுவருமதிக்கோய்தலைமாற்றிலரே.

(இ-ள்.) சிலைக்கு பூதரம் நன்று என்று கொள்ளும் புராந்தகனார் - வில்லாதற்கு மேருமலையே நல்லதென்று வளைத்துக் கையிற் கொண்ட திரிபுராந்தகரும்—சீதரன் அன்று எனும் பொழில் திருக்குன்றை நகரார் - மாயவனென்று மயங்கிப் பின்னர் அன்றெனத் தெளியும் சோலைகள் சூழ்ந்த திருமுதுகுன்றமென்னும் தலத்தையுடையவரும்—காதரன் அன்றும் விழி பெறுமாறு உடை கண்ணுதலார்- இவ்வினைத்தொடர்பையுடைய யான் (கேவலத்திற்கிடந்த) அக்காலத்தும் அருள்நோக்கம் பெறும்படி என்னையடிமையாகவுடைய நெற்றிக்கண்ணருமாகிய சிவபெருமான்,— அனன்று வரும் மதிக்கு மாதர் ஓய்தலை மாற்றிலர் - தழலைப் பரப்பிவருகின்ற சந்திரனுக்கு (தன்னைவிரும்பிய) மகளிர் வருந்திநிற்றலை நீக்கினாரில்லை. எ-று. [நற்றாயிரங்கல்.]

(௩௨)

மாற்குச்சிவந்தமலர்த்தாண்முதுகிரிவாணன்மறை
நூற்குச்சிவந்தவிராப்பொருளென்பவர்நோக்குளன்வேள்
கோற்குச்சிவந்தவிறலாளனின்னுங்குறுகிலனிம்
மேற்குச்சிவந்ததறியேனிவட்குவிளைவதுவே.

(இ-ள்.) மாற்கு உச்சி வந்த மலர் தாள் முதுகிரி வாணன்-விஷ்ணுமூர்த்திக்கு உச்சியிற்றரிக்கக்கிடைத்த தாமரைமலர்போலும் திருவடிகளையுடைய பழமலைநாதரும்—மறை நூற்கு சிவம் தவிராப் பொருள் என்பவர் நோக்கு உளன்-வேதநூலுக்குச் சிவபெருமானே

ருவரோ நீங்காப்பரம்பொருளென்று நிச்சயித்துணாக்கும் அன்பர்களு டைய காட்சிக்கெளியவரும்—வேள் கோற்கு சிவந்த விறல் ஆளன்-மன்மதனுடைய மலரம்புகள்பொருட்டுக் கோபித்த வெற்றியையுடையவருமாகிய சிவபெருமான்,—இன்னும் குறுகிலன் - இதுகாறும் வந்தாரில்லை;—இம்மேற்கு சிவந்தது - இம்மேலைத்திசையோ செவ்வானமாயிற்று:—இவட்கு விளைவது அறியேன் - இனி இப்பெண்ணுக்கு உண்டாகுந் துன்பங்களை யானறியேன். எ-று. [மாலையம்பொழுதுகண்டு நற்றாயிரங்கல்.] (கூ௩)

விளையவளையுமணிநெல்வயன்முதுவெற்பிறைவ
னளையவளையுறவுடையானவ்வனங்கசிலை
வளையவளையுமுடையுந்துறந்துவருந்துறுமிவ்
விளையவளையுமொருபுடைசாரவிருத்திலனே.

(இ-ள்.) மணி விளைய வளையும் நெல் வயல் முதுவெற்பு இறைவன் - மணிகொண்டு விளைதலால் சாய்கின்ற நெற்பயிர்களையுடைய வயல்கள்சூழ்ந்த பழமலைநாதரும்—அளைய அளையும் உறவு உடையான்-அன்போடும் அடிமைபுக (அவரிடத்தே) தாமுங்கலக்கும் நட்பையுடையவருமாகிய சிவபெருமான்,—அவ்வனங்கன் சிலை வளைய-அந்த மன்மதனுடைய கருப்புவில்வளைந்தவுடனே—வளையும் உடையும் துறந்து வருந்துறும் இவ்விளையவளையும் ஒரு புடை சார விருத்திலன் - வளையல்களையும் வஸ்திரத்தையுமிழந்து துக்கித்துக்கிடக்கின்ற இந்தச் சிறுபெண்ணையும் ஒருபக்கத்திலே தங்கும்படி வைத்தாரில்லை. எ-று. [நற்றாயிரங்கல்.] (கூ௪)

இருத்தவிருப்பதிடத்திலல்லாமலிருப்பலென
நிருத்தவிருப்பமுதுகுன்றவாணனைநீவலியுஞ்
செருத்தவிருப்பவுததியையாருணச்சிந்தைசெய்வார்
திருத்தவிருப்பவலையாவர்மெல்லுவர்தேமொழியே.

(இ-ள்.) தேன் மொழியே - தேன்போலும் மொழியையுடைய எனது மகளே,—இருந்த இருப்பது இடத்தில் அல்லாமல் இருப்பல் என-(தேவரீர்) இருத்திவைக்க நானிருந்துவாழ்வது இடப்பாகத்திலல்லாமல் (மற்றொருதானங்களில்) இருந்து வாழமாட்டேனென்று—நிருத்தம் விருப்பம் முதுகுன்றவாணனை நீ வலியும் செருத்தவிர் - நடனத்தின்கண்ணே ஆசையையுடைய பழமலைநாதனை நீ வலிந்துவாதாடும் சண்டையைவிட்டுவிடு;—உப்ப உததியை உணயார் சிந்தை செய்வர் - உப்பையுடைய சமுத்திரநீரைக் குடிப்போமென்று யாவர்நினைப்பார்;—இருப்பு திருத்த அவலை யாவர் மெல்லுவர் - இரும்பினாலே திருத்தமாகச்செய்யப்பட்ட அவலை யாவர் மென்று தின்பார். எ - று. [நற்றாயிரங்கல்.] முடியாதென்பது கருத்து. (கூரு)

தேவியுமானும்விளையாடிடமுடைச்செங்கணுத
லாவியுமானும்வருஞ்சீர்முதுகுன்றணிவிழவைக்
காவியுமானும்விழியாய்கண்டெய்தெனக்கண்மறுநி
னேவியுமானும்மகட்கிடர்நீர்செய்திரோழையரே.

(இ-ள்.) ஏழையரே - பேதைமையுடைய தாய்மார்களே,—காவியும் மானும் விழியாய் - (பிறவற்றையேயன்றி) நீலோற்பலமல

ரையும் ஒப்பாகின்ற கண்களையுடைய புதல்வியே,—முதுகுன்று தேவியும் மானும் விளையாடு இடம் உடை நுதல் செங்கண் ஆவியும் ஆனும் வரும் - திருமுதுகுன்றத்திலே, உமாதேவியும் மானும் விளையாடாநின்ற இடதுபக்கத்தையுடைய சிவந்த நெற்றிக்கண்வாய்ந்த எமதுயிர்போலும் சிவபெருமானும் (அவரேறியருளும்) இடபவாகனமும்வருகின்ற—சீர் அணி விழவை கண்டு எய்து என கண் மறுகின் ஏவி - சிறப்புப்பொருந்திய அழகிய திருவிழாவைத் தரிசித்து வரக்கடவாயென்று விசாலம்பெற்ற வீதியிலே அனுப்பி,—உமால் நும் மகட்கு இடர் நீர் செய்திர் - உங்களாலேயே உங்களுடையபுத்திரிக்குத் துக்கங்களை நீங்கள் செய்தீர்கள். எ-று. [தலைவிவருத்தங்கண்டோர் தாய்மாரை நிந்தித்தல்.] (௬௬)

வடலையாறுகிழித்தெதிரேறவிண்ணேறுபுகழ்க்
கூடலையாறுபுலியூர்மகிழ்முதுகுன்றர்பெற்ற
வேடலையாறுமுயிர்த்தெடுத்தேந்துமென்கைகொடுத்
தாடலையாறுவருகவென்பார்கல்லுமைதனையே.

(இ-ள்.) வடு அலை ஆறு கிழித்து எதிர் ஏற விண் ஏறு புகழ்- (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பாசுரமெழுதிய) பனையேடு அலையையுடைய வைகையாற்று நீரைக்கிழித் தெதிரேசெல்ல விண்ணுலகமளவுஞ் சென்ற கீர்த்தியையுடைய—கூடல் ஐயாறு புலியூர் மகிழ் முதுகுன்றர் - மதுரையும் திருவையாறும் சிதம்பரமுமாகிய தலங்களை விரும்பிவீற்றிருக்கின்ற பழமலைநாதரானவர்,—பெற்ற வேள் தலை ஆறும் உயிர்த்து எடுத்து ஏந்து மென்கை கொடுத்து - தாம்பெற்ற முருகக்கடவுளை ஆறுதலைகளினுச்சியினும் மோ

ந்து இரண்டுகையினாலும் தழுவியெடுத்து ஏந்திக்கொண்டு மெல்லியகைகளிலே கொடுத்து,—நல் உமைதனை ஊடலை ஆறு வருக என்பார்-நல்ல உமாதேவியாரைநோக்கி நீ பிணக்கையொழி சமீபத்திலேவரக்கடவாய் என்றுசொல்லுவர். எ-று. (கஎ)

உமையிடப்பாகனலங்கூர்முதுகுன்றுடையனராச்
சுமையிடப்பாகவரிதேடடியுறத்தூமலர்க
டமையிடப்பாகமருவுவரோலவர்தங்களைப்பா
ரமையிடப்பாகனனுகானுதைநினைந்தஞ்சுவனே.

(இ-ள்.) உமை இடம் பாகன் - உமாதேவியாரை இடதுபாகத்திலுடையவரும்—நலம் கூர் முதுகுன்று உடையன் - நன்மைமிகுந்த பழமலையையுடையவருமாகிய சிவபெருமானது,—அரா சுமை இடப்பு ஆக அரி தேடு அடி உற - ஆதிசேஷனுக்குச் சுமையாகிய இப்பூவுலகமானது பிளவுபட விஷ்ணுமூர்த்தியினால் தேடப்பட்ட திருவடிகளிலே பொருந்தும்படி,—தூ மலர்கள் தமை இட பாகம் மருவுவரேல் - சுத்தமாகிய புஷ்பங்களைக்கொண்டு அருச்சிக்கப் பரிபக்குவத்தை அடைவாராயின்,—அவர் தங்களை பாரம் மையிடம் பாகன் அனுகான் - அவர்களைப்பிடிக்கும்படி,கனத்த எருமைக்கடாவைச் செலுத்தும் இயமனானவன் கிட்டான்,—உதை நினைந்து அஞ்சுவன் - (முன்பு உதைத்த) உதையை நினைத்துக்கொண்டு பயந்தோடுவன். எ-று. முதுகுன்றுடையன் அடி என இயையும். (கஅ)

அஞ்சுவணத்தைவரன்முறையோதவரக்கெறிந்த
பஞ்சுவணத்தைமருவுமென்குருமைபாகமொடு

செஞ்சுவணத்தையனைய நின்கோலமென் சிந்தையுற
விஞ்சுவணத்தைமகிழ்குன்றைவாண விரும்புவனே.

(இ-ள்.) விஞ்சு உவணத்து ஐ மகிழ் குன்றைவாண - மேம்ப
ட்ட கருடவாகனத்தையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் விரும்பிவ
ணங்கும் பழமலைநாதரே,—அஞ்சு வணத்தை வரன்முறை ஓத-பஞ்
சாக்ஷரத்தைக் கிரமப்படியே உச்சரிக்கவும்,—அரக்கு எறிந்த பஞ்
சு வணத்தை மருவும் மென் தாள் உமை பாகமொடு - செந்நிறத்
தை வீசுகின்ற பஞ்சினது அழகைப்பொருந்திய மெல்லிய திருவடி
களையுடைய உமாதேவியார்பொருந்திய இடப்பாகத்தோடு,—செம்
சுவணத்தை அனைய நின் கோலம் என் சிந்தை உற விரும்புவன்-
சிவந்த பொன்னை நிகர்த்த தேவரீருடைய திருமேனி என்னுடைய
மனதிலே எக்காலமும் நிலைபெறவும், ஆசைப்படுகின்றேன். எ-று
வர்ணம் என்பன வணம் என நின்றன. (கூ

விருத்தாசலாசங்கராமலைமாதுவிழிகளிக்கு
நிருத்தாசலசந்திரன்போலுடம்பிடைநின்றவர்தங்
கருத்தாசலசம்பவமிலர்க்காண்டறங்காட்டியசொற்
றிருத்தாசலசந்தமியேன்றலைக்குன்றிருவடியே.

(இ-ள்.) விருத்தாசலா - பழமலையையுடையவரே,—சங்கரா-
சுகஞ்செய்பவரே,—மலை மாது விழி களிக்கும் நிருத்தா - உமாதே
வியாருடைய கண்கள்களிக்கும் நடனத்தை யுடையவரே,—சலம்
சந்திரன் போல் உடம்பிடை நின்றவர்தம் கருத்தா-சலத்திற்காண
ப்படும் சந்திரன்போல தேகத்தின்கண்ணேநின்ற மெய்ஞ்ஞானிக
ளுடைய கருத்தரே,—சலம் சம்பவம் இலர்க்கு ஆண்டு அறம் காட்

டிய சொல் திருத்தா - பொய்யாகிய பிறவியை ஒழித்தவர்களாகிய சனகாதிகளுக்குக் (கைலைமலையிலே கல்லாலவிருக்ஷத்தினடியிலே) சகலதருமங்களையுமுணர்த்திய சொற்றிருத்தமுடையவரே,— தமியேன் தலைக்கு சலசம் உன் திருவடியே - அடியேனுடைய சிரசிலணிதற்குரிய தாமரைமலராவன தேவரீருடைய திருவடிகளேயாம். எ-று. சந்திரன் சலத்தினிடத்தே பிரதிபலித்துக் காணப்படினும், அதில் சம்பந்தமில்லாதிருத்தல்போல; ஞானிகளும் உடம்போடுகூடியிருப்பினும், அதிற்பற்றற்று உடையானிடத்தே பற்றுடையராயொழுகல்பற்றி, சலசந்திரன்போ லுடம்பிடைநின்றவர் தங்குருத்தா என்றார். சொல்லாலுணர்த்திய அறங்களையெல்லாம் குறிப்பாற் றிருத்தினமைபற்றி சின்முத்திரையைச் சொற்றிருத்தமென்றார். அச்சின்முத்திரைக்குப் பொருளாவது மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர் அம்மலர்த்தாணிழலடங்கும் என்பது. திருவடியே என்னும் ஏகாரம் பிரிநிலை.

(௧00)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

கணபதிதுணை.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௭	௯	பழலை	பழமலை
௧௩	௨	விழ	விலக
௨௧	௧௨	யுடைவ	யுடையவ
௨௬	௧௬	வாவம்	வாகும்
௨௭	௪	கைளு	கைகளு
௩௫	௧௨	துதிக்	துதிக்கவிளங்
௩௬	௧௩	தையும்	தைத்

உ

கணபதிதுணை.

பிரசித்தபத்திரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் தண்டையார்பேட்டை திருவொற்றியூர் ஹைரோட்டு 279 - வது நெம்பர் வீட்டில் நம்மிடத்திலும், சென்னபட்டணம் மூத்தியாலுபேட்டையில் கலாரத்நாகர அச்சுக்கூடத்தலைவராகிய ம - ா - ா - ஸ்ரீ, உ-புஷ்பரதசெட்டியாரவர்களிடத்திலும், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ, பொன்னுசாமிப்பிள்ளையவர்களிடத்திலும், சிதம்பரம், ஸ்ரீசபாநாயகர் திருவனந்தல் காலைசந்திக்கட்டளை ம-ா-ா-ஸ்ரீ, கந்தசுவாமிமுதலியாரவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அண - க. தபாற்கூலி அண - ௨.

இங்ஙனம்,

க. வ. திருவேங்கடநாயுடு.

டையநின் றன்னையென் றுணர்வேன், புவிமுத லனைத்து மாக்குத லளித்தல் போக்குத லுயிர்வினை யருத்தல், புதிதுறச் செம்பிற் களிம்பென வறிவைப் புணர்மல மகற்றுத லென்று, மிவைபல வியைந்தும் விகாரமொன் றின்றி யிரவிபோ னின்றகா ரணனே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (எ)

தான்பெறு மழலை மொழிமகன் றன்னைத் தன்கையா லுளங்களித் தரிந்து, சமைத்தல கறிய விடுபெருந் தொண்டன் றனைச்சிறுத் தொண்டனென் றவன்சே, யூன்பெறு நீயே யுரைத்தனை யென்று லுரிமையோர் சற்றுமி லாதே, னுன்றிருத் தொண்ட னென்றிருப் பதனுக் குன்னுதல் பெரும்பிழை யன்றே, தேன்பெறு நளின மலர்களா யிரத்தோர் செழுமலர் குறைபட விரைந்து, செங்கணென் றிடந்து குறையற நிரப்பித் திருமறைச் சிலம்படிக் கணியா, யான்பெறு நிதியே யென்றுல களந்தோ னேத்திநின் றிறைஞ்சுறு மமுதே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே(அ)

நின்புகழ் பாடும் பாணனார் தமக்கு நிதிதரச் சேரலன் றனக்கு, நீமுன முடங்க லொன்றளித் ததுபோ னிகரிலா வசவநா யகன்ற, னன்பினி லொருநூ றாயிரங் கூறிட் டடுத்தகூற் றினிலொரு கூறிங், களிப்பதற் குனது திருமுக மருளா லடியனேற் களிக்குநா ளுளதோ, பொன்புரை கடுக்கை மலர்ந்தசெம் பவளப் புரிசடைப் பேரருட் குன்றே, புணர்முலைக்கயற்கட் பிறைநுதற் கனிவாய்ப் பொற்றொடி யிடத்துவா ழமுதே, யென்பும்வெண் டலையு மணிந்துநான் புனித னென்று

உ

க. அபிஷேகமாலை.

உ. பெருங்கழிநெடில்.

ங. குறுங்கழிநெடில்.

ச. நிரஞ்சனமாலை.

ரு. கைத்தலமாலை.

விலை அணா - க.

உ

சிவசண்முகன்றுணை.

இஷ்டலிங்கவபிஷேகமாலை.



பந்தமறுமார்யிருடர் பலருருத்திரர்களொரு பதினொருவர்மிளிர்பீடமேற், படியிலையைவகைப் படுமீசர்தாமிதம் பத்திலெண்வித்தையிறைவர், சந்தமுறுகோமுகத் தைங்கலைகள் சத்திசாதாக்கியமூர்த்திவதனங், சட்டற்றவட்டத்திலொட்டற்றசிற்சத்தி தாளுற்றகாளத்திலே, நந்தலறவருகோணகந்திகழ்சிதம்பர நற்சிகையினிற்குனிய, நட்டமறவமைகின்ற விட்டவடிவொடுநின்ற ஞானமயமோனநடுவோ, டந்தமறமுந்துபர மானந்தநீநந்த வபிடேகமாடியருளே, யறிவுற்றெணங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே.

நாடரியசத்தியோ சாதத்தும்வாமத்து நன்றுமகோரத்தினு, நவையற்றபுருடத்து மாகமமொராவ்வைந்து நல்கியீசானத்திலே, பீடுதருமெட்டுமுறை தந்தவற்றிடைநீசொல் பெருமைபெறுமருமைவிதியிற், பேசரியபூசைசிவ கோசரியெனப்புரிதல் பெற்றிலேன்மற்றடியனேன், வேடுவர்குலத்தலைவன் மெய்யன்புபூண்டிலேன் வேட்டொருவர்மாட்டருளினான், மீக்கொளொருபுடையொப்பு நோக்கிலைவத்தனைசாற்றின் வேண்டல்வேண்டாமையிலையா, லாடுநின்பால்வேறுபாடொன்றிலாமையா லபிடேகமாடியருளே, யறிவுற்றெணங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (உ)

நவிற்றலருமிதயமிளிர் கண்டாவடிபுருவ நடுவுபிரமப்பு
ழையெனு, நல்லிடத்தகராதி கிரியாதிமனமுதல நண்ணியு
மைம்மூவகை, யிவற்றிலொவ்வொன்றகல நின்றவிடயங்க
ளெதிர் வின்றிச்சிவாகாரமா, யெதிருநனவுஞ்சோகமென்று
பாவித்தலுறு மென்கனவுஞாதருவொடே, யுவப்பறிவுஞேய
மெனை வுற்றனுபவித்திடு மொண்சுழுத்தியுஞானமே,யொளிர்
துரியமுந்தினைத் துயர்சிவானந்தநுகர் வுறுமதீதமுமாகுநல்,
லவத்தைகள்கடந்தவற் றப்புறப்படுமமல னபிடேகமாடியரு
ளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபி
டேகமாடியருளே. (௫)

ஒருவனோர்பொருளிலாற் குற்றுதவினுளம்வியந் தொகை
பெறுமன்றியுடைமை, யுதவுருவமையத்தி லுதவினுந்தன்னி
டத் துள்ளதிற்பெரிதளிக்கும், பொருளதாயினுமதனி னினிய
தாயினுமவன் புந்திமகிழ்வுற்றிடுவனால், புனல்விடுத்திடுமுடி
யி னிற்புணரியிற்பெருகு புண்ணியத்தெய்வநதிதான், மருவ
லானீர்விருப் பிலைநினக்கொருதிவலை மற்றென்முடியிற்றெறி
ப்பின், வைப்பன்வானத்தினென வெத்திறத்தானுநினை மக்க
ணினைவுற்றுயந்திட, வருளினன்முனம்விதித் தவனுதலான்ம
கிழ்ந் தபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறி
வுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (௬)

கருகிச்சிவந்தகடு வருகிப்பொருந்தமிளிர் களம்வாழ்வு
மேவவணிவாய், கடலிற்சிறந்தநிற வுடலிற்றிருந்துமணி கதி
ர்போலவேயுநெடுமா, லொருகட்கிசைந்தவடி யிருசட்கிணை
கவற முடையார்முனோடிவருவா, யுலகத்தைவென்றமன
மிலகுற்றமன்றினிடை யுமைகாணவாடல்புரிவாய், மருகற்

பெரும்பதியி லொருகற்பணங்குதொழ மணவாளனுவியந் வா, மயிலைக்கணென்பினுயிர் பயில்வுற்றெழுந்துவர வருவா யெனுமுனைழயா, வருகர்க்கணங்குதரு முருகர்க்குகந்தவ ரனபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற் றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (௫)

ஓகைமலிகுருவானை யுறுவிக்குமானையு முயர்புராதனசரி தமோ, டொக்குநடைவருவிக்கு முவமையுந்தன்மகனை யொண்சுவத்திகமேற்றுபு, சோகமறுமனுமயஞ் செய்தமைத்திடு மொரு சுவத்திகாரோகணமுநூல், சொல்லியவிடங்களிற் றூயநீறணிதருந் தொல்விபூதிப்பட்டமு, மாகலசதராட்டிக லசாபிடேகமு மருவுசிவநோக்குவிக்கும், வயங்குலிங்காயத மு மன்னுசிவலிங்கமுரு வனைசுவாயதமுமெனுமே, ழாகுநெ றிதான்மருவி யாகமிசையிலகுமர னபிடேகமாடியருளே, ய றிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடி யருளே. (௬)

போயகுலமொடுசரண ரொடுமேவுசமயமும் பொன்றுலகம்விட்டமலனூர், பூசனைகொளரியநிச் சஞ்சாரமுங்கொடிய பொன்பெண்மண்ணசைநெறியிற், பாயமனமோடாத நிட்பி ராணமுமெய்ம்முப் பத்தாறுதத்துவமறப், பகுதியொடுணர் த்துதத் துவமுமிறையஞ்சனி பாலொன்னுமான்மிகமுமே, மே யசடுலிங்கமுட னுறங்கமாகுமொரு மெய்யனுக்கிரகநிலையும், விமலமுறுசச்சிதா னந்தசிவமயமென்னு மிக்கசத்தியசுத்த மு,மாயவெழுவகைநெறியி னுவியிடையிலகுமர னபிடேகமா டியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை ய பிடேகமாடியருளே. (௭)

கிடைத்தசிவலிங்கமன் றுணராதவேகாக் கிரசித்தமென்
னும்விரதங், கெடாததிடவிரதம்விட யங்கள்சிவனுக்குதவு
கின்றவிந்திரியார்ப்பித, முட்டற்றியுயிர்கொன்றிடா கின்றிடும
கிஞ்சைசிவ னுண்மைகொளிலிங்கநிசமே, யுயர்சிவத்துளம
டங் குறுமனோலயமதனி லொன்றுகிநின் றுபேதம், விடுத்த
லுறுசத்தியோன் முத்தியெனுமிவையேழு மிக்ககுருவருள்
புரியவே, மேவலருமெய்ஞ்ஞான பாவநிலைமேவியிடும் வேத
முடியாவுமுணரா, தடுத்தமனமொழியுடற் கப்புறப்படுமமல
னபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்ற
மர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (அ)

நல்லதிலநெய்யாடி யானிடத்தைந்தாடி நவையிலையமுத
மாடி, நல்குகாரணகாரி யம்முறையினன்றியே நறுநெய்பா
றயிராடியே, மெல்லமலர்மதுவாடி யின்கழைச்சாறாடி மென்
பழச்சாறாடியே, விழையுமிளநீராடி யாரக்குழம்பாடி விதியி
னமைநபனமாடி, யொல்லைநறுவெண்டலைப் புழையினிடை
யோடிநல் லுத்திகொடுபைத்ததலைய, வுரகநுழைவுறவிளங்
குழவிமதியொருபுடை யொதுங்கவிடமின்றியசைய,வல்லல
றநிறைகங்கை யசையாதுநிற்பநீ யபிடேகமாடியருளே,
யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமா
டியருளே. (கூ)

நார்கடமினரசரவர் தமினியதிவவியாழ் நண்ணுநரகந்த
ருவர்தா, நவிலுமவர்தமினமா கந்தருவரவர்தம்மி னுடரிய
தேவரவரிற், சுரரதிபனவனினுயர் சுரர்குருவனவனினயன்
சொன்முறையினாறுமடிமேற், றன்னுசகமொருதிவலை யள
வுமின்முகமிகு சுகவேலைபுகலீகுவாய், தரைமுதற்பூதங்கள்

புத்திகுணதத்துவந் தகுதிபெறுபகுதிபுருட, தத்துவம்வித் தைமுத லனவெனுமிவற்றிலறு சமயரெனவெமைவிடாம, லருளினிணையடைதலுறு மரியபதமருளுமவ னபிடேகமாடி யருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபி டேகமாடியருளே. (௧௦)

அபிஷேகமாலைமுற்றிற்று.

நெடுங்கழிநெடில்.

பெருகுறு மன்பாற் பூசனை புரிந்த பிணங்குநூற் சிலம்பி வெவ் வரவம், பிறைமருப் புறக்கால் யானையென் றிவற்றின் பிறவியோ விதழ்முறுக் கவிழ்ந்து, முருகுமிழ் நறுமென் ம லர்புனைந் தன்னை முற்றும்வந் தனைபுரி யாமன், முகிழ்முலை மகளிர் மயலிடை யழுந்து மூடர்தம் பிறவியோ நல்ல, தி ரைபொருங் கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ் செஞ்சடை மிசையொரு துளிநீர், தெறித்தவர் தமையு நறவுகொப் பளி க்குஞ் செழுமலர்க் கற்பக வேந்து, மெரியுறை யிதழ்ச்செங் கமலநான் முகனுமெய்தரும் பதத்தில்வைத் தருள்வோ,யிட் டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலாமணியே()

கட்டழ கமைந்து காளையம் பருவங் கடந்திடா துள்வலி யுடைத்துக், கலங்கல்செய் பிணியின் றியன்றயாக் கையரா ய்க் கல்வியங் கடல்கடந் தவராய், நட்டவர் விரும்பு மாறுநீ செய்ய நடக்குநா ளுடல்வெறுத் தனையே, நம்பியா ரூரன் முதலியோர் நன்ன நாளுடல் விடுமென வழிவேன், பட்டி

ருள் விழுங்க வலர்கதி ரவனும் பனிமதி யோடுயிர்த் தொகையும், பார்புனல் சுடுதீ வளிவிசும் பென்னப் பட்டவைம் பூதமு மாகு, மெட்டுரு வடைந்து முருவமொன் றின்றி யிற்றென வுணர்வரும் பொருளே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (உ)

மனமெனும் வயமா வென்வயப் படாமன் மயங்குறு மைம்புல வீதி, மறிபடா தோடு கின்றது முறையோ மறித்ததை திருத்தியென் றனக்கு, நினையல துதவு வாரிலை யதனு னினைப் பரவுற்றன னதனை, நிறுத்திநீ யிவர்ந்து பின்னர்நீ வேண்டு நெறிகளிற் சென்றிட விடுவாய், கனலுறு மெழுகி னெஞ்சநெக் குடைந்து கரையில்பே ரன்பெனும் வெள்ளங், கண்வழி புறப்பட் டென்னநீர் வாரக் காலங்க டொறும்வழு வாம, லினமலர் தூவு மடியவ ருள்ளத் திருள்கெட வெழுந்தபே ரொளியே,யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ஙா)

விலங்கடந் தவன்முன் னறுமலர் சாத்த நிகரிலம் மூர்த்திமுன் சந்து, நினக்கணி வுறவாட் டாயர்முன் னிருந்து நிவேதனம் புரிந்திட வன்று, நலங்கிளர் கலையர் கலியர்முன் றூபநல்விளக் களிப்பநின் றன்னை, ஞானசம் பந்தப் பிள்ளைமுன் பாட நாணிலேன் பூசனை புரிவேன், விலங்கினுங் கடையர் வளர்த்தசெந் தீயின் விரைந்தெழும் வாள்வரி வேங்கை, விடுப்பவங் கதுவந் தெதிர்ந்திட விகழ்ந்த விடாததன் றோலுரித் திருள்கொண், டிலங்கொளி யிரவி யனையமெய்ப் படுத்த விறைவனே யகிட்டநின் றகற்றி, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே, (ச)

மூக்கிடை யிரண்டு விழிகளே நுதன்முன் முடக்குகைக் கோலொரு காலா, முன்னநின் றிருவாய் மலர்ந்தருள் செய்த முதிர்கலைப் பொருள்படித் தவராய்க், கார்க்கடன் முகட்டி னிரவிவந் தெழுமுன் கடிதுசென் றணிமலர் கொய்துன், கழற்கிடார் பிறப்பி னுய்ப்பிறப் பினிது கற்றவ ரிகழ்ந்திடா மையினு, னோக்கற நோக்கு முருவமே னாவா னுகர்ந்திடா வினியபே ரமுதே, நுதல்விழிக் கனியே கறைமிடற் றரசே நுவலரு மாயையிற் பிறவா, யாக்கைய துடைய வருட்பெருஞ் சட்லே யெழுந்தொடுங் காதவான் சுடரோ, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ரு)

திருக்குறு மழுக்கா றவாவொடு வெகுளி செற்றமா கியமன வழுக்கைத், தியானமென் புனலாற் பொய்புறங் கூற றீச்சொலென் கின்றவா யழுக்கை, யருட்கிளர் நினது துதியெனும் புனலா லவத்தொழி லென்னுமெய் யழுக்கை, யருச்சனை யென்னும் புனலினாற் கழுவா வசுத்தனே னுய்யுமா றுளதோ, விருப்பொடு வெறுப்பிங் கிலாதவ னென்ன வெண்மதி யோடுவெண் டலையும், விரைவழி புகுந்து வண்டினம் பசுந்தேன் விருந்துணுங் கொன்றைமென் மலரோ, டெருக்கையு மணிந்து மின்னொளி கடந்த வீர்ஞ்சடைப் பாந்தளு னுடையா, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (சா)

சிவமுட னமூர்த்தி மூர்த்திகர்த் திருவஞ் செயன்மலி கருமமென் றருநூல், செப்புதத் துவமுஞ் சதாசிவ னீசன் றிகழ்தரு பிரமனீ சுரனொ, டுவமையி லீசா னப்பெய ரவனென் றுரைத்திடு மூர்த்திக டாமு, முற்றவீ சான முதற்பிர பாவமு

டையநின் றன்னையென் றுணர்வேன், புவிமுத லனைத்து மாக்குத லளித்தல் போக்குத லுயிர்வினை யருத்தல், புதிதுறச் செம்பிற் களிம்பென வறிவைப் புணர்மல மகற்றுத லென்னு, மிவைபல வியைந்தும் விகாரமொன் றின்றி யிரவிபோனின்றகா ரணனே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (எ)

தான்பெறு மழலை மொழிமகன் றன்னைத் தன்கையா லுளங்களித் தரிந்து, சமைத்துல கறிய விடுபெருந் தொண்டன் றனைச்சிறுத் தொண்டனென் றவன்சே, யூன்பெறு நீயே யுரைத்தனை யென்று லுரிமையோர் சற்றுமி லாதே, னுன்றிருத் தொண்ட னென்றிருப் பதனுக் குன்னுதல் பெரும்பிழை யன்றோ, தேன்பெறு நளின மலர்களா யிரத்தோர் செழுமலர் குறைபட விரைந்து, செங்கணன் றிடந்து குறையற நிரப்பித் திருமறைச் சிலம்படிக் கணியா, யான்பெறு நிதியே யென்றுல களந்தோ னேத்திநின் றிறைஞ்சுறு மமுதே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே(அ)

இன்புகழ் பாடும் பாணனார் தமக்கு நிதிதரச் சேரலன் றனக்கு, நீமுன முடங்க லொன்றளித் ததுபோ லிகரிலா வசவநா யகன்ற, னன்பினி லொருநூ றாயிரங் கூறிட் டடுத்தகூற் றினிலொரு கூறிங், களிப்பதற் குனது திருமுக மருளா லடியனேற் களிக்குநா ளுளதோ, பொன்புரை கடுக்கை மலர்ந்தசெம் பவளப் புரிசடைப் பேரருட் குன்றே, புணர்முலைக்கயற்கட் பிறைநுதற் கனிவாய்ப் பொற்றொடி யிடத்துவா ழமுதே, யென்பும்வெண் டலையு மணிந்துநான் புனித னென்று

௳

க. தாலாட்டு.
உ. நெஞ்சுவிடுதூது.
ந. திருப்பள்ளியெழுச்சி.
ச. பிள்ளைத்தமிழ்.
ரு. கலம்பகம்.

சரித்திரத்துடன் விலை அணா - ச.

குருவாகி முத்தனு விற்கிரி யாதிகள் கொண்டொருமுன்
னுருவாய் மலமொழித் தாவிகண் மூவங்க மாவருளி
யொருவாது தான்முதன் முப்பொரு ளாகி யுங்குநிற்குந்
திருவாரு மென்கைத் தலிசிடை மேவுஞ் சிவலிங்கமே. (௨)

என்னை யறித லினையறி கின்ற வியல்பதென்று
அன்னை யெனவிட் டறிவான் றொடர்த லொருவனிழ
றன்னை யடியின் மிதிப்பான் றொடருந் தகைமைத்தன்றோ
பொன்னை நிகர்செஞ் சடைக்கற்றையென்கைப்புராந்தகனே.

தன்பொரு ளென்ப நினைப்பிறர் தம்பொரு டாவரமா
மென்ப னறிந்து முயிர்க்கே ளிருப்பவு மேதிலர்மெய்ப்
புன்புணர் வெஃகு மடமாதி னின்னிற் புறந்திரியு
மன்பறு மென்பவம் போமேயென் னங்கை யமர்ந்தவனே.

அங்கையி னெல்லி யெனவந்தெ னங்கை யமர்தவிளந்
திங்களங் கண்ணி நினையன்றிப் போய்ப்பிற தெய்வந்தொழு
கொங்கவிழ் பூந்துணர்க் கற்பக நீழற் குடிமுனிந்து [ல்
பொங்கெரி வெங்நிர யத்து டிருப்பப் பொருந்துவதே. (௫)

சித்து நிரஞ்சனத் துச்சூ னியத்துச் செயலுணாதீர்
நித்த வநாதி சரணன் சரணனந் நிட்களத்தே
யத்தனி மாலிங்க மாதியி ஞனயிக் காதிகளாய்
மெய்த்த வுனையென்று நீங்கேனெ னங்கை விடாதவனே. ()

கண்ணி விரவி செவியிற் றிசைநின் கருத்தின்மதி
யெண்ணுத விற்கனல் வானுத ரத்தி லுயிர்ப்பில்வளி
வண்ண வடியிற் புவியிந் திரனயன் மால்புயத்தி
வண்ணல் வதனத் தான்றொன்று மென்கை யமர்ந்தவனே.

காயங் கரணநற் பாவ மறிபவன் காணறிவு
ஞேயங்க ளாகி முதனடு வீறி னினக்கயலே
யாயிங் கொருபொரு ளர்ப்பிப்ப லென்ப தவிச்சையன்றே
பாயுஞ் சினவிடை யொன்றூரு மென்கைப் பரஞ்சுடரே. (௮)

சத்தங்க ளிங்கங்க ளாயே நிகழ்ந்தது சத்திபத்தி
சித்திங் கடைந்தது சைமுக வர்ப்பித சேடங்களாய்
மெத்தன் றிலங்குநின் ஞானந்த மேயென் விழிகளிப்பக்
கைத்தங்கு செம்பொரு ளேயருள்காட்டுங்கறைக்கண்டனே.

வான்குறித் தெய்யுங் கணைநுதிக் கேநிற்கும் வானெனவே
யான்குறித் தெய்தப் புகுமறி வின்க ணிருத்திகண்டாய்
கூன்குறித் திங்கட் சடையாய் மகரக் குழைதடவு
மான்குறிக் குங்க ணுமைபங்க னேயென்கைம் மாணிக்கமே.

பிரமமுந் தானு மயலென் றருச்சிக்கும் பேதநிலை
தருமம் மயலற நாளுகி நின்றனை தான்சிவமென்
றருமை வினையி லபேதம் புகாம லருச்சிக்குமா
திருமை வடிவுகொண் டிற்றேயெ னங்கை யிறையவனே. (கக)

கோலந் தருமடி நாப்பண் விருத்தநற் கோமுகமா
ஞாலங் கருதருங் கோளகந் தம்மி னயந்தடியேன்
சீலங் கொளுமரு ளாசார மாதி திகழ்ந்துநிற்கு
மூலங் கரணங் கலந்தங்கை மேவிய முக்கண்ணனே. (க௨)

மண்ணும் புனலுஞ் சுடுசெழுந் தீயும் வளியுமகல்
விண்ணும் படைத்து விளையாடிக் காக விழியிரண்டு
நண்ணுங் கருமணி யொன்றெனவே பவ நாசமுறக்
கண்ணுங் கருத்துங் கலந்துநின் றேயென்கைக் கண்ணுதலே.

நாக மெனவும்பின் கோக மெனவுமெய்ஞ் ஞானத்திறற்
சோக மெனவுஞ் சொலுமறி யாமை தொலைத்தொருநீ
யாக முழுது நிறைந்துநின் றுய்நல் லருட்கடலே
பாக மொருபெண் குடியாகு மென்கைப் பரஞ்சுடரோ. (கச

ஒன்றிரண் டாயவை பற்பல வாகி யுதித்தமுறை
சென்றிரண் டாகிப்பின் ஒன்றாகி நிற்குஞ் சிவமொடங்க
மென்றிரண் டாக வுரைப்பார் நினதிய லெய்திலர்காண்
மின்றிரண் டாலன்ன மேனிய னேயென்கை வித்தகனே. (

உறங்குத மென்றுறங் காநிற் பவரிலை யோங்கொளியாய்ப்
பிறங்கு முனையடைந் தோமென் றிருப்பது பேதைமைகா
ணிறங்குணி போல வெனைக்கொண்டு நின்ற நிலையினின்று
புறம்பக மொன்று மிலாதென்கை மேவும் புராந்தகனே (கசா

குருவிற் குதவு முடல்சரத் திற்குக் கொடுத்தனுறு
திருவிற் றிசமு நினக்கே தருமனஞ் சேயரிக்கட்
பொருவிற் புருவ மடமாதர் தம்மிடைப் போக்குறுமென்
கருவிற் கொழிவுள தோகர பீடத்தெங் கண்ணுதலே. (கஎ)

துயிலினும் போகினு நிற்கினும் வீழினுஞ் சொல்லினுமொன்
றயிலினுங் காணினுங் கேட்பினும் வாழினு மல்லலொடு
பயிலினுஞ் சோரினுந் தேறினு நீக்கினும் பற்றினும்பொய்
குயிலினுஞ் சோம்பினு நிற்கட வேனென்கைக்கொற்றவனே.

ஓடுந் தனமும் புகழும் பழியு முயர்விழிவுங்
கேடுந் திருவு மமுதமும் பற்கையுங் கேள்பகையும்
வீடுங் குடியு மகளிரு மன்னையும் வேறறவே
நாடுங் கருத்து வருமோ வெனக்கென்கை நாயகமே. (கக)

பாடு மவனுமொண் பாட்டுமப் பாடப் படுபவனு
நாடு மளவினி னீயன்றி வேறிலை நான்முகன்மா
றேடு மருமருந் தேயமு தேயிளந் திங்கண்முகிழ்
சூடு மணிவிளக் கேகர பீடத்திற் றூயவனே. (உ0)

இல்லாள் புதல்வ ரனைதந்தை பொன்மண் ணிடைவிழைவு
செல்லா மருளு மயறீர்ந்து நின்கழல் சேர்ந்துனக்கே
யெல்லா முதவுநற் சித்தத் துறைதுவை யென்கையுள்ளாய்
நல்லார் புகழ்தரு மாசார லிங்கமென் னுமமுற்றே. (உக)

பழியாம் பிறர்தம் பொருண்மனை வேட்கை பரதெய்வமோ
டொழியா வருடரு மட்டா வரண முவந்துகொண்டே
யழியா துயருநற் புத்தி யெனுங்கை யமர்வைகண்டாய்
மொழியா வருங்குரு லிங்கமென் றேயென்கைமுன்னவனே.

விடயங் களினண்ணி யானென தென்னு மிகையொருவி
யடையும் புலனினக் காக்குந் தவிரகங் காரப்பெய
ருடையங் கரமிசை நற்சிவ லிங்கமென் றுற்றனைகாண்
புடையம் பிகையொ டமர்வாயெ னங்கைப் புராந்தகனே. ()

நில்லா தியங்கும் வளியொடு கூடி நிலையழிந்தே
புல்லா விடயத் தலமர னீங்குபு பொய்யினெறி [ளாய்
செல்லா தொளிர்நன் மனத்தே யிருத்தியென் செங்கையுள்
கல்லா ரறிவருஞ் சங்கம நாமங் கடைப்பிடித்தே. (உச)

உடம்பு சதிபதி தானாய் விடயங்க ளுண்டுழலா
தடங்கு சதியொரு தானாகி நீபதி யாகவுனைத்
தொடர்ந்து நுகருநன் ஞானக் கரத்திடை தோன்றுவைமால்
கடந்து வருபிர சாதமென் றேயென்கைக் கண்ணுதலே. ()

யாறு ரடிமை சிவனே யிறையென் றிருப்பதுபோய்
நீநா னெனப்படும் பேத மிலாமை நெறியுதவு
மாறு துயர்ந்தசற் பாவத்து மாலிங்க மாகிநின்றாய்
வாறு டரியவ னேகர பீடத்து மாணிக்கமே. (௨௬)

உலகிய றன்னை யொருவாது பற்று முளத்தொளியா
யிலகிய நின்னைத் தெரிப்ப தொருவற் கெளிதுகொலோ
சிலைகவர் கையில் விளங்காய் பிடித்தல் செயுமவர்யார்
விலகுநின் றோளணி கொண்டவ னேயென்கை வித்தகனே.

ஆனந்த வாரிதி யாகிய நீகை யமர்ந்திருப்ப
நானந்த தீவிட யந்தேடிச் சென்றுண் டுநைந்தழிதல்
வானந் தமுதங் கரத்தே யிருப்பதை மாற்றியருந்
தீநஞ் சருந்துத லன்றோ நிரஞ்சன சின்மயனே. (௨௮)

உருவஞ் சுவைநிறை வாகிய மூன்று முவந்துகொண்டு
மருவங்க முள்ள முருவக லாதுள்ள வாறுநின்றா
யருவன் றுருவன் றருவுரு வன்றி யறிவுருவாய்க்
கருவின் றுலகம் படைத்தாடு மென்கைக் கறைக்கண்டனே.

கிள்ளேன் சிறிய ரினம்பெரி யோரை விரும்பியென்று
நள்ளேன் பிறர்மனைப் போக்கொழி யேன்மெய்ந் நடுநடுங்க
வுள்ளேன் றிருவடி நீழலி லென்னெஞ் சுருகிநையேன் [னே.
றுள்ளேன்றொரும்புசெயேனென் செய்கேனென்கைத் தூயவ

அழியும் பொருள்கொடுத் தேசங் கமத்திற் கழிவில்பொருள்
பழியும் பவமு மிலாதெய்த லாயும் பயனிலவாய்க்
கழியும் படிநெடு நாணீத் தமுதங் கமருகுத்தேற
கொழியும் பவமுள தோகர பீடத் துறைபவனே. (௩௧)

நிரஞ்சனமாலைமுற்றிற்று.

கைத்தலமாலை.

—:o:—

முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௧)

அன்ன மாயும்வெண் பிறைமருப் பேனமென் றுயு
முன்ன நான்முக னரணன் றேடரு முதல்வன்
பின்னு வார்சடைப் பெருந்தகை பீடமாக் கோடற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௨)

தன்னை மேவிவந் தனைபுரி பவன்செய றடுப்பா
னுன்னி மேல்வரும் வெந்திறற் கூற்றினை யுதைத்த
மன்னு மாலயற் கரியவன் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௩)

தன்னை நேர்வட காசிதென் கயிலைகே தார
மன்ன மார்வய லம்பல மென்றமர் வராமற்
கன்னன் மாமதற் றெறும்விழிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௪)

கன்ன லாரமு தினுஞ்சுவை தருவதாய்க் காண்பா
னுன்னு மாலயற் கரியதா மொருமலை யுச்சி
மன்னு மோர்பவப் பிணிமருந் தெளிதுவந் திருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௫)

அன்னை யாகியின் னுயிர்க்குயி ராமரு ளாளன்
பொன்னு மாரமு மணியுமா ரமுதமும் போல்வான்
றன்னை நாடொறுங் கண்டுகண் களிப்பதாச் சார்தற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௬)

அன்ன மூர்பவன் முதலியோ ரயயமென் றடைய
முன்ன மாலமுண் டவர்துயர் களைந்தருண் முதல்வன்
மின்னு மாமழு வலமுடை வீரன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௭)

பன்னு மாமறை தமிழினாற் பாடுநம் பிக்குப்
பொன்னு மாடையு மணிகளு மூர்தியும் பொருளு
மின்னு மீபவ னருளினன் மேவிவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௮)

பின்னும் வார்திரைக் கடலின்வீழ்ந் தமிழ்கையிற் பிடிப்ப
முன்ன மோர்புணை யகப்படு முறைமைபோற் பிறப்பி
னின்னல் கூர்பொழு தெம்பிரான் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௯)

தன்னை யோர்பொழு திறைஞ்சுவான் கருதியித் தரைமேன்
மன்னு மாலயம் யாண்டுள தெனவல மராமற்
பொன்ன வாமலர்ச் சடையுடைப் புனிதன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (௧௦)

கைத்தலமாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

பூதமுத லெல்லாமும் போக்கியவற் றுண்மறைந்து
ஞாதிருவா மென்னை நயந்தறிவித் திட்டானே. (எஉ)
எந்தைசிவ சாதனங்கட் கெல்லாந் திருநீறு
முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானே. (எ௩)
உருத்திரனே யையமிலை யோருருத்தி ராக்கந்
தரித்தவ னென்றெமக்குச் சாற்றும் பெருமானே. (எச)
ஒண்மறையின் கண்ணு முருத்திரமவ் வஞ்செழுத்துங்
கண்மணியென் றையமறக் காட்டு மருட்கடலோ. (எரு)
அருவாகி நின்றசச்சி தானந்த வீசன்
குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானே. (எசா)
பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமென வும்பேர் பெறுமிலிங்க மென்றானே. (எஎ)
நிரஞ்சரமென் றீசன் றிருவுரு விரண்டுட்
பரஞ்சரமென் றோதும் பவளவா யண்ணலோ. (எஅ)
அங்சம் புனைவோ னடிப்புனலல் லாதுபவப்
பங்கங் கழுவப் படாதென்று சொன்னானே. (எகூ)
அந்தக் கரணத் தழுக்கறுப்ப தெங்கள்பரன்
சந்தப் பிரசாதந் தானென்று சொன்னானே. (அ௦)
தருணமதிற் சீறுந் தனிவிழிகாட் டாமற்
கருணை குடியிருக்குங் கண்களொடு வந்தானே. (அக)
ஏருருந் தான்வா ழிடமேநற் காசியுந்தென்
னூருரு மம்பலமு மாக்குசிவ ஞானியோ. (அஉ)

தன்பாத தாமரைதோய் தண்புனலே கங்கையாய்
வன்பாச நீக்க வழங்குசிவ ஞானியோ. (அரு)

மண்படைத்த நான்முகனார் மானுடர்த மொண்முகத்திற்
கண்படைத்த பேறுபெறக் காட்டு முருவானே. (அச)

ஆர்க்குங் கொடுநோ யனைத்துங் கடைக்கண்ணாற்
றீர்க்குங் கருணைச் சிவஞான தேசிகனே. (அரு)

செப்ப முறவெனது சிந்தைவீட் டாசையெனுங்
குப்பை துகைத்துக் குடியிருக்க வல்லானே. (அசா)

தன்னையரு ளாளனெனுந் தன்மை யுலகறிய
வென்னையடி யாரோ டெழுந்தருளிக் காத்தானே. (அஎ)

மெய்த்த வறிவாம் விளங்குகதை யொன்றெடுத்துத்
தத்துவமா மட்கலத்தைத் தாக்கும் பெருமானே. (அஅ)

வழுவின்றித் தன்மா வலியுலக மேத்த
மழுவின்றிப் பாவ மரமெறிய வந்தானே. (அகூ)

இணையாது மில்லா விடர்ப்பவவே லைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானே. (கூ0)

ஊனே வுயிரோ வுயிர்க்குயிரோ வானந்தத்
தேனே வமுதோ சிவஞான தேசிகனே. (கூக)

அண்ட முழுது மணுவிற் சிறியவாக்
கொண்ட பெருமைக் குணக்குன் றனையானே. (கூஉ)

எங்கண் மலவிருளுக் கீண்டு மயிலைமிசைச்
செங்கதிர்போற் றோன்றுஞ் சிவஞான தேசிகனே. (கூ௩)

உ

கணபதிதுணை.

சிவஞானபாலையதேசிகர்

தாலாட்டு.

காப்பு. நேரிசைவெண்பா.

அவஞானம் போக்கி யருண்ஞான மாக்குஞ்
சிவஞான தேவன் றிருமுன் - றவஞானத்
தாலாட் டெனுந்தமிழைச் சாற்றுதற்கு நற்றுணையா
மாலாட்டு மாமுகத்தன் வந்து.

திருவருளா லென்னைத் தெரிவிக்க விங்குத்
திருவுருவாய் வந்த சிவஞான தேசிகனே. (௧)

என்றுநித்த பூரணமா யின்பவறி வுண்மையாய்
நின்றபடி நிற்கு நிகழ்பிரம மென்றானே. (௨)

தன்சத்தி யாலாந் தலமங்க லிங்கமென
வென்சத்தி பாதத் தெழுந்தருளிச் சொன்னானே. (௩)

நண்பாகு மிட்டலிங்க நன்றாம் பிராணலிங்க
மொண்பாவ லிங்கமா மோர்பொருளிங் கென்றானே. (௪)

ஆசார லிங்கமுட னாருங் குருலிங்கந்
தேசாரு மிட்டலிங்கஞ் சேர்ந்தாகு மென்றானே. (௫)

அந்தப் பிராணலிங்கத் தாகுஞ் சிவலிங்க
மிந்தச் சரலிங்க மென்றசிவ ஞானியோ. (௬)

பாவலிங்கந் தன்னிற் பரமப் பிரசாதந்
தாவகன்ற மாலிங்கஞ் சார்ந்துவரு மென்றானே. (௭)

ஏகாங்க மேயாகு மின்பத் தியாகாங்கம்
போகாங்கம் யோகாங்கம் போற்றியறி யென்றானே. (௮)

பத்தனுமா யேசனுமாம் பன்னுந் தியாகாங்க
முய்த்துணரி னென்ன வுணர்த்தும் பெருமானே. (௯)

பிரசாதி யோடு பிராணலிங்கி யாகு
முறைசாரும் போகாங்கமொன்றென் றுசொன்னானே. (௧௦)

சாற்றுமியோ காங்கஞ் சரண னயிக்கியனும்
போற்றிநீ காணென்று போதித்த தேசிகனே. (௧௧)

அங்க நவவிதமு மந்தநவ லிங்கமொடு
தங்கு மெனவெனக்குச் சாற்றும் பெருமானே. (௧௨)

விழுங்கல் பருகலொடு மெல்லலா சார
மொழுங்கிற் குருசிவமு முற்றிடுமிங் கென்றானே. (௧௩)

சோகிய லேகியமுஞ் சொன்ன விவற்றறிவு
மேகியுறும் பின்மூன் றிலிங்கத்து மென்றானே. (௧௪)

இந்தக்கா யார்ப்பணங்க ளிட்டலிங்கத் தென்றெனக்குச்
சந்தப் படவுரைத்துத் தந்தசிவ ஞானியோ. (௧௫)

பீடமிடை வட்டம் பெருங்கோ முககாள
மாடனுற கோளகமா சாராதிக் கென்றானே. (௧௬)

நாற்றஞ் சுவையுருவ நல்லூ றொலிநிறைவு
சாற்றுஞ் சடுலிங்கஞ் சாருமெனச் சொன்னாளே. (௧௭)

வேர்முதலாங் கந்தம் விளங்கு மரமுதலாங்
கூர்மணமா சாரங் குருவினிலா மென்றாளே. (௧௮)

தளிராதி கந்தமுகை தான்முதலாங் கந்த
மொளிரார் சிவசரத்தி னுற்றிடுமிங் கென்றாளே. (௧௯)

காய்முதலாங் கந்தமெலாங் காசில்பிர சாதத்துந்
தூய்மலிமா லிங்கத்துந் துன்னுமெனச் சொன்னாளே. (௨௦)

மதுரந் துவர்கார்ப்பு வண்புளிகைப் பெல்லாஞ்
சதுரொன் றிருத்தியவா சாராதிக் கென்றாளே. (௨௧)

பொன்மைவெண்மை பச்சைமாஞ் சிட்டபோ தங்களெலா
நன்மையவா சாராதி நண்ணுமென்ற நாயகளே. (௨௨)

வன்மைமென்மை வெம்மைதண்மை வாய்ந்தமிசிரமெலாஞ்
சின்மையவா சாராதி சேர்ந்துகொளு மென்றாளே. (௨௩)

கஞ்ச நரம்புதோல் கண்டகுழ லாதியொலி
யஞ்சொலிவை யெல்லாமவ் வாறாறு மென்றாளே (௨௪)

மணமுதலா மைந்து வகைநிறைவெ லாமு
நணுமுறையா சாராதி நாடிலெனச் சொன்னாளே. (௨௫)

இம்முறையா றாறு மிலங்குகரு ணார்ப்பிதமென்
றெம்மறிவு கொள்ள வியம்புசிவ ஞானியோ. (௨௬)

தொட்டறிந்திங் கொன்றைத் துணிந்து நுகர்ந்துமகிழ்ந்
திட்டமைந்து நிற்கு மிலிங்கங்க ளென்றாளே. (௨௭)

கூறுமிவை யாவினுமிக் கொள்கை பெறுமிலிங்க
மேறு மிரட்டுநூற் றெட்டாகு மென்றானே. (௨௮)

உருவஞ் சுவைநிறைவா யோங்கர்ப் பிதங்கண்
மருவுந் திறஞ்சொன் மயிலை மலைவிளக்கோ. (௨௯)

சுத்தசித்த மோடுபிர சித்தமெனத் தோன்றுபுயா
சத்தமுத்த மாக்குபிர சாதமரு ணையகனே. (௩௦)

அங்கலிங்க சத்திபத்தி யத்தமுக வர்ப்பிதசே
டங்களிவை யட்ட சயிலமெனச் சொன்னானே. (௩௧)

குசித்த மழிந்து குடும்பநோய் மாற்றுஞ்
சுசித்தமதி லாசாரந் தோன்றுமெனச் சொன்னானே. (௩௨)

குபுத்தி யழிந்து குருநெறியி னிற்குஞ்
சுபுத்திதனி னிற்குஞ் சுடர்குருவிங் கென்றானே. (௩௩)

ஆங்கார மில்லா நிராங்கார வத்தமதி
னீங்கா திலகு நிகழ்த்துசிவ மென்றானே. (௩௪)

கமணா மழிந்து கறையற்று நிற்குஞ்
சுமனமதி னின்றிலகுந் தூயசர மென்றானே. (௩௫)

மெய்ஞ்ஞான மாகி மிளிரும் பிரசாதஞ்
சுஞ்ஞான வத்தமதிற் றோன்றுமெனச் சொன்னானே. (௩௬)

துற்பாவ நீங்கித் துணிவுபடு மத்துவித
சற்பாவ மாலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (௩௭)

ஆதார பீடங்க ளாறினுமவ் வாறிலிங்க
மீதாக வைத்து விளங்கச்செய் வித்தகனே. (௩௮)

ஆறு முகங்களுமவ் வாறுசா தாக்கியமு
மாறு வருணமுமா மாறிலிங்க மென்றானே. (௩௯)

பத்தமொடு மாயேசன் பார்ப்பரிய வாசார
மெய்த்தகுரு நான்கும் விளங்குகுரு வென்றானே. (௪௦)

பிரசா தியுமப் பிராணலிங்கி தானு
முரைசால் சிவசரமு மோங்கிலிங்க மென்றானே. (௪௧)

ஒழிந்தவங்க லிங்க மொருநான்கு நம்பா
லெழுந்தருளுஞ் சங்கமமென் றின்பந் தருவானே. (௪௨)

உருவ முருவருவ முற்றறிதற் கெட்டா
வருவமென நின்றிடுமவ் வாறமெனச் சொன்னானே. (௪௩)

மாசுதரு தூலாதி மானவிசு வாதியே
யாசி றியாகாங்க மாதியா மென்றானே. (௪௪)

விரிந்தன வெலாமும் விரிந்தமுறை சென்றே
யொருங்கியங்க லிங்க வுபயமா மென்றானே. (௪௫)

கடத்தி னுபாதியா காயமுற்ற வாபோ
லடுத்த வுபாதியா லங்கலிங்க மென்றானே. (௪௬)

தங்கு மிலிங்கமாந் தற்பதமத் தொம்பதமே
யங்க மயிக்கிய மசிபதமென் றுண்டானே. (௪௭)

ஆக முயிர்துரிய மைய்நின்ற போதெமைத்தான்
சோகமனத் தானகத் தோன்றும் பெருமானே. (௪௮)

அமைத்தபாஞ் சுத்தத் தசுத்தமதிற் சீவன்
றமப்பகுதி யிற்றோன்றுந் தத்துவங்க ளென்றானே. (௪௯)

தாலாட்டு.

நிரஞ்சன சூனியமா நிட்களத்திற் சித்து
வருஞ்சுடர்சின் னாதாதி வாய்ப்பவெனச் சொன்னானே. ()

மூலசித்து நாதாதி மூன்றும் புணர்ந்தாகு
மாலகற்றுஞ் சோதிமய மாலிங்க மென்றானே. (௫௧)

அகாராதி மாலிங்கத் தாகியவை கூடித்
தகவாமோங் கார சதாசிவமா மென்றானே. (௫௨)

அந்தச் சதாசிவத்தி னைம்முகத்து மைம்பூதம்
வந்துற் றிதயத்தான் மாவருமிங் கென்றானே. (௫௩)

அப்பூதம் பஞ்சீ கரித்திருபத் தைந்தாகி
மைப்பூணு மான்மாவை மன்னியிடு மென்றானே. (௫௪)

ஆணவத்தான் மூடனா மாருயிர்க்கு முன்வினையான்
மாண வளிக்குமிறை மாயைவடி வென்றானே. (௫௫)

மேலைவினை யாலுழலு மெய்யுயிர்க்குப் பாகமலக்
காலமுறச் சுத்தக் கரணமா மென்றானே. (௫௬)

கூறுமனச் சுத்தமுறக் கொண்டுபிண்ட நாமத்தை
நூறு தலநெறியு நோக்குமெனச் சொன்னானே. (௫௭)

கிரியைமன பாவங் கிடைப்பரிய ஞான
மருவிடா தங்கம் வயங்குமெனச் சொன்னானே. (௫௮)

ஞாதிருவு நின்றறியு ஞானஞே யங்களுமற்
றேதமற வென்று மிருந்தபடி வைப்பானே (௫௯)

வானேத்த வென்று மருவற் கரியபத
நானேத்த நல்குசிவ ஞானகுரு தேசிகனே. (௬0)

மிடியற் கெளிது விழியுற்ற பொன்போ
லடியற்கு வந்திங் ககப்பட்ட வாரமுதோ. (சுக)

கயிலைமலை மேவுங் கடைப்பிடியாற் சீர்சான்
மயிலைமலை மீதிங்கு வந்தமர்ந்த மாமணியோ. (சுஉ)

எல்லாக் கலையுணர்ந்து மெய்தாப் பொருளையொரு
சொல்லாற் றிகழ்த்துதற்குத் தோன்றும் பெருமானே (சுஙா)

சீலந் திகழ்த்துமதிச் சின்னமின்றி யும்படியோர்
கோலஞ் சிவமெனவுட் கொள்ளுமருட் குன்றமோ. (சுச)

மண்களிக்க நாயேன் மனங்களிக்கக் கண்டுகொண்டு
கண்களிக்க வந்த கருணைப் பெருங்கடலோ. (சுரு)

சம்பந்த னன்றொருநாட் டாலுண்ட பாலனுரே
மெம்பந்த நீங்க வினிதமுது செய்தானே. (சுசா)

வேண்டுவவெல் லாமுமாம் வெண்ணீ றளிப்பதற்குத்
தீண்டு மலர்க்கைச் சிவஞான தேசிகனே. (சுஎ)

இம்மை மறுமை யிரண்டும் பெறவெமக்குச்
செம்மைதர வந்த சிவஞான தேசிகனே. (சுஅ)

அரசமய மன்றி யகங்களித்தெஞ் ஞான்றும்
பரசமய மும்பணியும் பங்கயப்பொற் றாளானே. (சுகூ)

தானபங்க னென்னுமதன் றன்றுணை யைக்கடந்து
மானபங்கம் பண்ணும் வலியொன் றுடையானே. (எ௦)

அறியா தொருநா ளறையினும்வன் பாசஞ்
செறியா தருளுந் திருப்பே றுடையானே. (எக)

பூதமுத லெல்லாமும் போக்கியவற் றுண்மறைந்து
ஞாதிருவா மென்னை நயந்தறிவித் திட்டாரே. (எஉ)

எந்தைசிவ சாதனங்கட் கெல்லாந் திருநீறு
முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானே. (எ௩)

உருத்திரனே யையமிலை யோருருத்தி ராக்கந்
தரித்தவ னென்றெமக்குச் சாற்றும் பெருமானே. (எச)

உண்மறையின் கண்ணு முருத்திரமவ் வஞ்செழுத்துங்
கண்மணியென் றையமறக் காட்டு மருட்கடலோ. (எரு)

அருவாகி நின்றசச்சி தானந்த வீசன்
குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானே. (எசா)

பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமென வும்பேர் பெறுமிலிங்க மென்றானே. (எஎ)

திரஞ்சரமென் றீசன் றிருவுரு விரண்டுட்
பரஞ்சரமென் றோதும் பவளவா யண்ணலோ. (எஅ)

அங்சம் புனைவோ னடிப்புனலல் லாதுபவப்
பங்கங் கழுவப் படாதென்று சொன்னானே. (எக)

அந்தக் கரணத் தழுக்கறுப்ப தெங்கள்பரன்
சந்தப் பிரசாதந் தானென்று சொன்னானே. (அ0)

தருணமதிற் சீறுந் தனிவிழிகாட் டாமற்
கருணை குடியிருக்குங் கண்களொடு வந்தானே. (அக)

ஏருருந் தான்வா ழிடமேநற் காசியுந்தென்
னூருரு மம்பலமு மாக்குசிவ ஞானியோ. (அஉ)

தன்பாத தாமரைதோய் தண்புனலே கங்கையாய்
வன்பாச நீக்க வழங்குசிவ ஞானியோ. (அங)

மண்படைத்த நான்முகனுர் மானுடர்த மொண்முகத்திற்
கண்படைத்த பேறுபெறக் காட்டு முருவானே. (அச)

ஆர்க்கும் கொடுநோ யனைத்துங் கடைக்கண்ணுற்
றீர்க்குங் கருணைச் சிவஞான தேசிகனே. (அரு)

செப்ப முறவெனது சிந்தைவீட் டாசையெனுங்
குப்பை துகைத்துக் குடியிருக்க வல்லானே. (அசு)

தன்னையரு ளாளனெனுந் தன்மை யுலகறிய
வென்னையடி யாரோ டெழுந்தருளிக் காத்தானே. (அஎ)

மெய்த்த வறிவாம் விளங்குகதை யொன்றெடுத்துத்
தத்துவமா மட்கலத்தைத் தாக்கும் பெருமானே. (அஅ)

வழுவின்றித் தன்மா வலியுலக மேத்த
மழுவின்றிப் பாவ மரமெறிய வந்தானே. (அகூ)

இணையாது மில்லா விடர்ப்பவவே லைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானே. (கூ௦)

ஊனே வுயிரோ வுயிர்க்குயிரோ வானந்தத்
தேனே வமுதோ சிவஞான தேசிகனே. (கூக)

அண்ட முழுது மணுவிற் சிறியவாக்
கொண்ட பெருமைக் குணக்குன் றனையானே. (கூஉ)

எங்கண் மலவிருளுக் கீண்டு மயிலையிசைச்
செங்கதிர்போற் றோன்றுஞ் சிவஞான தேசிகனே. (கூங)

அற்பகலு மாறு தானடியார்க் கிதேலுறுங்
கற்பகமாய் வந்துதிருக் காஞ்சிநக ருற்றானே. (௯௪)

பூணு மருள்வசவன் பூண்டசர பூசையன்று
காணு வெமக்கின்று காட்டுசிவ ஞானியோ. (௯௫)

விருப்புவெறுப் பின்மை விளக்கவென்புன் சொல்லைத்
திருப்பதங்கொள் கின்ற சிவஞான தேசிகனே. (௯௬)

பொறிவழிசெல் லுமனப் போர்க்களிற்றைத் தன்றாட்
டறிவூடு நிற்பத் தளைந்தசிவ ஞானியோ. (௯௭)

பாடியுந்தன் சீர்த்தி பரவியுந்தன் பாதமலர்
சூடியுமிக் காலந் தொலைக்கவருள் செய்தானே. (௯௮)

பொய்ம்மாயை யென்னும் புலியின்வாய்ப் பட்டேனைக்
கைம்மாறி லாமற் கருணைகொடு மீட்டானே. (௯௯)

பத்தியுந்தன் பங்கயப்பொற் பாதமே பாடுகின்ற
சித்தியுந்தந் தாளுஞ் சிவஞான தேசிகனே. (௧௦௦)

தாலாட்டு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

சிவஞானபாலையதேசிகர்

நெஞ்சுவிடு தூது.

காப்பு. நேரிசைவெண்பா.

கைக்களிற்றை யன்றுரித்த கண்ணுதலோ னீன்றதனி
மெய்க்களிற்றை நெஞ்சமே மேல்கொண்டு - புக்குருக்கி
மேவன்பாற் றூதாகு மேனிச் சிவஞான
தேவன்பாற் றூதாகச் செல்.

நீர்கொண்டு தாளாலங் கீரைத்தீஞ் சாறென்று
பேர்கொண்டு வந்தாரப் பெய்கரும்பி - னேர்கொண்ட

பூமுடியா னீர்கொண்டு பொங்கு மருளென்று
நாமுடியால் வீழ்ந்திறைஞ்ச நல்குதரு - காமருதன்

றேசுணர்த்த வேண்டித் திருமுடிமேன் மேவிவாழ்
மாசுணத்தைத் தானெளித்த மாணிக்க - நேசித்துக்

கொள்ளு மடியார் குழாத்தினைத்தான் வஞ்சித்திங்
கெள்ளும் விடங்கலவா வின்னமுதந் - துள்ளு

மொருமான் மழுவோ டொளித்தெமைமுன் பற்று
மிருமா னெளிக்கவரு மெம்மான் - பெருமா

னுடுத்திருந்த வாதனையா லோங்குபுலித் தோன்மே
லடுத்திருந்து வாழு மரசு - தடுத்திருந்த

தொன்றென் றவித்தை யொழித்திட் டுடம்பினைநீ
யன்றென் றொழித்தெனைத்தா னுக்குவா - னன்றென்று

பொன்னை நரர்க்குக் கொடுத்துநீர் போமென்று
தன்னை யெனக்கருளுந் தம்பிரா - னன்னையெனு

மூற்று னமுதமே யொப்பா னருண்மேனி
பெற்று னடியேன் பிழைபொறுப்பான் - கற்றூர்

தொடுத்த தொடைக்கிசைந்த தோற்றத்தான் றன்னைக்
கொடுத்த கொடைக்குவந்த கோமா - னடத்தலுறச்

செல்லுமணித் தேர்மீது செய்தமைத்த பாகன்போ
லில்லு ளமைவைத் தியக்குவா - னல்ல

சுரர்மேன்மை யெங்கீழ்மை தோன்று தொழிய
நரர்மேனி சாத்திவரு நம்பன் - றரைமேன்

மழுவேறு கையான் வரினுநீ றெள்ளுங்
கழுவே றிகளுந்தாழ் காலான் - புழுவேறு

மென்பயிர்போல் வெய்ய விடயத் தரிப்புண்டு
துன்புறவேற் குற்ற துணையானு - னென்பிலுயி

ராக்கினேன் போல வடியே னுளத்தன்புண்
டாக்கினேன் மாறாத வானந்தம் - தேக்கினு

னுதாந்தன் வீடுதவு ஞானவினோ தன்றெளிந்த
வேதாந்தன் கைம்மாறு வேண்டாதான் - போதாந்தன்

விண்ணோ ரமுதுண்ண வேண்டி விடமுண்ட
தண்ணா ரருள்சிறிது தானாக - வெண்ணா

விறப்புக் கடிய விருவினையோ டெங்கள்
பிறப்புக் கடியப் பிறந்தான் - சிறப்பக்

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல் - பயில

நரனென் றிருந்தாலு ஞானமிலா தாரும்
பரனென் றறியப் படுவா - னொருநன்றில்

பாவிக் குதாசனர்க்குப் பத்தர்க்குச் சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையா - னாவிக்குத்

தோன்றாத் துணையாகித் தோன்றுந் துணையுமாய்ச்
சான்றோர்க் கருளுந் தகைமையான் - மூன்றாற்

பெருக்கு மிருசமயம் பேசித் தறியா
திருக்கு நிலையி னிருப்பா - னரக்கன்

மலையா நிலையாகி மத்தாகி யாழி
யலையாத தாயளப்ப தன்றிச் - சிலையாய்ப்

பொறுப்ப திலதாய்ப் பொறையருவி தூங்கி
வறப்பினு நல்கும் வளத்தாய்ச் - சிறப்ப

வணியார் கொடையாகு மைந்தருநற் சிந்தா
மணியார் கருணை மலையான் - கனியா

வறிவாங் குறிஞ்சியினின் றுங்கெழுந்து காமச்
செறிவாங் கொடும்பாலை தீர்த்து - மறியாத

மாயையெனு முல்லை வளர்பசுக்கொண் டைவரொனு
மாய ருறுதொழிலை யாங்ககற்றிப் - பாய

விடய மெனுங்குளங்கள் வேறுவே றாகா
துடைய வுடைத்திட் டுளமென் - றடைய

மருத நிலநிறைந்து வாள்விழியா நெய்தல்
பெரிதுபெற வந்து பெருகிக் - கருதிலொரு

தானந்த லின்றித் தலம்விசும்பு போர்த்துவரு
மானந்த மென்னுமலி யாற்றினான் - ஞானம்

பயனாக வோர்முப் பகுதியுயிர் வாழு
நயனாகு மும்மாயை நாடன் - வியனாக

விள்ளலரு மன்பர் விடயக் கரவருரு
வுள்ளமெனு நன்கமைந்த வூருடையான் - றெள்ளுதமிழ்ச்

சொல்லா மலரைச் சுவையா மதுவொழுகப்
புல்லா வழுச்சொலெனும் புன்மையெலா - மில்லாமற்

புன்புலவ ராங்குரங்கு போற்றாப் பெருமையுற
வின்புலவ ராஞ்சுரும்பார்த் தீண்டிவர - வன்பெனுமோர்

வீடாத நார்கொண்டு மென்று வெனுங்கரத்தால்
வாடா வகைபுனைபா மாலையான் - பீடார்

மலரா லயனார் மனச்சாலை நின்று
நலநா மணிவாய்த னண்ணி - நிலனாக

வானிடையே யோடி வரையா வழங்குடைத்தாய்த்
தானனுமா னிப்பினுயர் தன்மைத்தாய் - ஞான

நிறையா மரபு நிலைவழா தோங்கு
மறையா மரியபரி மாவான் - குறையாத

தத்துவமாஞ் சேனை தனைத்துரந்திட் டாணவமாய்
வைத்த தனையின் வலியறுத்து - மெத்து

வினையாம் பணையொடித்து வீட்டியெழுந் தோடு
மனமாம் பரிமாவை மாய்த்துத் - தனிமாரன்

கன்னன் முரித்துக் கருந்தோலாற் போர்த்திருந்த
துன்னுநிண மென்புதலைச் சோரிகுடி - லொன்ன

வளர்ந்தறிவ வெல்லா மழிந்துபுறந் தோன்ற
விளங்கிழையார் தம்மை மிதித்துத் - துளங்கு

சமயமாம் பொய்க்குழியிற் சார்ந்துவிழா தோடி
யமையுமா னந்தநீ ராடிச் - சுமையலா

வேதா கமமாம் விளங்குமணி தாங்கிவரு
மாதார மாஞான வானையான் - மாதேவன்

சங்கரா னுதியிறை தாணுவெனும் பேருடைய
கங்கரனே யாதி கருத்தாவா - மங்கணனை

யேத்தி யடியி னிடர்ந்து விழிக்கமலஞ்
சாத்தி முடிவணங்கிச் சக்கரமொன் - றீத்தருள்செய்

யென்றுபெறு மான்முதலோ ரெல்லாம் பசுவென்று
மன்றமுறக் கட்டுதரு மக்கொடியா - னென்று

மடியா தெழுமொலியா யானந்த மாகி
முடியாத நாத முரசான் - கடியார்மென்

சந்தமல ரோன்முதலோர் தங்களாற் றேற்றமுத
லைந்தொழிலுஞ் செய்விக்கு மாணையான் - முந்து
தவஞான மில்லாதார் சாற்றினும்வீ டெய்துஞ்
சிவஞான தேவெனும்பேர்ச் செல்வன் - பவநாசன்
முன்னொருநாட் சாதனத்துண் முந்துதிரு வெண்ணீறு
மன்னு முயிரினுறு மாசொழிக்குந் - துன்னு
கலவையுடன் மாசாய்க் கழியுமெனக் கூறிப்
புலவரினம் போற்றப் புனைந்து - பலவணிக
டாங்குமள வன்றித் தரும்பே றிலையென்றுந்
தீங்கி விதையொருவன் றீண்டுறினு - மோங்கு
முருத்திரனே யாவனென வோருருத்தி ராக்கம்
பொருத்த முறவுறப்பிற் பூண்டு - வருத்துகழை
விற்றோண் மதவேளை வெல்லுமடை யாளமெனக்
கற்றோய் துகின்மருங்கிற் காட்சிதரக் - கற்றோ
ரறியா வறிவாகு மாணைமேல் கொண்டு
மறியா மனத்தை மறிப்பா - றறியாய
தற்றுநிலம் வீழ்ந்ததுபோ லாசையற மெய்ச்சிவத்தி
னுற்றுவச மற்றிருக்கு முண்மையார் - முற்று
மழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வறமுடைய ரென்பார் - வழுக்கா
மனைதுறந்தார் மாயை வலிதுறந்தார் பாவ
வினைதுறந்தார் போகம் விளைசிந் - தனைதுறந்தார்

வேண்டுதல் வேண்டாமை யில்லாதார் மெய்யன்பு
பூண்டு சிவனடியே பூசிப்பார் - மீண்டுபவம்

வாராவா றோர்வார் மறையுஞ் சிவாகமமு
மாராய்வா ரார வனுபூதி - சார்வாவார்

பொன்னுஞ் சிலையும் புகழும் பழியுமே
மன்னுங் குடிலுமணி மாளிகையு - முன்னும்

படிவே றிலாதார் பகைநட் பிலாதார்
முடிவே லரசாய் முயல்வார் - கடிவேது

மில்லா திரப்பா ரிறையை நினைந்தொன்றுஞ்
சொல்லா திருப்பார் துதிசெய்வார் - வெல்லாத

வைம்புலனும் வென்று ரவற்றைத் தடாதுமனஞ்
செம்பொருளின் வைத்துச் செயல்செய்வார் - நம்பெருமான்

மேனியா மஞ்செழுத்தும் வேண்டி யெடுத்துரைப்பார்
மோனிகளாய் வீற்றிருந்து முன்னுவார் - மேனியெலாம்

பூசுவார் வெண்ணீறு புண்டரமே சாத்துவார்
தூசுளார் தூசு துறந்துளா - ராசையினல்

வேணி முடிப்பார் விரிப்பா ருலகியலை
நாணிநட்பா ருலகை நாணுதார் - பேணித்

தனதுபத மெத்திறத்துஞ் சாரு மடியா
ரினமருவி யெம்மருங்கு மீண்ட - மனுவுரையாத்

தன்பெயர்கொண் டார்வமொடு சாரும் புலவரிற்கால்
புன்புவியில் வையாப் புலவர்தாம் - வன்பவநோய்

யாற்றுமருந் தென்று வடிவிற் படத்துடையா
தேற்று மகிழவடி யின்றுகள்போய்ப் - போற்றுமிசை

விண்ணிற் புகவணைய மேவுதனை மாசகன்று
மண்ணிற் புகுமா மதியென்று - நண்ணிப்

பலவியமும் பொங்கிப் பரவையூ யார்ப்ப
மலவலியை மாற்றுவான் வந்தான் - றொலைவின்

முழங்கு மறையின் முடிந்த பொருளை
வழங்கு மருளுடையான் வந்தான் - விழுந்து

பரவு மடியார் பவப்பிணிக்குத் தானே
மருவு மருந்தனையான் வந்தான் - பொருவின்

மணிகண்ட னென்னுமொழி மாற்றியே யக்க
மணிகண்ட னென்னுமவன் வந்தான் - கணிகண்

டெயினர் மணமயர்வுற் றின்ப மருவு
மயிலை மலையுடையான் வந்தான் - றுயர்செய்

பொறிக்குஞ் சரமதனைப் போகாமற் றாளின்
மறிக்குஞ் சிவஞானி வந்தா - னெறிக்குந்

தினகரனா லாரழலாற் றிங்களாற் போகா
மனவிருளை நீக்குவான் வந்தா - னெனமுன்

பரிச்சின்ன ஞானம் பரியநரர் காதிற்
றிருச்சின்ன வாரமுதந் தேக்க - விரித்துக்

கவிராயர் போற்றக் கவரிபல முத்திப்
புவிராய ரொன்றிரட்டிப் போதத் - தவிராமன்

ஞாலவட்டந் தாங்குமொரு நாகத்தின் குட்டியென
வாலவட்டம் பாங்க ரசைந்துவரச் - சாலவட்ட

மாமதியாய் நன்கு வளர்ந்து துறந்தபிறை
காமருதன் வாழிடத்தைக் காண்பதற்குச் சேர்முறைபோல்

வெள்ளை மணிக்கவிகை மேனிழற்ற வான்மழைபோற்
கொள்ளைமல ரன்பர் குழாம்பொழியக் - கிள்ளை

மொழியார் மயறுரந்து முத்திபதத் தென்று
மழியாத வின்ப மருள்வாய் - பழியா

நடையா யுலகிறந்த ஞானோ தயாவெம்
முடையாய் புலன்கொ ளுணர்வாம் - படையா

யணியே யமுதமே யாவியே சிந்தா
மணியே கருணை மலையே - பணியேறு

கோலங் கரந்துவந்த கோதிலாத் தேறலே
ஞாலம் புகுஞான ஞாயிறே - சீலங்கொள்
காவேயென் செல்வமே கண்ணே சிவஞானத்
தேவே யெனவந் தியர்துதிப்பப்-பூவேறு

கோனும் புரந்தரனுங் கொண்ட னிறத்தானும்
வானும் புகழ்பவனி வந்தருள - ஞானம்

பருவ வகையாற் பலபேதப் பட்டார்
தெருவின் மனமகிழ்ந்து சென்று - ருருவி

ஞெருதா னணிய வுரியனவா மென்னும்
பெரிதா மழூவும் பிறவுந் — தெரியாம

னீத்துப் பொதுவாகு நீறுதிரு மேனிகொடு
சாத்திப் பெருமைபெறுஞ் சங்கரனை - மூத்துத்

திருந்து நதிமுழுதுஞ் சென்றாடி னாலு
மருந்து முணவுசரு காக்கி - வருந்துறினு

நீங்காத மும்மலமு நீக்கவருண் மேனிகொடு
நாங்காண வந்தருளு நாயகனை - யோங்கார

நாத முறுபொருளாய் நாதாந்த நாடகனாய்
வேத முடிமணியாம் வித்தகனைச் - சாத

மருணா சகனை மயிலைமலைத் தேனைக்
கருணா லயனையெதிர் கண்டார் - சரணார

விந்தந் தொழுவார் விழுவா ரிதுநமக்கு
முந்து தவத்தின் முதிர்வென்பா - ருந்தன்பி

னுள்ளந்தா ணின்றுச்சி காறுமுள மாயுருகி
வெள்ளம்பாய் கண்ணராய் மெய்விதிர்ப்பார் - கொள்ளுங்

கலமென் றுகிலுதவிக் காவென்பா ரேனைப்
பலவும் பெறுமோர் பரிவிங் - கிலமடியே

மெம்மை யெமக்கருளா யென்பா ரிறையவனே
யிம்மை நினையனையோ மென்றாலு - மம்மையினில்

யானென்று நீயென் றிரண்டில்லை யென்னுமுறை
தானின் றனையனைவோஞ் சார்ந்தென்பா - ருணின்று

வாழ்ந்த தலைமயுமினி மாய்ந்தாலு நன்றென்பார்
வீழ்ந்துமொழி யொன்றுபெற வேண்டுவார் - சூழ்ந்த

திசையெலா நின்மெய்த் திகழ்வென்பா ரொன்சொற்
கிசையலா மோவரசே யென்பார் - நசையினல்

யாம்புணர்ந் தின்ப மிவராற் பெறுவதலாற்
றும்புணர்ந் தின்புறுர் தாமென்பார் - நாம்புணர்ந்தா

னீங்குவது முண்டா நினையா திருந்தபடி
யாங்குறுவ தேநல் லறிவென்பார் - நாங்கள்

கரவி லிவர்வடிவங் கண்டநாட் டொட்டிங்
கிரவு பகலில்லை யென்பா - ரரிதிற்

பிறந்தபயன் மன்மதனுற் பேதுற்று வாளா
விறந்து படுவதோ வென்பார் - சிறந்த

சிலையோநின் னுள்ளஞ் சிவஞான தேவே
யிலையோ கருணைதா னென்பார் - மலையோடு

மற்பொருதல் போல வலிந்துவரு கென்பார்நீ
யெற்புணர்வ தென்றென் றிரங்குவார் - பொற்ப

வறவனே நின்னை யலதென்றே னும் வானத்
திறைவனே வந்தாலு மென்பார் - துறவனே

மேவிலெமை நின்னை விகாரி யெனவுரைப்பார்
யாவருல கெங்கு மிலையென்பார் - பூவி

லிவரொலும்புந் தோலுமா யெய்தினு ராயி
னெவர்விரும்பி வேண்டுவா ரென்பா - ரவர்நெருங்கி

யெய்த வுடன்வணங்கி யிவ்வா றடியேனுஞ்
செய்த தவங்கள் செலுத்தப்போ - யையன்

நஞ்சமார் கண்டனொடு நாரணனை யொப்பாக்கும்
பஞ்சமா பாதகரைப் பாராம - லஞ்சிநீ

சென்று திருமடத்தைச் சேர்ந்துகழு நீர்த்தடமாய்
நின்று நறியகழு நீர்பூப்பத் - துன்று

முகிலா யடைந்துபுகை மூன்றுலகுங் காக்க
நிகமா கமம்விதித்த நீதி - யிகலாத

கோடிமறை யோர்நிறையக் கொள்ளுமுண வின்பயனை
நாடியிடும் பிச்சையா னல்குமொரு - கோடிசிவ

யோகிகட்குப் போன முவந்து சமைப்பாரைப்
போகிகட்குப் புற்றனைய பொற்சடைமேன் - மோகிகட்குப்

பூசனைக்கு வேண்டும் பொருளுதவு கின்றாரை
வாசமலர் கொய்து வருவாரைப் - பூசனைசெய்

கின்றாரை ஞானநூல் கேட்பாரை நைந்தோதா
நின்றாரை மேனியெலா நீறணிந்து - குன்றாத

கண்டி புனைந்து கமலா தனத்திருந்து
கொண்டு சிவனைக் குறிப்பாரைக் - கண்டுருகிப்

போற்றிவணங் காவுட் புகுந்து புரமெரித்த
சீற்ற மறந்ததெய்வ சிங்கத்தை - மாற்றலருஞ்

சீமானை யென்றுந் தெவிட்டாத தெள்ளமுதைக்
கோமானை ஞானக் குணக்குன்றை - பூமாரன்

வண்டு படாத மலரைாநாஞ் செய்தவத்தாற்
கண்டுகொளுந் தண்ணறும்பூங் கற்பகத்தை - மண்டலமு

கண்களிப்பக் கண்டுமிகக் காதலா னேனிந்த
மண்களிக்க வந்தசுவை வானமுதம் - பெண்களுக்கு

மாலா ரணனமரர் மாதவரிம் மானுடர்போற்
றோலாத வீரமுடைத் தோற்றத்தான் - மேலாய

செங்கையமு தன்னான் சிவஞான தேசிகனெம்
பங்கமல மாயைப் பகையாளன் - றங்கணல

வூண்டுறந்து சீர்சா லுடைதுறந்து செம்மணிப்பொற்
பூண்டுறந்து கண்கள் புனல்சொரிய - வாண்டடைந்து

நையு மவர்நிற்க நாயேன்பாற் பொங்குமருள்
செய்து திருக்கடைக்கண் சேர்த்தினை - யையனை நா

னன்று தொடங்கி யணைவான் விருப்புற்றே
னென்றுணை நீ யன்றி யிலைநெஞ்சே - நன்றிபுரி

வேதா கமங்கள் விதிக்கும் விதியனைத்து
நீதான் புனிதமுற நேர்ந்தன்றே - வாதார

யோக மிருநான்கு முன்னைவய மாக்குவதற்
காக முயலுவன வல்லவோ - போகமுறு

தன்மைக்குஞ் செய்யுந் தவத்திற்குங் கற்றறியு
நன்மைக்குங் கொள்ளுமொரு நட்பிற்கும் - வன்மைக்கு

மீகைக்குந் தன்னை யிருந்தாங் குணர்ந்தடையு
மோகைக்கு நீயே யுறுதுணைகாண் - போகத்தி

னின்றானா மெய்த்துறவி னிற்பிப்பா யத்துறவிற்
சென்றாரை யில்லிற் செறிப்பிப்பாய் - குன்றா

வறத்தை மறமாக்க வம்புவியின் மிக்க
மறத்தை யறமாக்க வல்லாய் - திறத்தி

யொடுக்குதலே முத்தி யுனைவிடயத் தோட
விடுக்குதலே பந்தமென மிக்கா - யடக்குதலா

னின்றுயே யூகிலொரு நீதான் புலன்பரந்து
சென்றுலு மெய்துவதோர் தீதுண்டோ - பொன்றுத

முத்தி யொருகணத்தின் முன்வருநீ வேண்டுவையே
லித்தனையு நின்னு லிசைந்தனகாண் - சத்தியமா

யேதேனு மேனி யெனக்கொண்டு வந்தருளு
மாதே வனைநீ வருவிப்பாய் - தூதேவு

நம்பிகர வுண்டவொரு நற்பனவப் பிள்ளைதனை
யம்புவியின் மீள வழைத்ததூஉ - மெம்பெரிய

நாவிற் கரசு நடுக்கடலுட் கற்பெருந்தூண்
மேவிப் புணையா மிதந்ததூஉம் - பாவிற்கு

வல்ல வொருபுலவர் வல்லென்பு பெண்ணுகச்
செல்ல மயிலையிடைச் செய்ததூஉந் - தில்லையினில்

வாளா நெடுங்கண் மடவரலை நீலகண்டர்
சூளான் மனையுட் டுறந்ததூஉந் - தோளாத

முத்தனைய நன்மாதை முன்ன மியற்பகையார்
வித்தகனை நல்கி விடுத்ததூஉம் - புத்திரனைத்

தொண்ட ரறுத்தமலன் றெண்டர்போல் வந்திரப்பப்
பண்டு சமைத்துப் படைத்ததூஉ - மண்டிருளின்

மூக்கணனூர் செல்ல முனைவார மாறனு
ரக்கணமே செய்க்க ணடைந்ததூஉம் - புக்கரனூர்

வேண்ட வரிந்துமகன் மென்கூந்தல் கஞ்சாற
ராண்டு வணங்கி யளித்ததூஉ - மூண்டமரி

னேற்றானை யீசனென வேனாதி நாதனார்
நீற்று னினைந்துருகி நின்றதூஉ - மாற்றானைக்

குத்தினு னென்று குறியாமன் மெய்ப்பொருளார்
தத்தனே காக்கவெனச் சாற்றியதூஉ - மத்தவிபஞ்

சிந்த மலரைச் சிவகாமி யாண்டார்க்காய்
முந்தியெறி பத்தர் முனிந்ததூஉஞ் - சுந்தரரைத்

தொண்டத் தொகைபெறாத் தொல்லுலக முய்யவிறன்
மிண்டத் தொழும்பர் வெகுண்டதூஉ - மண்டபத்து

நீலநக்கர் பாணருக்கு நேசித்து நல்யாக
சாலை யிடத்தைமுனந் தந்ததூஉ - மாலயற்கு

மெட்டாற்கு வேண்டி யிருங்கலயர் குங்குலிய
முட்டாமற் கொள்ள முயன்றதூஉம் - வட்டாடி

யாக்கு பொருளை யரனடியார்க் கன்பினுல்
மூர்க்க ருதவி முடித்ததூஉந் - தூக்குதுலை

மீது பரனுளித்த வெண்கோ வணத்திற்காப்
போதவமர் நீதியார் புக்கதூஉ - மாதியுமை

பாக னடியவரைப் பண்டைநிலை யுன்னியதந்
தோகைகரங் கம்பர் துணித்ததூஉஞ் - சோகமறக்

கண்ணப்பர் மென்றசையைக் காளத்தி யார்தம்மை
யுண்ணப்ப வென்றுமுன மூட்டியதூஉம் - வண்ணப்பொன்

மீனை யளக்கரிடை மிக்க வதிபத்தர்
மேனைமரு கற்கென்று விட்டதூஉம் - யானைமிசை

வந்தமலை நாட்டரசர் வண்ணானைத் தொண்டனெனப்
பந்தமறு மன்பாற் பணிந்ததூஉங் - கந்தைபாற்

கன்பி னுதவிலனென் றக்குறிப்புத் தொண்டர்தா
முன்புசிலை யோடுதலை மோதியதூஉ - மன்புறுமோர்

தாட்புலியார்போற்றுதிருத் தாண்டவனெற்கொள்கிளையை
கோட்புலியார் நேசமறக் கொன்றதூஉங் - கேட்பிலிவை[க்

யெல்லாமு நின்ற னிசைவாற் புரிந்தனநீ
யல்லா தியற்றலற மன்றுகாண் - சொல்லாட

நின்பெருமை யாரறிவார் நீயென் னொடுகூடி
லென்பெருமை சொல்வாரு மில்லைகாண் - வன்புவியி

னின்னைத் துணையல்லை நீயென்று நீங்கினாற்
பின்னைத் துணையாகும் பேரில்லை - யுன்னைத்

துணையாக் கொளற்குத் துணைநீ நினக்கிங்
கிணையாய்ப் பிறிதொன் றிலைகாண் - புணையாய்ப்

பிறப்புக் கடற்குப் பிடிக்கப் படுவாய்
மறப்புற் றதினழுத்த வல்லாய் - சிறப்பு

விலங்கி னரர்தமக்கு மேவியது நின்னை
விலங்கு முனிவரர்கட் கெல்லா - நலங்கொள்

பெருமை நினைத்துணைக்கொள் பெற்றியா னன்றோ
வுரிமைநீ யன்றிவே றுண்டோ - வருமையென்ப
தில்லையுனக் கெவ்விடத்து மென்மனமே யாதலினு
னல்ல பெரியசிவ ஞானியாற் - செல்லவுனை
வேண்டுறுவேன் றூதாக வேதக் கிளியைவிடற்
காண்ட லரிததனாற் கண்டாலு - மாண்டதுதா
னென்றாக வோதா துரைக்கும் பலமயங்கச்
சென்றாலு நீயேதான் செல்லாம - லின்றாலு
நீயே பிறிதில்லை நெஞ்சமே யெற்பயந்த
தாயே யவனிடங்கள் சாற்றக்கேள் - பேயே
னெழுநகரி னுட்சிறந்த தென்பதலாற் சீர்மை
முழுது மியம்ப முடியா - தழகுறுவேற்
கந்தனுயர் கச்சிவளங் காற்கூ றளவுரைப்ப
னைந்துகரன் சொல்வ னரைக்கூறு - நந்தமரன்
கூறுடையா ளோர்முக்காற் கூறுரைப்பன் முற்றுமிள
வேறுடையான் சொல்வ னெனவனந்தன் - வீறுடைய
நாவா யிரங்கொண்டு நானுரைத்தல் காற்கீழென்
றோவாத நாணாகி யோடியே - தாவாத
வேலையிடை வீழவவன் மேல்வீழ்ந்து துஞ்சினன்
போல வரிகிடப்பப் பொங்குபுகழ் - ஞாலமெலா
நண்ணவொரு * காசி நடுமெய்ஞ் ஞகரமுறு
மெண்ண வரிய வெழினகரு - மண்ணுலகின்

* காசிநடு ஞகரமெய்யுற்றநகர்-காஞ்சி.

முன்னோர் தொடைப்பொருளை முற்றுங் கரந்துரைத்துப்
பின்னோ ரமதென்னும் பெற்றிபோ - லன்றோபின்

வந்திளைய காசி மரிப்பார்க்கு முத்திபதந்
தந்திடுவ னென்றுமிகு தன்செயலை - முந்துகொடு

சென்றுபர தேயத்திற் சேர்ந்திருப்பச் சீர்மலிந்து
மன்றன் மலரு மணியணியுந் - துன்றுநறுங்

குங்குமமுஞ் சந்தனமுங் கோலம் பெறப்புனையா
வங்குருகு மேகலையு மாங்கொலிப்பத் - துங்கமுறு

நன்பதியைச் சேரவரு நங்கைபோற் சென்றுமலி
தன்பதியைச் சார்ந்தணைந்த தண்கங்கை - யென்பதுதான்

புத்தா றெனத்தான் புராதனவா றென்னுமணி
முத்தா றுடுத்த முதுகிரியுஞ் - செய்த்தாம

மன்னமாய் முற்றும் விளைய வளங்களெலாந்
துன்னுநாட் டிற்குச் சுவைவிளைய - மன்னுவேண்

மீதண்ட ரேரடமர்ப்ப வெங்கணையும் வின்றுணுங்
கோதண்ட மும்பொருந்திக் கொண்டேக - வேதண்ட

மொப்ப வுயர்த்தவுய ருப்புக் குவான்மீது
வெப்ப மறுமதிய மெய்யுரிஞ்சத் - துப்புறுபுள்

ளுண்ணிலா வுன்று தொழிந்துமட வார்முறுவல்
வெண்ணிலா வுண்டு மிகவளரக் - கண்ணெலாம்

பூப்பட் டிருந்தாலும் பூம்பொய்கை நன்காய்ந்து
பாப்பட்ட சேடன் பணங்காட்ட - வாய்ப்புற்ற

கங்கையுடன் வந்தாரூர் கண்டுவரு வீரொன்று
தங்குறுதன் மக்க டமைவிடுப்பத் - துங்கமுறு

முத்தீ வளர்ப்பமறை முன்னோர் விருந்தினுத
ரத்தீ யவிப்ப வவர்மாதர் - கொத்தின்

கொடியனையார் கொம்மைமுலைக் குன்றே வருத்தத்
துடியிடையே நின்று துவள - நெடிய

கலவ மயிலிவருங் கந்தவே டேரோ
யுலவ நிலைபெயர்வுற் றோடப் - புலவ

ரிரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்றென் - றுரைப்பாவில்

வைதலை யுஞ்சி வளத்தா ரிரப்பவர்தா
மெய்தலை நோக்கி யிருந்துதவப் - பொய்தவிர

வில்லென் பதுமொருவ ரீயென் பதும்வினையாஞ்
சொல்லென்ப தின்றுபெயர்ச் சொல்லாக - நல்லவள

மிக்கெலா நாளும் விழவரு வீதியணி
திக்கெலா மேத்தமலி சேயூரு - முக்கணனார்

மந்திர மொன்று யிரமாய் வளர்ந்துபயன்
தந்திடு மொண்மயிலைத் தண்மலையும் - பந்தமறு

தன்னை மருவினரைத் தானாக்குந் தன்மையுடை
மன்னுசிவ ஞானி மருவிவாழ் - நன்னிலையா

லம்ம பிரமபுர மாகும் பொருள்படவே
பொம்மபுர மென்னும் புகழ்ப்பதியு - மெம்மிறைவன்

வீற்றிருந்து வாழிடங்கண் மேவியிவற் றென்றினுறுந்
தேற்ற முணர்ந்துநீ செல்லுங்கா - லாற்றலுட

னில்லை யிறைவனுற் பூதமலா லிங்கென்று
சொல்லி யுனைமறித்துச் சூழ்ந்துதா - னல்ல

வலகா யுதமெறித லாயுரைப்ப னந்த
வுலகா யதனுரைகேட் டோடேல் - பலகாலு

நாணேது மின்றிக் கருமமலா னிறையைக்
காணே னெனுங்கரும காண்டியொடு - பூணே

னினையனு வாக்கு நியாய னுரையைத்
தினையள வாயினுநீ தேறேல் - பினைவருவை

சேடியனை நெஞ்சமே சேரவவன் றம்பியென
நாடி யொருசிறிது நண்ணுறேல் - கூடியொரு

புத்திகணை பங்கமெனப் புத்திகெட்ட புத்தனுரை
மெய்த்ததென நின்று விடாதிநீ - முத்திபெறு

தன்னை யணுவாக்கித் தாழ்பஞ்ச ராத்திரிதா
னென்ன சொலினு மிசைந்துறே - னின்னைக்

கெடுப்பதே யெண்ணிக் கெடும்யோ கிகளை
விடுப்பதே நன்றென்று மேவே - லடுப்பதெனக்

கள்ளைக் குடித்துக் களிக்கின்ற வாமமொழி
கொள்ளத் தகுவதெனக் கொண்டுறேன் - மெள்ளப்

பகுதி விகுதி பகுத்தறியின் முத்தி
தகுதியெனுஞ் சாங்கியனைச் சாரேன் - மிகுதிபெறு

நஞ்சமார் கண்டனொடு நாரணனை யொப்பாக்கும்
பஞ்சமா பாதகரைப் பாராம - லஞ்சிநீ

சென்று திருமடத்தைச் சேர்ந்துகழு நீர்த்தடமாய்
நின்று நறியகழு நீர்பூப்பத் - துன்று

முகிலா யடைந்துபுகை மூன்றுலகுங் காக்க
நிகமா கமம்விதித்த நீதி - யிகலாத

கோடிமறை யோர்நிறையக் கொள்ளுமுணா வின்பயனை
நாடியிடும் பிச்சையா னல்குமொரு - கோடிசிவ

யோகிகட்குப் போன முவந்து சமைப்பாரைப்
போகிகட்குப் புற்றனைய பொற்சடைமேன் - மோகிகட்குப்

பூசனைக்கு வேண்டும் பொருளுதவு கின்றாரை
வாசமலர் கொய்து வருவாரைப் - பூசனைசெய்

கின்றாரை ஞானநூல் கேட்பாரை நைந்தோதா
நின்றாரை மேனியெலா நீறணிந்து - குன்றாத

கண்டி புனைந்து கமலா தனத்திருந்து
கொண்டு சிவனைக் குறிப்பாரைக் - கண்டுருகிப்

போற்றிவணங் காவுட் புகுந்து புரமெரித்த
சீற்ற மறந்ததெய்வ சிங்கத்தை - மாற்றலருஞ்

சீமானை யென்றுந் தெவிட்டாத தெள்ளமுதைக்
கோமானை ஞானக் குணக்குன்றை - பூமாரன்

வண்டு படாத மலரானாஞ் செய்தவத்தாற்
கண்டுகொளுந் தண்ணறும்பூங் கற்பகத்தை - மண்டலமு

மேனைப் புவனங்க ளெல்லாமும் வேண்டுபசுந்
தேனைச் சிவஞான தேசிகனை - நீநெக்

குருகியெதிர் கண்டுகொண்டே யோடிப் பெருமான்
றிருவடியில் வீழ்ந்தன்பு தேங்கிப் - பருகமுதே

வேண்டுவார் வேண்டுவன வேண்டியவா றேயுதவு
மாண்டகையே யெங்க ளரசனே - நீண்டவொரு

தந்திதரு பச்சைபுனை தன்மையா னீண்டுபச்சைக்
கந்த மரபிலுறுங் காரணனே - பந்தமற

வாளாய வன்பர்க் கமரா பதம்போல
மீளாத வீடுதவும் வித்தகனே - வேளானை

தள்ளு மடியார் தமக்குத் துணையாகக்
கொள்ளு மிருமலர்த்தாட் குஞ்சரமே - விள்ளலறப்

பத்திக் கடலுட் படிந்த வடியார்க்குத்
தித்திக்குங் கோதிலாத் தேறலே - முத்திக்குச்

சாதியா லன்றுரிமை சாதனத்தா லென்றுண்மை
போதியா நல்குமொரு பொன்மலையே - நீதியால்

வீடும் பொருளும் வெறுத்துமுத்தி வேண்டுவார்
தேடுஞ் சிவஞான தேசிகனே - பாடும்

பொருளே யெனவணங்கிப் போற்றிநின்று நின்பே
ரருளே துணைவே றறியேன் - றெருளே

நினது திருப்பவனி நேர்ந்தநாட் டொட்டுக்
கனலின் மெழுகாய்க் கரையும் - புனல்பெருகு

கண்ணொடு நின்றேங்குங் கங்குல் பகலின்றி
யுண்ணா வுடுக்க வுவப்பொழியும் - பண்ணொடு

பாடு நினைமெய் பதைக்கு நினையெங்குந்
தேடு முருகுந் திகைத்தலறும் - வாடுமெனைப்

பாரானோ வென்னும் பரம சிவஞானி
வாரானோ வென்னும் வழிபார்க்கு - மோரானோ

வென்னோ யெனப்புலம்பு மென்னைநின் பாற்றூதாக
வன்னோ பலசெய் தனுவொய்துந் - தன்னோ

ருடம்பும் பொறையா யொழிப்பக் கருதுங்
குடும்பம் பகையாகக் கொள்ளு - மடங்க

வொருபூ தருமில்லா துற்ற விடத்தே
வருபூ ரணமா மருவி - யொருபோதும்

வேறிலா தொப்ப விரும்புறுமவ் வென்னுயிரா
மாறிலா ஞான மணிவிளக்கே - யீறிலாச்

செல்வமே யெங்கள் சிவஞான தேவனே
கல்விகொடு காணாத காட்சியே - புல்லுவாய்

புல்லு மளவு முனைவிட்டுப் போவதுநா
னில்லை யிறைவனே யென்றநீ - தொல்லை

விடய நினைந்தகன்று மீளாம னில்லா
துடைய மலவிருளை யோட்டுஞ் - சுடரா

மரமு நிழலும்போன் மாழையும்பூ ணும்போ
லிருமை யபேதமென்ப தென்றும் — பரமுயிர்கள்

வேறென்றும் வேறல்ல வென்றும் விளம்புதலால்
வீறொன்று தாதான் மியமென்று - மாறின்று
சாமி யடிமையெனுஞ் சம்பந்த மென்றுமுளம்
வேமிகலை யோர்மொழியில் வீப்பானைத் - தோமி
லுலகிற் கிறைவ னுபாதான மென்று
மிலகுற்ற நன்னிமித்த மென்று - நிலவுற்ற
வாவி யணுவென்று மன்று நிறைவென்று
மேவிய மாயைதான் மித்தையென்று - மோவிலது
நித்திய மென்று நிகழ்த்தி மயங்கும்போ
ரத்தனையுந் தீர்த்த வருளானைப் - பத்தரிடை
யுள்ள படிதோற்று முண்மை யுடையானைத்
தெள்ளுஞ் சிவஞான தேசிகனை — விள்ளலறப்
பற்றி யடியேன் படுமிப் பெருந்துயர
முற்று மறிந்துசெல முன்னுநீ - யெற்றுதிரை
வேலையுல கெல்லாம் வியக்குஞ் சிவஞானி
மாலைமன மேவாங்கி வா.

நேரிசைவெண்பா.

என்றே டிருக்கு மெனினுஞ் சிவஞானி
யன்றே நினைவிடுத்தா லன்றியே - தன்றேகை
வஞ்சமே செய்குவனுன் மற்றவன்பாற் றூதாக
நெஞ்சமே செல்விரைந்து நீ.

நெஞ்சுவிடுதூது முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

சிவஞானபாலையதேசிகர்

திருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிறைந்தவொரு சச்சிதா னந்தபர சிவத்தி
னிகழுமுயி ரிப்பியிடை வெள்ளிபோற் றோன்றி
யறிந்துமய லகன்றிடிலொன் றன்றிவே றிலையென்
றறைவர்சிலர் பதியிணைப்போ லாருயிர்நித் தியமே
யிறந்துமல சத்திவிடிற் சிவசமா னதையா
யிருக்குமென வறைவர்சில ரொதுவழக்கென் றடியேஞ்
செறிந்தனநின் றணைவினவ வெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (க)

சகலொனும் பசுக்களைமு லாதார மென்னுந்
தக்கதொழு விடையமலமாந் தாம்பினா லார்த்துப்
புகலுமொரு நுகர்வுமிலா துலைநிறுத்திப் பின்னர்
பொருந்துகலை யாங்கரத்தாற் கட்டவிழ்த்து விட்டே
யகலுநனை வெனும்புரத்தி லோட்டியே விடய
மாகியபுன் மேய்த்தெமக்கிங் கமுதமருள் பவனே
திகழுமலை மகணகரின் மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (உ

காற்றுமறைப் பாயபடப் பாயலிடை மடங்கற்
கனலருகி னரிசனப்பொற் றாசுமிசை போர்த்துக்
கோற்றொடிமென் முலைமடந்தை தனைமார்போ டணைத்துக்
குளிர்க்குடையா னுததியிடைக் கண்டுயில்வோ னெழுந்து
போற்றிநினை தெதிர்குறிப்பச் சங்கொடும்வந் துற்றான்
புண்டரிகன் கரகநீர் கொண்டுதவ நின்றான்
சீற்றமறுந் தவக்களிறே யெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (௫.)

தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையா லெறிந்த
தொண்டனிலை விசயனும்வில் லோடும்வந்தா னில்லை
யேதமறு மியற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தா
ரில்லைநினை மண்சுமவென் றொருபிரம்பா லடித்தோன்
போதிலனின் றிருவடியிற் போதுகடுய்ப் பரவிப்
போற்றலுறு மடியவரோ பொருந்தினொம் மருங்குஞ்
சீதமதி துறந்தமுடி மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (௬)

திருப்பள்ளியெழுச்சி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ.

கணபதி துணை.

சிவஞானபாலையதேசிகர் பிள்ளைத்தமிழ்.

காப்பு.

அத்திமுகத் துத்தமனை
நித்தநினை சித்தமே.

காப்புப்பருவம்.

திருமால்.

திருமா மறையு மாகமமுந் தெருட்டு பொருளோர் முடி வாகத், தெளிவில் சமயர் தமின்முரணித் தியங்கி யபேதம் பேதமென, வருமால் வாத மயலொழிய மலர்வாய் மலரப் பெருங்கருணை, வடிவாய் வந்த சிவஞான வள்ள லிணைத் தாண் மலர்க்காக்க, கருமா முடக்கொம் பொழுகமுதக் கதிர்வெண் டிங்கட் கண்ணிபுனை, காலத் தவன்சே வடியிற்செங் கமல விழியோன் றிடந்தணிந்தும், பொருமா மழவெள் விடையாகிப் பொறுத்துந் தொழும்பு தலைநின்ற, பொன்னந் திருமார் புடைக்கமஞ்சூற் புயல்வண் ணத்தெம் பெருமானே. (க)

மல்லிகார்ச்சுனேசுரர்.

உடற்கு விளையுஞ் சுர்தாக்கு மொழித்தற் கரிய பலபி ணியு, முடற்று பசிநோய் முதலனவு முணர்வைப் பிணித்து ப் பிறப்பெனுமாழ், சுடற்கு எழுத்தி யுயிர்சிவத்திற் கலப் பைப் பிரித்து விடுமலமுங், கழலக் கருணை புரிந்தெம்மைக் காக்குஞ் சிவஞா னியைக்காக்க, முடக்கு மடிக ணிமிர்த்தெ ழூந்து முள்காந் திருந்து களஞ்சுருக்கி, முழைவாய் பிளந்து செவிநிமிர்த்து முறுக்கி வெடிவால் சிறிதடித்து, விடக்கு வி ரும்பு புலிபாய விரையு முண்மா னுடைமதியம், வெருவுற் றகலும் பருப்பதமாம் விலங்கன் முக்கட் பெருமானே.(உ)

உமாதேவியார்.

இளைக்கு மருங்கு லொருமடந்தைக் கெய்து தவள மு கிற்கூந்த, லிருஞ்சூன் முகிலி னிருள்படைப்ப விருண்ட வடி யே னுளம்விளர்ப்பத், திளைக்கு மலர்க்கட் கருணைமடை தி றக்குங் குணப்பொற் குன்றையுயர், சிகர மயிலைச் சிவஞான தேவன் றனைநா டொறுங்காக்க, விளைக்குந் தவத்தாற் பாற ணக்கு விரும்பிக் கொடுத்த கொழுநன்மணி, மீடறே போல வெனதுபுன்சொல் விடமுண் கின்ற திருச்செவியை, முளைக் குந் தரள நகைவாயான் முதிர்தீஞ் செய்யு ளமுதாட்ட, மு ன்னம் பிள்ளைப் பெருமானை முலைப்பா லூட்டு மொருதா யே. (௩)

விநாயகக்கடவுள்.

நீர்வாழ் வரிச்செங் கயல்கவர நிற்குஞ் சிரல்வா ரிதிக லங்க,நிலைபோர்ந் துலவுந் திமிங்கிலப்பேர் நெடுமீன் கவர்வா

னிற்பதெனப், பார்வாழ் மக்கட் பரப்பெல்லாம் பணிவேந் தாயின் மொழிப்படுசீர், பாடத் தொடங்கு மெனதிடத்தும் பழிப்பில் சிவஞா னியைக்காக்க, தார்வாழ் திருப்பொற் கோ யிற்குத் தடமா மதிலிற் பொலிமார்பத், தனிவான் முகிலு ஞ் சரோருகப்பொற் றவிசிற் பசும்பொற் குவடும்வா, னூர் வா ழரசு மூனிவரு மொருதஞ் செயற்குக் காப்பாக, வுவ ந்து முதற்கட் பரவுபுக ழொருத்தன் முகத்தெம் பெருமா ளே. (௪)

சுப்பிரமணியக்கடவுள்.

பாயுங் கவனக் கடியமனப் பரிகா வாமற் கொடுவிடய ப், பகைகா வாமற் பிறருாைக்கும் பழிகா வாம லிருதாரு ந், தேயும் படிசென் றிடையின்றிச் செல்வச் செருக்கர் கடை காக்குஞ், சிறியேற் காக்குஞ் சிவஞான தேவன் றிருமே னி யைக்காக்க, வாயு மனமுந் தொடர்வரிதாய் வருதல் போ த லிரவுபகல், வளர்தல் குறைதல் வெறுப்புவப்பு வறுமை செல்வ மிலாததனை, யாயுந் தமிழக் குறுமுனிவற் கறித லறி த லிலாமைபோ, யறிவே யாகி யுலகொழிய வருள்செவ் சு டர்வேற் பெருமாளே. (௫)

அல்லமதேவர். வேறு.

அகரவுயி ரனையபரி பூரணத் தீர்த்தனை
யடிநிழலி லடையுமெம தாருயிர்க் காப்பனை
நிகரிலல மயனையழி யாதமெய்க் கூத்தனை
நிகழுமனு பவனையரு ளாளனைப் போற்றுது
நகரவர சிடையமரும் வாசனைக் காற்றெனு
நடையிரத மதனன்வலி வீயுமெய்க் காட்டனை

மகரமனை சுவறவெறி வேலுடைச் சூர்ப்பகை
மயிலைமலை மருவுசிவ ஞானியைக் காக்கவே. (௬)

வசவதேவர். வேறு.

விழுப்பமிலை குறிகுணங்க ளுடடா தென்றும்
வேண்டுவன வேண்டியாங் களித்தரவே டத்தர்
குழுக்கடமக் கன்புசெய்நந் தலைச்சுமைவாங் குபுதான்
கொண்டவனென் றரியசிவ ஞானியைக்காத் தளிக்க
விழிப்பினம தொருநாமம் புகல்பவரைப் பிறப்பி
லெடுக்குநமக் கிஃதரிதன் றெனச்சென்று கடிது
வழுக்கிவிழு பவலையெடுத் தஞ்சலோம் பென்ற
வசவதே சிகனெனுமெங் குடிமுழுதாள் பவனே. (௭)

தேவாரமருளிய மூவர்.

கிளக்கிலா நாமணியி னுவே யாகக்
கேட்கிலாக் காதூசி யின்கா தாக
வளர்க்குமா புகழுலகிற் பரப்பா நின்ற
மயிலைவரைச் சிவஞான தேவற் காக்க
வஃக்கிலாத் தமதுரை பூந் தொடைபு னைந்த
வரசுபோன் றல்லனபுன் குறும்பு போலக்
கொளக்குறையாப் பெருஞ்செல்வ மெமக்கா ஞானக்
கூத்தனுறு பதிகள்பல பாடியமூ வருமே. (௮)

மாணிக்கவாசகசுவாமிகள்.

அருந்தமிழ்நா டொருகோடி தவஞ்செயவந் ததிர்வெள்
ளருவிதூங் குயர்மயிலை வரையினமர் விளக்கைப்
பரந்துபடு மிகுபாச ஞானமொடு மற்றைப்
பசுஞானங் கடந்தசிவ ஞானியைக்காத் தளிக்க

விரிந்தமறை யொருநான்கு மெழுதுகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடையோ னெழுதத்
திருந்துதமிழ்க் கோவையொரு நானூறு முரைத்த
திருவாத வூரனெனுஞ் செழுமலர்க்கற் பகமே. (௯)

சென்னவசவதேவர். வேறு.

அறிவுயிர் கரண முடலொடு பொறிகள் சிவமென வுதவு தானியைக் காத்தெமர், வழிவழி யடிமை யெனவருள் புரியு மொருவனை யெமது பாவனைக் கேற்றிடு, மமுதினை மணியை யடியவ ருயிரா யுயர்சிவ சமய நாதனைப் பார்த்துறு,—குறிகுண் கிலைகள் குருசிவ சரணர் தமையிகழ் பவரை வேறெனத் தாக்கியை, வளர்தரு தனது குணவருள் கனலினழல்புனன் மருவு மாறெனத் தாட்டுணை, குறுகிடு பவரையடைவுற வுலகின் வருசென வசவ தேவனைப் போற்றுதும்,—பொறியொரு புடையில் வளையொரு புடையி லிரவியினிருளை நாமறத் தீர்த்தெரி, மணிமிளிர் திகிரி யொடுபல வணிகண் முடியொரு புடையி லாருயிர்க் காப்புறு, புயனிற வடிவ வரியொரு புடையில் விழவர வணையை வானுறத் தூக்குபு,—மறிதிரை கதறு கடலிடை யுதறு பொறிமயில் கடவு வீரன்மெய்ச் சீர்த்தியன், மலைமுனி முருககுருபர குமரசரவண பவவெ னுமிகப் போற்றிட, மறைமொழி யருள்செய வறுமுகன் மருவு மயிலைவ ருசிவ ஞானியைக் காக்கவே.(௧௦)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

——:o:——

துங்கவெம் புகர்முகக் களிநல்யா ஊையினதட் சுமையு
ம் பெரும்புலி தருந்,துகிற்சுமையும் வெண்மருப் புச்சுமையு
மிளையாது துள்ளியெழு சிறுகன்று மான், வெங்கனன் மழு
ச்சுமையும் வெண்முளரி மலர்வென்ற வெண்டலைச் சுமையு
மணிகள், வெயிலெறித் திருள்விழுங் கோரா யிரம்படம் வி
ரிக்குமர வச்சுமையு நீ, ளங்கம் புரண்டுவல மாலயம் புரியு
மவ ரணியெனத் திரைகள் புரளு, மாயிரந் திருமுகக் கங்
கையஞ் சுமையுமொழு கமுதகிர ணக்குழவி வெண், டிங்க
ளஞ் சுமையினெடு போகட் டுலாவுமிறை செங்கீரை யாடி
யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீ
ரை யாடி யருளே. (க)

வென்றிவிடை யினர்திருக் காமநா யகர்திரு விழாமுற்
ற வருண்மா தவர், வேறுவே றுயதிரு வேடத்தர் நீறுதிமிர்
மேனியினர் வேணி முடியர், துன்றிழை மலிந்தகந் தைச்சு
வலர் பட்டுமென் றூசுமணி யார மணிவார், சூலப் படைக்
கலத் தினர்தனித் தவருகு தோகையர்க ளோடு வருவார்,
குன்றுறழ் பணைக்கைவெங் கரிசிவிகை யாதிமிசை கொள்ப
வ ரியந்த ழங்கக், கோடிநூ றுயிரவர் மகரா லயத்தொடிக
ல் கொண்டதோர் செயல தென்னச், சென்றெதிர் முழங்கு
பொம் மையபட் டினச்செல்வ செங்கீரை யாடி யருளே, தி
மிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி
யருளே. (உ)

ஒருவாறு மின்றியிது வென்றுணர வரியபர மொன்றி ரண் டாகி யவைமு, வுருவாகி மூவிரண் டாறுறு வகையிரட் டுற்றநூற் றெட்டு விரிவா, யிருவாறு நின்றிலகி யிருநூறு தலையிட்ட வீரொட்டு மாறுறி னவ், வெண்பெற்ற வாறினவ் வாறுமூன் றினிலவை யிரண்டினி லிரண்டு மொன்றின், மரு வா வடங்கிநீ நானென்னு மயலின்றி மனவா சகங்கடந்து, வந்துகூ டுதலகற லின்றிநின் றிடுநிலையை மலரடி மூடிக்க ளித்துத், திருவாய் மலர்ந்தெனக் கொருமொழியி லருள்ப வா செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (௫)

பாவகப் படுபெரும் புகழிமய மலைபெறு பவானிவளர் திருமு லைத்தண், பாலுண்டு தண்டையங் தாள்சிவந் திடவா தி பகவன்வீயன் மார்பி னுலவிப், பூவகப் பள்ளியமர் தருபு ங் கவன்றலை புண்படக் குட்டி நீடு, பொன்னங் குவட்டுமா யிருஞால மூடிவைத்த புழையெயிற் றரவ சைத்து, மாவலை ர்ச் செங்கைகொடு சிறுதே ருருட்டியுயர் வானவர்க் கிடர்வி ளைத்து, வலிகொண் டிருந்தவன் றிறலசுரர் தலைவெட்டி வ ட்டாடு மொருவெற் றிவேற், சேவகப் பிள்ளை துணை யாகவி ளை யாடுவாய் செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவ ரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (௬)

பெருமூடக் காணிமிர்ந் ததுகூ னிமிர்ந்தது பிணிகள் பல பலபோ யின, பிடித்திருந் தெவரானு மகலாது துயர்செய்த பேயகன் றிட்ட தம்மா, வருமகப் பெற்றுவந் தனமிடி யக ன்றன மகிலம் புரக்க வருமோ, ரரசெய்தி னஞ்சென்று

வென்றெய்து தற்குமிக வரியபகை வென்றெய் தினம், வருமடக் கொடிமாதர் கண்வலைப் பட்டதுயர் மாற்றவற நெறிகண் டனை, மலமாயை கருமங்க ளிலைகண்டி லோமென்னு மக்களொலி விண்ண ளப்பத், திருமடத் தரசிருந் தருள்செயருள் விழியாள செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (ரு)

மெய்தயங் கரிசனம் பூசிவெந் நீராட்டி விழிபூதி மெய்துடைத்து, விரனிலங் தைவந் திடும்பொட்டின் மீதுலையின் வெண்ணீ றணிந்து விழியின், மைதயங் குறவெழுதி யியல்பாகு மக்கமணி வடமணிந் தம்பொ னரைஞாண், மணியரிக் கிண்கிணி சதங்கைபொற் றண்டைகள் வனைந்துபொற் றொட்டி லுய்த்தே, யெய்தவந் தூறுபெருஞ் செல்வமே யமையாத வின்சுவைத் தெள்ள முதமே, யென்னுயிர்த் துணையாய மாணிக்க மதலையே யென்றுசீ ராட்டி யன்பாற், செய்தவம் பெருகுமம் மைவளர்க் குங்குழவி செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (சா)

வே று.

முந்துதவு வார்களிடை யொன்றூர்வங் கூர
முந்தையினு மோர்பொருளை நின்றீகின் றூறில்
வந்துநிகழ் காருதவு றுங்காறங் காறு
மண்டுதிரை யானிறைய வொண்காவின் றேறல்
கந்தமலர் வேனிலுமி ழுஞ்சீர்பொன் றூத
கம்பரொரு மாவினுமை யுந்தாமுஞ் சார

நந்துநக ராளுமிறை செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (எ)

வஞ்சமல மாயைகரு மஞ்சார்வின் றோட
மண்டுவிழி நீர்சொரிய நின்றேயன் பாகி
நெஞ்சுருகு வார்துணைவ செங்கோசெங் கீரை
நின்றநிலை பேர்தலிலி செங்கோசெங் கீரை
விஞ்சுருவ மோடருவி ரண்டோடொன் பானும்
வெம்புபரை யாதியும கன்றுகும் போத
நஞ்சொருப மாவருளி செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (அ)

பங்கயம தேறிநற வுண்டேசங் கீத
பண்கள்பல பாடியொழு குந்தாளொண் காவி
யங்குமுத மூசுபிண ரந்தாள்கொம் பூதி
யம்பணில வாவியினும் வெஞ்சூல்கொண் டேகி
மங்குறுயில் சோலையினு மங்கோடிங் கோடு
வண்டுதிரி கீழ்நதியு ளின்கேளின் பூசை
நங்கைநகர் வாழிறைவ செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (கூ)

கம்பநகர் வாழிறைவ செங்கோசெங் கீரை
கங்கைசும வாதபர செங்கோசெங் கீரை
செம்பொன்முடி தாழ்சரண செங்கோசெங் கீரை
செங்கைமணி நேர்தலைவ செங்கோசெங் கீரை
யிம்பர்வரு மாரமுத செங்கோசெங் கீரை
யெங்கண்மல நாசவொளி செங்கோசெங் கீரை

நம்புமடி யார்துணைவ செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (௰)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்.

———:0:———

ஆற்றற் பெரியோ ராற்றுவார்க் காற்றல் பசியை யாற்றுதலென், றறைந்த மொழியைக் கடந்துசிவ னடியா ரொனூல் விருந்தழைத்துச், சோற்றுக் குவடு தொலைத்தசிறு தொல்லைப் பூத மொருகோடி, தொலைத்தற் கரிய செஞ்சாலிச் சோறுங் கறியுங் கைகவிப்ப, ஆற்றற் கமைத்த பாறயிர்நெய் யுதிர்தீங் கனியு முறைமுறையே, யொழுகு பந்திபல விருத்தி புவந்து படைத்துத் தீப்பசியை, மாற்றிப் பெருஞ்சீர் பெறுதற்கு வல்லாய் தாலோ தாலேலோ, மயிலை வரையிற் சிவஞான மணியே தாலோ தாலேலோ. (க)

அருவா யுருவா யவையன்றி யறிவாய் நிற்கு மவிர்சடிலத், தண்ணல் பெருஞ்சீ ரிசைப்புலவ ரறைதல் பட்டாங் காதல்போன், மருவார் மலர்த்தண் பொழின்மணிநீர் வாவி பசும்பொன் மதின்மாட, மணிமா ளிகைகோ புரநெடுந்தேர் மறுகு முதலா யினவற்றின், பொருவா வளங்க ளிறும்பூது புகல்வார் புகலும் படியெல்லாம், பொருளே யாகி யேனைய போற் புராண மலது மறைகூறுங், திருவார் கச்சி நகரிடங்

கொள்செல்வா தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவ ஞான தேவே தாலோ தாலேலோ. (௨)

ஆர்க்கு மதுரச் சங்கமளித் தரவ மடுத்த பெருங்கங் கை, யாறு மடுத்துப் பிறைத்தோணி யமர்ந்து சடைச்செந் துகிர்படர்ந்து, பார்க்கு முமைகட் கயலுலவும் பழைய கரு ணைக் கடலகத்துப், படிந்து பரக்கும் புறச்சமயப் பாம்பு பதைப்ப விடித்துமயல், போக்கு மயிலை வரையிவர்ந்து பொ ருண்மா மாரி யிடிக்கோடை, பொன்றப் பொழிந்து புகழ் வெள்ளம் பொருப்பு வாளக் கரைவாவி, தேக்கு முகிலே யமுதேசெந் தேனே தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவ ஞான தேவே தாலோ தாலேலோ. (௩)

முதையா மெமது மனப்புலத்தை மூடுங் காம வெகுளி வன, முற்றுங் கருணைத் தீக்கொளுவி முருக்கித் திருத்திச் செருக்கெனுமா, மதயா னையைவந் தழியாது மறிப்பப் பொ றைவே லியுமமைத்து, வலிய சிவமந் திரப்படையால் வாய் ப்ப வுழுது சிவவிதையை, விதையா முளைப்பப் பிறதெய்வ விரவு களைகட் டறவளர்த்து, வீடாங் கனிகொள் பருவத்து விடயக் கரவர் புகுந்ததனைச், சிதையா வண்ணங் காத்தளி க்குந் திறத்தாய் தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞா ன தேவே தாலோ தாலேலோ. (௪)

வாங்கு சிறுவெண் மதிக்குழவி வயங்கு முடியு மதன் மாள, மலர்ந்த விழிசேர் திருநுதலு மதிநேர் சங்கக் குழை ப்பணியே, தாங்கு செவியுங் கடற்காளந் தரித்த மிடறுங் க ணன்மழுமான், றயங்கு கரமுந் தனிக்கேழற் றடங்கோ டி

மைக்குந் திருமார்பு, மோங்கு சினவெம் புலியதளொன் று டுத்த வரையு மான்மலர்க்க, ணுற்ற வடியு நினதுண்மை யு ணரா வஞ்சஞ் செயக்கருணை, தேங்கும் விழிக ளெயதனைச் செய்யா தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞான தே வே தாலோ தாலேலோ. (ரு)

வே று.

மீனெ னப்பிறழ் மதர்நெடுங் கட்சிறு வின்னுதற் றுவர் வாயார், வேட்கை நோய்தவிர்ப் பவர்க்குமட் புனலிடைவே றுசெய் தேறேபோ, லூனு யிர்க்கொரு பிரிவுதந் துதவுறு மூத்தமா தாலேலோ, வுருவ மாகிவந் தென்கருங் கன்மன முருக்குவாய் தாலேலோ, வான ளக்குறுங் காமெலன வெய் திடும் வைந்நுதிக் கணையென்ன, வாரி யுட்புகுங் குடமென வுட்புற மருவினின் றகலாம, ஞானி னைப்பரும் பரசிவத் து றவரு ணற்றவா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர் ச்சிவ ஞானியே தாலேலோ. (சு)

பாரி னிற்பெருஞ் செல்வமுண் பவர்க்கெனப் பற்றினின் றுண்ணுமற், பனைய மூத்ததற் கொக்குமூர் நடுநயப் பண்பி னேன் றிருவென்னுஞ், சீரி யற்படு மொழியெமக் கல்லது திருவுடை யோர்தம்மிற், சிலர்க்கு ளைப்பது முகமனென் று ணர்த்துறு செய்கையொன் றுடையோனே, கூரி சைப்படா விவறன்மா லையணிடைக் குறுகுறு தீவோர்கட், குறுகு வா ரிற்சண் பகம்விடுத் தொள்வழைக் கொத்தில்வேள் சிலைவா ங்கு, நாரி மொய்த்தெழு மயிலைமால் வரைக்கொரு நாயகா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (எ)

கல்லெ னத்திர டோட்புனை யீர்ந்தொடைக் காமவே
ளுலகெல்லாங், கவன்று தன்வலிக் குடைந்துதம் புறந்தரக்
கண்டதோர் மிகுவீரன், வில்லி யற்சுவைக் கரும்பும்வெம்
பகழிகள் வீயும்விற் குழைநாரி, விளரி யங்குரற் சுரும்புமா
ய் முடிந்துற விளைத்தவோர் விறலாளா, சொல்லி சைப்படு
சங்கவண் புலவர்தந் தூக்கொடு நிறைநிற்பச், சொக்கர் கூ
டலிற் பொற்பல கையினிடாத் தூக்கினும் படியொக்கு, நல்
லி சைத்தமிழ் மாலைகு டியபுகழ் நல்லவா தாலேலோ, நகரி
நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (அ)

வே று.

ஒருமா யையினுயிர் மாபரம் வேறு மாபோலு
முதுபோ மெனினிலை பேதமெ னுவோ தாவீயா
வருமா மறையுரை யாடலும் வேறு மான்மாவோ
டருளார் பதியியல் பாயென வோதா மாறுவாய்
வருமா கமமுரை யாடலு மாரா யாராயே
மலைவா துசெய்மய லாலுள மோவா நோவாவார்
செருமாய் வுறுமொரு வாசக தாலோ தாலேலோ
சிவஞா னியெனுயிர் நாயக தாலோ தாலேலோ. (கூ)

நனவா வொருசிவ மோதிறை தாலோ தாலேலோ
நவிலு வலர்புகழ் மாலைய தாலோ தாலேலோ
கனவா வுலகுறு தேசிக தாலோ தாலேலோ
கதிர்வே லவன்மயி லாசல தாலோ தாலேலோ
மனவா சகவினை மேவிலி தாலோ தாலேலோ
மதனு டல்கொலட்ன் மாதவ தாலோ தாலேலோ

சினவா வருளித யாலய தாலோ தாலேலோ
சிவஞா னியெனுயிர் நாயக தாலோ தாலேலோ. (௧௦)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

—:o:—

காளம் புரைந்தநெட் டுடலழற் கட்கொடிய காலன்வந் தனன்வந் தனன், கண்டவா றிஃதுரைத் தனமுரைத் தனமென்று கைதட்டி விடுவதென்ன, வேளம்பு தைத்தலறும் வன்னெஞ்ச ரிவ்வுலக மெய்யென்ப திலையென் பவர், விரிசடைக் கடவுளடி யவர்வரவு கண்டுள்ள மிக்கெழு மகிழ்ச்சியென்ன, வாளம்பு யத்துணர்ப் பதமுக்க ணிறைபுகழ்ழித்த புன் சமய மென்புள், ளணிகடிவ தென்னமழ விடையொன் றுகைப்பவ னரியபுகழ் பாடி யாடத், தாளம் புடைப்பதற் கடியிட்ட தென்னநீ சப்பாணி கொட்டி யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (௧)

மொண்டுபொய்ப் பொருளென்று பொருளையிர வலர்வ ரின் முத்திரைசெ யாம லுதவி,முழுமறைப் பொருளைமெய்ப் பொருளென்று தொண்டர்க்கு முத்திரைசெய் திங்கருள் வது, விண்டுமது மடைதிறந் தொழுகுபைங் கொன்றைபுனை விரிசடைக் கற்றைநெற்றி, விழியுடை யவர்க்கலது குவியாத திலையென்று விரியாத தேதி லார்முன், கொண்ட வெம்பவநீறு படநீறு தன்னைக் கொடுப்பது நடுங்க வாவி,

கொள்ளைகொண் டுண்ணவெம் பர்ல்வருங் கொடியவெங் கூற்றைத் தடுப்ப தாய,தண்டளிர் கவற்றுநின் கையிணை லைய நீ சப்பாணி கொட்டி யருளே, தனையறியு மறிவையறி வெ ன்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (உ)

உருக்களரும் வடிவென்று நிலையாத விடயத்தி லுழலு ம் புலன்க ளென்று, மொழிகின்ற புத்தியது தானென்றும் விரிவாகி யொன்றாய குணமதென்றும், பரக்குமிவை யன்ற ன்று புருடனே யென்றுமுயர் பகுதியே யென்று மதன்மே ற், பரவிந்து வென்றுமவை யன்றியே மனமொழி படாத வொரு பிரமமென்றும், விரிக்கிலிது நிறைவென்று மணு வென்று மொன்றென்றும் வேறுபற் பலவென்று மெய், வி ளைவென்று மிலதென்று முயிரியல்பு பலசமயர் வேறுவே றாக வைத்துத், தருக்கமிடு கலகமற வந்தகரு ணாகரா சப் பாணிகொட்டி யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (ங)

மும்மைமல முங்கதிர்க் கற்றைவட் டப்பரிதி முன்னி ருள்செய் திர மதியின், முழுநில வெறிக்கும்வெண் டிருநீறு ஞானமெனு மொய்குழலை மன்றல் புரிவா, ரெம்மனிய தெ ன்றுபுனை நன்முகக் கண்டியுட னிறைவனருளெஞ்செ ழுத்து, மிலிங்காங்க சங்கசம ரசநிலைமை யிதுவென்ன விருளற வு ணர்த்து குருவு, மெய்ம்மையுணர் வொடுகலந் துற்றிருந் தங்கையில் வெளிப்பட்ட ஞான வடிவும், விளங்குசர மும்பு னித தீர்த்தசிவ சேடமும் மேலுலக வித்தென் றவை, தம் மையுல கினில்விளக் கியவந்த தேசிகா சப்பாணி கொட்டி

யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (௬)

உமைமன மிறந்தவொரு தனிநிலைமை யிதுவென்ன வுள்ளபடி முனிவர் நால்வ, ருணர்ந்திட வுணர்த்துதற் குற்றதவ யோகத்தி னெண்ணுதற் கண் டிறந்து, பொருமதனை வென்றனன் பரமனென் கின்றசிறு புகழன்றி யோக நிலைமை, பொன்றியங் கவன்வென்றி கொள்ளலாற் படுதோல்வி பொன்றலற வெய்தின னெனும். வரைவில்சிறு மொழிபுகா தெண்ணிலோ ருணரவரு மறைமுடி வுணர்த்தி வெய்ய, மதனன்வந் தொருகணமு மெதிர்நிலா தொழுகுதவ மாயாத நிலையி னுடனித், தரையினிடை வந்தருளு மெம்பரம யோகியே சப்பாணி கொட்டி யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே.

வேறு.

பெருவாழ் வுற்றிடு தீயர்செ ருக்குல கிற்கோரிற்
பிழையாய் முற்றிடு மாறென நத்திட ருற்றுழ
விரைதேர் புட்குலம் வாயிரை யிட்டிரி யக்காவி
யிதழ்சா யத்தடு மாறி வரிக்கயல் கெட்டோட
வெருவா மொய்த்திசை பாடளி மட்டுணல் விட்டேக
விளையா டித்தட வாளை குதித்தெழு பொற்பாய
திருவார் கச்சியர் நாயக கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (௬)

குருநீ பத்தொடை யாளி யெதிர்த்த விறற்சூர
குலமாள் வித்தவன் வாழ்மயி லைக்கிரி பொற்பார

வருநீர் மைக்கரு ணாகர கொட்டுக சப்பாணி
மலமா யைப்பகை யானவ கொட்டுக சப்பாணி
கருநீர் மைத்திரு மாலடி யுய்க்குமெ னப்பூசு
கவர்நா மக்குறி சேர்தரு நெற்றிது டைத்தீசர்
திருநீ றிட்டிடு மாதவ கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (எ)

ஒருமா தர்ப்பிறை வாணுதன் மைக்கண் மலர்க்கோதை
யுமைகா ணக்கம லாலய னொத்துற நற்றுளம்
வருமான் வத்திர னார்கொளு மத்தள முற்பேச
மகிழ்வீ ணைத்தொழி லாரிசை யொத்திசை யப்பாட
விருமா தர்க்குயி ராமுரு கற்பெறு நிட்காம
விறையா டப்புல வோர்புனை மெய்க்கவி தைப்பேர்கொ
டிருமா லைப்புய மாதவ கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (அ)

எளியா ரைப்பெறின் மேனிப தைப்ப வலைத்தாவி
யெதிர்வா ரைப்பெறி னோடு மறச்சிறி யர்ப்போல
வொளியா முற்சிறு மீனொதி ரக்கவர் வுற்றுடி
யுகள்சே லுற்றிட வாயிரா கக்குபு கொக்கோடு
மளியார் மட்டலர் வாவியு டுத்தற நற்சாலை
யழகார் கச்சிநீ வாச கருத்தும ருட்பாடு
தெளியார் கட்கரு ணீர்மைய கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (கூ)

புதையா மெய்ப்பொரு ளீகைய கொட்டுக சப்பாணி
பொழில்சூழ் கச்சியின் வாழ்பவ கொட்டுக சப்பாணி

மதயா னைப்பொறி காவல கொட்டுக சப்பாணி
மறைவாய் மைத்திரு வாசக கொட்டுக சப்பாணி
சுதையா மெய்ப்பொடி மேனிய கொட்டுக சப்பாணி
தொழுவார் கட்கரு டேசிக கொட்டுக சப்பாணி
சிதையா நற்குண தாபத கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (கo)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.

அருந்து மமுதி னினியதா யன்போ டளைந்து படிறில தா, யறைந்த மொழிதத் துவமசியி னன்றி மாறு வியல்பி னதாய்ப், பொருந்து மறையா முடம்பிற்குப் புக்க வுயிரா ய்ப் பவக்கடற்குப், புணையாய்க் கயிலை வழித்துணையாய்ப் பொலிந்த திருவஞ் செழுத்தென்னும், பரந்த புகழ்மந் திர வேந்து பவனி போதுந் திருமறுகாய்ப், பனிவெண் டிங்கட் சடைமுடியோன் படிவ முணர்த்தும் விளக்காகித், திருந்து பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே, திளைக்கு ங் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே. (க)

எல்லாத் தேவர் தமதுயிரு மிமைப்போ தினிலுண் கரி யகடு, வீன்ற வோதைக் கடன்முத்த மெனைத்தும் வேண் டே மெழின்மதவேள், வில்லாய்க் கொலைசெய் தொழில்ப டைத்த வேழக் கரும்பின் வெண்முத்தம், விரும்பே மலர்ப் பூம் பொழிற்றிருநெல் வேலிப் பதியின் வேய்முத்த, மல்லா ற் கருங்காட் டுயிரனைத்து மலமந் தழியக் கதழெரியை,

யாக்கு நெடிய வேயமுத்த மனுகேஞ் சிறிது மருளின்மொழி, செல்லாப் பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே, திளைக்குங் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே. (உ)

களரின் முளைத்த செங்கரும்பு கண்ணுற் பயந்த விளங்குமரன், கதிர்கான் றெழுசெம் பரிதியுடல் கறுப்பச் சிவந்த சுடரிலைவேற், றளிரி னியல்வென் றுலவுசிறு தவளை வாய்ச் சில் லரிக்குரற்பூஞ், சதங்கைச் செம்பொற் சிறுதண்டைத் தாளொன் றலைமேல் வைத்தபிரான், விளரி வரிவண் டிமிர்குவளை வியன்சீர்த் தணிகைக் கருங்கல்லின், மிசைப்பூப் பித்தா னெனக்கருதி வினையே னுள்ளக் கல்லிடைத்தாண், முளரி மலர்கள் பூப்பித்த முதல்வா முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (ந)

கற்ற புலவர் மிகச்சிறந்து காட்டு மொன்றன் வளமெடுத்துக், கவியால் விரித்துப் புகன்றியம்பக் கருதி யதுபொற் குன்றநா, ணுற்ற மணிப்பொற் கோபுரமோ வொளிர்பொன் மாட மோமுகில்வந், துறங்கு மதிலோ மாளிகையோ வுலவு திருத்தேர் மறுகோசீர், பெற்ற குடிகண் மனைவளமோ பிரச மலர்த்தண் டலையோநீர், பெருகு தடமோ வெனவிறைவி பிறங்கு கோயிற் றிசைபோல, முற்ற மயங்குஞ் சீர்க்காஞ்சி முதல்வா முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (ச)

இணையி றிருவள் ளுவப்பெயர்கொ ளெம்மான் கரப்பா ரிரவன்மி, னென்ன விரந்து மிரத்தக்கார்க் காணி னிரக்

கவென்றுரைத்து, முணர்வு தெருள்வித் தமைகொண்டே யொருவர் தமையு மிவ்வளவு, மொன்று மிரந்தா மல்லமி யா முன்னை யின்றீங் கிரக்கின்ரு, மணையு மவர்தம் முகக் குறிப்பா னறிந்தங் கவர்த மகம்விழைந்த, வனைத்து மமுத முறழீர மளாந்த வின்சொ லுடனளிக்கு, முணையில் கொ டைச்சிந் தாமணியே முகிலே முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (ரு)

வேறு.

அதிர்செய் கடலகன் ஞால முடியர விற்கெலா
மரசு நடுமுடி யீனு மெழுசுடர் வட்குமோர்
கதிர்கொள் புதுமணி கோடு கொடுமிடி யுற்றுளார்
கடையு மணிகொடு வீசு மவரொன நிற்றறீர்
துதியி லுடல்பொரு ளாவி கொடுதமி யற்குமா
சுருதி முடிவுறு மாசில் பொருளுத வுற்றகூன்
மதியின் முடிமதி யாள பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (சு)

கருவி யுடல்பொறி பூத முதலன முற்றுமே
கழல்பு தனியறி வாகி யொருபிர மத்துநாம்
விரவி யதுவடி வாயி னமெனுமொர் சுட்டுமே
விளிய வரவொடு சேற லருகயல் கொட்புறு
வருவ முருவமி லாத நிலையொர் கணத்துளே
யருளு மொருமொழி யாள திருவளர் கச்சியூர்
மருவு பெருகருள் வாரி பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (எ)

நிறையு மருண்மழை மேக மெனவும றப்புரு
நிதிய வனையொடு தாம ரையெனவும் வற்றுரு
துறையு மலிதயை வாரி யெனவுநி னைப்பரா
யுணர்வு தருகலை யோதி யுணர்விம யக்கிலா
ரறையு மொழிகொடு மேவி நினையிரங் குற்றநா
மலது பிறர்தமை யாது மருவியி ரக்கிலே
மறையி னிலைதவிர் யோகி பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (அ)

குதலை மொழிமருள் பேதை * பிலநதி மட்டுவார்
குவளை மதர்விழி மாலை மதியைம ருட்டுவா
ணுதலை வழிபட வேகி மறியும்வி யப்போடே
நுவலி லளவில வாகும் வளமலி கச்சியாய்
திதலை முலைமட மாதர் கொடுமய லிற்படார்
திகழு மனமுடை வாய்மை நெறியறி ஞர்க்கெலா
மதலை யெனவரு தூய பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (கூ)

இயலு மொருகுட வானை யதனுளி ருக்கவா
னெனவ றிவுறவு பாதி யறவறி வித்தல்போ
லுயலி லுடலினுண் மேவு முயிர்பிர மத்தின்வே
றொழிய வொருபொரு ளாகு மெனவறி வித்தவா
செயலொ டுரைமனம் யாவு மதியம ருட்டுமோர்
திலக நுதலுமை பாகர் பணிசெய வுய்த்துவாழ்

---

* பிலநதி-கம்பை.

மயலி லடியவர் நேச பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (௧௦)

முத்தப்பருவம்முற்றிற்று.

வாரானைப்பருவம்.

நேரா வெமக்குக் கொடுத்தவுட னிலையா தழியும் பொருளாவி, நெறியின் மயங்கித் தமவென்னு நினைவினேரிங் கிவரொன்றுந், தீரா வெகுளிக் கனற்கிவர்தஞ் சிந்தை முருட்டுவிறகென்றுந், தீய காமக் கள்ளுண்டு செருக்கு களிய ரென்றுமருள், கூரா தழுக்கா றெனுமளற்றுக் குழிவீழ் குருட ரிவரொன்றுங், கொலையை யஞ்சா ரென்றுமுளங் கொண்டு தமியேமழைப்பவுநீ, வாரா தொழியல் பெருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (௧)

அணங்க வெம்மைப் பிடித்திருந்த வவாப்பே யகன்று குடிபோக, வருள்செ யொருமந் திரவாதி யாகிப் பாச வல்லிருளைப், பிணங்கு மொருசெஞ் சுடராகிப் பிறவிப் பிணிக்கு மருந்தாகிப், பிறந்த வன்புக் குழவிக்குப் பெற்ற தாயா யிடும்பைச்சே, றணங்க வெழுசெங் கதிராகி யுழலுஞ் சமயக் கடாக்களிற்றை, யுடற்று மரிமா னேருகி யுவந்து தமியே நறுமலர்தாய், வணங்க வொருதே வாய்க்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (௨)

பைந்தா துருக்கு நறுங்கொன்றைப் பனிமா மலருங் குழவியிளம், பயில்வெண் மதியுந் துளையெயிற்றுப் பாம்புஞ் சுமக்கு மன்றுநீ, செந்தா மரைச்சே வடிநோவத் திரும்பித் திரும்பி யோரிரவிற், சேல்வென் றகன்ற வரிமதர்க்கட் சிலைக்கூன் புருவத் தாளநகை, நந்தா விளக்கின் றிருமனைக்கு நாவ னகரின் வன்றொண்டர், நடத்த வொருதூ தாளாகிந டந்த வுனக்கின் றடியேம்பால், வந்தால் வருமோர் பழியுண்டோ மதுரக் கனியே வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (ரு)

முருந்தேர் நகையார் மயறுரக்கு முத்தே வருக பிறவிவன, முரிக்குங் கருணைக் கடாக்களிறே முன்செய் தவத்தோர் தமக்குவரு, விருந்தே வருக தூண்டுசுடர் விளக்கே வருக சோதிமணி, விழியே வருக பரமுணர்ந்து வினைக்குந் தவத்தோர் பாணிறைய, விருந்தே கமழுந் தீங்கனியே யிறையே வருக புகழ்நிலா, வெறிக்கு மறுவின் மதியமே யெமையாளுடையாய் வருகவரு, மருந்தே வருக பெருங்கருணைவடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (சு)

இரவின் முயல்வார் மிடியினு லிரங்கா வுளத்த னெனப்படுத, லிருளாற் பகைஞ னெனப்படுத லிறவாக் கொடுந்தி வினையினாற், பொருவில் கொலைஞ னெனப்படுதல் பொய்யாற் பொய்ய னெனப்படுதல், பொருமை யதனு லிவனென்றும் பொருமை யினன்கா ணெனப்படுதல், வெருவு முடம்பி னிடும்பையினுல் விளங்க வறியா னெனப்படுதல்,

வெகுளி யதனுற் றரியாத வெகுளி யினனு மெனப்படுதன், மருவி யுலகில் வருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (ரு)

சுருளுங் குடரும் புழுமலமுஞ் சொரியு நீருங் கலந்துபு றந், தோன்று வயிறும் வேறொருபாற் றோன்றி நரலை யெனு ந்தசைதான், றிரளும் புன்மார் புறுமுலையுந் திமிரு நறுநாற் றப்பொருளாற், றீர்க்கு முடலைப் புலானுடம்புஞ் செத்தாற் கிடந்து புறங்காட்டிற், புரளுந் தலையுங் கொடுநின்ற புன்மா தனைவா னமுதமே, பொன்னங் கொடியே பசுங்கிளியே பூ வாய் மயிலே யென்றென்று, மருளும் பெரும்பித் தொழிய வரு மருந்தே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (சு)

போற்ற வருக வடிமையேம் புகழ வருக நறியமலர், பு னைய வருக வருண்மாரி பொழிய வருக வடிகடலை, யேற்ற வருக மவுனமொழி யிசைப்ப வருக வெமதுளத்தி, னிருப்ப வருக வறங்கடலை யெடுப்ப வருக நீற்றழகு, தோற்றவருக வெங்கண்மய றரப்ப வருக கொடுங்காமந், துடைப்ப வருக கூற்றுவலி தொலைப்ப வருக பிறவிநோய், மாற்ற வருக வறி வுருவில் வைப்ப வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞா ன மணியே வருக வருகவே. (எ)

அற்றங் களையு நின்பெருஞ்சீ ரறைந்து செந்நா விவ்வு லகி, லயலோர் மொழியு மறையாம லன்பா னின்பாற் பற் றுமுளம்,பற்றொன் றிங்கட் செயாமலுனைப் பார்த்த விழிகள் பிறபொருளைப், பாரா துன்சொற் கேட்டசெவி பயனில் பி

றசொற் கேளாம, லுற்றுன் றிருத்தாட் குற்றேவ லுஞற்று கரங்கள் பிறிதொன்றை, யுஞற்று துள்ள படிசுட்டா துன்னை யுணர்ந்த பேருணர்வு, மற்றொன் றினையிங் குணராமல் வந்த குரவா வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (அ)

வேறு.

முட்டு மார்புல னுய சேனைகண் முறியமான்
முற்று நானெனும் வேழ மாய்வுற மனமென்மா
பட்டு வீழ்தர வாவி யாமர சுடையவே
பற்றி ஞானநல் வாளி னுலொரு தமியனுய்
வெட்டு பாணிய னுன லாலய விலையெனு
வெற்றி யாலறி வாகு மோர்நக ரிமையுளே
கட்டு மாறெதிர் மாறில் சேவகன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (௯)


பற்றி லாவுணர் வாகி மாமன மருவியே
பற்று வாள்விழி யாறு சேர்புகை தனில்வரா
வுற்றி லாவமர் ஞான நாயகன் வருகவே
யொப்பி லாவருண் மூல காரணன் வருகவே
முற்றி லாமுலை மாத ரால்வரு மயலறு
முத்தி சேர்வுறு மாறு தீதறு துணிவுநூல்
கற்றி லாரறி யாத சீரியன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (௧௦)

வித்து வான்வர வால லாதொரு பிறிதினுன்
மிக்க வாழ்வுபெ றுத வாறென வடியரோ

மத்து வாமுடி வான நீவரு வரவுதா
னற்று வேறுள வேது வாலுள மகிழ்வுறே
முத்து வாளர வீனு மாமணி மிகுகுவான்
முற்று மாமதி ஞாயி றுமெனு மயிலைவாழ்
கத்து வாதமி லாத போதகன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (கக)

வாரானைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.



இரவடைவை நீயிரவை யடையா னிவன்கலை யெண்டிரண் டுடையை யிவனெண், ணெண்கலை கடந்தவன் மறுவுண் டுனக்கிவற் கில்லையா லோர்மறுவு நீ, மருவுமனை நாணிலவை யிவனென்று மழியாது வருபெரும் புகழ்நில வினன், வளர்குழவி யிற்றெழு வதற்குரியை நீயிவன் வணங்கியிடவென்று முரியான், விரவுபெண் மயலுடைப் போகிநீ யிவன்மயலை மேவாத பரம யோகி, விடையுடைப் பாகன்முடியிற்பொறையை நீயிவன் விளங்குதளிர் மென்கை யில்விடா, தரவவணி யற்பொறுப் பவனுதை லால்விளை தம்புலீ யாடவாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுடனம்புலீ யாட வாவே. (க)

பையரவின் வெவ்விடப் பகுவாயி னிடைசென்று பட்டுளைப் போல நைந்து, பாதியுமை பங்களை யிகழ்ந்தவவன் வேள்வியிற் பல்லொழிந் துழலு மந்த, வெய்யவன் றனை

யடைந் தென்பயன் மெய்குன்றி விரையவிங் கெய்த வருநீ,
விரிசிறைய வாரணச் சினையென்ன வேநின்னை மிசையவரு
பைங்க ணரவ, முய்யலற வோர்நிலச் சுமையரவை வாயல
கி னோடிக் கவர்ந்தெடுத் தே, யுதறுமொரு தோகைமயி ற
னையேவ வேதனக் கொருதுணைவ னுய முருகற், கையனிவ
னுரைசெய்வ னுதலா லுளமகிழ்ந் தம்புலீ யாட வாவே, ய
ருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்புலீ யா
ட வாவே. (௨)

கரியவண் டிமிர்குவளை யிகலியங் கயல்வென்று காதள
வு மோடி மீளுங், கருநெடுங் கண்ணுடைய வொருமாது கு
ழல்வெண்மை கருமைசெய் திடு மிவற்குத், திரியமின் மெய்
யினிடை வருகருமை யிணைவெண்மை செய்வதரி தன்று கண்
டாய், சிவமென்று முயிரொன்றும் வேறுசெய் தகலாத திமி
ரமா மலம கன்றே, யிரியவருள் குடியிருக் கின்றவிழி மலர்
திறந் திணைமலர்ப் பதமுடி யின்மே,லிருத்திமன மொழிகட
ந் துடனின்று குறிகுணமு மின்றியரு மறை தனக்கு, மரிய
பொருடனையளிக் கினுமளிக் குவன்விரைந் தம்புலீ யாட
வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட ன
ம்புலீ யாட வாவே. (௩)

உந்துமா றருள்பிறந் தெழுதரு மிவன்றிரு வுள்ளத்து
முனிவில்லை யென், றுன்னல்சிறு விதிமகத் துறுமமரர் தம்
மையு முன்றனையு மமர்குறித்து, வந்தமா மதனையுங் கண்
புன றுளிப்பவே மனமுருகி மெய்யன் பினன், மலர்கொண்
டு பூசனை தொடங்குமொரு தொண்டன்மேல் வஞ்சினங்

கொண்டு வெம்பிச், சிந்துமா ரழல்விழிப் பணைமருப் பெரு மையிற் சென்றகொடு மறலி தனையுஞ், சிரமைந்தொ டைந் துடைய திரள்புயத் தெறுழ்வலித் தீயனையு முன்வெகுண்ட, வந்தவா தனையிருப் பினுமிருக் குங்கடிதி னம்புலீ யாட வா வே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்பு லீ யாட வாவே. (சு)

நெடிமைகொண் டவிர்பவள வார்சடைக் கற்றையு நெ ளிதிரைக் கங்கை நதியு, நெட்டுடற் கட்செவிப் பணியுமத னைத்தெறு நெற்றிமிசை யொற்றை விழியுங், கடிமைகொண் டிடுகவைக் கானெடும் பகடுந்து காள மேகம் புரையுமோர், காலனுயிர் கொண்டசெங் கமலமல ரடியின்மால் கண்ணுநீ காணுமை யான், மடிமைகொண் டிங்கழைத் திடவுமொரு மனிதனென வாரா திராதி கண்டாய்,வழங்குமுடல் பொரு ளாவி கைக்கொண்டு மருளாது மனிதரைத் தனதருளினு, லடிமைகொண் டிடவந்த கள்ளவடி வினன்விரைந் தம்புலீ யாட வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானி யிட னம்புலீ யாட வாவே. (ரு)

நறியமலர் விழிசிவந் துனைவருக வென்றில னடந்தத ங் மனமாயின் யா, நணுகவரு வாயென வழைத்தெதிர் விடு க்கில நாண்மலரின் முகம லர்ந்து, சிறியநகை யிளநில வெ றிப்பவரு கென்றனன் செயற்கைவடி விதுவன்று தன், றிரு முடி யணிந்திஃ தியற்கைவடி வெனமனந் தெருள்விலார்த் தெருள்விக்க வோ, வறியவுரு வாமிரவி யெதிர்மழுங் குறு சிறுமை மாற்றியொளி பெறவைப்ப வோ, மாசுட றுடை

ப்பவோ குறைதவிர்த் தருளவோ மனத்திவர் நினைத்த நினை
வை, யறியகில மறியாமை யறவருளு குரவனுட னம்புலி
யாட வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானி
யுட னம்புலீ யாட வாவே. (௬)

வேறு.

ஏதிலார்களிகழ் காமநோயதுற வேறறங்கடை புடை
யநா, மேதுபோவதென வெயிராதிமுன மீறில்வெம்பவ ம
ருவுமோர், தீதிலு *னினிற நாமனுமொருவன் ஞானியங்கழ
ல் செறியவே, தேறிநீவருதி யாலெனுவினைக டகொள்பஞ்
சென வழியநால், வேதமாமுடியி னேதுமோர்பொருளை
மேனியிந்திய முதலவாய், மேவுபாதிகளை மோதியோர்மொ
ழியில் வேறறும்படி யுதவினு, னுதலாலிவனு மோகையால
ருளு மாடவம்புலி வருகவே, யாசிலாதசிவ ஞானதேவனு
ட னுடவம்புலி வருகவே. (௭)

வெயிலிலங்கிழை மாதராடவர் விரகமொன்றுறு மவ
ொலாம், விரியும்வெண்டிரை வேலையூடெழ வெளிறும்வெங்
கடுவெனவெழா, முயலிறந்தசை யாதுதானுடன் முறுகிவெ
ந்துற வடலையான், முழுகும்வெங்கன லாகுமாலென முனி
யவுன்றனை யகலெனு, தயர்வுளந்தரு காமநோய்கள விறு
மடைந்திட வறிகிலா, வமலநெஞ்சின னுதலாலிவன் வருக
வென்றன னருவிநாழ், மயிலையங்கிரி யாளியோடுற வருகவ
ம்புலி வருகவே, மருவருஞ்சிவ ஞானியோடுற வருகவம்புலி
வருகவே. (௮)

* நின்னிறநாமன் என்றது சிவனை,

5

முடிவறுஞ்சக சிவமாபர மெனமயங்குறு மயலெலா, முகைநெகிழ்ந்தளி பாடுமாலையின் முதிர்சினங்கொளு மரவு போ, னெடியவன்றறி காணுமோர்மக னௌவழிந்தொரு பிரமமா, நிலையினின்றிடு ஞானியேவலி னெழுகிநின்றிடு மவர்கடா, மொடிவறும்பர போகமேவின ருணருமங்கவர் நிலையிலே, யுறவர்பின்பென வேதமோதிடு முறையுணர்ந்தனை யலைகொலோ, மடிவறுஞ்சிவ யோகியோடுற வருகவம்புலி வருகவே, மருவருஞ்சிவ ஞானியோடுற வருகவம்புலி வருகவே. (௯)

அகல்விசும்பெழு பாயபேரிருள் பருகுசெங்கதிர் வருகெனு, னமரரொன்றுயர் தேவர்தானவர் குரவர்தங்களை வருகெனுன், முகமலர்ந்துனை யாடனீயிவண் வருகவென்றனனவன்வரு, முகிலுறங்குறு வானளாவிய மயிலையந்திரு மலையிலே, பகையெனுங்கதிர் காலுமாமணி யரவமுண்டெனவெருவனீ, பரனைடொன்றிய நாகமாலிவர் பறவைகண்டுளம் வெருவுமோ, மகிழ்வுகொண்டெமை யாளியோடுற வருகவம்புலி வருகவே, மருவருஞ்சிவ ஞானியோடுற வருகவம்புலி வருகவே. (௧௦)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

சிற்றிற்பருவம்.

—:o:—

கடியிற் றிலகஞ் சுகமணிதர் கல்வீழ் மணிநீர்க் குவளைமலர்க், கயத்துப்பாசி யெனவொதுங்கிக் கடிதின் முன்னரொ

னெருங்கிப், படியிற் பணியக் கிடையாமற் பாம்பின் றலையிற் பெருஞ்சுமையைப், பகைதீர்த் தொருசெங் கோலோச்சிப் பாது காக்கு முடிமன்னர், தொடியிற் பொலிந்த கரங் கொண்டு துடைத்துத் துகடம் முடற்கணிந்து, சுடர்மா மணிப்பொன் மகுடத்திற் சுமப்பச் சிறந்த நினதுதிரு, வடியிற் புழுதி படும்வண்ண மடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (க)

அழிக்க வுளத்துக் கொண்டனையே லடங்கா தெழும் வெங் கொடுஞ்சினத்தை, யழிக்க கடலிற் பெருகியெழு மவாவை யழிக்க செருக்குளத்தை, யழிக்க விருளி னுய்த்திடு மோ ரழுக்கா றதனை மூலமற, வழிக்க காமப் பெரும்பிணியை யழிக்க கொலையை யஞ்சாமை, யழிக்க வினைகண் மூன்றனையு மழிக்க வழியு முடம்பதனை, யழியா தென்னுங் கருத்ததனை யழிக்க மூல மலவிருளை, யழிக்கப் புழுதி கொடுசமைத்த வடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (உ)

பழித்த வுலக முயிராதி பகவ னெனப்பே தித்தென்றும், பாழ்செய் மூல மலவிருளைப் பதத்தா லழிக்குஞ் செயலன்றிச். சுழித்த கடலி லரவணையிற் றுயில்வோ னளித்த மலரயனாற், றோன்று முலக மழித்திடுமத் தொழிலும் புகழ்செய்யாததெனி, னிழித்த புன்சொற் புன்புலவ ரிசைத்துத் தாமே யழித்தலுறும், யாப்பே போல விழைத்தளவில் யாமே யழித்து விடுமிதனை, யழித்த னினக்குப் புகழ்தருமோ வடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (௩)

போக்கு வரவு குறிகுணங்கள் புணர்தல் பிரித லிரவுப கல், புறமுள் ளகன்ற நிரஞ்சனமாய்ப் புகரற் கரிய வவாச் சியமாய், நீக்கு முருவக் கலையாகி நிறைந்த வநாதி யாதி யாய், நிகரி லகர முதலனவாய் நின்று பலமந் திரமு நால், வாக்கு மறையு மாகமமு மற்றுங் கலைகள் பற்பலவு, மண்ணும் புனலுங் கதமெரியும் வளியும் விசும்பும் பேருல கு, மாக்கும் விளையாட் டுடைக்குரிசி லடியேஞ் சிற்றி லழி யேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியே லே. (௪)

செங்கட் கமல மலர்த்தவிசிற் சிறந்து தனிவீற் றிருக்கு மொரு, திசைமா முகற்குத் தொழில்படைத்த திகிரிப் ப டைவால் வளைசுமந்த, வங்கைக் கமல விழிக்கரிய வழகன் றனக்குத் தொழிலளித்த, லழித்த லெமக்குத் தொழிலென் னி லடுபோர்ப் பணைக்கைக் களிற்றுரியும், பைங்கட் பணியு ம் வேணிநெடும் பவளக் கொடியிற் றிரைதிரைத்துப், பாயு ங் கங்கைப் பெயர்யாறும் பணியத் தருகூன் முதுகமுத, தி ங்கட் கொழுந்துங் காட்டென்பேஞ் சிறியேஞ் சிற்றில் சி தையேலே, சிகர மயிலைச் சிவஞான தேவா சிற்றில் சிதை யேலே. (௫)

கொந்தார் மலரு நறும்புகையுங் கொண்டு நினையாந் தொழத்தக்க, குலதே வதையாய் வழிபட்டுக் குறித்துப் ப ணிதுஞ் செங்கரும்பே, நந்தா விளக்கே யமுதமே ஞான வடிவே நாயகமே, காடும் பொருளே யென்றென்று நாளு நினையே பாடுதும்யாம், வந்தார் தமது பிணிதீர்க்கு மருந்தா ய்ப் பணியு மாசர்முடி, மணியா யெமக்கோர் பற்றாய வறிவ

ண் டொழுகு மதுவுண்ணுஞ், செந்தா மரைச்சே வடிநோவ
ச் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சிகர மயிலைச் சிவஞான
தேவா சிற்றில் சிதையேலே. (சா)

வே று.

இற்றைமணல் கோலியிழி சொற்பொருளை வாளா
வெய்ப்பில்புல வோர்கவியெ னப்புகலு மாபோ
லுற்றெரர்பெயர் கூறெமது சிற்றில்சிதை யேலே
யுய்த்தமொழி யோவல வெமக்கிறைவ னீயே
மற்றுமொரு தேவுள வெனக்கருதி லேமான்
மக்கள்பிணி யேயலது மற்றருள்செய் யாதே
செற்றறிகி லாவொருவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (எ)

மெய்ப்படிம மேவியடி மைக்குரிமை யாராய்
மெய்ச்செயலி லாதவரு நற்றவரொ ளுவோர்
பொய்ப்பெயர்கொள் வாரொனினு மெய்ப்பெயர ராயே
புக்குதவு நீயெமது சிற்றிலென வோர்பேர்
வைப்பவளி யாதிதையு மக்கடலை மீதே
வைக்குமடி யாலிவண ழித்தலற மாமோ
செப்பரிய வாய்மையிறை சிற்றில்சிதை'யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (அ)

ஒற்கவிர வேடர்களிலெ னப்புகல்வ தேகீ
யுற்றெருருவர் பாலுமுளை வுற்றுரைசெய் யாதே
நிற்கநனி யீகைவிளை பெற்றிடுகை யாலே
நித்தமது கோறனினி யற்கைகின தார்சீர்

கற்குமடி யேமிரவ கற்றிலெனு மீதுங்
கைத்தடியி னலிவண ழித்தறகு மோகாண்
சிற்கனசி வானுபவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (௯)

மொய்த்தபுழு வாகமுயிர் புத்திமன மாயா
மூற்றுமற வேமறைமு டிக்குமணி யாமா
தத்தொமசி யாகியப தப்பொருளி னாலே
தக்கசிவ னீயெனவு ணர்த்தியது தானு
வைத்தநின தாள்படுமி சுற்றடிமை யாவே
மைக்கண்மணி யூடுபடு தற்குநிக ராமே
சித்திகட ரும்மொருவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (௧0)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

சிறுபறைப்பருவம்.

:0:

குன்றவரி சிலைகொண்ட வெம்முடைய நல்லருட் குன்றமே தெய்வ மென்றுங், குறுகுமவ னடியவர் குழாத்தினுட் புகுவதே கூறரிய வீட தென்று, மன்றுளுமை கண்குளிர நின்றுநட நவிலுமொரு வள்ளறிரு வஞ்செ ழுத்தே, மந்திரம தென்றும்விட யப்பகை யொறுப்பதே வலியென்று முள்ள படியே, நின்றுதனை மயலின்றி யுணர்கின்ற வுணர்வதே நிலையான வுணர்வ தென்று, நெஞ்சினிறை யழியவெகு ளிக்கடுங் கனலெழா நிலையதே தவம தென்றுஞ், சென்றுவினை

பொடியாக வருள்செயருண் மேகமே சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (க)

வந்துபிற கடவுளர்க டமையுநைத் துமைகாண மணிமன்று ணடமாடு மா, மணியையிகழ் பரசமய நிலைகுலைய வென்றறையும் வன்றிறற் பறைய தென்னச், சிந்தைகவ ருந்துயர் விளைத்துவரு காமமொடு சினமென்னும் வெம்பு லிக்குந், தீராத வாணவப் பேரிருட் குந்தனி தெழிக்குநெய் தற்பறை யென,நந்தலரு மறிவென்னு மோரிளங் கன்னியை ஞானவடி வான பிரம, நன்மணம் புணர்கின்ற மங்கலப் பறையென்ன நற்றவக் குன்ற மேநீ, செந்தளிரி னெழில்வென்ற நின்றிருக் கையினாற் சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (உ)

கருவிளைக் கின்றசிற் சிலமொழி பகர்ந்துசில கடவுளா யிறைவ ரொன்று, கண்டியொடு வெளியதிரு நீறிழந் திருள்பருகு கனலுமுயர் வான கத்தி, னிருவிளக் குந்திகழும் விழியான வெம்மிறையை யிகழ்புறச் சமயர் தங்க, ளிருகவுளி னுங்கடிதி னறைவதென வெற்றிவே லிறைமயிலை வெற்பின் முடிமே, லொருவிளக் கெனநின்று திகழ்பவா செம்மணிக ளொளிர்பணு முடி யனந்த, வுரகமென் றிடுபெயர்த் தண்டின்மிசை நிலமென்னு மோரகலின் மெய்த்தபுகழாந், திருவிளக் கிட்டுவைத் திடவல்ல வித்தகா சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (ந)

வார்மணி முலைக்கருங் கயனெடுங் கட்பவள வாய்மலர்க் குழன் மங்கையர், மலரடிக் கணிசிலம் பரிமணி முழக்கமும் மதமழை விடாது சொரியுங், கார்மணி முழக்கமுங் குணில்பொரு பெரும்பணைக் கடன்முழக் கமும் வீரர்தங், கழலொலி முழக்கமுஞ் செங்குதலை வாய்மகார் கட்டுகிண் கிணி முழக்குங், தார்மணி முழக்கமொடு வருபரி முழக்கமுந் தரும சாலைகண் முழக்குஞ், சதுர்மறை முழக்கமுஞ் செந்தமிழ் முழக்கமுந் தமனியத் திரு மறுகுலாங், தேர்மணி முழக்கமுங் கிளர்கச்சி நகராளி சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (ச)

நரம்புதிர மென்புதோன் மூளைதசை பலகூடி நரியுமடி செவிய சுருள்வா, ஞயுநெட் டலகுவிரி சிறகர்வன் கழுகுமிது நமதென்ன வந்த வுடலு, நிரம்புதுயர் செய்தடங் காதுழன் றொழியாத நிரயத் தழுத்து புலனு, நெறிமருண் டலமந்து திரிகின்ற புன்மனமு நில்லா தியங்கு முயிரும், பரம்புபற் பலவாய குணமுமல னென்றுபோய்ப் பாசநிலை குலைய நின்ற, படியிலெனை யறிதலே நினையறித லாகவிரு பதமுமென் முடியில் வைத்துத், திரும்புத லிலாதவொரு பதமுதவு கொடையாளி சிறுபறை முழக்கி யருளே,சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (ரு)

வேறு.

அரிமதர் மழைக்கண் வளர்வா ரவிரறன் மருட்டு குழல்வா, ணணிமதி கவற்று நுதல்வே யனவொளிர் மணித்தொடியதோள், வரியளி மிடிக்கு மிடியா மதுமடை திறக்கு மல

ர்வாண், மதிமுக மலர்க்கு முதம்வீழ் மணியிதழ் வளைத்த சிலைதாழ்,முரிபுருவ முத்து நகைநேர் முகிழ்முலை வளைக்கை மடவார், முதிர்படை யெழுச்சி மதவேண் முரசதிர் முழக்க மறவே, திரிவறு தவத்தரச நீ சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (சு)

பழுதிறலை மைக்கு மணியே படுபறை முழக்கு மதுநீ, பணியென வெளைத்து நினையேல் பணைபுரை புழைக்கை யுழல்வான், மழைமத மொழுக்கு கவுளல் வளைபிறை மருப்பு வரைமேல், வருமரச னுக்கு நிறையா மதுவுறைபிலிற்று மனிவா, யுழுமல ரயற்கு மலரா ளுயிரொனு மவற்கு மிறையா, மொருமுத னடிக்கு மதனு லொருகுறை படைத்த துளதோ, செழுமுகில் கவற்று கொடையாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (எ)

மறியும்வளி யைச்சு ழுனையாம் வழியுற வியக்கி மணியாழ், வளரிசை மடுக்க நினைவார் மனவிழைவி னெட்டு மடியா, யெறியுநின் மலர்க்கை யதனு லெழுபறை முழக்கமடியே, மிருசெவி மடுக்க விழைவே மிகல்கரி முறிக்க வளையா, முறியுமலர் மொய்த்த விணர்வீ முரலளி மறித்து மருளான், முறியிடை மறத்தி யர்கடாழ் முடிசெருகு கொத்தி னிடையே, செறியுமயி லைக்கி ரியுளாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே.()

பகழிபுரை மைக்க ணளிவீழ் பனிமலர் முடித்த குழல்வார், படுமுகிழ் முலைத் திருவொடே பனிமதி நிறக்கொடியனுள், புகழ்வரை தவத்தின் வருமோர் புதல்வி செவியிற்ப

ருகுபால், புனையுமழ லைச்சொன் மணிவாய் புகலவவள் கட்கி னியனுய், மகிழ்மக வினுக் கமையுமா மணியணி யுறுப்புற வுலாய், வருமரு மகத் தனிமைபோ யொழியமணி முத்த ருவிதாழ், திகழுமயி லைக்க ணுறுவாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கியருளே.

உரைசெயு மெவற்று மெனைநேர் வுறநகர் கனத்த திலையா, லெனவுல கமிழ்த்து கடைநா ளொரிகடன் மிதக்கு நகர்வா, ழருள்வடிவ வொப்பி லுமையா ளணிமுலை கறக்கு மருளா, ரமுதமுண மிக்க விளைழவா லழுதகுழ விக்கு நிகராய், வருநக ரனைத்தும் வளையா மழையிய முழக்கி யெதிர்வார், வரவர விருப்ப முறுமூர் தொறுமலி தவத்த ருடனே, திருவடி வருத்தி வருவாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (கூ0)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

சிறுதேர்ப்பருவம்.

———:0:———

அருவடிவ மாகிமன மொழிகடந் துயர்பிரம மங்கையி னு நெஞ் சகத்து, மணுகிவல் சிறைக்கொடியி னிருவிழிக் கொருமணி யமர்ந்ததென நின்ற நிலையைக், குருவடிவு கொண்டுணர்த் துறுகுணக் குன்றமே கோடிமா தவர் குழுகியே, குற்றேவல் செய்தரு கிருந்துநின் றிருவுளக் குறிப்பி ன்வழி யொழுகி நிற்பக், கருவடிவ நிலையென்று செய்யாத கொலைகளவு கட்காம மேபயிலும் வெங், கயவர்தமை யுற

வுகொண் டொழியாத வென்றனைக் கடிதி னருகுற வழைத்துத், திருவடிகள் புன்றலைக் கணிசெய்த வருளாள சிறுதேருருட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டி யருளே. (க)

தகரமலர் வார்குழற் பவளவாய் மடமாதர் தடநெடுங் கண்க ளென்னத்,தாவுமறி கிடைகிடந் திடுபெருங் கொல்லையைத் தண்டிரை சுருட்டி யெறியு,மகரமனை யுண்டதிர்த் தெழுகமஞ் சூன்மழை மாரியென வந்து பிளிறும், வளைமருப் புழல்செவிப் புகர்முகச் சிறுகணல் வலிவேழ மத கனைப்பப், பகரலரு மெறுழ்வலிப் பிறைமருப் பொருகரும் பன்றியது கண்டு செவ்விப், பதமென்ன வுழவண்ட முகடுதொடு நெடிய முதிர் பணைதரள விதை விதைக்குஞ், சிகரமணி மயிலைமலை முருகனுட னமருமிறை சிறுதே ருருட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே (உ)

யாவர்யா வருமெழுங் கனவிருள் விழுங்குமோ ரிரவியைத் தத்த மக்கிங், கெதிரொன்று புகல்கின்ற தென்னவிவ் வுலகில்வரும் யாவருந் தத்த மக்கு, மேவுமா ருருளுடைய னென்னவரு மவிரோதி விரிசுடர் விளக்கொன் றுதான்,விழையவொரு கம்பத்து மிசையிருந் தகமெலாம் விரிகதிர் பரப்பு மதுபோ, லோவிலா வண்புகழ்க் கதிரொளியை வெண்டிரைய வோதையங் கட லுடுத்த, வுலகெலா மொருமயிலை வரையிருந் தொளிர்விக்கு மொருவமா முத றடிந்த,தேவர்சே னுபதியொ டுற்றிருந் தெனையாளி சிறுதே ருருட்டியருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டி யருளே. (ந)

போரொன்று வஞ்சமன வெஞ்சொற் கொடுந்தருவர் புரமொன் றிரண்டுமொருதன், பொருவென்ற வஞ்செழுத் தோதுமவர் வினைநிலைமை போல்வதற் கேகு மருளால், வா ரொன்று குங்குமக் கொங்கையந் திருமாது மனை யடைத் துந் திறந்தும், வந்துலா வருமிரண் டாழியும் பொய்யாத வாய்மைநன் னெறி யந்தணர், நேரொன்று நெஞ்சவஞ் சா லைதனி லகலாது நிற்குமா வீரி ரண்டு, நிரையிதழ்த் தாமரை த் தவிசினுறை யொருபாகு நிகழ்வுற்று மேவுறு பெருந்,தே ரொன்று கொண்டவிறை யுளமகிழ வெம்மைய சிறுதே ருரு ட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறு தே ருருட்டி யருளே. (ச)

குன்றலரு மருளாள னென்றமொழி நிற்குறிக் கொண் டுசெல் கின்ற தெனவுங், குறித்தொருவர் பாலென்ற வளவி லம் மொழிசென் று கோவமுதி னேர்த லெனவு, நன்றினிய பழமென்ற வளவினெட் டிலைவாழை நற்கனியி னெய்த லெ னவு, நாடரும் பிள்ளையென் கின்றமொழி யாண்மகவி னண் ணுமா றெனவு மீச, னென்றளவின் விடமெழுந் திடநடு நடு ங்கிநிலை யின்றியிரி தரு தேவரை, யெய்தாமன் மணிகண் ட னைப்பொருந் துதலெனவு மிவணகர மென்பது தனைச், செ ன்றடையு மொருபெருங் கச்சிநக ராளிநீ சிறுதே ருருட்டி ய ருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ரு ருட்டி யருளே. (ரு)

வேறு.

கருத்திற் காண்குறு நாடிகண் மூன்றையுங் கண்டுகன் னடுநாடி, கலந்தி யங்குறு முயிர்க்கழி விலையெனக் காட்டி

நோ யினர்நெஞ்சந், திருத்திக் கைப்புவிட் டருமறைப்
பாலொடு தீங்கிறப் பெருமுக்கட், டஞ்சு வைக்கனி தன்னையுட்
கொள்கெனத் தெருட்டுபு முனங்கூட்டு,மருத்துப் பையினைச்
சோதித்து வெண்பொடி மருந்தெடுத் துடல்பூசி, மணிய ணிந்
தரு ளஞ்செழுத் தாகிய மந்திரம் பிறழாம, லுரைத்திட்
டோம்புறும் பவப்பிணி மருத்துவ னுருட்டுக சிறுதேரே,
யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரே. ()

வண்டமிழ்ப் பெரும் புலவர்தஞ் செய்யுளின் வழுப்ப
டாச் சொல்லோடும், வழுவ மைத்தசொற் புணர்த்திடு மா
றென வயங்கிள மதிசூடி, தொண்டு பட்டிடு மயறபு நன்
னெறித் தொழும்பின ரொடுகூடச், சுளிவு றுதடி யென்ற
னைத் தழுவியே தொல்லிசைப் புலவோர்தந், தண்டமிழ்த்
தொடை புணர்க்கிலா முழுவழுத் தாழ்ந்தபுன் சொற்போ
லச், சங்க ரன்றிருத் தொண்டில்வெற் றுலகளைச் சார்வற
வளைந்திட்ட, வொண்ட ளாத்தனி முகமெனுங் கச்சிய னுரு
ட்டுக சிறுதேரே, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்
டுக சிறுதேரே.
(எ)

வம்பு லாமலர்ப் பொழிலிடை யுடைந்துகு மாங்கனிச்
சாறோடும், வண்டு ழுங்கடி மலர்முறுக் கவிழ்ந்துபெய் மது
ப்பெயர்ப் பெருவெள்ள, மம்பொன் மாமணிப் பூணிள முகி
ன்முலை யரிமதர் மழைக்கட்கே, ழரிச்சி லம்படி மாதரோ
டெழின்மத னுடுறு முதிர்வேனில், பம்பு வான்றிரை யாலை
த்தண் புனலெனப் பாய்ந்துபா லியாற்றோடிப், பாலை
நன்கரு கிறக்கிரிந் துய்யுறப் பரந்துறும் விழவானு, மும்பர்

போற்றிசெய் காஞ்சிமா நகரின னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. ()

திலக வாணுதற் பவளவாய் மலைமக டிரண்முலைத் தட ந்தோயுஞ், செஞ்சடைப்பெரு மான்விளை யாட்டயர் செழு மலர்ப் பொழிற்கூடற், பலகை மீதுமுன் னுயர்த்துள செந்த மிழ்ப் பழமலர்த் தொடைவீழ்ந்து, படிந்தெ ழாதிருந் துறு பொருட் சுவைநறுப் பருகுறு பெருங்கல்விப், புலவர் தூய் மன மெனுங்களி வண்டினம் புக்கிருந் தொருங்குண்ணப், புனைந்த விக்கொடுந் தமிழ்ப்புகர்ச் செம்மொழிப் புதுமலர்த் தொடையார, முலகெலாம்புகழ் திண்புயத் தணிபவ னுருட் டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட் டுக சிறுதேரோ. (க)

வந்து நம்புகழ் பாடுநர் தமையெலா மருவுடம் பிறுதி க்கண், மாசற் றெங்கணு நிறைசிவ மாக்கியே வைத்திடுஞ் செயலன்றி, நந்து கின்றவோர் பதத்தினுண் மறுமையின னுகுறும் படிபுய்த்த, னமக்க டாதென விம்மையே வண்டி மிர் நணைகவுட் பகையாற்றல், சிந்தும் வன்மருப் பெறுழ்வ லிப் புகர்முகச் சிறுவிழிப் பெருவேழச், செல்வ விந்திர னுக் குத லுடையவன் செழுமணித் தரளங்க, ளேந்தும் வெள்ளரு வித்திரு மயிலைய னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞா னமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. (க0)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

பிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

சிவஞானபாலையதேசிகர்

கலம்பகம்.

காப்பு. நேரிசைவெண்பா.

சித்திதருங் கச்சிச் சிவஞான தேசிகன்மேற்
பத்திதரும் பல்வகைய பாட்டுதவு - மத்தி
யலங்கலா வானை யடுத்தபிடி யீன்ற
விலங்கலா வானை விரைந்து.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

நீர்தாங்கு சடாமவுலி நெடுங்கயிலைக் கிரியாகப்
பார்தாங்கு வரையெல்லாம் பனிக்கலைவெண் மதியாகக்
காய்கதிர்மான் றேரிரவி கடலமுதந் தானாகப்
பாய்திரைவார் கடல்யாவும் பண்ணவர்கோன் பகடாக
ஞாலத்த களிறனைத்து நகைமணிப்பாம் பிறையாக
வாலத்த பணிமுழுது மாக்குபெரும் புகழுடையோய்.

இது ஆறடித்தரவு.

நன்னிலையு மெதிர்காட்டாத் தமமாகு மாணவநோய்
நின்னையல தெஞ்ஞான்று நீங்குவது தானன்றே
துன்னிருள்வாய்முழுங்குதிரைச்சுருட்டுகடன்முகட்டெழுந்த
மன்னுகதி ராலன்றி மற்றொன்றான் மாயுமோ.

தத்துவமாந் திரையெழுந்த தனிமாலயப் பெருங்கடலுள்
மெய்த்ததாட் புணையன்றி வேறொன்றாற் கடப்பரிதே
மைத்திரைவார் கடலியன்ற மரக்கலங்கொண் டன்றுபோ
யித்தரைவாழ் மனிதர்கடந் தேறுவதற் கொன்றுண்டோ.

பழியிலா வறங்கள்பல பயின்றாலு முன்றிருவாய்
மொழியினா லன்றிவான் முத்திநிலை கிடையாதே
விழியினா லலகுலகின் மேவுமுருப் பிறிதுபொறி
வழியினா லெதிர்காணு மனிதர்தா முளர்கொலோ.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

கொடுமிடி கெடவடு கொடைபடு நடையினை
சடையொடு நதிபணி தவழ்மதி யொருவினை.

மறையறை முறையற மறமற வருளினை
பொறிநெறி யறுகுறு புலனிலை யலகிலை.

யரிகரி பகையிகு மணிமணி மயிலையை
வரியரி மதர்விழி மலைமக ணகரினை.

இவைமூன்றும் ஈரடியராகம்.

முன்னாளி லொருஞான முலையயின்ற வாரமுத
மென்னாளு முண்கின்றா யாரோநின் னளவறிவார்.

நவத்தமிழ்வே தம்புகலு நன்மொழியிங் குண்மைபெறத்
தவத்தொடுதா னஞ்செயுமோர் தன்மையுனக் கலதுண்டோ

மெய்யிலே பொய்தோன்றி மெய்யாக மயக்குறுமப்
பொய்யிலே பொய்தோன்றப் புகலுமுனைப் புகல்வார்யார்.

இருப்பம்பு பட்டுருவ வெய்தாலுந் தளராமற்
கருப்பம்பு படாவண்ணங் காப்பவர்க்குத் துணையே.

கருமேனி யொழிந்தடியேங் கதிகாண நீயருளாற்
திருமேனி கொண்டிருந்து செய்நன்றி மறப்பேமோ.

தவப்பிணிக்கு மூலமலந் தான்மூல மாய்க்கிளைக்கும்
பவப்பிணிக்கு மருந்துனது பார்வையே தானன்றே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

வாத மாற்று நீ, போத மாற்று நீ,
வாய்மை யாக்கு நீ, தீமை போக்கு நீ.

இவைநான்கும் முச்சீரோரடியம்போதரங்கம்.

வசைகெ டுத்தனை, யிசைகொ டுத்தனை,
செயலொ ழித்தனை, மயலொ ழித்தனை,
யறம்வி ரித்தனை, மறமி ரித்தனை,
விழைவ றுத்தனை, பிழைபொ றுத்தனை.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம்.

எனவாங்கு - இது தனிச்சொல்.

நாவலர் புகழ்சிவ ஞான தேசிக
வெவ்வ மகன்ற சைவ நாயக
நின்னடிக் கமல நெஞ்சுற விருத்தி
நறுமலர் தூவி நாடொறும் பரவுதூஉஞ்
செல்வச் செருக்கிற் செவிடுபட் டிருக்குங்
காதிற் றீம்பால் கமர்கவிழ்த் தாங்கு
பாப்பல பன்முறை பாடி நின்னைப்
பாடா மாந்தர் பக்கற்
கூடா வடியரிற் கூட்டுக வெனவே.

இது ஒன்பதடிநேரிசையாசிரியச்சுரிதகம். (க)

நேரிசைவெண்பா.

வேவ மலரும் விழிகரந்த நின்னைமதன்
றேவ சிவஞான தேசிகா—மேவிலனென்
னுள்ள மறிந்த வொருநின் றிருமேனிக்
கள்ள மறிந்தனனென் கண்டு. (௨)

கட்டளைக்கலித்துறை.

கண்டே னறிவெனு மொண்சுட ரோற்றிக் கருத்தகன்மெய்த்
தண்டேயு மன்புநெய் பெய்துபொய் வாதந் தடுத்தொளிரக்
கொண்டே மலவிரு ளெல்லாந் துரந்தெங் குடிமுழுதுந்
தொண்டே யெனுமெய்ச் சிவஞான தேவன் றுணையடியே.

பதினாங்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடிமலர் சிவப்ப நடந்துள முனிந்த வணங்கினைக் கூ
டுதல் வேண்டா, வடியனேன் றமிழ்க்குக் கலந்துட னிரு
வரிவையைப் பிரிவுசெய் திடுக, மிடிமலி வறிய செங்கல்லே
ன் றாக்கி வியப்புற வுதவுதல் வேண்டா, வெந்தெரி பசு
மபொன் செங்கலாக் குகநீ வேறுனை வேண்டுவ திலையே,
பொடிமறை தழல்போ லிருந்துல கினர்கட் புலப்படா னுய
ர்சிவ ஞானி, புவியிலென் றிருப்ப வனையன்யா னென்று
பொங்கொளி யிரவிபோற் றோன்றிக், கடிநக ரொவற்றுஞ்
சிறந்தபொற் புரிசைக் காஞ்சியிற் போந்தகற் பகமே, கதிர்
மணிவரன் றி யருவிவந் திழியுங் கயிலைநேர் மயிலைகாவலனே.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வலந்திரி கதிர்கா னுலகின ரெல்லாம் வந்துகேட் பன
விலை யெனுத, நலந்தரு மொருநீ தமியனேன் கேட்ப நான

ல திலையெனத் திருவாய், மலர்ந்துரை செய்த தென்கோ லோ வறியேன் மயிலைமால் வரைமணி விளக்கே, புலந்தெ றுவீரர் பெருமவென்றிறைஞ்சிப் புகழ்சிவஞானதேசிகனே.

கலிவிருத்தம்.

சிகரியி னெழுதின மணியின் றேர்ப்பரிக்
கிகலிர வுளதுகொ லிருவி னைத்தொடர்
நிகரறு நினையடை நிலையி னோர்க்கிலை
நகரியி னமர்சிவ ஞான தேவனே. (௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவரு முனிவர் தாமுஞ் சித்தரு மற்றை யோரு
மேவரு நிலைய ராக வினையினேற் கருள்பு ரிந்தான்
மூவரு மிறைஞ்சு ஞான முதல்வனெண் மயிலை மேவி
யாவரும் விழையும் வான மிலான்புலம் பொழியு மாறே. ()

மேற்படி வேறு.

மாறு செயுமைம் புலக்கணமே குணமே மயக்கு மூா யையே, வேறு செயுமாணவமலமே வினையே நுந்தம் விற ல்காட்டித், தேறு செயுஞ் சிவஞான தேவ னெதிர்நான் செல்வதன்முன், கூறுசெயுநீர் செய்பவெலா மென்பாற் செய்து கொள்ளீரோ. (அ)

மேற்படி வேறு.

கொள்ளும் வன்பவப் பிணியின ராகிய குவலயத் தவ ரெல்லா, மெள்ளும் வெந்துயர்ப் பவப்பிணி மருத்துவ னெ னப்படு சிவஞான, வள்ளல் வந்துவண் மயிலைமேல் வாழ்

தலை மணிவிளக் கெனக்கண்டு, முள்ள நைந்துசென் றுளாக்
கில றென்கொலோ வுண்டுடுத் தழல்வாரோ. (கூ)

மறம். பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரா யரசன் றூதனென வந்த வொருவ யாமகங்
தை, மலையை யுடைக்குஞ் சிவஞான வள்ளன் மயிலைக் குற
வர்கா, ணோரா ரெங்கள் குலமகளை யின்று கேட்ப நினைவி
டுத்த, விறைவன் றிருக்கா ளத்தியிடை யெங்கண் மிச்சின்
மிசைந்தவனுற், சீரா ரெயிறு தரளமெனச் சிதற வடிபட்
டுழல்கின்றுன், சிறிய குலத்திற் பிறந்தவனே செந்தாண்
மலராற் றேய்ப்புண்டு, பாரா ரறிய வுடல்குன்றிப் பகற்
போ தெல்லாம் புறப்படான், பழைய குடியிற் பிறந்தவனே
பகரா யுள்ளம் வெருவேலே. (க0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேலுடையா னெடுமயிலை மலைமேவு சிவஞானி வினைக
டீர்க்கும், காலுடையான் புகழோடு வெள்ளிமலை நிறைநிற்
பக் கனம்போ தாமற், பாலுடையான் மிசைவைக்கப் பட்ட
ததன் மேல்வைத்தோன் பால்வெண் ணீற்றுத், தோலுடை
யா னவன்மீது வைத்ததன்றே விளமதியஞ் சொல்லுங் கா
லே. (கக)

கலித்துறை.

காலம் போயிற் றஞ்சன மன்ன கடாமீதி
லாலம் போல்வெங் காலனு மந்தோ வணுகுற்றுன்
சீலங் கேண்மி னெய்யென வேகஞ் சிவஞானி
கோலங் காணுங் கொள்கை கருத்திற் குறியீரோ. (கஉ)

கலிவிருத்தம்.

குறியுமிலை வடிவுமிலை குணமுமிலை யுளையாடவோர்
பொறியுமிலை மனமுமிலை புலனுமிலை யரிதாகநீ
செறியும்வகை யருள்செய்பொருள் சிவசமய குலதீபமாய்
மறியுமளி மலர்முரலு மயிலைவரு சிவஞானியே. (கங)

நேரிசைவெண்பா.

ஞானிபெய ரேதேனு நன்மைதரு மென்னவுஞ்செம்
மேனிபுகல் வேதம் விதித்தபெய - ரான
சிவஞானி நாமஞ் சிவஞானி யென்று
ளவஞானி யென்ப வவன். (கச)

கட்டளைக்கலித்துறை.

அவனே யிவனென் றெணையாளு மண்ண லடியவர்தம்
பவநோ யகற்றுஞ் சிவஞான தேசிகன் பாரில்வருஞ்
சிவனே யிவனென் றுலகமெ லாந்தொழுந் தெய்வமன்றி
யெவனே தமிய னிதயா லயத்தி லிருப்பவனே. (கரு)

கலிவிருத்தம்.

இருந்து மேனியோ டிம்மை மறுமையிற்
பொருந்து போகம் புரிசிவ ஞானிநீ
விரும்பு வார்கட் கெனக்கருண் மெய்விழைந்
தருந்து மாசை யிலாமையி லாசையே. (கசு)

மடக்கு. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆசை தனதாண் மூட்டினு னடித்திட் டமுத மூட்டினுன்
பாச விருளை யகற்றினுன் பதிசே ரறிவை யகற்றினுன்

றேசு மலியு மாகத்தன் சிவஞா னிப்பேர் மாகத்த
னேச மருவி மறியாரோ நிரயத் துயர மறியாரோ. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

மறிமறைத் தானு மழுமறைத் தானு மணிமிடற்றின்
குறிமறைத் தானு மதிமறைத் தானுமென் கொன்றைமலர்
வெறிமறைத் தானு மறிவே னுனைமதன் மேற்பகைமை
நெறிமறைத் தாயிலை யேசிவ ஞான நெடுந்தகையே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெடுமடைக்கட் குடவளைசென் றடைப்பவிள வரானு ழைந்து நீர்செ லுத்துந், தடமுடைத்தண் பணைமருதக் கச்சி நகர்ச்சிவஞானத் தம்பி ரானே, படமுடிப்பார் மிசைநினது புகழ்பாடிப் பன்மலர்தூய்ப் பணிகின் றேற்குக், குடமுடைத்தா லெனப்பாசங் கெடுப்பதல்லா லெனக்குநீ கொடுப்ப தென்னே. (கக)

நேரிசைவெண்பா.

என்ன தவவுதவி யீதென் றுணர்கிலேன்
மன்னுசிவ ஞானமுனி வந்துற்றான் - றன்னைநிகர்
மாசங் கெடுக்கு மலர்த்தடஞ்சூழ் கச்சியிலெம்
பாசங் கெடுக்கும் படி. (உ௦)

கட்டளைக்கலித்துறை.

படிக்குப் பெருஞ்செல்வ மாஞ்சிவ ஞானிமெய்ப் பத்தர்மணி, முடிக்குப் பெருஞ்செல்வ மாம்பதத் தானொடு முன்னி யெங்கண், மிடிக்குப் பெருஞ்செல்வ மென்றில ரோதனா வே

ந்தரோடெங், குடிக்குப் பெருஞ்செல்வ மென்றுசென் றோ
தூறுங் கோளர்களே. (உக)

கலிவிருத்தம்.

கோள்வலி செய்வதென் கொடிய வாகிய
நாள்வலி செய்வதெ னம்மைக் கூற்றெனு
மாள்வலி செய்வதெ னமுத பாணிதன்
றாள்வலி யவைகொளுந் தண்டு தொண்டரோ. (உஉ)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

தொண்டர்நெஞ்ச வஞ்சந் தொலைக்குஞ் சிவஞானி
யண்டரஞ்சும் வெள்ளிமலை யண்ணல்கா ணம்மானை
யண்டரஞ்சும் வெள்ளிமலை யண்ணலே யாமாகிற்
கண்டநஞ்சங் கண்டிலநங் கண்ணிறு லம்மானை
காணு மயிலைவரைக் கண்டக்கா லம்மானை. (உங)

கலிவிருத்தம்.

அம்மா சிவஞா னியடிக் கமல
மும்மா யைகடந் துமுயங் குமது
சும்மா தலைமீ துசுமத் தினறாற்
கைம்மா றுளதோ கடையே னிடையே. (உச)

நேரிசைவெண்பா.

இடையினமே போல விரண்டறமு மல்லா
நடையினமே நாமயிலை ஞானி—புடையினமே
சார்வாகா தோடித் தடுமாறு கின்றமையாற்
றீர்வாகா மாயைச் செயல். (உரு)

காலம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செயலெலா மறமாகச் செய்யுங் காலந் திகழ்வெலாம் பொய்யாகத் திகழுங் கால, மயலெலா முறவாகி யமையுங் கால மறிவெலாந் தனையறிய வணையுங்கால,மயலெலா மொழிந்துபர வசமாங் கால மனமெலாம் பேரன்பு மயமாங் கால, மியலெல்லாம் பிறப்பொழிய வெடுக்குங் கால மெங்கள் சிவ ஞானியருளிசையுங் காலம். (உரு)

கட்டளைக்கலித்துறை.

காலுண்டு வாழு முனிவரு முள்ளங் கலங்குநஞ்ச
மேலுண்டு நஞ்சைய னும்பழி மாறவெல் வீரவனை
மாலுண் டுமிழு முலகமெ லாஞ்சொன் மயிலைவெற்பிற்
பாலுண்டு பாலைய னென்றிருந் தாய்கொலெம் பாலையனே()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐய மயிலைச் சிவஞானி யந்தோ நம்மாற் செயப்பட்ட
வுய்ய வரிய பாதகங்கட் கொழிக்கு முபாய மிலையென்று
நையு மனிதர் நினதுதிரு நாமத் தெழுவா யெழுத்திரண்டும்
பைய வொருகா லியம்பியுய்யப் பற்றார் துயரி னுற்றாரோ. ()

கலிவிருத்தம்.

உற்பவ நிற்ப தொடுக்க மளிக்குஞ்
சிற்பரன் மெய்ச்சிவ ஞானி திருக்கை
நற்பிர சாத மலர்ப்பத நம்பாற்
சொற்பெறு மூவர் தொழிற்புண ராவே. (உகூ)

கட்டளைக்கலித்துறை.

வேதந் தெளிந்தநின் செவ்வாய் மொழிநின் விரைமலர்ப்பூம்
பாதம் படுதுக ளெங்குல தேவதை பார்வையெங்கள்
சாதங் களையு மருந்துநின் னாமந் தனிக்குடிலை
நாதன் கயிலை சிவஞானி நீயமர் நல்லிடமே. (௩௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நல்ல புலவர் பழிச்சுசிவ ஞானி யெனுமோர் நாமமுறு,
மல்லன் மயிலை மலையனைவே றொருவ னுகமதிக்கிலேன்,மெ
ல்ல வொருபூ வீசுதன்முன் வேளை யெரித்த தான்வெகுளி,
யில்ல னெனினும் பொறையுளன்போற் றோன்று னெனினு
ம் யான்றனே. (௩௧)

நேரிசைவெண்பா.

யானென தென்னு மிவைகழன் று வந்துசிவ
ஞான குருவை நணுகிலா—மானுடர்தம்
பொல்லாப் பிறவிநோய் போமோ வரினுநிலத்
தெல்லாக் கடவுளரு மின்று. (௩௨)

வண்டுவிடுதூது. இன்னிசைக்கொச்சகக்கலிப்பா.

இன்றுபிழை யொன்று மியற்றா வெனைமுனிந்து
நின்று சிறிதுமரு ணெஞ்சுறா வின்மதனைக்
கொன்றுவிடு லில்லைக் கொலைப்பாவ மென்றளிகாள்
சென்றுபுக லீர்நஞ் சிவஞான தேசிகர்க்கே. (௩௩)

கலிவிருத்தம்.

கேடு தீர்மயி லைக்கிரி ஞானியைத்
தேடு வார்சிலர் செய்யுங் கருமியை

நாடு வார்பலர் நன்மணி யோகடைக்
கோடு வீழ்மணி யோபலர் கொள்வதே. (நூச)

சித்து. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளிபோன் மணித்தலைநா கங்கிடக்கு மயிலைமலைக் குகையில் வாழுந், தெள்ளுவா னமுதனைய சிவஞானி பதம் பரவுஞ் சித்தர் நாங்கா, ணள்ளியோர் பிடிசோறு தரிற்பத் தா நாமுனக்கிங் கைய மின்றி, வெள்ளிதான் வருவதன் முன் பொன்னுக்கு வோமிதுநம் வித்தை தானே. (நூரு)

நேரிசைவெண்பா.

வித்தை சிவஞானி வித்தையே காண்பவெலா
மித்தையென நின்று விளம்பியே—சத்தியமாய்
நாட்டினு னீதானு நானே யெனப்புகன்று
காட்டினன் றன்னையே காண். (நூசு)

ஊசல். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காண்டகைய விமிழிசைவெள் ளருவி தூங்குங் கவின்மயிலைச் சிவஞான தேவன் கூறு, மாண்டகுநன் மொழிகேளா வாவி பாவ வல்வினையு நல்வினையு நின்று தள்ள, மீண்டுதுயர் நிரயமொடு துறக்க மேவி மெலிவதிவ்வா றெனத்தெரிந்து காட்டல் போலத்,தூண்டுசுடர் விளக்கனைய ரிருமருங்குந் தோழியர்க ணின்றூட்ட வாடீ ரூசல். (நூஎ)

தாழிசை.

ஊசலாடுறு நெஞ்சொடும்பிட ருற்றவெற்றிகொள் காலனை, யுணர்ந்திலேன்பய மற்றுவேண்டிய தூண்டுடுத்துழன்

றெண்மலர், வாசமார்குழல் மாதரார்செயு மாலின்மூழ்கின னத்துயர், மாறுமாறு நினைந்திலேனெரி வாய்தலிற்படு மனையின்வாய், தூசுலாமணை மீதுவாள்விழி துஞ்சவீழ்பவர் போலவே, தொண்டர்தந்துயர் கண்டிராது துடைக்குறுஞ்சிவ ஞானிநீ, யாசுதீரருண் மிகுதிகாணிய வஞ்சலென்றருள் செய்தியோ, வருண்மறைத்து விடுத்தியோசொ லறிந்திலேன் றிரு வுள்ளமே. (ரு அ)

அறுசீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம்.

உள்ளதன் பொருள ளிக்கு முயர்சிவ ஞான தேவன்
றெள்ளும்வண் புகழுங் காமற் றெறுபிர தாப முந்தாம்
வெள்ளைநன் மதியுஞ் செங்கேழ் வெய்யவன் றானு மாகி
யெள்ளவந்தெதிர்வ துண்டோவெனவெழுந் துலாவுமன்றே.

மேற்படி வேறு.

அன்றெடுத்து மலைகுழைத்துப் புரமெரித்த புகழல்லாளற்றூழ் வேனை, நின்றெடுத்து மனங்குழைத்து வினையிரித்த நின்புகழை நிகழ்த்தல் செய்யார், குன்றெடுத்த புகழிருப்பச் சிறுசிலையொன் றெடுத்தபுகழ் கூறல் போன்மான், கன்றெடுத்த கரமறைத்துச் சிவஞானிப் பெயர்படைத்த கருணைக் குன்றே. (சo)

தவம். கட்டளைக்கலித்துறை.

குன்று மறையுள் விபூதியென் றேசொலுங் கூற்றினுக்குப்
பொன்றுத செல்வ மெனப்பொருள் கூறும்வன் பூசுரருந்
தன்று மனைமலர்க் கைந்நீறு சாற்றத் தவம்புரிவ
ரொன்று லெவர்சிவ ஞானிதன் மேன்மை யிசைப்பவரோ. [()

புயவகுப்பு.

இசைபோகி மாழ்கமத னம்பைக் கடிந்தன
விளநாக வீருரியொ டென்பைத் துரந்தன
வசைபோகு மாரநிகர் கண்டிக் கிசைந்தன
மகமேரு வாதிவரை யஞ்சக் கிளர்ந்தன
நசைபோகு மாதவர்க டுன்பைத் துரந்தன
நயநிறு தேய்வையென விஞ்சத் திமிர்ந்தன
திசைபோகு தூயதமிழ் தங்கப் புனைந்தன
சிவஞான தேசிகர்தம் வென்றிப் புயங்களே. (சூஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புயன்மறையா மயிலைமலைச் சிவஞானி நீயேயெம் பொருளிற் கொண்ட, செயன்மறையா விளவேறு காந்தவன்யானலனென்னிற் றெளியச் சொல்வே, மயன்மறையா நின்னடிகண் டனமார வாரங்க ளாகா தின்ற, னியன்மறையா துரைசெய்தி செய்திலையே லளர்தூற்ற விளக்கி லேமே. ()

மேற்படி வேறு.

இளைக்கு மிடியற் குறுபொருளா மிறைவற் கரசாங் கூற்றுவனை, விளிக்கும் பிணிக்கு மருந்தாகும் விடத்திற் கருஞ்சீர்க் கலுழனும், வளைக்கும் பகைக்குப் படையாகு மலடர்க் கரிய மகவாகுந், திளைக்குங் கருணைச் சிவஞான தேவன் றிருக்கைத் திருநீறே. (சுச)

நேரிசைவெண்பா.

நீறுவாய் கோலநினை நெஞ்சமே நெஞ்சமவற்
கூறுநா வேமாற்றங் கூறுநா—பாறுவீழ்

வேல்பிடிக்குஞ் செவ்வேள் வியன்மயிலை ஞானிமலர்க்
கால்பிடிக்குங் கைகளே கை. (சரு)

நேரிசையாசிரியப்பா.

கைகமழ் நறிய கறியொடு படூஉ
மென்மைவெள் ளடிசி லின்மை மாந்தி
விலைவரம் பறியா மென்றுகி லின்மை
நாடொறு முடுத்து நகைமணிப் பசும்பொற்
பூண்டன தின்மை காண்டகப் புனைந்து
திண்குற டுரிஞ்சுஞ் செழுஞ்சாந் தின்மை
பூசிப் பொன்மலி புரிசை மாடத்
தின்மையின் மலர்ப்பூம் பள்ளி யின்மையிற்
கருங்கட் செவ்வாய் வெண்ணகைப் பசுந்தொடி
யிளமுலை மாத ரின்மையொடு தழீஇ
வாழா நின்றநின் வண்புகழ் பாடு
நல்லிசைப் புலவர் நற்பொரு ளின்மை
கண்டது பொறாது கவலைகூர்ந் தழிக்கு
நின்னை யன்றோ நிலமிசை மாந்த
ரழுக்கா றிலனென வழுக்கா தறைகுவர்
தவப்பல விடர்செய் பவப்பிணி மருத்துவ
கலங்குறு தன்மைப் புலந்தெறு வீர
வடியார் கொள்ள மிடியாச் செல்வ
நானிலம் புகழ்சிவ ஞான தேவ
வடியே மருளா தறிதரக் கூறுதி
யென்றவன் றனையே யாம்வினு யறிகுது

‡ நங்கண் களிப்ப நண்ணு மாயி
னணியென விறங்குவெள் ளருவி
மணிமலி மயிலை மலைகிழ வோனே. (சுசு)

கட்டளைக்கலித்துறை.

இழவி யெனுமிக் கிரிராச கன்னிகை கெண்டையங்க
ணழவி மலனைத் தழுமூ ரமர்ந்த வமுதமுனி
தொழவி கலமி லுயர்ஞானங் கூறுஞ் சுடரிலைவேற்
குழவி தனினு முனையே விரும்புங் குடமுனியே. (சுஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடக்கெனப்படாக்குணக்குங் குணக்கெனப்படாக்குடக்கும்
வடக்கெனப் படாத தெற்குந் தெற்கெனப் படாவ டக்கு
நடக்குமெய்ப் புகழ்மா கச்சி நகர்ச்சிவ ஞான தேவே
படைக்குமப் பெரியோன் றன்னைப் பரவுவார் பரவு வாரே.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரம யோகி யென்றுடம்பிற் பாதி யொருத்தி கொளக் கொடுத்துப், பகர்வுற் றறநன் மகனையடும் பாதகத்திற் குடன்படுத்தித், தருமி தானென் றெருதேறிச் சாந்த னென்று புரமெரித்துத், தம்பி ரானென் றொருவற்குச் சந்து மகளிர் பானடந்து, பெருமை யாள னென்றுபோய்ப் பேய்க்கூத் தாடிச் சின்மயனும், பெயர்பெற் றவையி னம்பியாற் பித்த னாகிப் புனிதனெனச், சிரமு மாலை யென்புமரீஇத் திரிந்தமு

‡ இப்பிரபந்தம் ஆசிரியரயிக்கமுற்றபின்னர் அருளிச்செய்த தாகலின் "நங்கண்களிப்ப நண்ணுமாயின் யாம் விழையறி குதும்" என்று ஆற்றுமையால் விதந்துரைக்கப் பட்டது.

ரண்கொள் செயலெல்லாந், தீர்வான் வந்த சிவஞான தேவ
ற் கிலையொப் பாவாரோ. (சுகூ)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரியங் கரையிர் வாளிலைக் கைதை மலரொனத் தோ
ன்றுவர் சிலர்தா, மதுரவீர்ங் கரும்பின் மலரொனச் சிலர்தா
ம் வருவர்நீ கற்பக மலர்போற், காரியங் கரைத்த னடஞ்செ
ய்தா மரையின் கழலொலி யாவுமூர் போகி, கண்களாற் க
ண்டு கேட்குமூர்ப் பச்சைக் கந்தமா முனிகரத் துதித்தாய்,
வேரியங் கமலத் தாளிமை மருங்குன் மெல்லியற் பெண
ணொரு கம்ப, மேவுற விருமா தங்கமுங் கட்டி விடாதமர்
நகர்கணு யகமும், பாரினன் முகமா மிக்கரை முனிந்த பர
ன்றிரு வக்கரை நகரும், பயிலிட மெனக்கொண் மயிலைவா
மூமுத பானமார் ஞானமா தவனே. (ருo)

கட்டளைக்கலித்துறை.

தடங்கட னீர்முகந் தாங்குப் பொழியினுந் தண்விசும்பு
நெடுங்கட னீர்மை பெறல்போல வேதங்க ணீறுதொட்டு
நடுங்கிடு மாறில் சிவஞான தேசிக னல்கினுமோர்
படங்கிடை ஞால முடையார் பெறுகுவர் பாக்கியமே. (ருக)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாக்கியமும் பாலுமுமை புகட்டியமெய்ஞ் ஞானப்
பாலனீ யளிறந்த சிவபெருமா னடியார்க்
காக்கியிடல் கருதியே யுருத்திரபல் கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ வெனத்தன்

ஞாக்கினிடை யுரைசெய்தா னென்றேயென் றனக்குத்
தோன்றுகின்ற துலகில்வே றொருவரிலா மையினாற்
சீர்க்கவிஞர் புகழ்மயிலை மால்வரையின் விளக்கே
சிவஞான தேவனெனச் சிறந்தவருட் கடலே. (ருஉ)

நேரிசைவெண்பா.

கடலுலக மெத்துங் கருணைமலை மாயை
நடலை தபுமயிலை ஞானி—விடலரிய
நல்வினைத்தை நண்ணு நணுகுமுட லாமுதலூர்
மெல்வினைத்து ளாதிநிலை மெய். (ருங)

களி. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெய்த்தவறு சமயங்கட் கிறைவ னாகி
விளங்குசிவ ஞானகுரு வாம மென்னுஞ்
சத்திசம யத்தினுக்குக் கள்ளு மூனுந்
தகுமெனமான் மதுகைவிடா னாகி நின்றான்
புத்தலரி யயன்கரகங் கொண்டு வந்தான்
புரிரியுழை யைங்கரன்பே ரொலிகைக் கொண்டார்
நெய்த்தவடி வேன்முருகன் சேவல் கொண்டா
னிலவினனோர் முயன்முழுதும் விழுங்கி னானே. (ருச)

தழை. கலித்துறை.

விழுங்குவள் போலது கொண்டற லோதியின் மேல்வைத்
தெழுந்துற வாள்விழி யொத்தின டேமொழி யின்பாநின் [தா
செழுந்தழை பட்டது நஞ்சிவ ஞானி திருத்தாள்கள்
பழம்படு நெஞ்சுடை யார்கரம் வந்து படும்பாடே. (ருரு)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாடு வாரிசை யறியு மியாவுமூர் பணியு நல்லிய லம்பலத்துநின், ஞூடு வாரறி வார்கொ லோவறி யார்கொ லோவெனப் பாடு வார்கொளத், தோடு வார்செவி நல்கி ஞனுயர் சூலி நஞ்சிவ ஞானி நீபடை, வீடு வார்செவி யாக நல்கிலை விலகி நல்லியற் புலவர் கொள்ளவே. (ருசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளு முண்டி பகுத்துண்டு பெருஞ்சீர் கொண்டானின்குரவன், கள்ளும் வண்டு மருமலர்ப்பூம் புலியூர்ப் பச்சைக் கந்தமுனி, தெள்ளு மிருஞ்சீர் நீபகுத்திட் டுண்ணு தாற்றுய் சிவஞானி, துள்ளு மருந்தா யினுங்கன்று சொல்லாரோசொ னல்லாரே. (ருஎ)

கட்டளைக்கலித்துறை.

நல்லா ரவன்சொல்வ தெல்லாம்பொய் யென்பவர் நன்மையிலாப், பொல்லா ரவனைமெய் யாளனென் பார்மெய்ப் பொருளுணர்ந்த, வல்லார் மயிலைச் சிவஞானி யைச்சொல வாய்திறவார், கல்லா ரவனியல் சொல்வமென் றேபல கற்றவரோ. (ருஅ)

கலிவிருத்தம்.

கற்றுவேத முற்றுமாயை கழலுமீச னேபதி
சொற்றசைவர் கட்கெனச்சொல் சொல்லுமாவி யேபர
முற்றும்வைதி கர்க்கெனச்சொன் மொழியுமாறு மாறுகா
முற்றமயிலை ஞானதேவ ஞெருசொலுண்மை சொல்லவே.

தாழிசை.

சொல்லருங்கயி லைத்தணந்தனை துன்னுநீவிட குணமுமூ
ர், சுடல்செய்சாபமு மின்றியேசம ரேக்கமெய்தினை தோ
லுடை, பல்லெலும்பணி கோலமோவினை பாதியானென
ன் மாறினை, பணிகள்யாவுமு ருதகன்றனை பாணிசென்னிசு
மக்கிலை, வில்லிருந்தத மும்பொழிந்தனை மீளநஞ்சமி ரிந்த
னை, விரைந்துசோறிடு மனையைநல்கென வேண்டுமாறு மற
ந்தனை, கொல்லிரும்பா சினைவிடுத்தனை குறைவிலாமதி மே
வினை, கோதறுஞ்சிவ ஞானியேயருள் கூருஞானவி நோ
தனே. (௬௦)

கட்டளைக்கலித்துறை.

வினையே னெனினுங் கொடியே னெனினும் விதிவிலக்கு
நினையே னெனினு மியானே யறங்களி னின்றடையே
னனையே யனைய சிவஞான தேவ னருண்மிகுதி
யெனையே யடைதலி னுலைய மேது மிதற்கிலையே. (௬௧)

நேரிசைவெண்பா.

இல்லாமை யில்லாமை யெய்தலா நூன்முழுதுங்
கல்லாமை கல்லாமை கற்கலாம் - வல்லான்
சிவஞான தேவன் றிருவடியைப் போற்றத்
தவஞான முண்டாயிற் றான். (௬௨)

வஞ்சித்துறை.

தானி யேசிவ, ஞானி யேயெனன்
மேனி யோடபி, மானி யாகுமே. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேவரு மெய்ச்சிவ ஞானி திருப்புகழ் மேன்மை யிசைத்திடுநாண், மாவுர கர்க்கிறை தாளெளிர் பைத்தலை மாணவசைக்குமதாற், பூவசை வுற்றிடு மாலென மட்டவிழ் பூமிசை யுற்றிடுவான், பாவின் வியப்புறு மேரு முதற்கிரி பாரமியற்றினனே. (கூச)

நேரிசைவெண்பா.

பாரார் விசும்புளார் பாதாளத் தார்பரவுஞ்
சீரார் சிவஞான தேசிகா - தீரா
வறவா நினைக்கி னடியேன் பொருட்டுப்
பிறவா னினக்குப் பிறப்பு. (கூரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிறந்தான் மேலு மிடிதீர்நோய் தீரொன் றமைப்பின்றொடர்வனென, வறிந்தாய் போலுஞ் செம்பவளத் திருவாய் மலர்ந்தென் னகந்திருத்தி, யிறந்தார் ஞால மிசைப்பிறவா முதுகுன் றகலா தெனைவைத்தாய், சிறந்தார் வாய்மைச் சிவஞானிப் பேரோய் தீராச் சீரோயே. (கூகூ)

நேரிசையாசிரியப்பா.

சீர்வளர் குவவுத் திண்டோண் மாருதி
யுயிர்தரு மருந்தொன் றுறுதற் பொருட்டு
முழுமணி கொழிக்கு முகங்கவி ழருவிக்
குன்றமொன் றெடுத்த கொள்கை போலக்

சொற்றிறம் விரித்த சுடர்மணிச் செழுஞ்சூட்
டுரக வேந்த னொருதலை தரிப்பக்
காதல் கூர்ந்து கண்ணகன் ஞால
முச்சிக் கொண்ட கச்சிப் பதியு
மெறும்பியுயிர் நீங்கி லெறும்பி யீருரி
போர்த்துப் போகும் புராதன மலையு
மான்பாற் கன்றி யளவில்பல் கறிக்கு
மின்சுவை விளையு மென்சே யூருங்
கயிலைபோற் சிறந்த மயிலைமால் வரையு
மிடங்கொண் டிருந்த வெங்க ணாயக
னரன்றிருத் தொண்டர்க் கன்னை போல்வான்
புகழுநர்க் கடங்காப் புகழுடைப் பெருந்தகை
யுலகா யதனுக் கிலகா யுதமா
யணுமத மோரணு வாகத் துரந்து
விசேட மதத்தின் விசேட நீக்கிக்
காலவா திக்கோர் கால னாகிக்
குருமத நொய்தெனக் கூறி மாற்றிப்
பஞ்ச ராத்திரிக் கஞ்சு பகலாய்ச்
சைவப் பயிர்க்குத் தண்முகி லாஞ
னுந்தொழ வருள்சிவ ஞான தேவன்
சமய வாதிக டம்மத நிறுவத்
தகர்போல் வாதிற் றுக்குத னெக்கிச்
சிரித்துளங் களிக்குஞ் சிவாநு பூதியின்
மாண்டிட வெம்மை வைத்தனன்
வேண்டிய செய்கவவ் வீணர் தாமே. (௬௭)